மருந்து செய்முறைகள்

ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்



இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை

சென்னை - 600 106

தமிழ் மருத்துவ நூல் வரிசை - 9

Specimen

மருந்து செய்முறைகள்

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

வெளியீடு :

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை

சென்னை - 600 106

2009

பதிப்புத் தகவல்

நூல் பெயர்	:	மருந்து செய்முறைகள் (தமிழ் மருத்துவ நூல் வரிசை - 9) ஓலைச்சுவடித் தொகுப்பு நூல்
பொருள்	:	சித்த மருத்துவம் - மருந்து செய்முறைகள்
பதிப்பு	:	சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை சென்னை - 106
பதிப்புரிமை	:	தமிழ் நாட்டரசு
பதிப்பாண்டு	:	முதற்பதிப்பு 2009
பக்கங்கள்	:	xviii + 222 = 240
படிகள்	:	1000
தாள் அளவு	:	1 × 8 டெம்மி
அச்சுப் புள்ளி	:	12 புள்ளி
கட்டமைப்பு	:	சாதாரண அட்டைக்கட்டு
விலை	:	ரூ. 90.00

அச்சிட்டோர் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
189 (101-D), ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.
✆ : (044)-24661807, 24987562

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை, சென்னை - 600 106.

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

நூலாக்கப் பணிக்குழு

பதிப்பாசிரியர்

முனைவர் மரு. ஆனைவாரி ஆனந்தன், பிஎச்.டி.

சிறப்பு அலுவலர் (மொழிபெயர்ப்பு)

கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர்

மரு. எஸ். இராமலட்சுமி அம்மாள், பி.ஐ.எம். (சி)

உதவி பதிப்பாசியர்கள்

திரு. த. அழகப்பராசு, M.A., M.A., M.L.I.S., M.Phil., B.Ed.

திருமதி. செ.இரா. பிரசன்னா, M.A., M.Phil., B.Ed.,

சுவடி நகலெடுப்போர்

திரு. வெ. சாரங்கபாணி

திருமதி. த. லெட்சுமி

திருமதி. நா. பாக்கியசுந்தரி, B.A.

ஜி.ஏ. ராஜ்குமார், இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
முதன்மைச் செயலர்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
இயக்ககம், சென்னை - 600 106.

வாழ்த்துரை

இதுவரை அச்சேறாத ஓலைச்சுவடி நூல்களை அச்சேற்றும் வகையில் பதிப்பிக்கப்படும் ஓலைச்சுவடி நூல் **'மருந்து செய்முறைகள்'** எனும் நூலாகும்.

241 தலைப்புகளில் தான் சொல்லவந்த மருத்துவக் குறிப்புகளைச் சொல்லியுள்ளார் இந்நூலாசிரியர். ஆசிரியர் பெயரை அறிந்துகொள்ள முடியாத இந்நூல் மருந்து செய்யத் தேவையான மருந்து பொருட்களை அதனதன் அளவுகளோடு சொல்லி, அம்மருந்து செய்முறையை விளக்கி அதுபோக்கும் நோய்களையும் பட்டியலிடுகிறது.

ஓலைச் சுவடியினின்றும் பெயர்த்தெழுதி இன்றைய நிலைக்கேற்ப அவற்றைத் திருத்தம் செய்து வெளியிடும் பணி சிரமமான பணி. அந்தப்பணியைச் செவ்வனே மேற்கொண்டு வரும் தனியலுவலர் (மொ.பெ), ஆய்வு மருத்துவ அலுவலர், தமிழ்ப் புலவர்கள், சுவடி நகலெடுப்போர் உரிய முறையில் அச்சிட்ட சென்னை, யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார் யாவர்க்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் உரித்தாகட்டும்.

ஜி.ஏ. ராஜ்குமார்

நாள் : 06.02.09

பதிப்புரை

மருந்து செய்முறைகள் எனும் இந்நூல் தமிழ் மருத்துவ நூல்வரிசையில் ஒன்பதாவது நூலாக வெளிவருகிறது. நமது இயக்குநரகத்தின் ஓலைச்சுவடியினின்றும் எடுத்தெழுதி பதிப்பிக்கப்படும் நூலிது.

இந்நூலிலுள்ள குறிப்புகளைக் கொண்டு நூல் ஆசிரியர் யார் என்பதை அறிய இயலவில்லை. இந்த நூல் சில இடங்களில் நோயின் குணங்களைச் சொல்லி அதற்கான மருந்தை விளக்குகிறது. சில இடங்களில் புளியாரை நெய், கதலியுண்டை, சுக்கங்காய் நெய், வங்கபற்பம் என்று மருந்தின் பெயரைச் சொல்லி அது நீக்கும் நோய்களைச் சொல்கிறது. மேலும் பலவிடங்களில் மூத்திரக் கிரீச்சரத்திற்கு நெய், கிராணி கேசரி, சீத சூரணம், பல்லடி வாதத்திற்கு என நேரடியாக மருந்தின் பெயரிலேயே நோயின் பெயரையும் சேர்த்துச் சொல்கிறது. இவ்வாறாகப் பல வகைகளில் நூலில் மருத்துவக் கருத்துகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

அவற்றுள்ளும் பெரும்பாலானவை இன்னின்ன சரக்குகளை, இந்த இந்த அளவு சேர்த்து இப்படி இப்படி மருந்து செய்யவேண்டும் என்பதைச் சொல்வதால் இந்நூலுக்கு மருந்து செய்முறைகள் எனப் பெயரிடப்பட்டது போலும்.

பாடல்கள்

பாடல்களில் மருந்திற்கும் மருத்துவத்திற்கும் தரப்பட்ட முக்கியத்துவம் சீரசைக்கும் யாப்பிற்கும் தரப்படவில்லை. பாடல்களில் ஒரு முழுமையான ஒழுங்கமைவு இல்லை. சில செய்யுட்கள் 10 வரிகளில் காணப்படுகின்றன. வேறு சில செய்யுட்கள் 8 வரிகளுக்குக் குறைவாகவும் அமைந்துள்ளன. முக்கியமாக, பல பாடல்களில் சீரசையைச் செம்மைப்படுத்த இயலவில்லை. வரம்பு மீறியனவாகவும், வரம்பிற்கு அகப்

படாமல் ஒரே வரியில் நீண்டும் குறைந்தும் காணப்படு கின்றது.

யாப்பில் முழுமைபெறாததால் பொருள் காண்பதிலும் பல்வேறு பாடல்களில் சிரமங்கள் உண்டாகின்றன. இதனால் பல பாடல்களுக்கு உரையை முழுமையாக எழுத இயல வில்லை.

பாடல்களுக்கான தலைப்புகள் பெரும்பாலானவை நூலில் இருந்தவாறே அமைக்கப்பட்டுள்ளன. சிலவற்றைத் திருத்தி அமைத்துள்ளோம். தலைப்பில்லாத சில பாடல்களுக்கு நாமே பொருத்தமான தலைப்புகளை அமைத்துள்ளோம்.

விளக்கம் பெற...

சில பாடல்கள் தெளிவில்லாத போது, அவ்விடங்களில் இடம்பெற்ற சொற்களை விளங்கிக் கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. அவ்வாறான சொற்களை முயன்றவரை முழுமைப்படுத்தி வெளியிட்டுள்ளோம். முழுமைபெறாத சொற்களும் பின்வருவோரின் ஆய்விற்காகப் பதிப்பித்துள்ளோம்.

சான்றாகப் பாடல் 218-இல் கள்ளிப்பாலைக் கலந்து சொல்லும் செய்முறையில் தெளிவில்லை அது முடிவுபெறவும் இல்லை. பாடல் 319-இல் கம்பளிப்புழுவைப் புண்ணிற்குப் போடச் சொல்வது, வழக்கத்திலிருப்பதாகத் தெரியவில்லை. பாடல்கள் 473-478 வரை பாடல்களை ஏடில் எழுதியவர்கள் செய்த பிழையை நீக்க இயலவில்லை. 'சமிக்கு பரிம்புதனை தப்பாத லுட்டுருதியில்' (478) என்ன சொல்கிறது என்பதே விளங்கவில்லை. பாடல் 517-இல் பாம்புகண்டம், பூநாகம் இவற்றை அரைக்கச் சொல்வது ஏற்புடையதாக இல்லை.

நாம் அச்சொற்களை அல்லது அத்தொடர்களைப் பதிப்பிக்காது விட்டுவிட்டோமானால் மீண்டும் அவ்வாறான சொற்கள் அச்சேறாமலே விடுபட்டுப் போய்விடும் என்பதால் அவற்றைப் பதிப்பித்துவிட்டோம். மருத்துவ ஆர்வலர்கள்

அவற்றைக் கண்டு உரிய திருத்தங்களைத் தருவாறாயின் இனிவரும் பதிப்புகளில் திருத்தி பதிப்பிக்கலாம்.

சுவடிப்பதிப்பு

சுவடியில் எழுதப்பட்ட பாடல்கள் யாவும் நூலின் ஆசிரியரால் நேரடியாக எழுதப்பட்டவை அல்ல. அவருக்குப் பின்வந்தவர்கள் எழுதிச் சேர்த்தவை. எனவேதான் மிகையும், குறையும், நீட்சியும், குறுக்கலும் காணமுடிகின்றது.

ஏட்டில் ஒருவர் எழுதியதை பார்த்தெழுதி, செய்யுள் வடிவமாக்கி, அவற்றிற்கு சீர், அசை, அடி, தொடை போன்றவற்றோடு பொருந்த அமைத்து, பின் அதன் பொருள் வகைக்காகச் சொற்களை மேலும் திருத்தி மருந்தளவில், நோயளவில் மேலும் சில மாற்றங்களைச் செய்து, புரியாதன வற்றை நினைந்து குழம்பி முடிவாக ஏதாவது ஒரு இடத்தில் . மனதை நிறைவுபடுத்திக் கொண்டு இதனைப் பதிப்பித்துள்ளோம்.

எனவே முழுமையான நிலையில் ஆசிரியர் கருதிய எல்லாம் அவ்வாறே நாம் பதிப்பித்துவிட்டோம் என்று உறுதியளிக்கவியலாது. திரும்பத் திரும்ப படிக்கும் போது மாற்றங்கள் தோன்றலாம்.

முயற்சி மேற்கொண்டு முடிந்தவரை செய்யுட்களைச் செம்மைப்படுத்தி அதற்கான பொருள் கண்டு பதிப்பித் துள்ளோம். தவறுகள் நேர்ந்திருப்பின் பொறுத்து நிறைகண்டு மகிழ்ந்து நூலைச் சுவைப்போர் பயன்பெறுவாராக.

பொருளடக்கம்

மருந்து செய்முறைகள்

வாசவுருண்டை

சாதிக் காயைத் தான்குடைந்து
அதற்குள் நறும்பிசி னிறையிட்டு
அந்தக் காயைத் தான்துளைத்துச்
சரியாய் சீரக மதையிட்டு
ஆதி வாழைத் தண்டுரித்து
அந்த நாரிட் டதைச்சுற்றிப்
போத வழலிற் புடமிட்டு
பொருந்து பின்னர் அரைத்தெடுக்க! 1

சாதிக்காயைக் குடைந்து நறும் பிசினையும் சமஅளவு சீரகத்தையும் பொடித்து உட்செலுத்தவும். வாழைத் தண்டை உரித்து அந்த நாரினால் காயைச் சுற்றி, அடுப்பெரித்து அவ்வனலில் புடமிட்டெடுக்கவும்.

வாழைத் தண்டு மருந்தோடே
மகிழச் சுட்டுத் தானரைத்து
விழாச் சுண்டைக் காயளவு
மிகுந்த கசாயஞ் சுறுக்கி
சுறுக்கிய கசாயத்தினை வடிகட்டி
பின் அந்த கசாயத் திலுண்டையிட
பூமி யுண்டை அந்திக்கு
உழக்கு தண்ணீரிற் கொடுத்திடவே! 2

புடமிட்டெடுத்த மருந்தை அரைத்தெடுத்துக் கொண்டு சுண்டைக் காயளவு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். முறைப்படி குடிநீர் செய்து அக்குடிநீரில் உருண்டையை ஊறவிட்டு வடிகட்டி மாலையில் உள்ளுக்குக் கொடுக்கவும்.

தாடிமச் சூரணம்

சீரான தாடிமச் சூரணத்தில்
சேராங் கொட்டை காட்டாத் திப்பூ
நீதி பிளியங் கொட்டைத்தோல்
நிச்சய மிலவம் பிசினாகும்
போதவே குமரிப்பட்டை மனத்தான்
கூட்டிடவே அதனெடையுமா
ஆதி நெரிஞ்சிக் காய்பொன் முட்டை
ஆனவெட் பாலை நாய்க் கடுகு! 3

சேராங்கொட்டை, காட்டத்திப்பூ, புளியங் கொட்டைத் தோல், இலவம்பிசின், கற்றாழைப் பட்டை, நெருஞ்சிக்காய், பொன் முசுட்டை, வெட்பாலை, நாய்க் கடுகு,

வெள்ளை லோத்திரம் பட்டை
இவற்றைச் சேர்த்துப் பின்னர்
நேர்வாள விடையங் குரோசாணி
ஒயாமல் கிராம்பு திரிகடுகு
மெள்ள யிந்து சாதிக்காய்
மிடியா வானைத் திப்பிலியுங்
கொள்ளவே தானது சேரும்
சரக்கில் வயலிதற் சமனாய்! 4

வெள்ளைலோத்திரப் பட்டை ஆகியவற்றைச் சேர்க்கவும். நேர்வாளம், அதிவிடையம், குரோசாணி ஓமம், கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, சாதிக்காய், ஆனைத்திப்பிலி ஆகியவற்றைச் சமமாய் எடுக்கவும்.

எல்லாங் கூடப் பொடிசெய்து
இவையிரண்டு பாக்குப் பிரமாணம்
வல்ல எருமைத் தயிர்தனில்
மாறுங்க இரவேதான் பல்லா
முல்லாச ஞான வியாசமுனி
உரைத்த வேத படிக்குறிக்கு

அல்லா தில்லையிம் மருந்து
மான திட்ட மானதுவே! 5

அனைத்தையும் சூரணமாகச் செய்து அதில் இரண்டு பாக்கு அளவெடுத்து எருமைத் தயிரில் கலந்து கொடுக்கவும்.

தாடிமக் குளிகை

திரிபலை யுடனே திரிகடுகு
சேருமில வம்விளாம் பிசினு
முறுமே காவேளை காஞ்சொறி
உண்மை முத்தமிவை சமனாய்த்
திறமாய் மாதளங் காயிலிட்டு
தீந்துளை நாகந்தான் போதுகித்
திறமே புடமிட்டுத் தானெடுத்துத்
தேன்தயிர் நீரிற்றான ரைத்தே! 6

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவம்பிசின், விளாம்பிசின், காவேளை, காஞ்சொறி, கோரைக் கிழங்கு ஆகியவற்றைச் சமமாய் எடுத்துப் பொடிக்கவும். மாதுளங்காயினைத் துளைத்து அதற்குள் வைத்து புடமிட்டெடுக்கவும். ஆறிய பிறகு எடுத்து தேன், தயிர் நீரில் அரைத்துக் கொள்ளவும். இவை தேற்றான் கொட்டை பிரமாணமாகத் தயிர் பிழிந்த நீரில் கொடுக்கவும்.

கிராணி கபாடக் குளிகை

இரதங் கெந்தக மதிவிடைய
மியன்ற கடுக்காய் முத்தமுடன்
தருமே சவுக்காரந் துவற்சிகையுந்
தானே இலவம் பிசினுடனே
மருவும் வசம்பியி வைசமனாய்
வருத்துங் கஞ்சா யிலைச்சாற்றி
லொருநா ளரைக்கக் கரியால்
முதந்த சாற்றி லொருனா ளரையே! 7

இரசம், கெந்தகம், அதிவிடையம், கடுக்காய், கோரைக் கிழங்கு, சவுக்காரம், கடுக்காய்ப் பிஞ்சு, இலவம்பிசின், வசம்பு ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் கஞ்சா இலைச் சாற்றில் ஒரு நாளும் அத்தியிலைச் சாற்றில் ஒருநாளும் அரைத்துக் கொள்ளவும்.

தேசிச் சாற்றி லொருனா ளரைக்கத்
தேற்றாங் கொட்டைப் பிரமாணம்
வாசித்தே னிலிவை இடவே
வருத்துந் திப்பிலிமேற் பொடியா
யோச மீத்த மீறிணக்கா
லுண்டாதம் சிரான பேதி
கிராணி கபாட மென்றே
நிகழ்த்தும் முனிவர் சொற் படியே! 8

எலுமிச்சம்பழச் சாற்றில் ஒருநாளும் அரைத்து தேற்றாங் கொட்டை அளவு உருண்டைகளாகச் செய்து தேனில் இழைத்துக் கொடுக்கவும். இது கிராணி கபாடக் குளிகை யாகும்.

புளியாரை நெய்

புளியாரைச் சாறுதா னாழி
பெருத்த பசுவின் தயிர்தண்ணீர்
பொளிதாய் குறுணி யிராழி
அரைக்கு மருந்தி யம்பக்கேள்
நளினத் திப்பிலி கொத்த மல்லி
நயத்த நெரிஞ்சில் பொன்மு சுட்டை
அளிதச் சுக்கு மாதளையி
னான பழத்தோற் சதகுப்பை! 9

1.3 லி. புளியாரைச்சாறு, பசுந்தயிரில் இருக்கும் தண்ணீர் 5.2 லி. எடுத்துக் கலந்து கொள்ளவும். திப்பிலி, கொத்துமல்லி, நெருஞ்சில், பொன்முசுட்டை, சுக்கு, மாதுளைப் பழத்தோல், சதகுப்பை,

கடுக்காய் திப்பிலி மூலமுடன்
கதித்த இந்து செவ்வியமு
மிடுக்காய் நாய்வேளை கொடிவேலி
வில்லைப் பத்திரி பிஞ்சுடனே
தொடுத்த சீரக மசம தாகந்
துவற்சிகை பெருங்காய மோரொன்று
மிடுக்காய் முக்கழஞ்சு நெய் இருநாழி
மெழு பதத்திற்றான் கொள்ளே! 10

கடுக்காய், திப்பிலி மூலம், இந்துப்பு, செவ்வியம், நாய்வேளை, கொடிவேலி, வில்வபத்திரி, வில்வப் பிஞ்சு, சீரகம், அசமதாகம், கடுக்காய்ப் பிஞ்சு, பெருங்காயம் ஆகியவற்றை வகைக்கு 15 கி. நெய் 2.6 லி. எடுத்து சரக்கு களைப் பொடித்துச் சாற்றில் போட்டுக் காய்ச்சி வற்றும் போது நெய்யை ஊற்றி மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

இரத பற்பக் குளிகை

இரத பற்பம் லோக சிந்தூர
மியன்ற காந்த பற்பமுடன்
சரித நாபி சாதிலிங்கந்
தானே சுக்கு மிளகுடனே
அரிது சாதிக்கா யதன்பூ
ஆன சாதிப் பத்திரியும்
நிரிதமான பொன்னூ மத்தைவிரை
நீளும் வெங்காரம் கெந்தகமும்! 11

இரதபற்பம், லோக செந்தூரம், காந்த பற்பம், நாபி, சாதிலிங்கம், சுக்கு, மிளகு, சாதிக்காயின் பூ, சாதிபத்திரி, பொன்னூமத்தை விதை, வெங்காரம், கெந்தகம்,

அசமதா கங்குரோ சாணி
யான சித்திர மூலமுடன்
சமதாகி யோரொன்று யியன்ற
கழஞ்சு சமன் கொண்டு

அசவாங் கஞ்சா விலைச்சாற்றில்
அரைத்து மறுநாட் டுமத்தைப்
பசையாஞ் சாற்றிற் றானரைத்துப்
பர்த்த மிளகுப் பிரமாணம்! 12

அசமதாகம், குரோசாணி, சித்திர மூலம் ஆகியவற்றை வகைக்கு 5 கி. சமமாய் எடுத்துக் கஞ்சா இலைச் சாற்றிலரைத்து மறுநாள் ஊமத்தஞ் சாற்றிலரைத்து மிளகளவு உருண்டையாய்ச் செய்து கொள்ளவும்.

கொண்டே இஞ்சிச் சாறதுதேன்
குழைத்துக் கொடுக்கக் குலைந்திட
விண்டே நாலு வகையாகு
மியன்ற வயிற்றிற் கழிச்சலுடன்
பண்டே கிராணி அறுவகையும்
பறந்து சாற்றிற் கொண்டவையு
மண்டே தீருமென வியாச
முனியே கூறிய மொழிப்படியே! 13

அக்குளிகையை இஞ்சிச்சாறு, தேன் இவற்றில் இழைத்துக் கொடுக்க கழிச்சல், ஆறுவகைக் கிராணி ஆகிய நோய்கள் தீரும். நோய்களுக் கேற்றவாறு குளிகையின் அளவையும் அனுபானத்தையும் மாற்றிக் கொள்ளவும்.

கிராணி கபாடம்

கெந்தக மிரத மதிவிடையங்
கிளர்ந்த கடுக்காய் முத்தமுடன்
குருந்த துவற்சிகை சவுக்காரங்
கூறா மிலவம் பிசின்வசம்பு
முந்திய தேத்தான் கொண்டு
முனிந்த கஞ்சா விலைச்சாற்றி
லந்தமடு பறவே தானரைக்க
யானகையாந் தகரைச் சாறு கொண்டு! 14

கெந்தகம், இரசம், அதிடையம், கடுக்காய், கோரைக்கிழங்கு, கடுக்காய்ப் பிஞ்சு, சவுக்காரம், இலவம்பிசின், வசம்பு ஆகிய வற்றைச் சமஅளவெடுத்து ஒருநாள் கஞ்சா இலைச்சாற்றிலும் ½ நாள் கையாந்தகரைச் சாற்றிலும் அரைத்துக் கொள்ளவும்.

ஒருநா ளரைக்காலும் பிச்சை
காயுடன் ஏழுநா ளரைக்க
வருமே தேற்றாம் விரைபோல
நிழலில் வுலர்த்தி யனுபான
மருமே வாய்வுக்குத் தேனிலிட
மாகும் பித்தத் தெருமைதயிர்
வருமே சேற்றுவேனே பின்னர்
இன்னுந் திப்பிலிமேல் பொடியே! 15

எலுமிச்சைச் சாற்றில் ஏழுநாள் அரைத்து தேற்றான் விதைபோல குளிகை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். வாய்வுக்குத் தேனிலும், பித்தத்திற்கு எருமைத் தயிரிலும் சிலேத்துமத்திற்குத் திப்பிலிப் பொடியிலும் கொடுக்க குணமாகும்.

குமரி பற்பக் குளிகை

அதிவிடையஞ் சாதிக் காய்பின்
பான சாதிபத் திரி
விதமாங் காரம் சேர்த்து
அதில்தான் சரியாக அசமதாகம்
பதியாந் திப்பிலி மூலமுடன்
பதிந்த நாக தாதிந்து
விதமாந் திப்பிலி விளாம்பிசினு
மிக்க இலவம் பிசினேலம்! 16

அதிவிடையம், சாதிக்காய், சாதிபத்திரி, அசமதாகம், திப்பிலி மூலம், நாகத்தாது, இந்துப்பு, திப்பிலி, விளாம்பிசின், இலவம்பிசின், ஏலம்,

வெள்வேல் பிசினுடனே குமரி
சேர்த்துனான் ஊமத்தை விரையுடனே
கொள்வா மத்திப்பூ சாதிலிங்கங்
கொண்டே பொன்முசிட்டை முத்தமுடன்
வள்ளியங் கொட்டைத் தோலு
வருங்காசு காவிமுத்தக் காசிந்
துள்சிட்டை யிவை சமனாயான
மதமா தைச்சாற் றரைத்தே! 17

வெள்வேலம்பிசின், கற்றாழை, ஊமத்தைவிதை, அத்திப்பூ, சாதிலிங்கம், பொன்முசுட்டை, கோரைக்கிழங்கு, புளியங் கொட்டைத் தோல், முத்தக்காசு, துளசி ஆகியவற்றைச் சமமாய் எடுத்து தைவேளைச் சாற்றை ஊற்றி அரைத்துக் கொள்ளவும்.

உண்டை குன்றி யளவாக
உயர்ந்த எருமைத் தயிரிலிட
மிண்டாங் கிராணி கழிச்சல்
யொத்த கிராணி யறுவகையுங்
கொண்டே ஒளித்து கூப்பிடுங்
கூசா தோடுங்குறி யென்று
அண்டா புகழு மாமுனிவ
னருளிச் செய்த வடி வதுவே! 18

130 மி.கி. அளவாக உருண்டை செய்து உலரவிட்டு எடுத்து, எருமைத் தயிரில் இழைத்துக் கொடுக்க கிராணிக் கழிச்சல், ஆறுவகைக் கிராணி ஆகிய நோய்கள் தீரும்.

கிராணி கேசரி கசாயக் குளிகை

அப்பிரகங் காந்தஞ் சாதிலிங்க
மான கஸ்தூரி மஞ்சளுட
னொப்புடை விடையங் கெந்தகமு
முயர்குங்கி லியங்கருங் காலிவேர்
தப்பிலா மாஞ்சி விலவம்பிசி
னான புளியங் கொட்டைத்தோல்

செப்ப சாதிக் காய்கிராம்பு
சேர முத்தம் பூனைக் கால்விரை! 19

அப்பிரகம், காந்தம், சாதிலிங்கம், கஸ்தூரி மஞ்சள், அதிவிடையம், கெந்தகம், குங்கிலியம், கருங்காலி வேர், சடாமாஞ்சில், இலவம்பிசின், புளியங்கொட்டைத் தோல், சாதிக்காய், கிராம்பு, கோரைக் கிழங்கு, பூனைக்காலி விதை,

இவையே சமனாய் தான்கொண்டு
இதுக்குக் கசாய மரைக்குவது
மவையாம் நாவற் பட்டையது
மான பொன்முசிட்டை மாதளங்காய்
வையா முத்தங் குடசப்பாலை
யாய பெருமரம் வெட்பாலை
நவையாஞ் சமனாய் கசாயமிட்டு
நாமுன் சொன்ன மருந்தெல்லாம்! 20

ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுத்து வைக்கவும். நாவற் பட்டை, பொன்முசுட்டை, மாதுளங்காய், கோரைக் கிழங்கு, குடசப்பாலை, பெருமரப்பட்டை, வெட்பாலை ஆகியவற்றைச் சமமாய் எடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சவும்.

இந்தக் கசாயத்திற் றானரைத்து
இயன்ற குன்றிப் பிரமாணம்
வந்த சர்க்கரை தேனிலிட
வருத்தஞ் சங்கு பொன்முசிட்டை
தந்த முத்தங் கசாயத்தில்
தானே குளிகை யிடலாகு
மிந்து முதலாய்ப் பத்தியமு
மிதுக்குமாறு வியாதி யுங்கேள்! 21

இக்குடிநீரில் மேற்சொன்ன மருந்துகளை அரைத்து, 130 மி.கி. அளவுள்ள குளிகைகளாய்ச் செய்து சர்க்கரை தேனிலிழைத்துக் கொடுக்கவும். சங்கு, பொன்முசுட்டை, கோரைக்கிழங்கு சேர்ந்த குடிநீரில் இழைத்துக் கொடுக்கவும்.

சீதக் கிராணி சங்கிராணி
திடந்திர வயிற்றுக் கழிச்சலுடன்
மீதே வாழைக்காய் கச்சல்
மிகுந்த அத்திக் காயாகும்
போதே யாட்டுப்பால் காய்ச்சித்
தோச்சுக் கொள்ளத் தான்போகும்
மாதே இரத்தக் கிராணியுடன்
மன்னுஞ் சேற்றும கிராணியிதே! 22

சீதக்கிராணி, கிராணி, வயிற்றுக் கழிச்சல் ஆகியவை குணமாகும். வாழைக்காய் கச்சல். அத்திக்காய், ஆட்டுப்பால் ஆகியவை பத்தியமாய்க் கொள்ள இரத்தக் கிராணி, சிலேத்தும கிராணி தீரும்.

கிராணி கேசரி

வேராரும் வேர்க்கொம்பு மிளகுதிப்பிலி இந்துப்பு
வெண்காரம் விடையம் நாபிமேலத்தி கன்மதம்
சீரகமொக்கமு முயன்ற யூமத்தை விரையும்
பேரான மாங்கொட்டை லிங்கமுங் கைப்புடன்
பேராகும்பிணி கெந்தகம் சாதிக்காய் கிராம்பு
பேணும் சந்தமுடன் வசம்பு காஞ்சுரை வசவாசி
நீராம்நொச்சி லிஞ்சிகஞ்சா நேர்சாற் றரைத்துண்டை
தண்ணில் தயிர்சர்க்கரை தேனில் நிறையவே
காரணவகை கொண்டிருக்கிறதோர் விசூழிவகை
கடுப்புடன் சொல்லும் வியாதியெல்லாம்
துலையுமிது கிராணிகேசரி தொல்லுலகிற் பேரானதே! 23

சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, வெங்காரம், அதிவிடையம், நாபி, அத்தி, கல்மதம், சீரகம், ஊமத்தை விதை, ஏலரிசி, மாங்கொட்டை, இலிங்கம், கெந்தகம், சாதிக்காய், கிராம்பு, சந்தனம், வசம்பு, காஞ்சுரை, வசுவாசி ஆகிய மருந்து சரக்குகளை எடுத்து நொச்சி, இஞ்சி, கஞ்சா

ஆகியவற்றின் சாற்றை விட்டரைத்து 130 மி.கி. அளவுள்ள குளிகைகளாய்ச் செய்து கொள்ளவும். அதனை, தண்ணீர், தயிர், சர்க்கரை, தேன் ஆகியவற்றில் இழைத்துக் கொடுக்க விசூழிக் கழிச்சல், கடுப்புடன் கூடிய கழிச்சல் வகைகள் அனைத்தும் குணமாகும்.

கிராணியங்குசக் குளிகை

காரா மணியான் றாகுங்
காவி விடைய யிரண்டுடனே
சீராங் கிராம்பு மூன்றாகுஞ்
சிறந்த வசுவாசி நாலுடனே
பேராஞ் சாதிக்கா யஞ்சு
பெருத்த சந்தன மாறாகும்
ஏரா மிலவம்சிபி னேழு
ஏற்ற கஞ்சாச் சாறுகொள்ளே! 24

காராமணி ஒரு பங்கு, காவி, அதிவிடையம் இரண்டு பங்கு, கிராம்பு மூன்று பங்கு, வசுவாசி (சாதிப்பத்திரி) நான்கு பங்கு, சாதிக்காய் ஐந்து பங்கு, சந்தனம் ஆறு பங்கு, இலவம் பிசின் ஏழு பங்கு, கஞ்சாச்சாறு எடுத்துக் கொள்ளவும்.

கொள்ளு மருளூமத்தை நொச்சிற்
குலவுஞ் சாற்றிலொரு நாளளவு
மெள்ள வரைத்துண்டை மிளகளவாய்
மிகுந்த சர்க்கரை தேனிலிட
உள்ள படியே தானிடவே
ஓடும் வியாரியுரைப் போங்கேள்
விள்ளுங் கிராணி வகைபோக்கு
மேலாங் கிராணி அங்குசமே! 25

மருளூமத்தை, நொச்சிச்சாறு இவற்றில் ஒரு நாள் மேற்கூறிய கடைச்சரக்குகளை அரைத்து மிளகளவு குளிகை களாய்ச் செய்து சர்க்கரை, தேன் இவற்றில் இழைத்துக் கொடுக்க கிராணி வகைகள் தீரும்.

கிராணிகேசம்

காராமி ளகுநல்கொடிவேலிவேர் வெண்காரம் வசநாபி
கஞ்சாவிலையுமூ மத்தைவிரை சாதிக்காய் சாதிலிங்கம் கெந்தகம்
யோராம் லோகபற்பந் திப்பிலி சீரகம் விடையந்
தாச்சமப்பி ரகபற்பம் பொருந்தி இதற்கெல்லாம் சரியா
யோராரும் போமத மத்தை சாற்றரைத்து
எழிலாங் குன்றிபோல் வினையதேனிற் நெய்கொள்
பாராரும் நீரழிவு கிராணிவகை விட்டொழியும் பரவும்
பாண்டு வீக்கம்பாறு மிதுபாருல கிற்பேரா னதுவே!

26

காராமிளகு, கொடிவேலிவேர், வெண்காரம், வசநாபி, கஞ்சாஇலை, ஊமத்தை விதை, சாதிக்காய், சாதிலிங்கம், கந்தகம், உலோக பற்பம், திப்பிலி, சீரகம், அதிவிடையம், அப்பிரக பற்பம் ஆகியவற்றைச் சமமாய் எடுத்து ஊமத்தைச் சாறூற்றி அரைத்து 130 மி.கி. அளவுள்ள குளிகைகளாய்ச் செய்து தேனில் இழைத்துக் கொடுக்க நீரிழிவு, கிராணி வகைகள், பாண்டு வீக்கம் குணமாகும்.

அதிமன்னிய குளிகை

சாதிக் காயுங் கிராம்புவுந் தன்னை
திரு சந்தனம் பிளியுடன்
மீதிரு சீரக மசமதாகம்
விடைய மாங்கொட்டை சாதிலிங்கம்
போதே அத்திப் பூச்சுக்குப்
பொருந்த யிந்து வேப்பம்பிசி
னாதே வெள்ளுள்ளி யிவையோ ரொன்று
ஆன கழஞ்சு நிறையாமே! *27*

சாதிக்காய், கிராம்பு, சந்தனம், புளி, நற்சீரகம், கருஞ்சீரகம், அசமதாகம், அதிவிடையம், மாங்கொட்டை, சாதிலிங்கம், அத்திப்பூ, இந்துப்பு, வேப்பம்பிசின், வெள்ளுள்ளி ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுக்கவும்.

வசம்பு நாபி வசுவாசி
மற்ற இலவம் பிசினுடனே
இசங்கு பூமத்தை நொச்சிலிலை
இயன்ற கரிசலாங் கண்ணி சாற்றிற்
கசங்க வரைத்துச் சுண்டைக்காய்
கட்டு மளவு குன்மத்திற்
றிசைந்த தேனில் வயிற்றில் நோய்
கதிருந்த கருப்பஞ் சாற்றிலிடே! 28

வசம்பு, நாபி, வசுவாசி, இலவம்பிசின், இசங்குப்பூ, ஊமத்தை, நொச்சியிலை ஆகியவற்றைச் சமஅளவெடுத்து கரிசலாங்கண்ணி சாறூற்றி நன்கு அரைத்துச் சுண்டைக்காயளவு குளிகையாய்ச் செய்து தேனில் இழைத்துக் கொடுக்க குன்மமும் கருப்பஞ் சாற்றினில் கொடுக்க வயிற்று நோய்களும் குணமாகும். பலவகை கிராணி தீரும்.

கதலியுண்டை

சாதிக்காய் கழற்சி பருப்புத்
தானே சுக்குக் கடுக்காயும்
போதமா தளைபெரு மரப்பட்டைப்
புகழும் விடத்தேரை வேர்ப்பட்டை
மீதே அத்திப்பூ வறள்பூலா
மிக்கக் கொழுந்திவை சமனாய்
மாதே வறுத்துப் பொடிசெய்து
வாழைப்பூச் சாற்றிலரைத் துண்டை! 29

சாதிக்காய், கழற்சிப்பருப்பு, சுக்கு, கடுக்காய், மாதுளை, பெருமரப்பட்டை, விடத்தேரையின் வேர்ப்பட்டை, அத்திப்பூ, வறட்பூலாவின் கொழுந்து இவற்றைச் சமமாய் எடுத்துப் பொடித்து வாழைப்பூவின் சாற்றில் அரைத்து தேற்றாங் கொட்டையளவு உருண்டை செய்து தேனிலிடப் பித்த கிராணி, அதிசாரமுந் தீரும்.

தேசகாரி கடுகு

நொச்சிற் பொடுதலை பிரண்டையுடன்
நுகருஞ் சதிரக் கள்ளியுமாம்
வைச்ச கரிசாலங் குப்பை மேனி
வாழுஞ் சாரணை யெருக்கிலையு
மிச்சை கலியாண முருக்கிலையு
நீர்மேல் நெருப்புமிவை பத்து
வைச்ச சாறு பதினாழி
தானந்தபானை யிற்றான் வாரே! 30

நொச்சி, பொடுதலை, பிரண்டை, சதுரக்கள்ளி, கரிசாலை, குப்பைமேனி, சாரணை, எருக்கிலை, கலியாண முருக்கிலை, கல்லுருவி எனும் பத்து மூலிகைகளின் சாறுகளை வகைக்கு 1.3 லி. எடுக்கவும். அதனைப் பானையில் ஊற்றிக் கொள்ளவும்.

வெள்ளுள்ளித் திரியாம்பலம் விசை
மேவி இடித்து அச்சாத்தி
லுள்ள காடி யாவின்
மோரோர் நாழியுடன் விட்டு
மெள்ளத் தேங்காய் நூறுபல
மிக்க யிருபது பலஞ்சுக்கு
கொள்ள இந்துபல மிரண்டு
கூட்டி யிடித்தேச் சாறுகற்கம் 31

பூண்டை இடித்த சாறு, காடி, பசு மோர் வகைக்கு 1.3 லி., தேங்காய் 3500 கி., 700 கி. சுக்கு, இந்துப்பு 70 கி. எடுத்து இடித்துச் சாறெடுத்துக் கொள்ளவும்.

எல்லாங் கலந்து பானையிலிட்டு
ஏழுநாள் கொதி யிட்டு
வல்ல படியே யெட்டாநாள்
மருவு மெண்ணெய் நெய்யுடனே
நல்ல பொரிக்கறிப் பதமாக
நாடி இறக்கி மேற்பொடிதான்

அதிற்சேர்த்து வைத்து
யருளிச் செய்வோ மதுகேளீர்! 32

மேற்கூறப்பட்ட அனைத்தையும் பானையிலிட்டு ஏழுநாள் கொதிக்க வைத்து எட்டாம் நாள் பொரிக்கறிப் பதத்தில் இறக்கி கீழ்வரும் பொடியைக் கலந்து கொடுக்க நோய்கள் குணமாகும்.

வேப்பிலை ஈர்க்கது சீரகமு
மிகுந்த சுக்கு மசமதாகமா
யப்பகிற் சுக்குத் திப்பிலியு
மான கொடுவேலி யதிவிடைய
மீயப்பா வட்டத் திருப்பி யெல்லா
மிவை யோரோன்று நாலுபலங்
கோப்பாய் பெருங்காய மோர்பலங்
கொண்டே வறுத்துப் பொடிசெய்து! 33

வேப்பீர்க்கு, சீரகம், சுக்கு, அசமதாகம், திப்பிலி, கொடிவேலி, அதிவிடையம், வட்டத்திருப்பி ஆகிய மருந்துச் சரக்குகளை வகைக்கு 140 கி. எடுத்து, பெருங்காயம் 35 கி. சேர்த்து வறுத்துப் பொடித்துக் கொள்ளவும்.

முந்தக்கசாய மதனோடே
முசியாமற் கிளறிமுடிந்த பின்பு
அந்தக் குழம்பு தானியத்
திலையிரு நாளேபுடம் வைத்து
அந்தி வெடிவேறு கழஞ்சுகொள்ள
வானவாய்வு பல கிராணி
முந்த மூலசீத யிரத்த
முனிவர்மண்டி குப்பை யதிசார
வந்த பாண்டு வயிலுள்ளமாம்
வியாதி யிவை போமே! 34

மேற்கூறிய குடிநீரில் இச்சூரணத்தைப் போட்டு கிளறிக் கொள்ளவும். இதனைத் தானியத்தில் பத்து நாட்கள் புடமாக

உள்ளே வைக்கவும். பிறகெடுத்து 5 கி. உள்ளுக்குக் கொள்ள வாய்வு வகைகள், பலவகைக் கிராணிகள், சீத இரத்த மூலம், அதிசாரம், பாண்டு, வயிற்றிலுள்ள நோய்கள் பலவும் தீரும்.

சுக்கங்காய் நெய்

ஆயிற் பட்டைதான் பதக்கு
ஆன நெல்லிடை கசாயமிட்டு
ஏயத் திப்பிலி சிறுதேக்கு
இசைந்த விழாலம் பெருங்குரும்பை
பாயத் திப்பிலி மூலமுடன்
பரிந்த விடையம் பெருங்காய
மாய விந்து செவ்வியமு
மன்னுஞ் சீரக மசமதாகம்! 35

ஆயில் பட்டையை 10.4 லி. தண்ணீரிற் போட்டு குடிநீராய்க் காய்ச்சவும். திப்பிலி, சிறு தேக்கு, பெருங்குரும்பை, திப்பிலிமூலம், அதிவிடையம், பெருங்காயம், இந்துப்பு, செவ்வியம், சீரகம், அசமதாகம்,

வசம்பு வானைத் திப்பிலியு
மதுரம் வட்டத் திருப்பியுடன்
கசங்கு முத்தங் கொடுவேலி
கதித்த சுக்கு மிளகு மஞ்சள்
நிசங்கா னோரொன்று குறுணி
நெய்க்குநிறை பலமொன்று தானாக
இசைந்து வடித்து முக்கழஞ்சு
கொள்ளவே குங்கிராணி வகையெல்லாம்! 36

வசம்பு, ஆனைத்திப்பிலி, அதிமதுரம், வட்டத்திருப்பி, கோரைக் கிழங்கு, கொடிவேலி, சுக்கு, மிளகு, மஞ்சள் ஆகிய சரக்குகளை வகைக்கு 5.2 லி. எடுத்துப் பொடித்து மேற்குறிப்பிட்ட குடிநீரில் போட்டுக் காய்ச்சி, 35 கி. நெய்யையும் ஊற்றி பக்குவத்தில் வடித்து 15 கி. உள்ளுக்குக் கொடுக்க கிராணி வகைகள் தீரும்.

கட்டக்காதி குளிகை

பெருமரப் பட்டை தூணிப்
பெருகத் துவைத்து நீர்வார்த்து
உருக்க காஞ்சு குறுணியாக்கி
உற்ற சீலையால் வடிகொண்டு
வருக்கக் காய்ச்சி நாழியாய்
வறள வற்றிய கசாயத்தி
லருகு மிளகு சீரக
மான கருஞ்சீரகம் கிராம்பூவும்! 37

பெருமரப்பட்டையை இடித்து 21.3 லி. தண்ணீரில் போட்டுக் காய்ச்சி 5.2 லி.ராக சுருக்கிக் கொள்ளவும். அதனைத் துணியில் வடிகட்டி மீண்டும் குடிநீராய்க் காய்ச்சி 1.3 லி.யாய்க் குறுக்கிக் கொள்ளவும். மிளகு, சீரகம், கருஞ்சீரகம், கிராம்பு,

புளியங் கொட்டைத் தோலுடனே
பெருகுமா விரைப்பொடி இந்து
தளிர்வொக்க பொடி செய்து
தானே சீலையில் வடிகொண்டு
அளவே பொடியைப் பெருஞ்சட்டி
அதனிற் பாகுபோற் காய்ந்த பின்பு
கொளவே இந்தப் பொடிதூவிக்
குளறித் திரட்டி எடுத்திடவே! 38

புளியங்கொட்டைத் தோல், புளியங்கொட்டைப் பொடி, இந்துப்பு இவற்றை நன்கு பொடித்துத் துணியிற் வடிகட்டிக் கொள்ளவும். பெரிய சட்டியில் குடிநீரைக் காய்ச்சிப் பாகு போல் ஆக்கி இப்பொடியைத் தூவிக் கிளறிக்கொள்ளவும்.

சிறுபாக்களவு உருண்டை பண்ணிச்
செழித்த எருமை மோரிலிட
முறுமே வயிற்றிற் கடுப்பதுவு
முகந்த குழந்தைப் பிள்ளைக்கு
மறுமே பாதியிற் பாதி
யுண்டைக்கான கடுப்பு மிகமீளும்
குறுகச் சடத்துப் பெருந்த மீத்தோன்
கூறுந் தமிழிற் குறியிதுவே! 39

அதனைச் சிறிய பாக்களவு உருண்டைகளாகச் செய்து எருமை மோரில் கலந்து உட்கொள்ள வயிற்றுக் கடுப்பு தீரும். சிறு குழந்தைகட்கு உருண்டையில் கால்பகுதியைக் கொடுக்க கடுப்பு நீங்கும்.

சீத சூரணம்

திரிபலை திரிகடுகு கற்கடக
சிங்கி யுடன்சினங் கொள்ளா
வறிவே கண்டங் கத்திரி
வேரான சிறுதேக்கு கோட்டமுடன்
குறியா மாஞ்சி லிந்துப்புக்
கோல வெண்னீிற் றான்கு ழைத்து
இறுகக் குடுக்க கிராணியே
இவையுஞ் சுவாச காசம் போம்! 40

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கற்கடக சிங்கி, கண்டங்கத்திரி, சிறுதேக்கு, கோட்டம், சடாமாஞ்சில், இந்துப்பு ஆகியவற்றையும் சம அளவெடுத்துப் பொடித்து வெந்நீரிற் குழைத்துக் கொடுக்க கிராணி, சயம், சுவாசகாசம் தீரும்.

குடிநீர்

ஆடாதொடை சிறு வழுதிலை
வேரான சிந்தில் மிளகுடனே
தோடார் குழையிர் காய்ச்சிக்கொள்
சொன்னோங் கசாய மிதுவென்று
நீடார் வேதப் படிதனக்கு
நிகழ்ந்த குறியைத் தான்கண்டு
தோடார் குறுமுனித் தமிழதனால்
கூறி யுரைத்தார் குவலை யத்தே! 41

ஆடாதோடை, சிறுவழுதுணை, சீந்தில், மிளகு ஆகிய மூலிகைகளைச் சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொண்டு அளவறிந்து நோயின் குறிகுணம் அறிந்து குடிக்க நலமாகும்.

சுக்கங்காய் கிருதம்

சுக்குச் செவ்வியம் மாயிற்றோல்
சொல்லிய புங்கம் நீர்கடப்ப
மிக்க சித்திர மூலம்வேர்
மெத்தத் திப்பிலியிவை யோரொன்று
ஒக்கப் பலமொன்று தானாக
வுரத்துத் தறித்து கசாயமிட்டு
இக்குக் கசாயங் குறுணிக்கு
இதற்குக் கற்க மியம்பக்கேள்! 42

சுக்கு, செவ்வியம், ஆயில்பட்டை, புங்கம், நீர்க்கடம்பு, சித்திர மூலம் ஆகியவற்றின் வேர், திப்பிலி ஆகியவற்றை வகைக்கு 35 கி. எடுத்து இடித்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும். 5.2 லி. குடிநீருக்குக் கற்கமான மருந்து கீழ்வருமாறு :

அத்திப் பூவ சமமதாக
ஆன யிந்து பெருங்காயம்
பாத்த யானைத் திப்பிலியு
பருகும் விடைய முத்தமோடு
செத்த வெட்பாலை இருவேலித்
தீருங் கூவிளை மூக்கிரட்டை
அத்திரு சீரக மிலவபிசினும்
கடுக்கா யிவையோ ரொன்று! 43

அத்திப்பூ, அசமதாகம், இந்துப்பு, பெருங்காயம், ஆனைத் திப்பிலி, அதிவிடையம், கோரைக்கிழங்கு, வெட்பாலை, இருவேலி, கூவிளை, மூக்கிரட்டை, நற்சீரகம், கருஞ்சீரகம், இலவம்பிசின், கடுக்காய் ஆகியவற்றை வகைக்கு 10 கி. எடுக்க.

இருகழஞ் சதுவே தப்பாம
லிட்டக் கசாயம் நீர்வார்த்து
மருக வரைத்து நெய் னாழி
வசித்து வடித்து நாளொன்று

தருமே முக்கழஞ்சு நெய்கொள்ள
தயங்குங் கிராணி யறுவகையு
மருகு குன்மக் கிராணி மந்த
மாறுமென்றா ரகத்தியனார்! 44

அனைத்துச் சரக்குகளையும் மேற்கூறப்பட்ட குடிநீர் ஊற்றி அரைத்து நன்கு காய்ச்சி 3.9 லி. நெய்யையும் சேர்த்து பக்குவத்தில் வடித்து 15 கி. நெய்யை உட்கொள்ள ஆறுவகைக் கிராணியும் குன்மமும் தீரும்.

நீரிழிவுக் குணம்

காலவே யிலப்பி கணப்பு கையிற்றனக் குமுத்தாள்
காசினியென சிறுகுழியிற் றண்ணி ருண்ண
சாலவே வெண்ணெயிராத் தயிரிவை யளா
காலே இலாமப்புகையா மிளையாள் கூட்டஞ்
சீலமுடன் வெகு தண்ணி ராவின் பாலுந்
தினமுமே கொள்ள பவற்குமாயித் துண்டாம்
ஞாலந் தனியிவை யதிந்து நடந்தபேற்கு
நன்மையும் பிலனுண்டாம் நாளுந் தானே! 45

காலை எழும்புதல் வேண்டும். காலை வேளையில் தண்ணீரைக் குடித்தல், இரவில் வெண்ணெய், தயிர் குடிக்காமை, தண்ணீரை அதிகமாகக் குடித்தல், பசும்பாலைத் தினமும் குடித்தல் ஆகிய செய்கைகள் கொண்டோர்க்கு எப்போதும் நன்மையே உண்டாகும்.

கய்க்குநெல்லி பிளிப்பாகும் கடுகன் றோகை கைப்பாங்
கடுபாதங் காய்த்துவற் புத்தா னாகும்
நெய்க்குஞ் சுனையில் நிலத்தின் கிழங்கு மாகாது
நீர்மோர்எண் ணெயுமாம் நெய்தயிர் பாலா காது
வாய்த்தமது வண்டுநோ குமற்ற மதுர மாகாது
வாழையிளங் காயாகும் வழுதிலங் காயாகும்
பாய்ச்சலுள் முயலுமே பறவைகவு தாரியுமாம்
பறந்தோடியு மாகாது பலநீரி ழிவுக்குற் றதுவே 46

நெல்லிக்காய் புளிப்பிற்கு சேர்த்துக்கொள்ளலாம். துவர்ப்பான காய்கள், சுணைக்கிழங்கான கருணைக்கிழங்கும் ஆகும். நிலத்தில் பரவும் கிழங்குகள் உதவாது. நீர்மோர் எண்ணெயும் எடுக்க. நெய், தயிர், பால் ஒத்துக்கொள்ளாது. தேனைத் தவிர பிற இனிப்புப் பொருட்கள் ஆகாது. வாழைக்கச்சல், வழுதிலங்காய், முயல், கவுதாரி நல்லது.

மதுரமான வைதின் கையினாலும்
வழுதிலைக் காய்தின் கையினாலும்
மிதமா மாங்கிஷந் தின்னலாது
மெழிலன் குறிபோகஞ் செய்கையினாலு
மதமாய்ப் பால்நெய் யிலாத
படியே பாரில் மானிடவ
ரிதமாய் நடந்தாற்றா னில்லை
இல்லா விட்டால் நீரிழிவாம்! 47

இனிப்பானவற்றைத் தின்பதாகாது. வழுதுணங்காயைத் திண்ணல், மாமிசத்தைக் குறைத்துச் சாப்பிடுதல், பால், நெய்யைக் குறைத்துக் கொள்ளல், போகத்தைக் குறைத்தல் என்ற குணங்களை ஏற்று நடந்தால் நீரிழிவுநோய் அண்டாது.

வாதநீரிழிவுக் குணம்

வாதத்தினால் வந்த நாலுக்கும்
வருத்துங் குணங்க ளதுகேளாய்
நீதி வசளை உத்தமனும்
நீளும்போசன மத்திட மெனலும்
போத போதன்நெய் போதித்து
பொன்னே வெண்ணெய் விலக்கரியுல
மாதே மத்திடங் கோமியமும்
வருந்தி னாலு மன்னியதே! 48

வாதத்தினால் ஏற்பட்ட நீரிழிவிற்கு வழலை நோய் தோன்றல், உணவையும், நீர்ப்பொருட்களையும் போதிய அளவு உண்ண முடியாமை, இரண்டும் தோன்றும். வெண்ணெய், நெய் போன்றவற்றை விலக்க வேண்டும். கோமியம் மருந்தாகும்.

வசளைப் பிரமியக் குணம்

வசளைப் பிரமிய மொன்றுக்கு
மகிழுமிறைச்சி கழுவு நீர்போ
லசவாய் நெய்போல் மிதக்குமென்னே
ஆகும் வசளைப் பிரமேகம்
நிசமா யுத்தமனேனும் வகையே
நிழும்பால் போல்நாடு மொன்று
அசவாய் கருப்புத் தேங்காய்ப்பா
லாகுமுத்தமன் குண மொன்றே! 49

வசளைப் பிரமியத்தில் இறைச்சி கழுவிய நீர்ப்போன்றும், நெய் போன்றும் சிறுநீரில் மிதக்கும். முற்றின தேங்காய்ப் பாலைப்போல் சிறுநீர் கழிதல், பாலைப்போல் சிறுநீர் கழிதல் இவையும் வசளைப் பிரமியத்தின் குணங்களாம்.

பித்த பிரமியக் குணம்

பித்தத்தினால் வரு மாறுக்குப்
பெருகு மாளை மதம்போல
உற்ற கற்றாழை நாறுவது
முயர்ந்த வழற்போல் நாறுவது
முற்று நீர்ப்பட்ட விடமெல்லா
முனிந்தே எரிப்பு நாறுவது
மற்ற பூவெரிக்கு மொன்று
வாக்கெடுத்துக் கழியு மொன்றே! 50

பித்தத்தால் வரும் பிரமிய நோய் ஆறு என்கிறார். ஆனால் அதிபித்தம், மிதபித்தம், கடா பித்தம், சாமள பித்தம், கரிபித்தம் என பித்தம் ஐந்தும் யானையின் மதம்போல் பெருகிவிடும் என்பதாம். பித்த நோயினரின் உடம்பு கற்றாழை நாற்ற மெடுக்கும். சிறுநீர் பட்டவிடமெல்லாம் எரிச்சலும் நாற்றமும் உண்டாகும்.

சிலேத்தும பிரமியக் குணம்

சேற்றுமத்தாற் றோன்றும் பத்துக்குச்
செய்யுங் குணங்கள் செப்பக்கேள்

பாத்தே யுத்தமன் தேசனென்பன்
பனந்த அத்தி சூரியனும்
நீத்த சுக்கிலன் நவ்வண்ண
னிகழுஞ் சதாசிவன் நீலனென்பன்
மாற்றம் விஷ்ணு தூதன்னு
மன்னும் பத்து வகையாமே! 51

சிலேத்துமத்தால் வரும் பிரமிய நோய் பத்துக்கும் ஏற்படும் குணங்களைச் சொல்வேன். உத்தமன், தேசன், சிவஅத்தி, சூரியன், சுக்கிலன், நல்வண்ணன். சதாசிவன், நீலன், விஷ்ணு, தூதன் ஆகியவை அப்பத்தாகும்.

உத்தம மிளநீர் போலிருக்கு
முகந்த சதாசிவன் கத்தம்போல்
வைத்த வுப்புச மிகவுண்டா
மண்ணு மிவன்னு னுரைபோலா
மெத்த விட்டுனு கரைத்த
மாப்போல் மின்னும் பழுப்புத்
தித்திப்பாதே திரியன்பூ வேரிக்கு
மானநீரு மேலும் பேரிக்கும்! 52

உத்தமனில் இளநீர்போல் சிறுநீர் அமையும். சதாசிவனில் சாணம்போல் கழியும். உப்பிசம் ஆகும். நுரைபோல கழியும். விட்டுனுவில் கரைத்த மாவு போல் கழியும். தித்திப்பாய் இனிப்பாய் சிறுநீர் கழியும்.

சுக்கிலங் கருப்பம் பால்போல்
சுகித்த யிரச முண்டாகு
மிக்கல் வுண்ணமுதிரை நீர்ப்போல்
மிகுத்தயி நிரம்ப மொய்க்குந்
தக்க சேற்றுமம் பத்துக்குந்
தானே குணமென்று தப்பாது
ஒக்க முனிவன் மானிடற்கு
உரைத்தா ருண்மைப் படியென்றே! 53

சுக்கிலம் கருப்பஞ்சாறு போல் கழியும். குதிரையின் சிறுநீர்போல் கழியும். ஈக்கள் அதிகமாக மொய்க்கும். ஆக சிலேத்துமத்தினாலான பத்துக்கும் இவையே குறிகுணங்கள் என முனிவர்கள் சொல்வர்.

பின்னுஞ் சேற்றும முள்ளங்கால்
கைய்யும்வெருவ மிகவெரிக்கும்
நன்னே வயிறு தானெரியு
நாளு முன்ரோம முட்டணமா
மென்ன பன்னீர் நிறம்போல்
விருக்கும் வெய்யிலினெய் மிதக்கு
மன்னே எறும்புமி யெரிக்கு
மான சேற்றுமம் பதின்வகையே! 54

சிலேத்துமத்தில் உள்ளங்கால், கை அதிகமாக எரிதல் வயிற்றில் எரிச்சல் அதிகமாதல், உடல் வெப்பமாதல், பன்னீரின் நிறம் போல் சிறுநீர் கழிதல், நெய்ப்பசை சிறுநீரில் அதிகரித்தல், எறும்பு மொய்த்தல் ஆகியவை சிலேத்துமத்தினால் வரும் பத்து வகைக்கும் குறிகுணங்கள்.

இரச காரீயக் குளிகை

இரதங் கழஞ்சு காரிய
மிதுவுங் காந்த மிகக் கழஞ்சு
சரித ஆவாரை யைங்கழஞ்சு
தானே தென்னம்பூ கழஞ்சு
அரிதாங் குரும்பைமுகிழ் நாற்கழஞ்சு
அவுரிச் சாறும் நாற்கழஞ்சு
நெரிதாஞ் சிட்ட மிருகழஞ்சு
நேரே எருமைமோர் வாத்தரையே! 55

இரசம், காரீயம், காந்தம் வகைக்கு 5 கி., ஆவாரை, தென்னம்பூ வகைக்கு 5 கி., குரும்பை, அரிதாரம் வகைக்கு 20 கி., அவுரிச்சாறு 20 கி., சிட்டம் 10 கி. எடுத்து எருமை மோர் சேர்த்தரைத்துக் கொள்ளவும்.

குன்றிப்பிர மாண முண்டை செய்து
கொடிய பித்தத்துக்கு சர்க்கரைநெய்
எண்ணி வாதத்துக்குத் தேனாகு
மியன்ற சேற்றுமத்துக்கு மிதுவேயா
முண்ண ஆவாரைப்பூப் பொரித்து
வுற்ற கசாய மாவாரையே
ரிண்ணே யுண்ண நீரிழிவு
யெல்லாம் பறந்து போயி விடுமே! 56

130 மி.கி. அளவு உண்டைகளாய்ச் செய்து கொள்ளவும். அதனைச் சர்க்கரையில் இழைத்துக் கொடுக்க பித்தமும், நெய்யில் கொடுக்க வாதமும் தேனில் கொடுக்க சிலேத்துமமும் நீங்கும். ஆவாரைப் பூவினை வறுத்துக் குடிநீராக்கி அதில் உருண்டையை இழைத்துக் கொடுக்க நீரிழிவு குணமாகும்.

மோருண்டை

வெட்பூலாக் கொழுந்து டனே
மிக்க வம்மான் பச்சரிசி
அப்பிற சட்டி காயவைத்து
ஆவி போகாமல் மோர்விட்டு
செப்பமுடன் மூடித்தா னவிச்சு
செய்யவத் தண்ணீரில் அதனரைத்து
ஒப்புடன் சுண்டைக் காய்போல்
வுருட்டி மோரிலுகந்து கொள்ளே! 57

வெட்பூலாக் கொழுந்து, அம்மான் பச்சரிசி எடுத்துச் சட்டியை அனலில் வைத்து காயச் செய்து அதில் போடவும். மோரை ஊற்றி ஆவியில் வேக வைக்கவும். அந்நீரிலேயே அச்சரக்குகளை அரைத்துச் சுண்டைக் காயளவுள்ள உருண்டைகளாய் உருட்டி மோரில் உட்கொள்ளுக. அன்றைய தின மோரில் குடுக்கவும்.

கோமுத்திரம் போற்கழி வதுக்குக்
குழவு கட்டுக்கொடி வேரைப்
போமே நாழித் தண்ணீரில்
பொருந்த யிரவடுப்பில் வேக வைத்து
நாமே பத்துபலம் வேரை
நன்றாய் காய்ச்சி யண்ணீரி
லாமே முன்சொன்ன வுண்டைகொள்ள
லதுவுடனே மிகத் தீற்கும்! 58

பசுவின் சிறுநீர் போல் கழிவதற்குக் 350 கி. கட்டுக் கொடியின் வேரை 1.3 லி. தண்ணீரில் போட்டு இரவெல்லாம் வேக வைத்து எடுக்க. அந்நீரில் மேற்சொன்ன உருண்டையை இழைத்துக்கொடுக்க இந்நோய் தீரும்.

வசுவாசி சூரணம்

வசுவாசி கிராம்பு தானும்
வருத்துங் கடுக்கா யிலாம்பிச்ச
மிசைவாய் தான்றிக் காயுடனே
இலவங்கப் பட்டை மருந்தெல்லாம்
நிசமா யோரொன்று நாற்கழஞ்சு
நிச்சய மோரி லாவாரை
வசமாய் நினைத்த விரையும்
வருந்த இடித்துவடி கொள்ளே! 59

சாதிபத்திரி, கிராம்பு, கடுக்காய், இலாமிச்சு, தான்றிக்காய், இலவங்கப்பட்டை ஆகியவற்றை வகைக்கு 20 கி. எடுத்துக் கொள்ளவும். ஆவாரை விதையையும் சேர்த்து இடித்து முறைப்படி சூரணம் செய்துகொள்ளவும்.

மெருகங் கிழங்கு ஆவாரை
மிகுத்த விரையுஞ் சந்தனமு
முருகுந் தேற்றாம் விரையுடனே
ஒரொரு கழஞ்சு தான்கொண்டு
எருமை மோரில் பிசைந் ததுதா
னிதுவுமுன் சூரண மிருகழஞ்சே! 60

மெருகங்கிழங்கு, ஆவாரை விதை, சந்தனம், தேற்றான் விதை ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்து இடித்துப் பொடித்து மோரில் கலந்து கொள்ளவும். மேற்படி சூரணத்தை 10 கி. சேர்க்கவும்.

உப்புப் புளிப்பு வாகாது
உற்ற தண்ணீர் தாகத்தி
லொப்பு நிம்பக் குழம்புடனே
யுதவஞ் சீனியி லரைத்துக் கொள்
செப்பப் பறகீழோ துக்கியிரு
திரும்பத் தாக முண்டாகில்
மெய்ப்பிற் கரண்டி இற்றே
நெய்யும்விட்டு கலக்கி குடிக்கப் போம்! 61

உப்பு, புளிப்பை நீக்கவும். இம்மருந்தைக் கொள்ளும் போது தாகம் எடுத்தால் எலுமிச்சஞ்சாற்றுடன் சீனியையும் சேர்த்துக் குடிக்கவும். மீண்டும் தாகமேற்படின் ஒரு கரண்டி நெய்யைக் கலந்து குடிக்க நீங்கும்.

சூரிய மந்தக் குடிநீர்

கடலி றாஞ்சிப் பட்டையுடன்
கனத்த ஆவாரைப் பட்டையுமாந்
திடமா யோரொன் றொருகழஞ்சு
தேற்றாம் விரையு மிருகழஞ்சு
உடனே கடுக்காய் நாற்கழஞ்சு
உற்ற தான்றி யிருகழஞ்சு
விடவே சிரக மொருகழஞ்சு
விட்டுக் காய்ச்சிக் குடிப்பதுவே! 62
மோரி லரைத்துக் குடிக்கவுமாம்

கடலழிஞ்சிப்பட்டை, ஆவாரைப்பட்டை, இவை யிரண்டையும் வகைக்கு 5 கி. எடுக்க. தேற்றான்விரை 10 கி., கடுக்காய் 20 கி., தான்றி 10 கி., சீரகம் 5 கி., எடுத்து இடித்து தேவையான அளவு தண்ணீர்விட்டு முறைப்படி காய்ச்சிக்

குடிக்கவும். மருந்துச் சரக்குகளை மோரிலும் அரைத்துக் குடிக்கலாம்.

இளநீர் போல்கழிந் தக்கா
லினித்தொத் திருக்குமிதுவு மென்று
அளவா மாவாரை முற்றினது
யான பட்டை யறுபலமாங்
கொளவே குறுணித் தண்ணீரில்
கொதித்து நாழி யானக்கா
லுளவாய் முன்சொன்ன குளிகை ரெண்டு
உற்ற கசாயத் துடனிடுமே! 63

இளநீர்போல் கழிந்து இனிப்புச் சுவை கூடியிருப்பின் ஆவாரையின் முற்றிய பட்டை 210 கி., எடுத்து 5.2 லி. தண்ணீரில் போட்டு 1.3 லி. ஆக முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும். இதில் முன்சொன்ன குளிகை இரண்டினை இழைத்துக் கொடுக்கவும்.

சகல பீனசத்துக்கு

எருமைத் தயிரை வெடி வேறே
இதங்கத் தோய்ச்சு சீலைகட்டி
மருமே கீழதாய் தூக்கி வைக்க
மறுநாட் காலம் பெறவெடுத்து
தருமே நீர்போய் தயிருக்கு
தளரா நல்லெண்ணெய் ஆழாக்கிட்டு
மருவப் பிசைந்தெழு நாளளவும்
மகிழ்ந்து தின்னத் தான்திரும்! 64

எருமைத் தயிரைத் துணியில் கட்டி தலைகீழாய்த் தொங்கவிட்டு இரவில் வைத்து மறுநாள் காலையிலே எடுத்து நீரினை நீக்கி விடவும், தயிரையும் 162 மி.லி. நல்லெண்ணெயையும் சேர்த்துப் பிசைந்து ஏழு நாட்கள் கொடுக்கத் தீரும்.

புளிப்புங் கைப்புந் தான்விட்டுப்
பெருகுந் தாக மருத்துவகேள்
களிப்பு நிம்பக் கொழுந்துடனே
கருதுஞ் சீனிதா னரைத்து
அளிப்போம் வாயி லொதுக்கியிட
அடங்கா தாக முண்டாகில்
நளிப்பாம் நெய்தேன் தான்கூட்டி
நாடிக் கொள்ளீர் தாகம் போம்! 65

புளிப்பு, கசப்பான பொருட்களை நீக்குக. வேம்பங் கொழுந்தினையும், சர்க்கரையையும் சேர்த்து உட்கொள்ள தாகம் தீரும். நெய், தேன் இவை இரண்டையும் சேர்த்துக் கொள்ள அடங்கா தாகம் நீங்கும்.

காரீயச் செந்தூரம்

கடலி றாஞ்சி பொன்முசிட்டை
கனத்த இலாமிச்சஞ் செங்கிழுவை
திடமாநீ தேற்றாம் பட்டையுடன்
திருமருதங் கல்லின்பட்டை
சிடனே அரசம் பட்டைதான்
ஒதியம் பட்டை யோரொன்று
இடவே முக்கழஞ்சு நீர்தானு
மிதுக்குத் தூணி யெனலாமே! 66

கடலழிஞ்சில், பொன்முசுட்டை, இலாம்பிச்சு, செங்கிளுவை, தேற்றான் பட்டை, மருதம்பட்டை, அரசம்பட்டை, ஒதியம் பட்டை ஆகியவற்றை வகைக்கு 15 கி. எடுக்கவும்.

குறுக வடித்து கசாயத்தில்
கூடுங் கற்கங் கடுக்காயு
முறுமே நாலு தான்றிக்கா
யுற்ற நாற்பது சாதிக்காய்
மறுகு மிவையு மிருபதுடன்
மன்னுந் தேற்றாம் விரைரெண்டு

அறிவோங் காசுக்கட்டி பல
மான சதகுப்பை நாற்கழஞ்சே! 67

மருந்துச் சரக்குகளை இடித்து 43 லி. தண்ணீரில் போட்டு குடிநீராய்க் காய்ச்சவும். அதற்கு கடுக்காய் நான்கு, தான்றிக்காய் நாற்பது, சாதிக்காய் இருபது, தேற்றான்விதை இரண்டு, காசுக்கட்டி, சதகுப்பை வகைக்கு 20 கி. எடுத்துச் சேர்க்கவும்.

மதுரம் லவங்க மெண்கழஞ்சு
வருந்தி இடித்துக் கசாயமிட்டு
இதமாய் வெடிவேறு குடிக்கப்போ
மிதுவே காரியக் கசாயமது
பதமா முனிவன் வேதநூற்
பகர்ந்த குறியே பன்னுங்கால்
திதமாய் திரும் நீரிழிவு
செய்ய கசாய மிதுவாமே! 68

அதிமதுரம், இலவங்கம் இவை வகைக்கு 40 கி. எடுத்து இடித்துக் குடிநீராய்க் காய்ச்சி விடியற்காலையில் அளவறிந்து கொடுக்கவும். இந்தக் காரீயக் குடிநீர் நீரிழிவிற்கு உகந்தது.

காரீயச் செந்தூரம்

காரியம் பலம் நாலாகுங்
கனத்த சட்டியிற் றானிட்டு
பார நாயுருவி யோர்கட்டுப்
பருக நறுக்கி மிகப்போட்டு
திரக் கரண்டிதனிற் சுரண்டி
செய்ய காரியந்தான் வறுக்க
பாரச்சட்டி யிலோடி விட்டால்
பன்னுமறு சட்டியி லிட்டிடுமே! 69

காரீயம் 140 கி. எடுத்து கனமான சட்டியில் போட்டுக் கொள்ளவும். ஒரு கட்டு நாயுருவியை நறுக்கிப் போட்டு அனலில் வைத்துக் கரண்டியால் சுரண்டிக் கொள்ளவும்.

இரண்டையும் சேர்த்து வறுக்க சட்டியில் ஒட்டிக் கொண்டு வராது போய்விடும். எனவே வேறு சட்டியில் ஊற்றிக் கொள்ளவும்.

இப்படி யெழு பரிகார
மெழு கட்டு நாயுருவி
தப்பற வெட்டி தானெரிக்கச்
சட்டி ஏழு மிகவாகு
மொப்புறச் செம்பருத்திப் பூவாலே
உகந்த நிறமே யானக்கால்
தப்பிலா வியாதி தானறிந்து
தரமா யனுபான மறிந்திடவே! 70

இவ்வாறே ஏழுமுறை ஏழுகட்டு நாயுருவியையும் வெட்டிப்போட்டு எரிக்க ஏழு சட்டியிலும் செம்பருத்திப் பூ போன்று செந்தூரமாகும். நோய்களுக்கேற்றவாறு அனுபானங் களைத் தேர்ந்தெடுத்து கொடுக்கவும்.

ஆவாரை சமூலந் தானுலர்த்தி
அதுவுஞ் சீலை வடிகொண்டு
பாவாய் கழஞ்சு இம்மருந்தும்
பருகுஞ் செந்தூரம் பணவிடையும்
மேவித் தேனி லொன்பதுநாள்
மிகுத்துக் குடுக்கத் தான்றிரும்
நாவா லுரைத்தா ரகத்திமுனி
நமக்கு நன்மை யருளாயே! 71

ஆவாரைச் சமூலத்தை நன்கு காயவைத்து துணியில் வடிகட்டி 5 கி. எடுத்து அதனுடன் மேற்குறிப்பிட்ட காரீயச் செந்தூரத்தை 488 மி.கி. சேர்த்துத் தேனில் குழைத்துக் கொடுக்க யானைக்கால் நோய் தீரும். ஒன்பது நாள் கொடுக்கவும்.

நெல்லிப் பருப்பு தான்றிக்காய்
நிசமாஞ் சாதிக்காய் கிராம்பு
வல்ல தொன்று முக்கழஞ்சாய்
வகைந் திடித்துப் பொடிசெய்து

நல்ல திப்படிக் கழஞ்சுடனே
நாடுஞ் செந்தூரம் பணவிடைகொள்
வல்ல தயிர்வெடி வேறு
வருந்து மந்திக்குத் தேனாகும்! 72

நெல்லிப்பருப்பு, தான்றிக்காய், சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றை வகைக்கு 15 கி. எடுத்து இடித்துப் பொடித்து 5 கி. சூரணத்தை எடுத்துக் கொள்ளவும். அதனுடன் காரீயச் செந்தூரத்தை 488 மி.கி. அளவெடுத்துக் கலந்து காலையில் தயிரிலும், மாலையில் தேனிலும் குழைத்துக் கொடுக்கவும். இவ்வாறு ஒன்பது நாட்கள் உட்கொள்ளவும்.

சமுத்திர சோகிப் பலமொன்று
தானே ஊமத்தம் விரைபலமாய்
நிம்மதி யாகப் பொடிசெய்து
நீளு மருந்திரு கழஞ்சு
தமித்த சிந்தூரம் பணவிடையுந்
தானே தேனிற் பத்தியமு
எமக்கே இலைக்கறி புளிச்சதயி
ரிதுவும் பத்திய மெனலாமே! 73

சமுத்திர சோகி 35 கி., ஊமத்தம் விதை 35 கி. எடுத்து இரண்டையும் சேர்த்துப் பொடித்து 10 கி. எடுத்து 488 மி.கி. காரீயச் செந்தூரத்தையும் சேர்த்துத் தேனில் கலந்து கொடுக்க யானைக்கால் குணமாகும். இலைக்கறியும் புளித்த தயிரும் பத்தியமாகும்.

புலிதுடக்கி கடலி றாஞ்சி
பூவர சுமே ரொன்று
நலிவே யில்லா முப்பலமாய்
நாடுங் குறுணித் தண்ணீரில்
பலுக்க கசாய முழக்கதனிற்
பன்னுஞ் சிந்தூரம் பணவிடை கொள்ளில்
குமிலா வாகைப்பொடி கழஞ்சி
லின்னுஞ் சிந்தூரம் தேனிற்கொள்! 74

புலிதுடக்கி (ஈயத்தண்டு), கடலழிஞ்சில், பூவரசு ஆகிய வற்றை வகைக்கு 105 கி. எடுத்து 5.2 லி. தண்ணீரில் போட்டு குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும். 325 மி.லி. குடிநீருடன் 488 மி.கி. செந்தூரத்தைச் சேர்த்துக் கொள்ளவும். 5 கி. வாகைப் பொடியுடன் சிந்தூரத்தைத் தேனில் குழைத்துக் கொள்ளவும்.

ஆவாரை விரையும் விளாம்பிசினு
மரைத்துத் தேனிற் குழைத்துக்கொள்
மேவாய் திரிபலை கொண்டுவேர்
மிகுத்த தேற்றாம்விரை மதுரம்
மாவா யரைத்துத் தேனிற்கொள்
பாலும் வியாதி பகரக் கேள்
நாவா லுரைத்தோம் நீரிழிவு
நாடா தோடும் நன்மையிதே! 75

ஆவாரை விதையையும் விளாம்பிசினியையும் அரைத்துத் தேனில் குழைத்துக் கொள்ளவும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், தேற்றான்விதை, அதிமதுரம், ஆகியவற்றை அரைத்துத் தேனில் குழைத்து உட்கொள்ள நீரிழிவு குணமாகும்.

விளவின் பிசினு மாவாரை
விரையு மிகுத்த மரமஞ்ச
ளளவாய் மஞ்சளிவை யெல்லா
மாறாகப் பொடியைத் தேனிற்றின்
னுளவே நாவற்பதின் கழஞ்சி
லுழக்காய் காய்ச்சிக் குடிக்கப் போங்
குளமாந் திரிபலை மரமஞ்சள்
கொண்டே காய்ச்சித் தேனிற்கொள்! 76

விளாம்பிசின், ஆவாரை விதை, மரமஞ்சள் ஆகியவற்றைப் பொடித்துத் தேனில் கலந்து உட்கொள்ளவும். நாவல் 50 கி. எடுத்து தண்ணீருற்றிக் காய்ச்சி 325 மி.லியாய் குடிக்கவும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், மரமஞ்சள் இவற்றைக் குடிநீராய்க் காய்ச்சித் தேனில் கலந்து கொடுக்கவும்.

வெட்டு பெருமாள் செந்தூரம்

சாதிக்காய் நாலு டனே
தரித்த குரோசாணி நாலாகும்
நீதி வசுவாசி கிராம்பூவும்
நிச்சய மோரோன் றிரண்டெனவே
போதக் காந்த முரண்டாகும்
பொன்னே ஊமத்தை விரையொன்று
ஏதப் படவே சரிகொண்டு
இதுக்குச் சரியாய் புளிகூட்டே! 77

சாதிக்காய் நான்கு எண்ணிக்கை, குரோசாணி நான்கு பங்கு, சாதிபத்திரி, கிராம்பு வகைக்கு இரண்டு பங்கு, காந்தம் இரண்டு பங்கு, பொன்னூமத்தை விதை ஒரு பங்கு எடுத்து எடைக்குச் சமமாய் புளியையும் சேர்த்துக் கொள்ளவும். அனைத்தையும் பொடித்து நாள்தோறும் 488 மி.கி. உட்கொள்ளவும்.

இரத செந்தூரம்

கெந்தக மரிதாரங்.................
கிளரு மிரசம் மனோசிலையு
முந்து காந்த மிவைசமனாய்
முசியா தைந்து மிருபலமாய்
தந்த ஆவாரை விரைபலமுந்
தானே யிவையெலா முசுமுசுக்கை
வந்த சாற்றில் மிகவரைத்து
வருத்துங் காரிய முருகவிட்டே! 78

கெந்தகம், அரிதாரம், இரசம், மனோசிலை, காந்தம் இவற்றை வகைக்கு 70 கி., ஆவாரை விதை 35 கி. எடுத்து அனைத்தையும் முசுமுசுக்கையின் சாற்றில் அரைத்துக் காரீயத்தை உருக்கிக் கொள்ளவும்.

காரிய முருகு முகந்தனிலே
கதித்த பொடியு மதிற் கூட்டி
பாராய் சாதிக் காய்கிராம்பு
பரிந்த திப்பிலி வசுவாசி
நேரே சமனா யொருகூறும்
நிகழுந் சிந்தூர மிருகூறும்
வாளரா முலையாய் கூட்டிவைத்து
வருத்துஞ் சீனியிற் பேண்பிடிகொள்! 79

நீரிழிவு ஆறுந் திட்டம்

காரீயம் உருகும்போது மேற்கூறிய பொடியையும் சேர்க்க. சாதிக்காய், கிராம்பு, திப்பிலி, வசுவாசி ஆகியவற்றைச் சமமாய் எடுத்த ஒரு பங்கு கொள்க. சிந்தூரம் இரண்டு பங்கும் சர்க்கரையுடன் சேர்த்து இப்பொடியை ஒருபிடி கொள்ளவும். நீரிழிவு குணமாகும்.

பலசூரண சிந்தூரம்

சாதிக்காய் வசு வாசி
தானே ஏலங் கிராம்பூவும்
போதக் கஞ்சா அபினுடனே
பொன்னே யாவாரை விரையாகு
மீதே இரதஞ் சாதிலிங்க
மிகுந்த வெண்கலம் பினுடன்னே
மாதே தேவ தாரமுடன்
வருத்துங் கடலிறாஞ்சி பட்டையிதே! 80

சாதிக்காய், சாதிபத்திரி, ஏலக்காய், கிராம்பு, கஞ்சா, அபின், பொன்னாவாரை விதை, இரசம், சாதிலிங்கம், வெண்கலம், தேவதாரம், கடலழிஞ்சிப்பட்டை,

சந்தன மாயில்சிறு பூளை
தானே சுண்டைக் காய்கொழுந்து
வந்த அத்தி விரையுடனே
வட்டத் திருப்பி வேராகு

மந்தமான கீழா நெல்லி
யான சமுத்திரம் சோகிவிரை
சிந்தை முருங்கை விரையுடனே
சிறந்த மாம்பட்டைத் தூதுவளை! 81

சந்தனம், ஆயிலியப்பட்டை, சிறுபீளை, சுண்டைக்காய் கொழுந்து, அத்திவிதை, வட்டத்திருப்பிவேர், கீழாநெல்லி, சமுத்திரசோகி, முருங்கைவிதை, மாம்பட்டை, தூதுவளை,

காந்தத் தேங்கா யதிமதுரங்
கதித்திரு சீரகங் குங்கிலியம்
போந்த வெந்தையங் கூகைநீறு
போற்று மிளகு மஞ்சளுடன்
றிந்த பெருங்காய மரசுடனே
செய்ய வத்தி யாத்தியுமாம்
லாந்த வெள்வேல் கருவேலும்
வருத்து நிம்ப முதலாக! 82

காந்தம், தேங்காய், அதிமதுரம், நற்சீரகம், கருஞ்சீரகம், குங்கிலியம், வெந்தயம், கூகைநீறு, மிளகு, மஞ்சள், பெருங்காயம், அரசு, அத்தி, ஆத்தி, வெள்வேல், கருவேல், நிம்பம் அனைத்தையும் எடுக்க.

இடித்துத் தூளாய் வட்டத் திருப்பி
இசைந்த கொம்பு கொண்டே வறுக்க
மடித்து வறுத்த செந்தூர மகிழு
மிரத்த வண்ணமுட
னடுத்த தேனெய் நல்லெண்ணை
அதனிற் பாக்களவு தான்கொள்ள
வுடனே பத்துநாட் கொள்ள
ஒடும் நீரிழி வுள்ளதுவே! 83

இடித்துப் பொடித்து வட்டத்திருப்பியின் காம்பினால் வறுக்க செந்தூரம் இரத்த வண்ணமாகும். இதனை 2.2 கி.

எடுத்து தேன், நெய், நல்லெண்ணெய் இவற்றில் கலந்து உட்கொள்ளவும். பத்து நாட்கள் கொள்ள நீரிழிவு குணமாகும்.

நாராயணக் குளிகை

காந்தஞ் சனிய மிரதமுடன்
கதிக்க வுருக்கிப் பொடிசெய்து
மீந்த கவுதும்பையிலை கெந்தகமு
மிகுத்த பச்சிலை நல்வேளை
போந்த தென்னம் பூவுடனே
புகழ்ந்த வல்லி யாவாரை
தீந்தவை சமனா எருமை மோரிற்
றருந்த வாத்த ரைப்பதுவே! 84

காந்தம், இரசம், சேர்த்துருக்கிப் பின் பொடிக்கவும். கவிழ்தும்பையிலை, கெந்தகம், பச்சிலை, நல்வேளை, தென்னம்பூ, வல்லி, ஆவாரை ஆகியவற்றைச் சமமாய் எடுத்து எருமை மோரூற்றி அரைத்துக்கொள்ளவும்.

அரைத்துக் கழஞ்சு தானுருட்டி
யளவு நிழலிற் றானு லர்த்தி
வுரைத்த வுண்டை தேன்தனி
லுகந்து நாளொன்று தான்கொள்ள
தருத்த மான நீரிழிவு
தீரு மென்றே தாமுரைத்த
வருத்துக் கசாயம் பேராய்
வந்த தொன்று மியம்பக்கேள்! 85

விழுதை 5 கி. அளவுள்ள குளிகைகளாய் உருட்டி நிழலில் காய வைத்து உருண்டையைத் தேனில் இழைத்து நாளுக்கு ஒன்று வீதம் கொடுக்க நீரிழிவு தீரும்.

உருண்டை

சாத்திரவேதி ஆவாரை விரை
தரித்த லங்கக் காரியம்

வாய்த்த காந்தக் கன்னாரு
மருவு மோரொன்று நாற்கழஞ்சு
தீத்த ஆவாரங் கொழுந்துடனே
சிற்றிலைப் பாலுந் தென்னம்பூ
நீத்ததோ ரோரொன் றொருபிடியாய்
நிச்சய மேதித் தயிருடனே! 86

சாத்திரபேதி, ஆவாரைவிதை, இலிங்கம், காரீயம், காந்தம், கல்நார் ஆகியவற்றை வகைக்கு 20 கி. எடுக்க. ஆவாரங் கொழுந்து, சிற்றிலைப்பால், தென்னம்பூ ஆகியவற்றை வகைக்கு ஒரு பிடி எடுக்கவும்.

எருமைத் தயிரது நாநாழி
எல்லாமொக்க ஒரு பானையிலே
ஒருமைத் தயிர்வார்த்து மருந்தரைத்து
ஒன்றாய்க் கூட்டித் தான்கலந்து
இருமே பானைவாய் வண்டுகட்டி
இதில்மேற் சட்டிகொண்டு தான்கவித்து
உருமை யுடனே பானைவா
யுகந்த சீலைமண் தான் செய்ய! 87

எருமைத் தயிர் 5.2 லி. எடுத்துப் பானையிலே ஊற்றி அரைத்த மருந்தினைக் கலந்து பானையின் வாயை வண்டு கட்டி மேலே சட்டியைக் கவிழ்த்து மூடி சீலை மண் செய்து கொள்ளவும்.

காயவிட்டுத் தயிரு முக்காய்
கதிக்க மூன்றுவரைப் பரைத்து
மாயத் தயிர்தான் போதாமல்
மறுகி லெருமைத் தயிர்விட்டே
வாய்க்க வரைத்துத் தேசிக்காய்
மகிழ வரைத்து நிழலுலர்த்தி
தீய மான மோர்நாழி
திகழவோ ருண்டை யுட்கொள்ளே! 88

நன்கு உலர வைத்து எடுத்து தயிர் ஊற்றி மூன்று முறை அரைத்துக் கொள்ளவும். மீண்டும் அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து நிழலில் காய வைத்து இரண்டரை மணி நேரம் கழித்து எடுத்து வைக்க. ஒரு உருண்டையை உட்கொள்ளவும்.

ஆவாரைச் சூரணம்

ஆவாரை வேர்பட்டை மாவாக்கி
அது தெள்ளி யதுக்குரியாய்
மேவாப் பரங்கிப் பட்டையது
இதுவுந் தெள்ளி மாவாக்கி
மேவாக் கூட்டி வெருகடிதான்
மிக்க தேனிற் றான்கொள்ள
போவார் நீரிழி விருபதுடன்
போறே னென்று போயிடுமே! 89

ஆவாரை வேர்ப்பட்டையைப் பொடித்துக் கொள்ளவும். பரங்கிப்பட்டையைச் சமஅளவெடுத்துச் சூரணத்துக் கொள்ளவும். இரண்டையும் சேர்த்து மூவிரலளவெடுத்து தேனில் கலந்து கொடுக்க இருபது வகை நீரிழிவு தீரும்.

சாதிலிங்கக் குளிகை

அரைப்பொடி காந்த மனோசிலையு
மான சாதி லிங்கமுட
னிருப்புச் சிட்டங் காரிய
இயன்றக் கற்கடக சிங்கியுடன்
வருப்புங் குழித்தாமரை யுடனாக
வந்தவை யெல்லாஞ் சமன்கொண்டு
அரைப்பு எருமை மோருடனே
அதுவுங் கடலையளவு நிழலுலத்தே! 90

அரப்பொடி, காந்தம், மனோசிலை, சாதிலிங்கம், இருப்புச் சிட்டம், காரீயம், கற்கடகசிங்கி, குழித்தாமரை ஆகியவற்றைச் சமமாய் எடுத்து எருமை மோரை ஊற்றி அரைத்து, கடலை அளவாக உருட்டி நிழலில் காய வைத்துக் கொள்ளவும்.

அந்தவுண்டைக் கழஞ்சு ஒன்று
ஆவாரைப் பொடியுங் கழஞ்சுகொண்டு
வந்தயிரு கழஞ்சு பொடியும்
வத்திர காயந் தேனிற்கொள்
முந்தக் காயம் பருத்திடுகில்
முசியா தெருமைமோர்நெய்யாஞ்
சிந்தை மகிழக் கொண்டிடவே
சிதறும் நீரிழி வுள்ளதுவே! 91

இவ்வுருண்டை ஒன்றினுடன் 5 கி. ஆவாரைப் பொடியையும் சேர்த்து தேனில் குழைத்து உடல் பருத்துள்ளோர்க்குக் கொடுக்கவும். எருமைமோர், நெய்யில் இக்குளிகையை இழைத்துக் கொடுக்க நீரிழிவு தீரும்.

ஆவாரைப் பொடி யுடனே
மரிதார மருளூமத்தை விரை
மேவாய் விஷந்தள்ளி எட்டிவிரை
இதுவுந் தூளாய் வடிகொண்டு
பாவாய் முன்சொன்ன வுண்டையது
பகருஞ் கழஞ்சுடனே உகந்த
தேவை வருத்துங் குளிகையிடத்
தீரும் நீரிழ்வு திருமதே! 92

ஆவாரைப் பொடி, அரிதாரம், மருளூமத்தை விதை, எட்டி விதை ஆகியவற்றைப் பொடித்து வடிகட்டி மேற்சொன்ன குளிகை ஒன்றினைச் சேர்த்து சாப்பிட நீரிழிவு நீங்கும்.

சாமைச் சூரணம்

சாமை யரிசியை மாவாக்கித்
தளந்த தெள்ளியபின் சுறாங்காய்
பூமே லாவாரை விரைபொரிச்சப்
பொடியுஞ் சுறாங்காய் சரிகூட்டி
ஆமே நாளொன்று ழக்குடனே
அதுக்குச் சீனி யுரியாகத்

தாமே நாளுந் தின்பிராய்
தவிரும் வெகுநீ ரிழிவதுமே! 93

சாமை அரிசியைச் சூரணமாக்கி அதனுடன் ஆவாரை விதையின் பொடியையும் சேர்க்கவும். சுறாங்காயையும் சேர்த்து 325 மி.கிக்கு 675 மி.கி. சர்க்கரையையும் சேர்த்து ஒவ்வொரு நாளும் சாப்பிட நீரிழிவு குணமாகும்.

நெருக்கிப் பாயுமா விரையும்
நீடு மாவாரை வித்துடனே
பொரிச்சுக் காலே தரிப்பனைவாய்
போத வறுத்ததிரு பலமாய்
தரிச்சுக் கால மந்திக்குந்
தானே மோர்நெய் தேனாகும்
வருத்திப் படுத்த நீரிழிவு
மாறிப் போகுங் கண்டாயே! 94

மாவிதை, ஆவாரைவிதை இவற்றை வறுத்து 70 கி. எடுத்துப் பொடித்து மோர், நெய், தேன் இவற்றில் கலந்து காலை, மாலை கொடுக்க நீரிழிவு தீரும்.

குழம்பு

எருமை மோரது சட்டியினி
லிருநாழி விட்டு வண்டுகெட்டி
மருவு மாவாராங் கொழுந்துதான்
வண்டுமேல் விட்டு வைத்தவித்து
ஒருமை எய்தவே கொழுந்தரைத்து
உன்னு மோரிற் றான்கரைத்து
எருமை மோரிற் குடிப்பிராய்
இறங்கா நீரிழிவு தீருமதே! 95

எருமை மோரைச் சட்டியில் 2.6 லி. ஊற்றி சட்டியின் வாயை வண்டு கட்டி, அதன்மீது ஆவாரங் கொழுந்தினை வைத்து வேக வைத்து அரைத்து மோரில் கலந்து கொடுக்க நீரிழிவு குணமாகும்.

தாகக் குடிநீர்

நாவல் மருத மிருவேலும்
நன்றா மத்தி வேம்பாகும்
மேவி னாலும் நுணாவுடனே
மிகுத்த வரசுஞ் சங்கம்வேர்
தாவச் சமனாய் மிகவுலர்த்தி
சந்தே இடித்து முடாவிலிட்டு
ஆவலன்றிப் பன்னி ரண்டு
ஆககடுக்காய் நறுக்கி விட்டு! 96

நாவல், மருதம், கருவேல், வெள்வேல், அத்தி, வேம்பு, நுணா, அரசு, சங்கம்வேர் ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் காய வைத்து இடித்து மிடாவில் போடவும். 12 கடுக்காயை வெட்டிப் போடவும்.

கடுக்கா யுடனே பட்டை யெல்லாங்
கனத்த முடாவிற் கலந்திட்டு
யிடுக்க ணில்லாத தூணிநீ
ரிட்டுச் சூரிய புடத்தில் வைத்து
அடுக்காய் நாளொன்று ழக்குநீ
ராகக் குடிக்க அகன்றிடுமே
தொடுக்க வொன்றாத் தாகம் போய்
தோன்றா தாகும் நீரிழிவும்! 97

அனைத்துப் பட்டைகளையும் இடித்து 43 லி. தண்ணீரை ஊற்றி வெயிலில் வைத்துக் கொள்ளவும். 325 மி.லி. அளவு தினமும் குடிக்க தாகம் நீங்கும். நீரிழிவு குணமாகும்.

குழம்பு

ஓரரைக் காற்குள் விந்த
முன்னுங் கருவேற் பிசினரைக்கா
லரரைக் கால்மர மஞ்ச
ளிருபதரைக்கா லாவாரை விரை

தீரரைக் கால்கடு குடனே
வீரவரைத்துக் குடிப் பீராய்
நீரரைக் காற்பா யாது
நெடுமா லாணை நிச்சயமே! 98

கருவேல்பிசின் 165 கி., மரமஞ்சள் 165 கி., ஆவாரை விதை 325 கி. எடுத்து அனைத்தையும் சேர்த்தரைத்துக் கொடுக்க நீரிழிவு குணமாகும். எருமை மோர் அல்லது தேனில் கொடுக்கவும்.

ஆவாரந் துளிர்கல் மதங்கொன் றைவேர்
நீவிரைந் தரை மோரிற் குடித்திடு
மாவிரைந்து வரும்புனல் காவேரி தூர
மேவிரைந்து வறளுவ துண்மையே! 99

ஆவாரைத் துளிர், கல்மதம், கொன்றைவேர் ஆகியவற்றைத் தண்ணீர் விட்டரைத்து எலுமிச்சங்காயளவு, மோரில் கலந்து கொடுக்கவும். காவிரியைப் போல் வரும் நீரிழிவு தீரும்.

ஆவாரை கொன்றை அத்தி
அழகிய கூகை நீறு
மேவிய மருதம் வேரும்
வேம்போடு பொடியுஞ் செய்து
பூவிலு மெல்லிய நல்லாய்
புதியதோர் தேனி லுண்ணக்
காவேரி யாறும் வற்றிக்
கடல்களுஞ் சுவறு மன்றே! 100

ஆவாரை, கொன்றை, அத்தி, கூகை நீறு, மருதம் வேர், வேப்பம் பொடி ஆகியவற்றைச் சேர்த்துப் பொடித்து தேனில் கலந்து கொடுக்க காவேரி ஆறு போன்றும் கடல் போன்றுமுள்ள நீரிழிதல் வற்றும்.

காந்தச் சூரணம்

காந்தங் கல்நார் கெருடபச்சை
கதித்த சாத்திர வேதியுடன்
வாய்ந்தா லாவாரங் கொழுந்துவிரை
மருவுந் தென்னம் பூவுரியும்
போந்த சிற்றிலை ஆவாரை
புகழுங் கடலாஞ்சிப் பட்டையுடன்
ரீந்த மத்தங்காய் புல்லரிசி
திருந்து தோண்வேர் கூட்டி! 101

காந்தம், கல்நார், கெருடப்பச்சை, சாத்திரவேதி, ஆவாரங் கொழுந்தின் விதை, தென்னம்பூ, சிற்றிலை, ஆவாரை, கடலழிஞ்சிப்பட்டை, ஊமத்தங்காய், புல்லரிசி ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும்.

இடித்து மாவாக்கிக் குறுவை
நெல்லியளவு வரிசியுடன் மாவு
மிடிச்சு மருந்து மாவுங்கொள்
மன்னுங் காந்தச் சூரணத்தை
வடிச்ச மோரிற் றேனுடனே
மன்னுஞ் சர்க்கரை தானாகுந்
தடச்சி நீரிழிவு தான்போகுந்
தப்பா துண்மை தளராதே! 102

அனைத்தையும் இடித்து மாவாக்கிக் கொள்ளவும். மூலிகைகளையும் சூரணமாக்கவும். இச்சூரணத்தை வடித்த மோர், தேன், சர்க்கரை ஆகியவற்றில் ஏதேனுமொன்றில் கலந்து கொடுக்க நீரிழிவு தீரும்.

வங்கபற்பம்

சட்டி யுள்ளே புத்தோட்டை
தானே பரப்பி யதன்மேலே
இட்டு வங்கத்தை வேக வைத்து
இதுவு முருகிற் கரண்டி கொண்டு

விட்டு வறுக்க வெந்த பின்பு
மிகுத்த வட்டத் துத்தியுடன்
வட்ட கொம்பு நாலங் குலத்தில்
மருவு மூன்று கொம்பு கொள்ளே! 103

சட்டியினுள்ளே புதிய ஓட்டினை வைத்து அதன் மீது வங்கத்தினை வைத்து வேக வைக்கவும். வெந்த பிறகு உருகும்போது கரண்டியால் வறுத்துக் கொள்ளவும். வட்டத் துத்தியின் நான்கு அங்குல அளவுள்ள மூன்று கொம்பினை எடுக்கவும்.

இந்த கொம்பிற் றான்கிளறி
யிதுவே வறுக்கி லிக்கொம்பு
விந்த பன்னிங் குலமும்
வந்து கருகி விழுமளவு
முந்தச் சொன்னாற் போற்கொம்பு
மூன்று வேகவறைப் பற்பமாம்
அந்தப் பற்பங் காந்த பற்ப
மாகு ரெண்டுஞ் சமன்கூட்டே! 104

இந்தக் கொம்பினால் நன்கு கிளறி பன்னிரண்டு அங்குலக் கொம்பும் கருகும் அளவுக்கு விட்டு வேக வைத்துப் பற்ப மாகியதை எடுத்து வைக்கவும். இதுவே வங்க பற்பமாகும்.

பேனபிடி மதியாரி காடியிற்
பிசைந்து கொள்ள நீர்நிற்கு
மான படுவாய்வு வெடுத்தான்
மருவுங் கெந்தகம் பேனபிடி
மட்டான போடு யிரண்டு
மொன்றாக வதுவுங் தேனிற்றான் கொள்ள
ஆன படுகின்ற தானாலு
மொதுங்குந் திட்ட மானதுவே! 105

இப்பற்பத்தையும் அதே அளவு காந்த பற்பத்தையும் காடி நீரில் கலந்து கொடுக்க நீரிழிவு தீரும். வாய்வு அதிக

மாகும் பொழுது கெந்தக பற்பத்தை இரண்டு பங்காகப் போடவும். தேனில் கலந்து கொடுக்க நீரிழிவு குணமாகும்.

சலநாதக் குளிகை

ஆவாரை சமூலங் கொண்டு
அறுத்து நறுக்கிப் பானையிலே
மேவ வடைத்துப் பதக்குநீரில்
மீற லிருநாழி யாகவிட்டு
பாவமாய் குறுகிய கசாயத்திற்
பரிவா யதனோடு கருவேல் வெள்வே
லாவா யிலவு விளாவுடனே
ஆனநாலு வகைப் பிசினும்! 106

ஆவாரை சமூலத்தை வெட்டி பானையிலே போட்டு 10.7 லி. தண்ணீர் ஊற்றி 2.6 லி. ஆக குடிநீராய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும். கருவேல், வெள்வேல், இலவு, விளா ஆகியவற்றின் பிசின்களை எடுக்கவும்.

தேசிப் பழத்திப் பிரமாணந்
திகழவோ ரொன்று தான்கூட்டிப்
பாச வோட்டுப் பதம்வந்தால்
பருகுவ கலத்திற் றான்வ ழித்து
நெச நாலு காசிடைதா
னிகழுங் காந்த செந்தூர
மோசை யுடனேயே பின்கழஞ்சு
முகந்தை சேர மறதிச்சு! 107

எலுமிச்சம் பழ அளவு ஒவ்வொன்றையும் சேர்த்துக் காய்ச்சி பக்குவமான பதத்தில் வடித்துக் கொள்ளவும். 1.9 கி. காந்த செந்தூரத்தை 5 கி. அளவு இம்மருந்துடன் சேர்த்து மத்தித்துக் கொள்ளவும்.

நெல்ல ரிசிமா வுடனே
நீழும் பாக்கள வாயுருட்டி

வல்ல ஆசனம் பண்ணிதான்
மகிழப் படுக்கப் பாதியுண்டை
செல்லக் கொள்ளீர் வெந்நீர் தேன்
சேந்த சக்கரை முதலாகுஞ்
சொல்லச் சலனாதி குளிகையென்றுத்
துய்ய முனிவர் சொன்னாரே! 108

அரிசி மாவுடன் பாக்களவாய் உருட்டிக் கொள்ளவும். உணவு சாப்பிட்ட பிறகு படுக்கப்போகு முன் உருண்டையில் பாதியை வெந்நீர், தேன், சர்க்கரை ஆகியவற்றில் இழைத்துக் கொடுக்கவும்.

காரீயச் செந்தூரம்

காரீ யந்தா னுருக்கிக்
கதித்த மோரிற்றான் சாய்க்கப்
பாரீர் கோமிய மதனோடே
பருவக் காய்ச்சிச் சாய்த்திடுமே
நேரே ஆவாரை வட்டத் துத்தி
நிகழும் வேறொன்று குறுணி யாக
ஊரே யறியச் சட்டி யிலிடு
வாருபட வைத்துத் தானெரிக்க! 109

காரீயத்தை உருக்கி மோரில் சாய்த்துக் கொள்ளவும். பின் கோமியத்தினை விட்டு சாய்க்கவும். ஆவாரை, வட்டத்துத்தி இவை வகைக்கு 5.2 லி. எடுத்துச் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து எரித்துக் கொள்ளவும்.

இந்தக் கொம்பு பதக்கு
மெரியு மட்டு முருக்கம்பூ
விந்து கொம்பு மூன்றுமுழம்
வாழும் பச்சைக் கொம்பு கொண்டு
சிந்தை மகிழத் தான்வ றுக்கச்
சிந்தூர மாகுஞ் செப்பக்கேள்

அந்தம் பெறவே பலத்துக்கு
அபினி காசிடை யதிற்போட்டே! 110

இந்த கொம்புகள் எரிந்த பிறகு முருக்கம்பூவின் கொம்புகளை மூன்று முழ அளவெடுத்து வறுத்துக் கொள்ள செந்தூரமாகும். 488 மி.கி. அபினியை அதில் போட்டுக் கொள்ளவும்.

முருக்கம் பூப்போற்றான் சிவக்க
முதிரா மலேதான் வறுக்க
விருக்க மூன்று பணவிடைதா
னியன்ற சிந்தூரந் தேனிற்கொள்
ளருக்கி நிறைத்தா னிறுத்து
மான காரிய செந்தூரம்
பெருக்கிப் பேசு மாமுனிவன்
பெரிதா யுரைத்த குறிப்படியே! 111

முருக்கம்பூ போன்று சிவப்பதற்கு கருக விடாமல் வறுத்துக் கொள்ளவும். அதனின்று 1.4 கி. சிந்தூரத்தை எடுத்துத் தேனில் கலந்து உட்கொள்ளவும்.

கெந்தகவுண்டை

கெந்தக பலமுந்தா னஞ்சுக்
கிடைகற் றாழைப் புடமிட்டு
வந்த வெள்ளியம் பலமிரண்டரையு
மகிழும் பாக்களவு தேன்கு ரும்பை
அந்தம் பெறவே பானையிட
அரிசி ரெண்டு பலங்கூட்டி
இந்த மருந்து தானிடித்து
இயன்ற சுண்டைக் காயளவு! 112

கெந்தகம் 175 கி. எடுத்து கற்றாழைப் புடமிட்டுக் கொள்ளவும். 87 கி. வெள்ளீயம், பாக்களவு தேன் குரும்பை சட்டியில் போடவும். 70 கி. அரிசியை இதனுடன் சேர்த்திடித்து சுண்டைக் காயளவுள்ள உருண்டையாய்ச் செய்து கொள்ளவும்.

உண்டை பண்ணித் தேனிலிட
உழலில் அடித்தலைத் தாகமுடன்
மண்டு கைகாலெரி யிற்று
மாறுந் திஷம வண்மையென
உண்டே நீர்தான் விடுகிறது
மோடிப் போகுந் தேனிலிட
வண்டா புகழுமா முனிவ
னருளுந் கெந்தக வுண்டையிதே! 113

உருண்டையைத் தேனில் இழைத்துக் கொடுக்க கைகால் எரிச்சல், தண்ணீர் வடிதல் போன்றவை இந்த கெந்தக உருண்டையால் தீர்ந்து போகும்.

மிண்டியும் தூதளை மிகுத்த சேரண்டியுங்
கொண்டதோர் கடுகுடன் குறுக்க காஞ்ச
நீருண்ட பினோரு குரலிருமற் கேட்பீரேற்
றேண்டமு மிறுப்பான யான்றேரனு மல்லவே! 114

தூதுவளையையும், கடுகையும் சேர்த்துக் காய்ச்சிக் குடிக்க குரல் கம்மல், இருமல் ஆகியவை தீரும்.

இரச பற்பக் குளிகை

இரச பற்ப மப்பிரக
மிரண்டு கழஞ்சி வையாகு
மரிய லோகப் பொடியிரண்டு
ஆன வெண்காரம் நாலாகும்
வரிசை உளுந்து போற்குளிகை
மன்னும் நெய்யில் மிகக்கொள்ள
மரியா நின்ற நீரிழிவு
தானே ஒடுந் தப்பாதே! 115

இரச பற்பம், அப்பிரகம் இவற்றை வகைக்கு 10 கி., இரும்புத்தூள் 10 கி., வெண்காரம் 20 கி. எடுத்துப் பொடித்து

65 மி.கி. குளிகை செய்து நெய்யில் இழைத்துக் கொடுக்க நீரிழிவு குணமாகும்.

அரிய சங்கரன் சூரணக் குளிகை

அப்பிரக மிரச மிருகழஞ்சு
அரைப்பொடி யொன்று மிருகழஞ்சு
ஒப்ப வெண்காரம் நாலாகு
முயர்ந்த கற்றாழை மாதுளையுந்
தப்பிற் சாற்றில் விட்டரைத்துத்
தாமத் தேனெய் விட்டரைத்து
இப்புவி யொன்றுலரப் பொடிபண்ணி
இசைந்த தேனிலொரு குன்றியிடை! *116*

அப்பிரகம், இரசம் இவற்றை வகைக்கு 10 கி., அரப்பொடி 10 கி., வெண்காரம் 20 கி. எடுத்து கற்றாழை, மாதுளைச் சாற்றை விட்டரைத்து தேன், நெய் ஆகியவற்றையும் சேர்த்தரைத்துப் பொடித்து 130 மி.கி. குளிகைகளாய்ச் செய்து கொள்ளவும். தேனில் ஒரு குளிகையை இழைக்கவும். துளசிச்சாறு, மோரிலும் குளிகய்யை இழைத்துக் கொடுக்கவும்.

காந்த பற்பம்

சிட்ட மூன்று கடுக்காய் நாலு
சேரவப் பிரக மிரண்டாகு
மிட்ட காந்த மொன்றுடனே
இசைந்த தண்ணி மிட்டானு
முட்டக் கழஞ்சு பனிரண்டு
முதிரும் பருத்திவிரை அவ்வளவு
மிட்டார் சாவற்தகம் பன்னிரண்டு
யிசைந்த திரிபலைக் கசாயத்தில்! *117*

இரும்புச் சிட்டம் மூன்று (15 கி.) கடுக்காய் நான்கு (20 கி.), அப்பிரகம் இரண்டு (10 கி.), காந்தம் ஒன்று (5 கி.), தண்ணீர் விட்டான் 60 கி., பருத்திவிதை 60 கி., சாவற்கதம் என்னும் கல்லுப்பு 60 கி. எடுத்து திரிபலைக் குடிநீரில் அரைக்கவும்.

ஏழுநாள் விதமா யரைத்து
இசையப் பற்பந் தானாக்கி
வழுவா தரைத்து மோரிற்கொள்
மன்னுங் கையாந்தகரை திப்பிலியும்
நழுவா வெள்ளுத்தான் கூட்டி
நாளுங் கொள்ளப் பிரமியமும்
வழுவா தோடும் நீரிழிவு
மாறுந் திஷம வண்மையிதே! 118

ஏழுநாட்கள் அவ்வாறே அரைத்துப் பற்பமாகச் செய்து மோரில் கலந்து கொள்ளவும். கையாந்தகரை, திப்பிலி, எள் இவற்றைச் சேர்த்துக் கொடுக்க பிரமியம், நீரிழிவு தீரும்.

கல்மதக் குழம்பு

கருவா ழைப்பழத் துடனே
கருங்காலிப் பட்டை கூட்டி
உருகா மரமஞ்சள் மஞ்சளுட
னுகந்த புளியங் கொட்டைத்தோ
லிருவிளாம் பட்டை இவையுடனே
ஏற்கும் பலரசம் பட்டையதுங்
கருவேற் பட்டை தற்சமனாய்
கல்நார் பொடுதலை சரிசமனாய்! 119

கருவாழைப் பழத்துடன் கருங்காலிப் பட்டையையும், மரமஞ்சள், மஞ்சள், புளியங்கொட்டைத்தோல், விளாம்பட்டை ஆகியவற்றுடன் பலரசப் பட்டையையும் கருவேற்பட்டையையும் சமமாய் சேர்த்துக் கொள்ளவும். கல்நார், பொடுதலையையும் சமமாய் எடுத்துப் பொடித்து எருமை மோரில் கலந்து கொடுக்கவும்.

குளிகை

குரும்பை ரெண்டுபாளை ரெண்டு
குலவுங் கெந்தகரச மிரண்டே

ஒருங்கி லாறு கழஞ்சுக்கு
முற்ற காரிய மாறாகுந்
திரும்ப ஆவாரை விரைதானுந்
தீரப்பன் னிரண்டு கழஞ்சுகொண்டு
அரும்பா ளைச்சாற் றரைத்து
ஆனகுளிகை குன்றிபோற் செய்யே! 120

குரும்பை, பாளை இவை வகைக்கு 10 கி., கெந்தகம், இரசம் 10 கி., முற்றிய காரீயம் 30 கி., ஆவாரை விதை 60 கி., எடுத்து அனைத்தையும் பாளைச் சாறூற்றி அரைத்து 130 மி.கி., அளவுள்ள குளிகைகளாய்ச் செய்துகொள்ளவும்.

மேகபுவனாதிபதி வுண்டை

கவரப் பிடித்தான் வேர்ப்பட்டை
சுகித்த நற்பிலா மரத்தோலும்
விபரமாக இருபத் தெட்டு
விசைப் பட்டைத் தறித்திடித்து
உபையத் தூணி நீரிலிட்டு
உகந்து மூன்றுநாள் காய்ச்சி
இவையா மிந்த நீர்தனி
லான திரிபாலை ஐந்துபலம்! 121

ஆவிரையின் வேர்ப்பட்டை, பலாமரப்பட்டை எடுத்து இருபத்தெட்டு முறை நன்கு இடித்து 21.5 லி. தண்ணீரில் போட்டு மூன்று நாள் காய்ச்சி குடிநீராக்கிக் கொள்ளவும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றை 175 கி. வகைக்கு எடுக்க.

அதனை இடித்துக் கசாயத்தில்
ஆவிக் கூட்டி அன்னாழி
பதனக் காய்ச்சி இறக்கியபின்
பச்செ்ன மஞ்சள் காரிய
மிதனோ தேற்றாம்விரை வெண்குன்றி
இப்பருப்பு டனேமர மஞ்சள்

சதனே ரோரொன்று பதின்கழஞ்சு
தப்பா நிறையாய் சரிகொள்ளே! 122

இம்மூலிகையை இடித்துக் குடிநீரில் போட்டுக் காய்ச்சி 6.5 லி. ஆக சுருக்கி இறக்கி மஞ்சள், காரீயம், தேற்றான் விதை, வெண்குன்றி, மரமஞ்சள் ஆகியவற்றை வகைக்கு 50 கி. எடுத்துக் கொள்ளவும்.

முன்க சாயநீர் வார்த்து
முனிந்து நிறுத்த மருந்தரைத்து
இன்ப தாகச்சுவறி வித்து
இதுவுங் கழஞ்சுபோ நிறையாக
வன்பதான் உண்டை செய்து
வுறள் வுலர்த்திக் கலையத்தில்
மன்பதாக வேடு கட்டி
மருவா வாரைப் பருத்தி நன்னாலு! 123

இக்கடைச் சரக்குகளை மேற்குறிப்பிட்ட குடிநீர் ஊற்றி அரைத்து ஈரப்பசை சற்று காய்ந்த பக்குவத்தில் 5 கி. அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து காயவைத்து கலயத்தில் போட்டு வேடுகட்டி ஆவாரைப்பருத்தி நான்கையும் சேர்க்க.

அரைத்தே இவையொடு குளிகையொன்று
ஆனபுளி மோரிற்றான் குடிக்க
உரைத்துக் கரைக்க கரும்வேம்பு
முடனே ரெண்டு கடுக்காயுமே
நிரைத்து மூன்று கழஞ்சிட்டு
நேராய் காய்ச்சிப் போசனமேல்
தரித்துக் குடிக்காக குடிநீர்
தானே செய்யுங் குறிசொல்வோம்! 124

அரைத்துக் குளிகை செய்து உலர வைக்கவும். புளித்த மோரில் கலந்து குடிக்கவும். கரும்வேம்பு, கடுக்காய் இரண்டும் சேர்த்து 15 கி. ஆகக் கலந்து குடிநீராய்க் காய்ச்சிக் குடிக்கவும்.

கடலி றாஞ்சிப் பட்டையுடன்
கனத்தா வாரந்தோல் பருத்தி
விரைத்திட்ட மரமஞ்சள் திரிபலையுஞ்
செந்தோ ரென்று கழஞ்சிட்டு
அடவாய்க் காய்ச்சி ராவசன
மான பின்பு குடிப்பதுவே
மடநல் லீரின மராக்கசாயம்
வருத்தஞ் சொல்வோம் வகைகேளீர்! 125

கடலழிஞ்சிப் பட்டை, ஆவாரம்பட்டை, பருத்தி, மரமஞ்சள், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்துக் குடிநீராய்க் காய்ச்சிக் குடிக்கவும்.

குளவிந்தங் காய்ச்சிக் குடிப்பதுவே
கோள சீரகமுக் கழங்சுடனாக
இளகாப் பாலுந் தண்ணிரு
கிட்டே சுண்டக் காய்ச்சிக்கொள்
ளளவாம் பழவரிசிச் சோறாகு
மானமூன்று நத்தைச் சதைவாங்கிக்
கொளவாத் தேனா லரைத்தேதான்
கொண்டு மிழுங்கத் தான் போகும்! 126

குளவிந்தம் எனும் கஸ்தூரிமஞ்சள், சீரகம் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து பால், தண்ணீர் சேர்த்து சுண்டக் காய்ச்சிக் குடிநீராய்க் கொள்ளவும். பழைய அரிசியால் சமைத்த சோறு, நத்தைச் சதையையும் சேர்த்து தேனுடன் கலந்தரைத்து விழுங்க நீரிழிவு குணமாகும்.

நத்தைச் சதைதா னெய்யுடனே
நன்றாய் வறுத்துத் தினலாகு
முற்ற பாலு மிளநீரு
முண்ணீர் சீனி யுடனாகப்
பற்றும் பற்றா தோன்றாதே
பாறும் வியாதி பகர்ந்திடக்கே
ளற்ற குளத்தில் நீர்வற்று
மது போலாகும் நீரிழிவே! 127

நத்தைச் சதையை நெய்யுடன் சேர்த்து வறுத்துச் சாப்பிடவும். பால், இளநீர், சர்க்கரையையும், தண்ணீரையும் சேர்த்துக் குடிக்க குளத்தின் தண்ணீர் வற்றி நிற்பதுபோல் நீரிழிவு தீரும்.

இரத பற்பக் குளிகை

இரத பற்பமப்பிரக சிந்தூர
மியன்ற கல்மத வேர்பற்பஞ்
சரித்த சிட்ட மாவாரை
தயங்கும் விரையும் வேர்க்கொம்பு
அரிது மஞ்சள் திப்பிலிகாந்த
பற்பமான காரிய பற்பமுடன்
விரத வெள்ளிய பற்பம்
விளாம்பிசினு சமனாய் கொள்ளே! 128

இரத பற்பம், அப்பிரக சிந்தூரம், கல்மதவேர்பற்பம், சிட்டம், ஆவாரை விதை, வேர்க்கொம்பு எனும் சுக்கு, மஞ்சள், திப்பிலி, காந்தபற்பம், காரீய பற்பம், இரசம், வெள்ளீய பற்பம், விளாம்பிசின் ஆகியவற்றைச் சமமாய் எடுக்கவும்.

கொண்டே யரைத்து வடிகொண்டு
கோதிற் றேனில் மிகக்கொள்ள
வுண்டே அண்டென்ற நீரிழிவு
வுலக மதிக்கத் தானோடு
மண்டா புகழு மாமுனிவ
னருளிச் செய்த குறிப்படியே
கொண்ட ரசபற்பக் குளிகையிது
கூறும் பிறத்தேஷ திஷமதே! 129

அனைத்தையும் சேர்த்தரைத்துக் குளிகைகளாய்ச் செய்து அதனைத் தேனில் இழைத்து உட்கொள்ள நீரிழிவு குணமாகும். இது மாமுனிவர் கூறிய குறிப்பின்படியான இரசபற்பக் குளிகையாகும்.

குடிநீர்

தேற்றாம் விரையுந் திரிபலையுஞ்
சேரும் பருத்திப் புளிவிரையு
மாற்றாங் காசுக் கட்டியுடன்
மருவுங் கீழா நெல்லிவேர்
நீற்ற கடலிறாஞ்சிப் பட்டையுட
னிரு முழக்காய் குறுகாக்கி
விற்று மருந்துப் பொடினாழி
விட்டுச் சூரியபுடத்தில் வைத்தே! 130

தேற்றான் விதையும் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பருத்திவிதை, புளியம்விதை, காசுக்கட்டி, கீழாநெல்லிவேர், கடலழிஞ்சிப் பட்டை ஆகியவற்றைச் சமமாய் எடுத்து குடிநீராய், 325 மி.லி.யாய் சுருக்கிக் காய்ச்சி கலக்கி வெயிலில் வைக்கவும். இரவில் குடிக்கவும்.

பிட்டு

முசுட்டை பொடுதலை சிந்திலுடன்
முசியா வேரினைத் தானிடித்து
அசிட்டற் கூட்டி யம்மானை
அளவா யரிசி மாவுடனே
பிசக்கிப் பிட்டுத் தான்சுட்டுப்
பிட்டுத் தின்ன விப்பொழுதே
யசிட்ட மில்லா நீரிழிவு
ஆறு மென்றார் கதலியனார்! 131

முசுட்டை, பொடுதலை, சீந்தில் ஆகியவற்றின் வேரை இடித்துப் பொடித்து அரிசி மாவையும் சேர்த்துப் பிட்டாக அவித்துச் சாப்பிட நீரிழிவு குணமாகும்.

செவ்வ கத்தித் தோலரைத்துத்
திருந்தப் பாலி லூறவிட்டு
வொவ்வாய் மறுநாள் கடைந்து
வெண்ணெயுகந்து மிழுங்க வந்தத்தோல்

பவ்வ மேதிப் பாலினிற்
பருகி ரெட்டு நாளளவாய்
செவ்வைப் படவே நீரிழிவு
தீரு முண்மை திட்டமிதே! 132

செவ்வகத்தியின் தோலினை அரைத்துப் பாலில் ஊறவைத்து பிரையூற்றிக் கொள்ளவும். மறுநாள் தயிரைக் கடைந்து வெண்ணெயை அப்படியே விழுங்கிடவும். தோலினை எருமைப்பாலில் சேர்த்து குடிக்கவும். எட்டு நாள் அவ்வாறே குடிக்க நீரிழிவு குணமாகும்.

நீரிழிவு, குட்டம் - மருந்து

கட்டுக் கொடியும் பேய்முசுட்டைக்
கதித்த யிலையுந் தான்துவைத்து
இட்டுப் பிழிந்து வெப்பில்வைக்க
இதுவுங் கட்டி போலாகும்
வட்ட மிருபது நாள்கொள்ள
வருத்து நீரிழிவு தான்போகு
மிட்டு நாற்பது நாள் கொள்ள
விசையா தோடுங் குட்ட மெல்லாம்! 133

கட்டுக்கொடி, பேய்முசுட்டை ஆகியவற்றின் இலையை இடித்துப் பிழிந்து வெயிலில் வைக்க கட்டியாய் விடும். அதனை இருபது நாட்கள் உட்கொள்ள நீரிழிவு தீரும். நாற்பது நாட்கள் சாப்பிட குட்டம் குணமாகும்.

மூத்திரக் கிரீச்சத்துக்கு நெய்

வெருகஞ் சாறு பதக்குடனே
மிகுத்த கரும்பு ரசங்குன்றி
அருகி லிளநீர் நெரிஞ்சிலுட
னான பாலு மோரொன்று
யுருக நாநாழி யித்துடனே
யுண்மைக் கற்க முடன்கேளாய்

பருகு மதுர மமுதவள்ளி
பன்னுங் கற்கடக சிங்கியுடன்! 134

வெருகஞ்சாறு 10.7 லி., கரும்புச்சாறு, இளநீர், நெருஞ்சிச்சாறு, பால், மோர் ஆகியவற்றை வகைக்கு 5.2 லி. சேர்த்துக் கலந்து கொள்ளவும். அதிமதுரம், அமுதவள்ளி, கற்கடகசிங்கி,

முந்திரி கைப்பழத் துடனே
முதிராக் கண்டு சர்க்கரையும்
பிந்து வெள்ளரி விரையுடனே
பருத்த பொன்னாங் கணிவேரும்
வந்த நெரிஞ்சிற் றாமரையின்
வளையுஞ் செப்பு நெரிஞ்சிலுட
னந்தம் பெறவே செங்கழுநீ
ரான கிழங்கு மோரொன்று! 135

முந்திரிகைப் பழம், கற்கண்டு, சர்க்கரை, வெள்ளரி விதை, பொன்னாங்காணிவேர், நெருஞ்சில், தாமரை வளையம், செப்பு நெருஞ்சில், செங்கழுநீர்க் கிழங்கு ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுக்க.

கழஞ்சு கொண்டுதா னரைத்துக்
கதிக்க யிருநாழி நெய்விட்டு
சழிந்த நெய்தான் பதத்தில்வடி
தானே கழஞ்சு கொண்டிடுகி
லழிந்து மூத்திரக் கிரிச்சமெல்லா
மடைச்சிற் றிலைப்பாலா விரையு
முழுங்கு புழுங்க லரிசியுட
னுவந்தே சுட்டஅடை தின்னே! 136

அனைத்து மூலிகைகளையும் சேர்த்து 2.6 லி. நெய் ஊற்றி காய்ச்சி நெய் பதத்தில் வடித்து 5 கி. அளவு உட்கொள்ளவும். மூத்திரக் கிரீச்சரத்திற்கு சிற்றிலைப் பாலை விதையையும்,

புழுங்கலரிசியையும் சேர்த்து மாவாக்கி அடையாகச் சுட்டு சாப்பிடவும்.

சங்கு வடக்கே போனவேர்
தானே வெட்டிப் பாக்களவு
இங்கே கொண்டு தானரைத்து
இசைந்த வாவின் பாலுடனே
தங்கிக் குடிக்கப் பிறிதிக்கை
தானே நெய்யிற் குழைத்துத்தின்
னெங்கு மிடமில்லை யென்றேதா
னியங்குங் கிரிச்சர மியம்பியதே! 137

சங்கங்குப்பியின் வடக்கே செல்கின்ற வேரை 2.2 கி. எடுத்து அரைத்துப் பசும்பாலில் கலந்து குடிக்கவும். நெய்யிலே கலந்து கொடுக்கவும். மூத்திரக் கிரீச்சரம் குணமாகும்.

பாதிரி எண்ணெய்

பாதிரி யின்சா றதுதான்
பரிந்து குறுணி யதனோடே
மேதை மகாமேதை கார்கோளியு
மிகுத்த சிவக மிடவகமும்
போதச் சந்தனந் தாமரை வளையம்
பொருந்து செங்கழு நீர்க்கிழங்கு
நீதி மதுரா மிலுப்பைப்பூ
நிச்சய மத்தம் புல்லரிசி! 138

பாதிரியின் சாறு 5.2 லி. எடுக்க. கடுக்காய், காபூல், கடுக்காய், காகோளி (அசோகு), சந்தனம், தாமரைவளையம், செங்கழுநீர்க் கிழங்கு, இலுப்பைப்பூ, புல்லரிசி ஆகிய வற்றையும் எடுத்துக் கொள்க.

சிற்றா மல்லி பேராமல்லி
சிறந்தோ ரொன்று கழஞ்சுகொண்டு

வைத்த பாலு மீராழி
மருவும் நெய்யும் நாழியுரி
மித்தனை யரைத்துக் கரைத்து
யெரித்து பதத்தில் வடித்துநக்க
அத்தா சொற்படி மூத்திரத்தி
னான கிரீச்ச மகன்றிடுமே! 139

சிற்றாமல்லி, பேராமல்லி இவையிரண்டையும் வகைக்கு 5 கி. எடுக்க. பால் 2.6 லி., நெய் 1.3 லி. எடுத்து மேற்கூறிய வற்றை அரைத்துக் கலந்து அடுப்பில் வைத்தெரித்துப் பக்குவமாய் வடித்திறக்கி உள்ளங்கையில் ஊற்றி நக்க மூத்திரக் கிரீச்சரம் குணமாகும்.

பேராமுட்டி நெய்

நாணாற் கட்டை குனசக் கட்டை
நன்றா மூக்கிரட்டை சாரணைவேர்
எனக்குறிஞ் சிப்பழ வெண்ணெய்
இசங்கு நொச்சி வட்டசரம்
நீனாபிரா முட்டிக் கரும்புவேர்
நிச்சயங் குருவிக் கரும்புசம்பு
ஆன்ற மருளு மாவிலங்கை
ஆன யிறளி முருங்கைவேர்! 140

நாணல் மரத்துண்டு, குனசமரத்துண்டு (தர்ப்பை) மூக்கிரட்டை, சாரணைவேர், குறிஞ்சிப் பழவெண்ணெய், இசங்கு, நொச்சி, பேராமுட்டி, கரும்பின்வேர், குருவிக் கரம்பை, நாவல், மாவிலங்கை, முருங்கைவேர்,

சேவகன் பூண்டு விடத்தேரை
சிறந்த காட்டு மல்லிகைவே
ரேகப் பொன்னாங்காணி தலைச்சுருளி
யேன மெருகங் கிழங்குடனே
போக நெரிஞ்சில் விழிவேர்
பொன்னே ஆயிற் பட்டையுட

னாகச்சிறு மல்லி வழுதிலையு
மாயில மறுபடி கூவிளைவேர்! 141

சேவகன் பூண்டு, விடத்தேர், காட்டு மல்லிகை வேர், பொன்னாங்காணி, தலைச்சுருளி, மெருகங்கிழங்கு, நெருஞ்சில், வீழிவேர், ஆயில்பட்டை, சிற்றாமல்லி, வழுதிலை, கூவிளைவேர்,

கண்டங் காலி முன்னைவேர்
கனத்த செப்பு நெரிஞ்சிவே
ருண்டே பாதிரி பெருவாகை
உகந்த பெருங்குமி ழோரொன்று
யெண்டிசை யிருபலமாய் கொண்டு
யிடித்துத் தறித்துத் தூணிநீர்
கொண்டே காய்ச்சிக் குறுணியாய்
கூறுங் கற்கங் குறியைக்கேள்! 142

கண்டங்கத்தரி, முன்னைவேர், செப்புநெருஞ்சில், பாதிரி, பெருவாகை, பெருங்குமிழ் ஆகிய மூலிகைகளை வகைக்கு 70 கி. எடுத்து இடித்து 21.5 லி. தண்ணீர் ஊற்றி குடிநீராய்க் காய்ச்சி 5.2 லி.யாய்க் குறுக்கிக் கொள்ளவும்.

கொட்டிக்கிழங்கு தாமரைவிரை
கூறுந் தாது முடனாக
யிட்ட சதாவேரி மத்தங்கா
யியன்ற புல்லரிசி கார்போகி
வட்ட வள்ளிக் கற்கடக
மாவி லங்கை சிறுமூல
மிட்ட சுக்குத் திப்பிலியு
மிருந்து நெருஞ்சில் நாயுருவி! 143

கொட்டிக்கிழங்கு, தாமரை விதை, சதாவேரி, ஊமத்தங்காய், புல்லரிசி, கார்போகரிசி, வள்ளி, கற்கடகசிங்கி, மாவிலங்கு, சிறுமூலம், சுக்கு, திப்பிலி, நெருஞ்சில், நாயுருவி.

ஆனைத் திப்பிலி நாயுருவி
அரேணுகமுங் கூகை நீறு
மேனப் பொன்னாங் காணிவேரு
மிதுநீர் முள்ளி விரைவ சம்பு
மான பூனைக் காலிவிரை
மருவு முள்ளி வேருடனேத்
தானே வெள்ளரி விரையிலுப்பை
தங்கு பூவு மோரொன்று! 144

ஆனைத் திப்பிலி, நாயுருவி, அரேணுகம் (கடுக்காய்), கூகைநீறு, பொன்னாங்காணி வேர், நீர்முள்ளி விதை, வசம்பு, பூனைக்காலி விதை, உள்ளிவேர், வெள்ளரிவிதை, இலுப்பையின் பூ ஆகியவற்றை,

வகையொன்றுதான் கழஞ்சுதாக
மகிழ்ந்து கொண்டே யவையரைத்து
ஆகமே யேனுஞ் சதாவேரி
யான சாறு நானாழி
உகமா மாவின்பால் நானாழி
உண்ணும் நெய்யும் நாழியுரித்
தகுமே முன்சொன்ன கசாயத்திற்
றானே கூட்டிக் காய்ச்சுவதே! 145

வகைக்கு 5 கி. எடுத்து அரைத்துக் கொள்ளவும். சதா வேரியின் சாறு 5.2 லி., பசும்பால் 5.2 லி., நெய் 1.3 லி. எடுத்து மேற்குறிப்பிட்ட குடிநீருடன் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும்.

கற்க மருந்து கசாயத்தில்
கலந்து மெழுகுப் பதத்தில்வடி
அற்க னுதைய நாளொன்றுக்
கான கிறுதாங் கழஞ்சதுகொள்
மிக்கக் கல்லெரிப்புக் கிரீச்சமுடன்
மேவு மூத்திரப் பாளமிவை
தக்க தெல்லாம் பறந்தோடுந்
தானே பிரமுட்டிக் கிறுதமிதுவே! 146

கலவையில் போடப்பட்ட கற்க மருந்தானது நன்கு வெந்ததும் மெழுகு பதத்தில் வடித்திறக்கிக் கொள்ளவும். அதில் 5 கி. எடுத்து உள்ளுக்குக் கொடுக்க கல்லெரிப்பு, மூத்திரக்கிரீச்சரம், மூத்திரப்பாளம் ஆகியவை குணமாகும்.

நாவல் நெய்

நாவற்றோல் நூறு பலம்
நறுக்கி யிருத்திரு தூணி
மேவு நீர்தா னாலொன்றாய்
மிகுத்த நெய்யும் நாநாழி
ஆலத்த யிரும்தான் பதக்கு
ஆன புளியாரைச் சாறாகு
மிவ தாகு முன்னாழி
யிதுவுங் கூட்டிக் கற்கங்கேள்! 147

நாவல்பட்டை 3500 கி., எடுத்து வெட்டி, 43 லி. தண்ணீரூற்றி நாலிலொன்றாய் சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும். 5.2 லி. நெய்யையும் கலக்கவும். 10.7 லி. தயிர், புளியாரைச் சாறு 3.9 லி. எடுத்துக் கலந்து கொள்ளவும். அதில் சேரும் கற்கத்தைக் கீழே காணவும்.

அதிமதுரங் கூவிளங் கதை
ஆன வெள்ளி லோத்திரமு
மதமா மேலந் தாமரைப்பூ
இந்த முந்திரிகை வெட்பாலைத்
திதமாம் வறட்சுண்டில் வெட்பாலை
சிறு நாகப்பூ பேரீச்சம்
பதமாம் சர்க்கரை அத்திப்பூ
பருகு மாதுளைப் பிஞ்சாகும்! 148

அதிமதுரம், கூவிளம், வெள்ளிலோத்திரம், ஏலம், தாமரைப்பூ, முந்திரிகை, வெட்பாலை, வறட்சுண்டி, சிறுநாகப்பூ, பேரீச்சம் பழம், அத்திப்பூ, சர்க்கரை, மாதுளைப்பிஞ்சு,

கொட்டிக் கிழங்கு செங்கழுநீர்
கோலத்தோட கடை யோரொன்று
இட்ட மாக யிருகழஞ்சு
இதங்க வரைத்துப் பதத்தில் வடி
முட்டக் கழஞ்சு தான்கொள்ள
மூத்திரக் கிரிச்சப் பாளமவை
திட்ட மாகத் திருமெனத்
திவ்விய முனிவனு ரைத்ததுவே! 149

கொட்டிக்கிழங்கு, செங்கழுநீர் ஆகியவற்றை வகைக்கு 10 கி. எடுத்து அரைத்து அடுப்பில் வைத்து எரித்துக் கொள்ளவும். பதத்தில் வடித்து 5 கி. அளவு நெய்யை உட்கொள்ள மூத்திரக் கிரீச்சரம் குணமாகும்.

குழம்பு

சதா வேரி கல்நாருஞ்
சாறு மதுர மசமதாக
மிதமாந் தேற்றாங் கொட்டையுட
னியன்ற நெரிஞ்சி லிவையெல்லாம்
பதமாய் சமனாய் மோரிலது
பரிந்தே யரைத்துக் கொண்டிடுகத்
திதமாய் திருங் கிரிச்ச மது
தெய்வ முனிவர் சொற்படியே! 150

சதாவேரி, கல்நார் இவற்றின் சாற்றை எடுக்க. அதிமதுரம், அசமதாகம், தேற்றான் கொட்டை, நெருஞ்சில் இவற்றைச் சமமாய் எடுத்து மோரில் அரைத்துச் சாற்றுடன் கலந்து உட்கொள்ள மூத்திரக்கிரீச்சரம் தீரும்.

மருதம் பட்டை நாழிநீர்
மருவுங் கசாய மதனோடே
சரித நெய்தற் கிழங்கரைத்துத்
தானே குடுக்க மிகத்திரு
மருதாம் நெய்ச்சிட்டிக் கிழங்கதுதா
னரைத்துச் சர்க்கரை யதனோடே

யுருகக் கொள்ளீர் மூத்திரத்தி
னுவந்த கிரிச்ச மோடிடுமே! 151

மருதம்பட்டையை 1.3 லி. தண்ணீரில் போட்டு குடிநீராய்க் காய்ச்சி அதனுடன் நெய்தற்கிழங்கை அரைத்துக் கொடுக்க மூத்திரக் கிரீச்சரம் தீரும். நெய்ச்சிட்டிக் கிழங்கையும், சர்க்கரையையும் சேர்த்துக் கிண்டி கொடுக்க இந்நோய் நீங்கும்.

கற்கம்

பொடுதலைச் சமூலந் தானும்
பொருந்துந் தேசிப் பழச்சாற்றிற்
பொடியது பாலிற் கொள்ள
பொந்த துத்தி பசுப்பாலி
லடவா யரைத்து யதிற்கலந்து
அருந்தத் திரு மதுவன்றி
யிடுமே தேளிப்பூடு வேர்தானு
மிசைந்த மோரிற் குடிக்கப்போ
மடவாய் சொன்னோங் குழம்பென்று
அகத்தி மாமுனி யருளியதே! 152

பொடுதலைச் சமூலத்தைப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றிலும், பாலிலும் கலந்து குடிக்கவும். துத்தியைப் பசும்பாலில் அரைத்துக் கலந்து குடிக்கவும். தேளிப்பூண்டின் வேரை அரைத்து மோரில் கலந்து குடிக்க மூத்திரக் கிரீச்சரம் தீரும் என்று அகத்தியமாமுனிவர் கூறியுள்ளார்.

திரிபலாதிச் சூரணம்

கற்கடக சிங்கி யொன்றாகுங்
கனத்த சீரக மிரண்டுடனே
உற்க மேதை மூன்றாகும்
உகந்த தேற்றாம் விரையுழக்கு
அற்க ஆவாரை விரைழக்கு
ஆகப்பொடி செய்து திரிபலையும்

நிற்கப் பொடிசெயும் பதின்கழஞ்சு
நீரிரு நாழி உழக்காக்கி! 153

கற்கடகசிங்கி ஒரு பங்கு, நற்சீரகம், கருஞ்சீரகம் இவை இரண்டு பங்கும், கடுக்காய் மூன்று பங்கும் எடுக்க. தேற்றான் விதை, ஆவாரை விதை வகைக்கு 336 கி. எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்கு 50 கி. எடுத்துப் பொடித்து 2.6 லி. தண்ணீரை ஊற்றுக.

அந்தநீரிற் பிழிந்துண்டை செய்து
ஆற வுலர்த்திப் பணவிடைதான்
முந்து தேனில் நல்லெண்ணெய்
முசியா மோரிற்றான் கொள்ள
வந்த நீரிழிவு முதலாக
வாழு மூத்திர ரோகமெல்லாம்
பிந்தி நில்லா தோடிடுமே
பெருத்த சூரண மிதுவென்றே! 154

மேற்குறிப்பிட்ட சரக்குகளை இடித்துத் தண்ணீரில் போட்டு பிழிந்து அரைத்து 488 மி.கி. அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து காயவைத்துக் கொள்ளவும். தேன், நல்லெண்ணெய், மோர் இவற்றில் இழைத்து உட்கொள்ள நீரிழிவு, மூத்திரக் கிரீச்சரம் தீரும்.

பிசினுண்டை

ஆவாரை சமூலங் கொண்டு வந்து
அதுவும் பானையிற் றானடைத்து
ஈப்ப தக்குநீர் விட்டு
இதுவுமிரு நாழி யாகவிட்டு
மேவித் தண்ணீர் விளாம்பிசினும்
வெள்வேல் கருவே லிலவம்பிசி
னாவத் தேசிப் பழம்போல
வதுவுங் கூட்டி அரைத்திடுமே! 155

ஆவாரைச் சமூலத்தை எடுத்துப் பானையில் போட்டு 10.7 லி. தண்ணீர் ஊற்றி 2.6 லி. ஆக சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும். விளா, வெள்வேல், கருவேல், இலவம் இவற்றின் பிசின்களைச் சேர்த்து அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்துக் கொள்ளவும்.

ஒட்டுப் பதமாய் வந்தக்கா
லுகந்து கலத்திற் றான்வ ழித்து
விட்டுக் காந்த சிந்தூர
மிகுத்த காரீய சிந்தூர
முட்டயிவை யிரண்டு மெண்க ழஞ்சு
முசியாத பிசினு மொருக ழஞ்சு
இட்டுச் சேர மந்திச்சு
இதுக்கு நெல்லரிசி மாவி டித்து! 156

அதனைப் பதமாய் எடுத்துக் கலத்தில் வழித்துக் கொள்ளவும். காந்த செந்தூரம், காரீய செந்தூரம் இவற்றை வகைக்கு 40 கி. எடுக்கவும். பிசின் 5 கி. எடுத்து ஒன்றாகச் சேர்த்து இடித்து நன்கு கலந்து கொள்க. அரிசி மாவையும் இடித்துக் கொள்ளவும்.

இடித்த மருந்துதானு ருட்டி
இதுவு மாவோடு தான்பி ரட்டி
வடித்த சோறுதான் போசித்து
மருவிப் படுக்கு மப்பொழுது
இடித்துப் பாதி யுண்டை கொள்ள
விதுக்கு மூத்திரக் கிரீச்சமுட
னடுத்த பாளமிவை தீரு
மான வுண்டையது வென்றே! 157

மேற்கூறிய இடித்த மருந்தை உருட்டி அரிசி மாவில் பிரட்டிக் கொள்ளவும். உருண்டைகளாய்ச் செய்து கொள்ளவும். இரவு உணவு உண்ட பிறகு பாதி உருண்டையை உட்கொள்ள மூத்திரக்கிரீச்சரம் தீரும்.

பூசணி நெய்

பூசணிக் காய்நீர் தானும்
பொருந்த நாநாழி வெள்ள ரிக்காய்
வீசு மிளநீர் பேரா முட்டி
மிகுத்த கரும்பு முசுமு சுக்கை
நேசமா யோரொன்று சாறுநாழி
நிச்சயங் கற்கம் நிகடத் தக்கே
நோசை யுள்ள தேவ தார
மொன்றுஞ் செங்கழு நீர்க்கி ழங்கு! *158*

பூசணிக்காய்ச்சாறு 5.2 லி., வெள்ளரிக்காய், இளநீர், பேராமுட்டி, கரும்பு, முசுமுசுக்கை ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 1.3 லி. எடுக்க. தேவதாரம், செங்கழுநீர்க் கிழங்கு,

குங்கிலியந் தாமரை வளையங்
கோலச் சிறுகீரை பொன்னாங் காணி
இங்கு லாம்பிச்ச மிருவேலி
ஏலம் லவங்க மதிமதுர
மங்கு கண்டில் வெண்ணெயுட
னான முந்திரிகை பேரீச்சந்
தங்க வோரொன்றுக் காசிடையாய்
தானே பதத்தில் வடித்துக்கொள்! *159*

குங்கிலியம், தாமரைவளையம், சிறுகீரை, பொன்னாங்காணி, இலாமிச்சை, இருவேலி, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கண்டில்வெண்ணெய், முந்திரிகை, பேரீச்சம்பழம் ஆகியவற்றை வகைக்கு 4 கி. எடுத்து இடித்துக் கலவையில் போட்டு காய்ச்சி பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

நெல்லி எண்ணெய்

பூசணிக் காய்நெய் யதுவும்
பொருந்த வோரொன்று நாநாழி
வீசும் வெட்பாலை அதிமதுரம்
விளங்கு மேல மிலவங்கம்

பூசும் பச்சிலை இலாம்பிச்சம்
பொன்னே சுக்கு கொத்துமல்லி
நேச மஞ்சள் கடுக்காயும்
நெல்லி தான்றி முந்திரிகை 160

பூசணிக்காய்சாறு, நெய் வகைக்கு 5.2 லி. எடுக்க. வெட்பாலை, அதிமதுரம், ஏலம், இலவங்கம், பச்சிலை, இலாமிச்சம், சுக்கு, கொத்துமல்லி, மஞ்சள், கடுக்காய், நெல்லி, தான்றி, முந்திரிகை.

இந்து பேரிச்சந் தேவதார
மிசைந்த சிறுதேக்கு அசமதாகம்
வந்த முத்த மமுக்குராய்
வருத்துங் கோட்ட மோரொன்று
அந்தம் பெறவே நாற்கழஞ்சு
அதுக்குத் தேனும் நாழிவிட்ட
வெந்து வடித்த வெண்ணெயது
மேவிக் கழஞ்சுட் கொள்ளுவதே! 161

இந்துப்பு, பேரீச்சம், தேவதாரம், சிறுதேக்கு, அசமதாகம், கோரைக்கிழங்கு, அமுக்குரா, கோட்டம் ஆகியவற்றை வகைக்கு 20 கி. எடுத்துச் சாறூற்றி அரைத்து மேற்சொன்ன கலவையில் கலக்க. 1.3 லி. தேனையும், நெய்யையும் சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயைப் பக்குவத்தில் வடித்து 5 கி. உட்கொள்ள சோமரோகம், பித்தம், நீர்க்கடுப்பு, கல்லெரிப்பு குணமாகும்.

சதாவேரித் தைலம்

சதாவேரிச் சாறுதான் குறுணி
தக்க பாலுங் குறுணியுடன்
இனிதமாய் நெய்யும் நாநாழி
இதுக்குக் கற்க மேலமுடன்
பதமாங் கச்சோலம் நாகப்பூ
பன்னு மகிழுஞ் சந்தனமு
மிதமா மதுரந் தாமரை வளைய
மிலாமிச்சஞ் செங்கழு நீர்க்கி ழங்கும்! 162

சதாவேரிச்சாறு, பால் இவற்றை வகைக்கு 5.2 லி. எடுத்து நெய்யையும் அதே அளவு உடன் சேர்க்க. ஏலம், கச்சோலம், சிறுநாகப்பூ, மகிழம்பூ, சந்தனம், அதிமதுரம், தாமரைவளையம், இலாமிச்சு, செங்கழுநீர்க்கிழங்கு,

கோட்டம் நன்னாரி முத்தமுடன்
குலாவு மிலுப்பை முந்திரிகை
நாட்டு மேதை மாமேதை
நன்றாம் பேரிச்ச முடனாக
மீட்டுத்தான் கோளிசீத கார்கோளி
மேவு மிடவ கஞ்சியைக் கழீந்
தோட்டு முலையா யோரொன்று
சொல்லுங் கழஞ்சு நாலாக! 163

கோட்டம், நன்னாரி, கோரைக்கிழங்கு, இலுப்பை, முந்திரிகை, நாட்டுக்கடுக்காய், பெரிய கடுக்காயாகிய காபூல் கடுக்காய், பேரீச்சம்பழம், தகரை, கழற்சி ஆகியவற்றை வகைக்கு 20 கி. எடுக்கவும்.

அரைக்கு மருந்து பதத்தில்வடி
ஆன தேனும் நாழிவிடு
உரக்க முக்கழஞ்சு தான்கொள்ள
உள்ளித் திரும் வியாதியைக்கேள்
குரிக்க நீரில் கல்லெரிப்பு
தானே கடுப்பு வருதோஷ
மிருக்க மிரோமென்று தானோடும்
மென்றார் வியாச முனிதானே! 164

அனைத்து மருந்து பொருட்களையும் சாறு விட்டரைத்து தேன், நெய்யையும் சேர்த்து எரித்துப் பதத்தில் வடித்துக் கொள்ளவும். அதில் 15 கி. உட்கொள்ள கல்லடைப்பு, சிறுநீர்க்கடுப்பு, தோஷம் ஆகியவை தீரும்.

நெல்லிக்காய் கிருதம்

நெல்லிச் சாறு நாநாழி
நிகண்டாய் தண்ணீர் மிட்டானும்

வல்லக் கரும்பும் பூசணிக்காய்
வருந்தி யோரொன்று நாநாழி
வல்ல வாவி னெய்தானும்
வருந்த நாநாழி வகைகொண்டு
எல்லா முற்றிப் பானையிலே
இதுக்குக் கற்க மியம்பக்கேள்! 165

நெல்லி, தண்ணீர்விட்டான், கரும்பு, பூசணிக்காய் இவற்றின் சாற்றை வகைக்கு 5.2 லி., பசுநெய் 5.2 லி. எடுக்கவும். அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொள்ளவும்.

திரிபலை திரி கடுகு
திருந்து வெட்பாலை கொத்தமல்லி
அறிவா மேல மிலவங்க
மான யிருசீரகம் நாகப்பூ
குறியா மேதை மகாமேதை
கொண்ட யிலாம்பிச்ச மதிமதுரம்
நேறியா முந்திரிகை பேரீச்சம்
நிச்சய மிந்துப் பசமதாகம்! 166

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, வெட்பாலை, கொத்துமல்லி, ஏலம், இலவங்கம், நற்சீரகம், கருஞ்சீரகம், நாகப்பூ, கடுக்காய், நாட்டு கடுக்காய், இலாமிச்சம், அதிமதுரம், முந்திரிகை, பேரீச்சம், இந்துப்பு, அசமதாகம் எடுக்கவும்.

சிறுதேக்கு தேவதார மோரொன்று
சிறந்த மூன்று காசிடைதான்
முறுகவிடித் துப்பதத் தில்வடி
முன்தேன் சர்க்கரை யிருநாழி
இறுகும் நெய்யிற் றான்விட்டு
இதுவுங் கழஞ்சுதான் கொள்ள
மறுநீர்க் கடுப்புக் கிரீச்சமுடன்
மன்னு மூத்திரப் பாளம்போம்! 167

சிறுதேக்கு, தேவதாரம் அனைத்தையும் வகைக்கு 1.4 கி. எடுத்து இடித்துச் சாறூற்றி அரைத்துக் காய்ச்சி பக்குவத்தில் வடிக்கும் பொழுது தேன், சர்க்கரையை வகைக்கு 2.6 லி. சேர்த்து இறக்கவும். அதில் 5 கி. உட்கொள்ள நீர்க்கடுப்பு, மூத்திரக்கிரீச்சரம், மூத்திரப்பாளம் குணமாகும்.

குழம்பு

செம்ம ரத்தை யிலைநீரில்
சேரச் சீரகந் தான்பிசைந்து
விம்மு தகரை யுடனரைத்து
விளங்கக் குடுக்க மிகத்திரும்
பம்மு கிரீச்சரங் கல்லெரிப்பு
பாளஞ் சோம ரோகமுடன்
செம்மை யாகத் திருமென்று
செப்பிய வியாச முனியருளே! 168

செம்பரத்தை இலைச்சாற்றில் சீரகத்தைப் பிசைந்து தகரையைச் சேர்த்து அரைத்துக் கொடுக்கவும். கிரீச்சரம், கல்லெரிப்பு, பாளம் போல் வெடித்திருத்தல், சோமரோகம் ஆகிய நோய்களும் தீரும்.

நீர்க்கடுப்புக்கு ஏலாதிக் கிருதம்

கடலி றாஞ்சிப் பட்டையதுக்
கதிக்க நாநாழி வெள்ளுள்ளி
திடமா மிருபலம் பதக்குநீரிற்
நிரநா நாழி யாய்வ டித்து
இடித்த திரிகடுகு சீரகமும்
இயன்ற பெருங்காய முருங்கைவேர்
தடித்த சாரணை கொடிவேலி
சமனாய் கொண்ட நிறையாமே! 169

கடலழிஞ்சில்பட்டை 5.2 லி., வெள்ளுள்ளி 70 கி. எடுத்து 10.7 லி. தண்ணீரில் இடித்துப் போட்டு 1.3 லி. ஆக

சுருக்கிக் கொள்ளவும். சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், பெருங்காயம், முருங்கைவேர், சாரணை, கொடிவேலி ஆகியவற்றைச் சமமாய் எடுக்கவும்.

அரைத்துக் கரைத்து யிதில்நாழி
ஆன நெய்யுந் தான்புகட்டி
தரித்த பதத்தில் வடித்தநெய்தான்
தானே கழஞ்சு மிகக்கொள்ள
உரத்த கடுப்புப் பலவகையு
யோடுமென்றே யுண்மை முனி
வருத்த மாகத் தீருமென
வாழு முனிவ னுரைத்ததுவே! 170

அனைத்துச் சரக்குகளையும் மேற்சொன்ன குடிநீரூற்றி அரைத்து அடுப்பில் வைத்தெரித்துக் காய்ச்சி பதத்தில் 1.3 லி. நெய்யையும் கலந்து பக்குவத்தில் வடித்திறக்கிக் கொள்ளவும். 5 கி. உள்ளுக்குக் கொடுக்க பலவகைக் கடுப்புகள் தீரும் என்று முனிவர் கூறியுள்ளார்.

சாரணை நெய்

சாரணை உள்ளி சுக்குடனே
தரித்த கொடிவேலி புன்முருங்கை
சீரணி யாக வோரொன்று
செழித்த யிருபல மாய்கொண்டு
கோரணிப் பதக்கு நீர்விட்டுச்
சுண்டக் காய்ச்சிக் குறுகியபின்
கூரண மிளகு திப்பிலியுங்
கொடிய பேய்முசிட்டை யுடனாக! 171

சாரணை, உள்ளி, சுக்கு, கொடிவேலி, புன்முருங்கை ஆகியவற்றை வகைக்கு 70 கி. எடுத்து இடித்து 10.7 லி. தண்ணீரில் போட்டு சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும். மிளகு, திப்பிலி, பேய்முசுட்டை,

செண்பாற் கடுகு நெல்லிமுளி
செழித்த உள்ளி பெருங்காயம்
நண்பாய் சமனாய் கொண்டரைத்து
நாடும் வெள்ளாட்டுப் பால்நாழி
யெண்கா ணெய்தா னிருநாழி
யிதுவே கூட்டிப் பதத்தில்வடி
பண்பாங் கடுப்பு நீருடனே
பாரு மென்றே பகருவதே! 172

கடுகு, நெல்லிமுள்ளி, உள்ளி, பெருங்காயம் ஆகிய வற்றைச் சமமாய் எடுத்து அரைக்கவும். 1.3 லி. வெள்ளாட்டுப் பால், 2.6 லி. நெய் இவற்றையும் கலந்து அடுப்பில் வைத்தெரித்துக் காய்ச்சி அளவறிந்து பக்குவத்தில் கொடுக்க கடுப்பு குணமாகும்.

பூலித்தளிரைப் புதியப் புதியப் பசுப்பாலி
லாலித்தரை தத்துவ கையா லடுகாலிச்
செயல்நீர் மறிப்புத் தன்னைக் குணமாக்கு
மால்மால் மலந்தன்னையு மது மாற்றும்

பூலானின் தளிரை, அப்போதைக்கப்போது கறந்த பசும்பாலினை ஊற்றி அரைத்து உட்கொள்ள நீர்க்கடுப்பும் மலக்கட்டும் தீரும்.

வாட்ட மிளகு குன்றாத
மண்ணில் மிகுத்த சந்துமுத்தம்
கோட்ட நெல்லி அதிமதுரங்
குலாவு மிலாம்பிச்ச மிருவேலி
தேட்டம் பெரிய தற்கோலஞ்
சேர வரைத்திள நீரிற்
கூட்டிக் கொள்ள வல்லீராய்
குளிருஞ் சத்த னாதியதே! 173

மிளகு, வளமை அதிகமான இடத்தில் விளைந்த கோரைக்கிழங்கு, கோட்டம், நெல்லி, அதிமதுரம், இலாமிச்சம்,

இருவேலி, தக்கோலம் ஆகியவற்றைச் சேர்த்தரைத்து இளநீரில் கலந்து கொடுக்கவும்.

சந்தனாதிக் குளிகை

சந்து கோட்ட மதிமதுரஞ்
சாத்திர வேதி தற்கோல
முந்துக் கோரோசனை முல்லை
முத்தமூல யிலாம்பிச்ச மிருவேலி
இந்த வகையி லரைத்துண்டை
இலந்தைக் கொட்டை யளவாக
வந்த விழலைக்கிடு மிளநீர்
மதிக்குஞ் சந்த னாதியிதே! 174

சந்தனம், கோட்டம், அதிமதுரம், சாத்திரவேதி, தக்கோலம், கோரோசனை, முல்லை, இலாமிச்சம், வெட்டிவேர் ஆகிய வற்றை வகைக்குச் சமஅளவெடுத்து அரைத்து இலந்தைக் கொட்டை அளவாக உருண்டை செய்து இளநீரில் உரைத்துக் கொடுக்கவும். இதுவே சந்தனாதிக் குளிகை.

சத்தனாதிக் குளிகை

முத்தமோடு திப்பிலியோ டொத்தமரி சுக்கு
முற்கடுகு ரோகணிகொள் சீரகமோ டேலம்
மொத்த யிருவேலி மிளகுத்த லாமிச்ச
மொத்தது தற்கோல முடணேத்த மிலவங்கங்
கொத்தமல்லி யொத்தம் கோரோசனை செங்கோட்டம்
கொண்டு யிளநீரிலிவை யத்தனை யரைத்து
ஒத்த மிளகளவினி யதுண்டை யதுருட்டி
யுகந்துகொள் வேர்த்த சத்தனாதி யிதுவாமே! 175

கோரைக்கிழங்கு, திப்பிலி, சுக்கு, கடுகுரோகணி, நற்சீரகம், பெருஞ்சீரகம், ஏலம், இருவேலி, மிளகு, இலாமிச்சம், தக்கோலம், இலவங்கம், கொத்துமல்லி, கோரோசனை, கோட்டம் ஆகிய மருந்து பொருட்களை இளநீர் சேர்த்து அரைத்து மிளகளவாக உருண்டை செய்து உட்கொள்ளவும்.

கொத்தமல்லி அதிமதுர மேல மிலவங்கங்
கோட்டமோடு செண்பகமலர் கோரோசனை முத்த
மொத்தமரி சத்தினோடு வேர்த்த இருவேலி
முற்றிய கரும்பிளநீர் முப்பழ மோடொக்க
வைத்ததொரு முந்திரிகை யுற்ற பேரீஞ்சில்
வகைபட நிலத்திதனை வருத்திய தரைத்து
வேர்த்த பரிதாப சுரமா முட்டண மெடுத்தா
லோடுகுலங் காணவிது யிறுத்துவாதி யிதுவாமே! 176

கொத்துமல்லி, அதிமதுரம், ஏலம், இலவங்கம், கோட்டம், செண்பகப்பூ, கோரோசனை, இருவேலி, கரும்புச்சாறு, இளநீர், முந்திரிகை, பேரீந்து ஆகியவற்றைச் சேரத்தரைத்துக் கொடுக்க காய்ச்சல், உட்டிணம் தீரும்.

கல்லடைப்புக்கு

வெள்ளரி விரையைக் கொண்டுவந்து
மிக்க கருக வறுத்துத்தான்
வெள்ளரிக் காய்தண் ணிரில்
வீற வரைத்துக் குடிக்கப்போம்
உள்ளகோழிக் கார முட்டையோடு
மெலியின் பிட்டையுடன் கொள்ள
வெள்ளாட்டுப் பாலதனாற் கூறு
மருந்த ரைக்கா சிடையே! 177

வெள்ளரி விதையை வாணலியில் போட்டு கருக வறுத்து வெள்ளரிக்காய்ச் சாற்றில் அரைத்துக் கொடுக்க கல்லடைப்புத் தீரும். கோழி முட்டையுடன் எலியின் விட்டையையும் சேர்த்தரைத்து வெள்ளாட்டுப் பாலில் கலந்து 2 கி. அளவு உட்கொள்ள கல்லடைப்பு தீரும்.

நெரிஞ்சிற் செப்பு நெரிஞ்சிலும்
நிகண்டா யிடித்துத் தண்ணிருஞ்
சொரிஞ்சுரி யாகத் தான்காய்ச்சி
துய்யவெண் காரம் பெண்பிடியே

யிரஞ்ச வரைத்து தான்கரைத்து
இதுக்கு முசியப் பால்கூட்டு
திரஞ்சு குடிக்கக் கல்லுவிழ
மென்றார் தேவ முனியுகந்தே! 178

நெருஞ்சில், செப்புநெருஞ்சில் இவை இரண்டையும் இடித்துத் தண்ணீர் ஊற்றி 675 மி.லி.யாய்க் காய்ச்சி அதில் வெண்காரத்தைச் சேர்த்தரைத்து முசியப்பால் கலந்து கொடுக்கவும். கல் கரையும்.

காட்டுக் கொடியிலை யாவாரைக்
கதித்த சாறு பசுவின்பால்
விட்டு வரைத்து மோரதனில்
மீறவே குடிக்கக் கல்லுவிழுந்
தோட்டக் கழச்சிப் பருப்பிரண்டுத்
தோன்ற வரைத்துப் பனைவட்டு
மிட்டுத் தின்னக் கல்லுவிழ
மென்றார் முனிவ ரிப்பொழுதே! 179

காட்டுக் கொடியிலை, ஆவாரையிலைச் சாறு, பசும்பால் கலந்து கொள்ளவும். மோரையும் சேர்த்துக் குடிக்க கல்கரையும், கழற்சிப்பருப்பை அரைத்துப் பனைவட்டு (பனைவெல்லம்) சேர்த்தரைத்துக் கொடுக்க கல்கரையும்.

சீனக்காரம் வெள்ளரி விரை
திருந்தும் பாலிற் றான்கொள்ள
வான சீரகஞ் சந்தனமுந்
மதுவு மூங்கில் வேரரைத்துத்
தீனக் கொள்ளுஞ் செவ்விளநீர்
தேற்றாம் விதையுடன் தானரைத்து
முனிக் குடிக்கக் கல்லுவிழு
முரைத்தார் முனிவ ருண்மையிதே! 180

சீனக்காரம், வெள்ளரி விதையையும் சேர்த்தரைத்துப் பாலில் கலந்து கொள்ளவும். சீரகம், சந்தனம், மூங்கில் வேர்,

தேற்றான்விதை இவற்றைச் சேர்த்தரைத்து செவ்விளநீரில் கலந்து குடிக்க கல் கரையும்.

விடத்தேரை வேர்சேர்த் தரைத்து
வெள்ளரிக் காய்தண் ணீரில் கொள்ளத்
தடித்த மாவிலங்கைப் பொன்னாங் காணி
தானே சிறுபூளை நெரிஞ்சில்வே
ரிடித்தே நாழி தண்ணீர்
தானில் வடித்து ழக்கதுகொள்
கொடித்தந் தாண்டு வேரரைத்து
பருகும் நல்லெண்ணெ யதனோடே! 181

விடத்தேரை வேரை அரைத்து வெள்ளரிக்காய் தண்ணீரில் உட்கொள்ளவும். மாவிலங்கு, பொன்னாங்காணி, சிறுபூளை, நெருஞ்சில் வேர் இவற்றை *1.3* லி. தண்ணீரில் சேர்த்துக் காய்ச்சி *325* மி.லி. கொடுக்கவும். தாண்டு வேரினை அரைத்து நல்லெண்ணெயில் உட்கொள்ளவும்.

மாவிலங்கை வடக்குப் போற வேரும்
வீழி விலங்கில் முட்டைய்யா வன்னெருஞ்சில் வேரும்
பேயினிட சுடுகாட்டிற் பிராமுட்டி வேரும்
பெரும்பூளையது நிறக்க சிறுபூளை வேருந்
தாயிலங்கு மென்மொழியா யெட்டொன்றாய்க் காய்ச்சி
தன்கையி லிருந்ததனை யவன்கையிற் கொடுத்து
வாயிதங்கிற் கல்லுவிழுங் குடித்திடிலோ சாந்து
மருவித்துப் படுத்தகல்லும் வழுவாது விழுமே! 182

மாவிலங்கையின் வடக்கே செல்கின்ற வேர், வீழி, நெருஞ்சில்வேர், பிராமுட்டி வேர் (சிற்றாமுட்டி), பெரும்பூளை வேர், சிறுபூளைவேர் ஆகியவற்றை இடித்துத் தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொடுக்க கல்கரையும்.

சீரிய ரிருவருமஞ் சிறந்த வேருங்
கூரிய ரொருவருங் கொடிய காயமு
மாரிய வடகரையாய் சமயசம தாகமும்
நெரிவை யெட்டும் நெருப்ப தாகுமே! 183

நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், அசமதாகம் ஆகிய எட்டும் நெருப்பாகும். அதாவது வெப்பத் தன்மை கொண்டதாகும்.

சேவலங் கார மோடு
தெள்ளிய மாயோன் வித்து
மாவலங் காகு மாயோ
னருளெண்ணெய் சீனியதிற் கூட்டி
ஏவலங் காரஞ் செய்து
இளநீரிற் கொள்வீ ராகில்
காவலங் காகி நின்ற
கதித்த கல்லுடையுங் காணே! 184

வெங்காரத்தைப் பொடித்து வெள்ளரி விதை, மாவிலிங்கு ஆகியவற்றைச் சேர்த்து சர்க்கரையையும் கலந்து இளநீரில் கொள்ள கல்லடைப்பு தீரும்.

எலும்புருக்கிக்கு

வறட்பூலா விடத் தேரை
மருவு மோமங் கழற்பருப்பு
நிறமாஞ் சுக்கு நெல்லிமுளி
நேரே வெச்சிட் டரைத்துத்
தறனுறவே நல்ல எண்ணெயிற்
சிருறந்து குழைத்துக் கொண்டிடவே
அறவே தீரு மெலும்புருக்கி
ஆனது தீர்க்கு மருளிதுவே! 185

வறட்பூலா, விடத்தேர், ஓமம், கழற்சிப்பருப்பு, சுக்கு, நெல்லிமுள்ளி ஆகியவற்றை அரைத்து நல்லெண்ணெயிற் குழைத்து உட்கொள்ள எலும்புருக்கி குணமாகும்.

ஓரிலைத் தாமரை பசும்பாலி
லுகந்து வரைத்துக் குடிக்கப்போம்
திருங்கருங் குருவை யரிசியிலே
மிகுத்த தென்னம் பாளைவேர்

நேரே இடித்துக் களிகிண்டி
நேர்ந்த கருப்புக் கட்டியிற்கொள்
ரோரறிய னாபஞ் சொன்னோ
முண்மை முனிவ ருரைப்படியே! 186

ஓரிலைத் தாமரையைப் பசும்பாலில் சேர்த்தரைத்துக் கொடுக்கவும். கருங்குருவை அரிசியுடன் தென்னம்பாளை வேரைச் சேர்த்திடித்து மாவாக்கிக் களியாகக் கிண்டி, கருப்புக் கட்டியையும் கலந்து சாப்பிடவும். எலும்புருக்கி நோய் தீரும்.

கொல்ல துலையிற் றண்ணீரில்
கோதிற் பனைவட்டுத் தான்க ரைத்து
வல்ல படியே கொண்டிடவே
மருவால் விழுதுஞ் சந்தனமும்
நல்ல கலைக்கொம்புங் கூடரைத்து
நன்றா யெலுமிச்சங் காயளவு
வல்ல நாழிப் பாலதனால்
மருவிக் குடிக்க வகையாமே! 187

உலைத் தண்ணீரில் பனைவட்டினைக் கரைத்துக் கொள்ளவும். ஆலம் விழுதையும், சந்தனத்தையும் கலைக் கொம்பையும் சேர்த்தரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து 1.3 லி. பாலில் கலந்து குடிக்க எலும்புருக்கி நோய் குணமாகும்.

பூசணிக்காய் தோல் சீவிப்
பொருந்துங் குடலும் விட்டெடுத்து
வீசும் பாக்குப் போலரிந்து
விளங்குஞ் சட்டியிற் றானிட்டு
வாசி நெய்தான் சட்டியிட்டு
மருவுங் காய பலமிட்
டுளசுஞ் சர்க்கரை யிருநாழி
இதுக்கு மேல்மருந் தியம்பக்கேள்! 188

பூசணிக்காயின் தோலையும், உள்ளிருக்கும் குடலையும் நீக்கி பாக்களவிற்கு வெட்டி சட்டியில் போட்டுக் கொள்ளவும். சட்டியில் நெய்யை ஊற்றி 35 கி. பெருங்காயத்தையும் 2.6 லி. சர்க்கரையையும் சேர்த்துக் கிண்டவும்.

சுறாத் திப்பிலி சீரகமுஞ்
சொல்லோ ரொன்று மூன்று
வராக னிடை மிகஷி
ராகே சுரங்கிராம் பூவு
மீறு மிலவங்கப் பத்திரியுந்
தவஷிதோ ரொன்று
வராக னிடை சற்றே
வறுத்துப் பொடி செய்து
ஒக்கத் தூவிய தன்பிறகு
வறவிடு தேனு மதில்நாழி! *189*

திப்பிலி, சீரகம் இவற்றை வகைக்கு 12 கி., கிராம்பு, இலவங்கப்பத்திரி இவற்றை வகைக்கு 4 கி. எடுத்து வறுத்துப் பொடித்து 1.3 லி. தேனில் கலந்து கொள்ளவும்.

இதுக்குத் தீரும் வியாதிக்கே
ளெலும்பு ருக்கி யுள்ளிரும
லருக்கிக் கொல்லும் கடுப்புடனே
ஆனமேலிளைப் புடம்பிளைப்புக்
கதித்த மூத்திரப் பாளமுடன்
கள்ளமுள் ளுருக்கி கண்டதெலாம்
விதிக்கும் படிதா னில்லாதே
விறுங் காயம்விட் டேகுவதே! *190*

எலும்புருக்கி, உள்ளிருமல், மேல்கடுப்பு, உடல் இளைத்துப் போதல், மூத்திரப் பாளம், உள்ளுருக்கி ஆகிய நோய்கள் மேல்குறிப்பிட்ட மருந்தால் தீரும். கசப்பான பொருட்கள், புளிப்பு நீக்கி இனிப்பான கறிகாய்களைச் சேர்க்கவும்.

நவக்கிரக ரசம்

கெந்தக தாளம்பிலத் துத்தம்
கெவுரி மனோசிலை பால்துத்த
மந்த முள்ள கற்சுண்ணாம்
பரிய பாதரசஞ் சாதிலிங்கம்
முந்துனா சரியிடை தான்வைத்து
முசிவறப் பாகற் சாற்றரைத்து
அந்தங் குப்பிக் குள்வைத்து
ஆன சிலைமண் ணெழுசெய்யே! 191

கெந்தகம், தாளகப்பாடாணம், துத்தம், கெளரி, மனோசிலை, பால்துத்தம், கற்சுண்ணம், பாதரசம், சாதிலிங்கம் ஆகியவற்றைச் சமமாய் எடுத்துப் பாகற் சாறூற்றி அரைத்துக் குப்பிக்குள் வைத்து அதன் வாய்க்கு ஏழு சீலை மண் செய்து கொள்ளவும்.

பாதிப் பானை மணலெடுத்துப்
பரிவாய்க் குப்பி தான்வைத்து
மீதிக் குறைக்கு மணலிட்டு
விறு மடுப்பின் மேல்வைத்து
நீதிப் படியே தானெரித்து
நிகண்டாம் சாமம் நாலுடனே
போதச் சாங்கமா யாறவிட்டு
பொருந்த கல்வத்தில் தான்வையே! 192

பாதியளவு மணலை நிரப்பிய பானையை எடுத்து குப்பியை அதன் நடுவில் வைத்து மீதி பாகத்திற்கும் மணலினைப் போட்டு அடுப்பிலிட்டு எரித்துக் கொள்ளவும். 12 மணிநேரம் எரித்துப் பின் ஆறவிட்டெடுத்துக் கல்வத்தில் வைத்துக் கொள்ளவும்.

வைத்தே வேப்பம் பழச்சாறு
மகிழ மூன்று நாளரைத்து
ஒத்த மிளகு மதிகாரி
ஓமபா யுண்டை தான்செய்து

மெத்த நிழலிற் றானுலர்த்தி
மேவு மனுபானஞ் சொல்லக்கேள்
உற்ற முலைப்பால் பஞ்சமூலம்
உகந்த தேனிஞ்சிச் சாறுகொள்ளே! 193

பிறகெடுத்து, அதில் வேப்பம்பழச்சாறூற்றி மூன்று நாளரைத்து மிளகு, வெங்காரம், ஓமம் இவற்றையும் சேர்த்தரைத்து உருண்டையைச் செய்து நிழலில் காய வைத்துக் கொள்ளவும். பக்குவத்தில் எடுத்து தாய்ப்பால், பால், தயிர், தேன், கோமியம், சாணிப்பால் ஆகிய பஞ்ச திரவியத்திலும், தேன், இஞ்சி சாற்றிலும் இழைத்துக் கொடுக்கவும்.

கொண்டா நவக்கிரக மெனும்ரசத்தைக்
குமர கண்டன் காக்கைவலி
மிண்டுஞ் சன்னி தோஷவகை
மிகுந்த வாய்வு எண்பதுடன்
பாண்டுஞ் சிலேட்ம மிருபதுவும்
பலபலவும் பார்தோ ஷங்கள்
விண்டே யோடு மென்றுசொல்லி
விரைந்தே வியாச முனியுரைத்தார்! 194

இந்த நவரசக் குளிகை குமரகண்டன் வலி, காக்கை வலி, சன்னி தோட வகைகள், வாதங்கள் எண்பது வகை, பாண்டு சிலேத்துமம் இருபது வகை, தோடங்கள் பலவகை ஆகிய நோய்களை நீக்கும்.

விஷ மருத்துவம்

சித்தே ரண்டப் பேய்ப்பீர்க்குச்
செழித்த அழிஞ்சில் விரைப்பு
துத்தந் துரிசி பெருங்காயம்
துய்ய வசம்பு வெள்ளுளியும்
ஏத்த கறுப்பு கைப்பிடியுடன்
பிகுந்த நிர்விஷ மிந்துப்பு
சத்தி எவட்சாரம் நவட்சார
மன்னோ சிலை சமன்கூட்டே! 195

சிற்றேரண்டம், பேய்ப்பீர்க்கு, அழிஞ்சில், துத்தம், துருசு, பெருங்காயம், வசம்பு, வெள்ளுள்ளி, நிர்விஷம் (நாபி), இந்துப்பு, எவச்சாரம், நவச்சாரம், மனோசிலை ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் கொள்ளவும்.

கூட்டி இரதமுங் கெந்தகமுங்
குறித்த வால்மிளகு கோஷ்டமுடன்
நாட்டிய பங்கம் பாளை
நலம்பெறு குன்றி வித்தும்
பூட்டிப் பேகிராம் புங்கும்
புன்னையுங் கழலுஞ் சேர்த்து
கெட்டியச் சதிரக் கள்ளி
சாறுடன் திகழ நன்றே! 196

இரசம், கெந்தகம், வால்மிளகு, கோட்டம் எடுக்க, பங்கம்பாளை, குன்றிவிதை, கிராம்பு, புங்கு, புன்னை, கழற்சிக்காய், சதுரக்கள்ளி ஆகியவற்றின் சாறுகளை எடுக்கவும்.

நன்றெனும் தில்லை சுட்டசாம்பல்
நலமாய் சேர்த்துக் கூட்டி
உன்னிப் பிரண்டைச் சாறு
உத்தாமணிச் சாறுடனுகந் தரைத்துத்
திண்ணிய நிம்ப மெட்டி
சேர்த்துமே குழம்ப தாக்கிய
பண்ணிய மருந்து தீர்க்கும்
வினைதனைப் பகிர்ந்து கேளீர்! 197

தில்லை மூலிகையின் சுட்ட சாம்பலுடன் பிரண்டைச் சாறு, உத்தாமணிச்சாறு சேர்த்தரைத்து, அதனுடன் மேற்சொன்ன வற்றையும் வேம்பு, எட்டியையும் சேர்த்துக் குழம்பாக்கிக் கொள்ளவும்.

பகர்ந்திட்ட கடலைப் பாதி
பரிந்துநா வதனிற் றேச்சுச்
சிரமோடு, குடோரி யிட்டுத்
தேய்த்துநீ விடுவீ ராகி

லூரமடு பிறவிச் சோடும்
உயர்ந்து குத்துஞ் சகலமூர்ச்சை
பரவிய தொண்ணூற் றெட்டுய
பல்கடி விஷங்கள் போமே! 198

குழம்பில் கடலை அளவு எடுத்து நாக்கில் தேய்த்து உட்கொள்ளவும். தலையில் கீறி, இக்குழம்பை விட்டு தேய்த்துத் தடவி விடவும். குத்துவலி, மூர்ச்சைகள், தொண்ணூற்று எட்டுவகை கடிவிடங்கள் தீரும்.

உளை மாந்தை

குன்றின் முசிட்டை யைத்தான்
கொடிவேலி பருத்தி யிலையுங்
குன்றாமல் நின்றோ நிலத்திற்
குமிளந்தி பயிலும் வீழியிலை
சென்றார் பிடிக்குஞ் சிற்றமல்லி
சேர வரைத்தா வின்பாலில்
அன்றே குடிக்கி லுளைமாந்தை
அன்றே செயல்புண் ணாறிடுமே! 199

முசுட்டை, கொடிவேலி, பருத்தியிலை, வீழியிலை, சிற்றாமல்லி ஆகியவற்றைச் சமஅளவு எடுத்து அரைத்துப் பசும்பாலில் கலந்து அன்றைக்கே குடிக்க உளைமாந்தை குணமாகும்.

நிலக்குமிழ் துடரி பூலா
நிலவினில் நிம்பஞ் சம்பு
பலப்படி அஞ்சு கொள்ள
பலசரக் கதனைக் கேட்க
நலப்படு கோஷ்ட முள்ளி
நற்கரு நெல்லி தான்றி
குலப்படு மதுரப் பாடல்
கூட்டிநீ எண்ணெய் வையே! 200

நிலக்குமிழ், துடரி, பூலா, வேம்பு, நாவல் ஆகியவற்றின் சாறு வகைக்கு 1.3 லி. எடுத்துக் கொள்ளவும். கோஷ்டம், உள்ளி, கருநெல்லி, தான்றி, அதிமதுரம் ஆகிய சரக்குகளைப் பொடித்துப்போட்டு எண்ணெயைக் காய்ச்சி அளவறிந்து உட்கொள்ள உளைமாந்தை தீரும்.

குறிஞ்சியிலையை குருவை னெல்லின் மாவின்
செறிந்த நாழி எண்ணெயுடன் தின்ன
வறிந்து உளைமாந்தை உள்முச்சி உடம்பிலது
நோயுங்களை தீந்து கண்ணடைக்குங் காண்! 201

குறிஞ்சியிலையின் சாறெடுத்துக் கொள்ளவும். 1.3 லி. எண்ணெயையும் சேர்க்கவும். குருவை நெல்லிடித்து மாவையும் சேர்த்து உட்கொள்ள உளைமாந்தை உடம்பில் ஏற்படும் நோய்கள் அனைத்தும் தீரும்.

வேங்கை மரத்தோலுடனே மென்குருவை நெல்மாவை
ஆங்க தனைப பிட்டாவ தாக்கியேப்
பாங்குடனே எண்ணெதனில் சேத்தருந்த என்று
முள்மாந்தை யதில்ப்புன் றிருமல்சீ யோடும்போம்! 202

வேங்கை மரப்பட்டையை இடித்துக் குருவை மாவுடன் சேர்த்துப் பிட்டவியலாக்கி எண்ணெயுடன் சேர்த்துச் சாப்பிட உளைமாந்தை, இருமல் குணமாகும்.

திப்பிலியும் மோரும் முகந்தவிடத் தேரிலையும்
ஒப்புமுசு முசுக்கை முக் குமிழும்..........
இப்படியே கோவென்றும் பாலிற் குடிக்க
விழுந்தோடுமே மேவு முளைமாந்தை யிரவே! 203

திப்பிலி, விடத்தேரிலை, முசுமுசுக்கை, குமிழ் ஆகியவற்றைச் சேர்த்தரைத்துப் பசும்பாலில் கலந்து குடிக்க உளைமாந்தை குணமாகும்.

சீந்தா தருந்துஞ்சி வேம்பு
— திருந்தா நிலத்தின் குமிழ்வேருங்

கோந்தாங் கோஷ்டம் மேமாடல்
குலவு கருஞ்சி ரகம்மதுரம்
மேந்த மிளகு சிறுநாகப்பூ
வெந்த எண்ணெய் விழுங்கினக்கால்
பந்தே எட்டு நாள்தின்னில்
பறந்தே யோடும் உளைமாந்தை! 204

துருஞ்சி, வேம்பு, நிலக்குமிழ்வேர், கொத்தான், கோட்டம், கருஞ்சீரகம், அதிமதுரம், மிளகு, சிறுநாகப்பூ ஆகியவற்றைச் சேர்த்து எண்ணெயாய்க் காய்ச்சி எட்டு நாட்கள் தொடர்ந்து குடிக்க உளைமாந்தை குணமாகும்.

இயற்பெரிய சங்கினோடு இன்பூறல்
சாரணை வல்லிப்படியே ஆடாதொடைய
மியலுடைய தூதளை தக்காளி
கையாந் தகரை குமிழ்வே ருடனே
மயக்கிலு வராகியோடு சிற்றமல்லி
மாகாளி வலியதோர் புலியுடவேர்
மருவு மூக்குரவு சீதேவி யோரிதழில்
நல்வண்ணம் முத்தம் முதவலசி
சியற்பெரிய தோர்மதுர நெல்லி
திப்பிலி கருஞ்சீரகம் செறிகுப்பை வேம்பாடலும்
நயப்போடு வடித்தெண்ணெய் நக்கிலது
கயரோக நூறுமுள் மாந்தையுடனே
நயக்கோழை விற்புருதி முதலான
ரோகமதுதைந்து நொந்தே தீருமே! 205

சங்கு, இம்பூறல், சாரணை, ஆடாதோடை, தூதுவளை, மணத்தக்காளி, கையாந்தகரை, குமிழவேர், சிற்றரத்தை, சிற்றாமல்லி, பெருநன்னாரி, சீதேவிசெங்கழுநீர், புலிதுடக்கிவேர், கோரைக்கிழங்கு, அதிமதுரம், நெல்லி, திப்பிலி, கருஞ்சீரகம், சதகுப்பை, வேம்பாடம் பட்டை ஆகிய மூலிகைகளைச் சேர்த்து எண்ணெயாய்க் காய்ச்சி உள்ளுக்குக் கொடுக்க சயநோய், உளைமாந்தை, கோழை, விப்புருதி ஆகிய நோய்கள் குணமாகும்.

உள்ளி மிளகு சீரகமும்
உற்ற கடுக்காய் திப்பிலியுஞ்
தள்ளுஞ் சுக்கு மோதகமு
மச்சியின் உப்பு மகிளம்பூவுங்
கொள்ளுங் கற்கடுகு ரோகணியும்
கூடும் காதின கடுநாழி
கள்ளஞ் செய்யுங் கருஞ்சீரகங்
கழஞ்சோ ரொன்று காணிதுவே! 206

உள்ளி, மிளகு, சீரகம், கடுக்காய், திப்பிலி, சுக்கு, மோதகம், மகிழம்பூ, கடுகுரோகணி, கருஞ்சீரகம் ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுக்க.

இதிற்தூது வளைவே ரிரண்டு பலம்
இதில்நெயி னாழிவேப்பஞ் சாறுதான்
கறாங்கை ஒக்க விட்டு
அடவே அரைத்து அதில்கலக்கி
பதமே வரவே தான்காய்ச்சிப்
பதத்தில் வடித்து நக்குவீரால்
சதமா மீளை முதலான
காசந் தீருங் காணிதுவே! 207

தூதுவளை வேர் 70 கி. எடுத்து வேப்பஞ் சாறு ஒரு கைப்பிடியளவு, நெய் 1.3 லி. உடன் சேர்த்தரைத்துக் கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பக்குவமான பதத்தினில் வடித்து உள்ளங்கையில் ஊற்றி நக்க ஈளை, காசம் முதலியவை தீரும்.

சுக்குடன் மிளகு திப்பிலி
தூதுவளை வட்ட சிந்தில்
தக்கதோர் சரக் கொன்னை
சமனது வாகக் கொண்டு
ஒக்கமுன் னாழி தண்ணீர்
ஒன்றதால் அரைத்துக் காய்ச்சு

நக்கவே நறுநெய் தேனில்
நன்றெனக் காசம் போமே! 208

சுக்கு, மிளகு, திப்பிலி, தூதுவளை, வட்டசீந்தில், சரக் கொன்றை ஆகியவற்றைச் சமமாக எடுத்து 3.9 லி. தண்ணீரூற்றி அரைத்துக் காய்ச்சிக் கொள்ளவும். தேன், நெய் இவற்றை அளவுடன் கூட்டி உட்கொள்ள காசம் தீரும்.

கையாந் தகரை உப்பிலியே
கடிய நொச்சில் ஆடாதொடை
செய்யே வளரு மாமணக்கு
சிறக்க இவற்றின் இலைச்சாறு
பொய்யா யிதுவும் நாழியதாய்
போடக் கிட்டம் பொடிசெய்து
மெய்யாய் நாழிப் பொடிபோட்டு
மீளச் சுவற வெயில்வைய்யே! 209

கையாந்தகரை, இண்டு, நொச்சில், ஆடாதோடை, ஆமணக்கு ஆகியவற்றின் இலைச்சாற்றினைப் பிழிந்து வகைக்கு 1.3 லி. எடுக்கவும். கிட்டத்தைப் பொடித்து 1.3 லி. அளவு எடுத்து சாற்றில் போட்டு வெயிலில் வைத்து சாற்றினை இழுக்கும்படி செய்து கொள்ளவும்.

வைத்தே எருக்கின் பால்சி ரங்கை
மணக்குங் கிராம்பு திரிகடுகு
மெத்த நிலவி னுப்புடனே
மேவு கருஞ்சி ரகப்பொடியும்
நெய்ந்த உள்ளி சன்னசாலை
நிறையோ ரொன்று முக்கழஞ்சு
கையாந் தகரை பிரமியிலைக்
கசக்கிச் சாற்றா லரைத்துலர்த்தே! 210

எருக்கம்பால் ஒரு கையளவு, கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கருஞ்சீரகப்பொடி, உள்ளி, சன்ன லவங்கப் பட்டை ஆகியவற்றை வகைக்கு 15 கி. எடுத்து கையாந்தகரை, பிரமி இலைச்சாற்றால் அரைத்துக் காய வைத்துக் கொள்ளவும்.

ஏலத்திப் பொடிசெய் ஒன்றுபட
ஒரு நாளொன்றில் வெருகடி கொள்ள
பேலத்த பித்த பாண்டுவெனில்
பேணி நறுநெய் யினில்கொள்ளு
நலக்கும் வெப்புப் பாவைஎன்னில்
நன்றாம் கொன்றை சீனிகொள்ளு
கலக்குங் காய ரோகமெனில்
காரம்பாலி லதுகொள்ளே! 211

பின் ஏலம், அத்தி இரண்டையும் பொடிசெய்து சேர்த்து ஒரு நாளைக்கு மூவிரலளவு எடுத்து நெய்யில் கலந்து கொடுக்க பித்த பாண்டுவும், கொன்றை சர்க்கரையைச் சேர்த்து அதில் கொடுக்க வெப்புவும், காராம் பசுவின் பாலில் கொடுக்க சயநோயும் குணமாகும்.

கபாலவலி

ஏத்த கபால வலியால்
உச்சிக் குத்தும் ஒருத்தலைநோய்
சுரத்தில் சேரும் லிதுழநில
செய்யு மருந்தும் வகைகேளாய்
உரக்கத் தக்க மருந்து நெய்யில்
ஒன்று படவே கரைத்துநசியம்
பாதந்துன்பம் தலையிலிட
பதறிக் கபால வலிபோமே! 212

கபால வ்லியில் உச்சித் தலையில் குத்தல் வலியும் ஒற்றைத் தலைவலியில் காய்ச்சலும் ஏற்படும். மருந்தினை நெய்யில் நன்கு அரைத்து மூக்கில் நசியமாகப் பயன்படுத்தியும் தலையில் தேய்த்தும் விட கபாலவலி குணமாகும்.

கபாலக்குத்து

புருவச் சுழியில் குத்திநின்று
போதப் புரியத் தல்லாமல்
புருவக் குத்து மூச்சுதன்னில்
ஓடி யடங்கும் சரீரந்தன்னில்

மருவு மோர்யி தல்வல்லி
மறுசொற் படிக்கு யிடமில்லை
பெருக கபாலக் குத்தென்பார்
பேசப் பகர்வீர் பெரியோரே! 213

புருவத்தின் இடையில் குத்தல் வலி ஏற்படும். உடம்பினுள்ளேயே மூச்சு அடங்கிவிடும். இவையேயன்றி வேறேதுமில்லை. கபாலக்குத்தின் குறிகுணங்கள் இவையே.

மெத்த துரியத் துமிதே
மேதினி யெல்லாஞ் சூழலும்
குத்திக் கபால மிக்க
கொண்டு திருந்தச்
சத்தி யெடுக்குங் கிறுகிறுப்பு
மிவ்வலியிற் சேர்ந்து தடுத்தே
....
மூக்குசத்தி கபால வலியாமே! 214

தலைச்சுற்றல், உலகமெல்லாம் சுற்றுவதுபோல் இருத்தல், தலைகுத்தல், வாந்தியெடுத்தல், கிறுகிறுத்தல் ஆகியவை கபாலக் குத்துவலியின் குறிகுணங்கள்.

கண்டந் தன்னில் மேல்மூண்டு
கதிக்க மண்டை வறட்சியினால்
துண்டம் புருவங் கூடுதல்
சுழியில் கண்ணால் குத்துண்டாய்
மண்டுந் துயர மிகவுண்டாம்
வலைபோல் கண்ணுந் தெரிவரிதாம்
மண்டை முழுதும் பரந்துகுத்தும்
வழுத்தும் கபால வலியாமே! 215

கழுத்தில் வலியெடுத்தல், தலை வறட்சியாகி, புருவ மத்தியில் வலி, கண்ணில் குத்தல் வலி, வலியும் துன்பமும் அதிகமாதல், கண்பார்வை மங்குதல், தலையில் குத்தல் வலி ஏற்படுதல் இவையும் கபால வலியின் குறிகுணங்கள்.

பூவன் பழமும் பழவரைப்பும்
புதிய மிள கொடித்துப்
புஷவ தடங்கு மத்திப்பால்
அதுவோ டொக்கப் பொடிகொண்டு
தாப முலைப்பால் தனில்க லக்கி
இரண்டே நாசி யதனிலிட
பாலக் கபால வலிதானும்
பசாசு மகன்று போமன்றே! 216

பூவன்பழத்தையும் மிளகையும் சேர்த்தரைத்து, அத்திப் பாலையும் சேர்த்துப் பொடித்துத் தாய்ப்பாலில் கலந்து மூக்கில் நசியமாக விட கபால வலியும் குணமாகும்.

வீழி சமமான மாவிலிங்கை
வீறுள் கொன்றை யாகிலவின்
விய முருங்கை ஆறிடத்
தோங்கக் கூட்டி பலவிடி
ஒன்றாக வற்ற நாழித்தண்ணீ
ரஞ்சி ரண்டாகக் காய்ச்சே! 217

வீழி, மாவிலிங்கு, கொன்றை, அகில், அபின், முருங்கை ஆகியவற்றைத் தோலாந்திரமாகக் கட்டி 1.3 லி. தண்ணீரில் போட்டு ஒன்றிரண்டாகக் காய்ச்சிக் கொள்ளவும்.

காய்ச்சியே கொதித்த தென்னில்
கலத்திடை நறுநெய் நாழி
முச்சுள்ள உள்ளி சுக்கு
முதிந்ததிப் பிலிவெண் காரம்
மாய்ச்சியே சேர்த்திந் துப்பு
வறியசி வறதை காயம்
காய்ச்சிநெய் தன்னி லொக்க
கள்ளிப்பால் கலந்து கொள்ளே! 218

கொதித்த குடிநீருடன் 1.3 லி. நெய் சேர்க்க. உள்ளி, சுக்கு, திப்பிலி, வெண்காரம், இந்துப்பு, பெருங்காயம் ஆகியவற்றைப்

பொடித்து நெய்யில் போட்டுக் காய்ச்சி கள்ளிப் பாலையும் தேவையான அளவு கலந்து கொள்ளவும்.

நயன வியாதி - குணபாடம்

மாதுமை பாகஞ் சொன்ன
மாமறை மூலர் பாயிரத்து
தீதுகள் வாரா தென்று
திருவுளத் துற்ற போது
ஆதிமா முனிவன் சொன்ன
ஆயுர் வேதத் துள்ளே
நாதனார் தெரிந்து ரைத்த
நயனமாம் விதியி தென்னே! 219

சிவனார் கூறிய திருமூலர் பாயிரத்துள், அகத்திய முனிவர் சொன்ன ஆயுள் வேதத்தினுள் நயன விதிகள் இதுவென கூறப்பட்டவற்றைத் தெரிந்து கொள்வோம்.

உயந்திடு நயனந் தன்னில்
உற்பன வாதி யெல்லாம்.
மயங்கிடு மிருளா யிற்று
வருந்திரி தோஷத் தாலும்
வியந்திட மேவி நிற்கும்
விரையவே மருந்து தானும்
தயங்கிட கிரிகை செய்யுந்
தானது கூற லுற்றேன்! 220

கண்ணில் இருள் படிந்துவிடுதல், வாத, பித்த தோடங்கள் திரிந்து ஏற்படும் தோடக்குற்றத்தினாலும் பரந்து நிற்கும் நோயை மருந்தினால் குணமாக்கும் முறையைக் கூறப் போகிறேன்.

இந்துவை ஏற்ற வண்ணம்
இயல்பிது நயனங் கண்டால்
உந்திய ஒளியி னுள்ளே
உன்முகம் விளங்கத் தோன்றில்

அந்தவா ளொளியே யாகில்
தனினா யிவ்வா றென்று
செந்தமிழ் புலவோர் தங்கள்
தெரிந்திது செப்பி னானே! 221

சந்திரனைப் போன்று கண் வெண்மையாயிருத்தல், அவ்வொளியில் உன் ஒளி பொருந்திய முகம்தோன்றல் ஆகியவையே நல்ல குறிகுணங்கள் என்று புலவர் கூறியுள்ளனர்.

வெள்ளையிற் சிவப்புத் தோன்றி
விளங்குநற் படிகம் போன்று
தெள்ளிய சோதி தன்னில்
சிறந்தரி வண்ண மாகி
உள்ளொளி பெத்து மங்கே
உன்முகம் விளங்கத் தோன்றில்
ஒள்ளிய நயன மாகும்
மொப்பியங் கண்டி டாயே! 222

வெள்ளையாகத் தோன்றிய பாவையில் சிவப்பாதல், படிகம் போன்று தெளிவான ஒளியில் சிவப்பு வண்ணமாதல், அந்த ஒளியில் உன் முகமானது தெளிவாகத் தோன்றிடில் நல்ல கண் என்று அறிந்து கொள்ளலாம்.

தெளிவுற ஒளிவாய் நிற்கும்
திங்களு முப்ப தென்றில்
ஒளியுறப் புகைந்து சற்றே
ஒதுங்கிடும் நாற்பத் தஞ்சில்
வெளியுறப் புகைந்து காட்டும்
மேவிய ஐம்பத் தேழில்
வழிவிரு மருளுங் கண்ணாம்
மாண்டது நூற தாமே! 223

முப்பது வயதில் கண்ணில் ஒளி அதிகமாயிருக்கும். நாற்பத்தைந்து வயதில் கண் சற்று புகைந்திருப்பது போன்று காணும். ஐம்பத்தேழில் கண்கள் ஒளியிழந்து புகைந்திருக்கும். நூறு வயதில் கண்கள் ஒளியை இழக்கும்.

கடுகிய வெயிலி னாலும்
கனத்தடி கடுகை யாலும்
படிஎழு கூர்மை யாலும்
பாத்திமை நோக்கில் நோயே! 224

கடுமையான வெயிலில் நடத்தல், கண்ணில் அடிபடுதல் கூர்மையான பொருட்களால் குத்துப்படுதல் ஆகியவை கண்ணோயின் காரணங்கள்.

மன்றிடந் தன்னி னாலும்
மாதர்தன் மாய்கை யாலும்
கண்மலஞ் செறிகை யாலும்
கவுந்திமை பார்வை யாலும்
தனமிகக் கெடுகை யாலும்
தணிவிலா நடை யினாலும்
சினமிகக் கொட்டத் தாலும்
செறித்திடும் நோக்குள் நோயே! 225

இடங்களின் (சூழ்நிலையின்) தன்மையினாலும் பெண் களுடன் ஏற்படும் அதிகமான உறவினாலும் பீளை தள்ளலாலும் அதிகமாக படித்தல் போன்ற இமைகளின் செய்கையாலும், செல்வம் குறைவுபடுதலாலும் ஓய்வில்லாத நடையினாலும் கோபம் அதிகமாதலாலும் கண்ணோய் வரும்.

கருமணி தன்னில் நோய்கள்
கலந்திடும் நாற்பத் தஞ்சில்
மருவிய வெள்ளை தன்னில்
மருண்டிடு மிருப தென்கப்
பெருகவே இமையில் நிற்கும்
பேர்பதி நாற்ப தாகும்
பரவுமா கடையில் நிற்கும்
பதினைஞ்சு தோஷங் காணே! 226

கண்ணில் கருமணியில் தோன்றும் நோய்கள் நாற்பத்தைந்து; வெள்ளைப் பகுதியில் தோன்றுபவை இருபதாகும். இமையில்

வருபவை நாற்பதாகும். கடைக்கண்ணில் தோன்றுபவை பதினைந்தாகும்.

சேரவே தொண்ணூற் றாறு
திறந்திற மாக நிற்கும்
மாருவில் நாற்பத் தஞ்சில்
மாகிய மிருப தென்கச்
சீரிய பயித்தியஞ் சேர
சிறந்தவை முப்பத் தொன்றும்
பேர்பெறு நயன ரோகம்
போய்விடும் நீதான் பாரே! 227

தொண்ணூற்றாறு நோய்களும் அவ்வவற்றின் திறம்படியே அவை அவை தத்தம் குறிகுணங்களைப் பெற்றிருக்கும். நாற்பத்தைந்தில் இருபது நோய்களும், பித்தத்தினால் வரும் முப்பத்தொரு நோய்களும், நயன நோய்களில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவையாகும்.

ஒருபொழு திடும ருந்து
உகந்தந்தி கால மாகு
மிருபொழு தெழுந்து நோக்கி
லிருளற்று ரோகம் வாரா
மருளுறு காலத் திட்டு
மறந்தந்திக் கிடாயாகில்
வரிபரந் திருந்த கண்ணி
வருமிடை தீரா தென்றே! 228

மருந்திடும் காலம் ஒரு நேரமாயின் அது அந்திக் காலமாயின் சிறப்பானது. இரண்டு பொழுதாக இருப்பின் இருள் நீங்கி நோய் வராது. மற்ற காலத்தில் எடுத்துக் கொண்டு மாலையில் கொடுக்காவிட்டால் இருளும் நீங்காது; நோயும் தீராது.

பாதமே கல்லி லூற்று
பலகாலு முறவே தேய்த்து

சேதமே பண்ணி யிங்கன்
செறியநெய் பூசு மாகில்
சீதமே விழியி லுற்றுச்
சிறந்தொளி விளங்கு மென்று
வேதமே உரைக்கும் கண்டாய்
மெய்யிது வாக வென்றே! 229

நடக்கும்போது கல்லில் பலமுறை இடித்துத் துன்பப் படுவதால், வலித்து அழிதல் ஏற்பட்ட அப்பாதத்தில் எண்ணெயைப் பூச கண் குளிர்ச்சியடைந்து ஒளிபெற்று விளங்கும் என்று வேதம் கூறியுள்ளது. இதில் சற்றும் ஐயமில்லை.

உண்டுகை துளிமிழி முகத்தில் நீரேற்றி
கண்டிடு தியமு கருது மஞ்சனம்
விண்டிட விரவி தெந்த சுத்திசெய்
பண்டுறு கண்ணினுக் கமுத மாகுமே! 230

சாப்பிட்டு முடித்து முகத்தில் நீரினைத் தெளித்துக் கொண்டும் கண்ணில் மையினைத் தீட்டியும், கண்களைச் சுத்தம் செய்து கொள்வது கண்ணிற்கு அமுதமாகும்.

அஞ்சனாதி கவிப்படி

அஞ்சனக்கல் முட்டை யோடு
அரிசி சங்கு திப்பிலி
விஞ்சுகின்ற தலை யினோடு
வியன்தான சந்த னமே
தொஞ்ச வேயரைத் துண்டை
செய்து கண்ணி லிடில்
பஞ்சுபோல் பறந்து போகும்
படல மான பலவுமே! 231

அஞ்சனக்கல், முட்டையின் ஓடு, அரிசி, சங்கு, திப்பிலி, அண்ட ஓடு, சந்தனம் ஆகியவற்றை நன்கு அரைத்துக் கண்ணில் மையாக இட கண்ணில் வரும் படலங்கள் தீரும்.

வெண்காரக் குழம்பு

கடனுரை அரிதாரம் போலே
உதிர்ந்த மதுரம் வெண்காரம்
அடல்மிகு கடுக்காய் துரிசிதுத்தம்
ஆன மனோசிலை திப்பிலியும்
பொடியது செய்து வைத்து
போத எலுமிச்சம் சாறுவிட்டு
திடமுடன் மூன்று நாளரைத்து
கலப்பிரஞ் செய்துண்டை குழம்பாமே! 232

கடல் நுரை, அரிதாரம், அதிமதுரம், வெண்காரம், கடுக்காய், துரிசு, துத்தம், மனோசிலை, திப்பிலி ஆகியவற்றைச் சமமாக எடுத்து எலுமிச்சம்சாறு விட்டு மூன்று நாளரைத்து குழம்பாக்கி வைத்துக் கொள்ளவும்.

ஆன குழம்பு பசுவின்நெய்
அதனில் தேய்த்து வைத்திடவும்
பான உண்டான குமரிமடல்
பருத்திச் சாறு முலைப்பாலில்
தேனே மொழியாய் தேய்த்திடுகில்
திமிரங் காசம் படலமுளை
ஆன கண்ணில் தொண்ணூற்
றாறு வியாதியும் மறைந்திடுமே! 233

பசுநெய்யில் குழம்பைத் தேய்த்துக் கொடுக்கவும். குமரிமடல், பருத்திச்சாறு, தாய்ப்பாலில் சேர்த்து இக்குழம்பைக் கலந்து தேய்க்க கண்ணில் வரும் திமிரம். காசம், படலம், முளை, கண்ணில் தோன்றும் தொண்ணூற்றாறு வகை நோய்கள் ஆகியவை தீரும்.

இழி கண்ணுக்கு*

கரிய தாக்க சகசகயின்
கடையுற்று சோதியது வாழ்வாய்

* பாடல் தெளிவில்லை.

மருவார் வெண்ணெய் மேலோடி
மருவுஞ் சென்னூல் இப்பாய்
உருவாய் வெவிசனத் திரண்ட
செவ்வேன் சூரிகொடு தன்னில்
வெருவாய் வந்தந் தன்னில்
வெளிச்சை கொண்டே உரியாயே! 234

மேற்கூறிய மருந்தை இழி கண்ணுக்குப் போட கண்ணானது ஒளி பெறும். வெண்ணெயானது மேலே திரண்டிருப்பது போல் ஒளி மிகுந்து தோன்றும்.

வெளிதசை கொண்டே வுரைத்தற்பின்
வினவுங் கிரிகை கொள்ளுமினி
தெளியும் படியே நெய்கொண்டு
தியங்க யேற்றி தாளொழிக்கி
புளியந் துளிரும் வெள்ளையாய்
பூலா வேரில் புறந்தோலும்
தெளியச் சீவி முலைப்பாலில்
சேர நறுக்கி உழக்காயே! 235

கண்ணில் தசை அதிகமாகி இருப்பின் நெய்யைக் கொண்டு சிகிச்சை செய்தல் வேண்டும். புளியந்துளிரையும் வெண்மையான பூலா வேரின் வெளிப்பட்டையை தோலை நீக்கி தாய்ப்பால் சேர்த்தரைத்து 325 மி.லி. எடுத்துப் பயன்படுத்த தசை நீங்கும்.

இந்துவை யொத்த வண்ண
மியலது நயனங் கண்டாய்
உன்னியே ஒளியி னுள்ளே
உன்முகம் விளங்கத் தோன்றில்
அத்தியே ஒளியே யாகும்
அதனில்நோ யில்லை என்று
செந்தமிழ் உமையாள் கேட்கில்
சிவனவ னருளிச் செய்தான்! 236

கண்ணானது நிலாவைப் போல் இருந்தாலும் நம் முகமானது அதில் தெரிந்தாலும் ஒளிமிக்குள்ள கண்ணில் நோயில்லை என்று சிவபெருமான் பார்வதிக்கு அருள் செய்து கற்றுக் கொடுத்துள்ளார். தெளிவான கண்ணில் நோயில்லை என்பதாம்.

சேரவை தொண்ணூற் றாறும்
திறந்திற மாகி நிற்கு
மாறவே நாற்பத் தஞ்சின்
மரையாம் இருப தென்க
சிராய் பயித்திய மோடு
சிறந்தநோய் முப்ப தொன்று
மோரபேர் நயன ரோகம்
பேணி முன்னுரை க்கும்வாறே! 237

அதன்படி கண்ணில் தோன்றும் தொண்ணூற்றாறு நோய்களும் அதனதன் திறம்படி தோன்றும். வாத நோய்கள் நாற்பத்தைந்தும் பித்த நோய்கள் முப்பத்தொன்றும் கபநோய்கள் இருபதுமாகும்.

நெற்றியும் நெஞ்சு மாகும்
நெரிய கன்னத்தி னோடு
மற்றிறக் கண்ட முச்சில்
மருவிவிட் டெண்ணெய் பூசி
உற்றிடு ஒடக் காய்ச்சி
ஒகந்துநி செய்வ தென்க
உற்றுநி நசியந் தன்னை
உகந்துடன் விட்டி டாயே! 238

நெற்றி, நெஞ்சு, கன்னம், உச்சி ஆகிய உறுப்புகளில் எண்ணெயை நசியமாகச் செய்துவிட கண் நோய்கள் நீங்கும்.

சொன்ன துரிசி பன்னி ரண்டாம்
துலங்கும் தலையோடு நான்காகும்
இன்னங் கடனுரை மூன்றுடனே
எழிலார் சங்கு மிரண்டாகு

மன்னுங் கவடி தானொன்று
மகிழாய் எலுமிச்சஞ் சாற்ற ரைத்து
அன்ன கோப முதல்தொண்ணூற்
றாறும் வியாதி அகன்றிடுமே! 239

துரிசு பன்னிரண்டு பங்கு, மண்டையோடு நான்கு பங்கு, கடல்நுரை மூன்று பங்கு, சங்கு இரண்டு பங்கு, பலகரை ஒரு பங்கு எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றினை ஊற்றி அரைத்துப் பயன்படுத்தி அன்னகோபம் முதல் தொண்ணூற்று நோய்களும் தீரும்.

பிரிதுத்தக் குழம்பு

செப்பார் திரிகடுகு திரிபலை துத்தம்
சேரத் துரிசி தாமரை அரிசி
ஒப்பார் விழால் வெள்ளி லோத்திரம்
உகந்த பச்சைக் கற்பூரம்
இப்பா லஞ்சன நிறங்கஞ்சனம்
ஏற்ற நீரா லரைத் துண்டை
துப்பார் தேனில் தேய்த்திடுகில்
சொல்லுங் கண்ணோய்ப் போம்வகையே! 240

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், துத்தம், துரிசு, தாமரை அரிசி, விழலரிசி, வெள்ளிலோத்திரம், பச்சைக் கற்பூரம், அனைத்தையும் தண்ணீரால் அரைத்துத் தேனில் உரைத்துப் போட கண்ணோய்கள் அனைத்தும் தீரும்.

போதி லூத்த அரவிண்ணாய்
என்னும் மாங்கிஷ மறையுங்கண்
தாதுவாம் புளியம் பூவின்
சாற்றா லெழுதுகண் சத்திருக்கில்
ஓதும் வெற்றிலைச் சாற்றேயாம்
உரத்த கண்ணில் புளியிலையாம்
காதுங் கண்ணோய் பலவுக்கும்
காடி தெளிவே யாகுமென்றே! 241

கண்ணில் ஊற்ற கண்ணில் சதை பற்றுதல் என்னும் நோய் நீங்கும். புளியம்பூச்சாற்றால் உரைத்து எழுத கண் சதை நீங்கும். வெற்றிலைச் சாற்றால் உரைத்துக் கொடுக்கவும், புளியிலைச் சாற்றில் உரைத்துக் கொடுக்கவும், குணமாகும். காடியில் இழைத்துக் கொடுக்க கண்ணோய்கள் பலவும் குணமாகும்.

சங்கரனாருண்டை

சங்கு நாபி மனோசிலையும்
தனிச்ச தேற்றாங் கற்பூரம்
அங்க நாகன்கல பிதிரோசனை
ஆனபடிகம் வெள்ளிலோத்திரம்
துங்க மதுரங் கடல்நுரை
துரிசி துத்தம் காவிமண்
மங்கெலு மிச்சம் சாறரைத்து
இடுகில் படலம் தொண்ணூற்றாறுடன் போமே! 242

சங்கு, நாபி, மனோசிலை, தேற்றான், கற்பூரம், நாகம், பீதிரோகணி, படிகாரம், வெள்ளிலோத்திரம், அதிமதுரம், கடல்நுரை, துரிசு, துத்தம், காவிமண் ஆகியவற்றை அரைத்து எலுமிச்சம் சாற்றினால் அரைத்து உருண்டையாகச் செய்து இழைத்துப் போட கண்ணில் வரும்படலம், தொண்ணூற்றாறு நோய்கள் தீரும்.

பளிங்காதி உருண்டை

சந்தனம் பசுவின் நெய்யும்
தனிமனோ சிலையுஞ் சங்கும்
முந்தநற் பளிங்கு இந்து
மிளகுடன் னாகக்கல்
பந்தமாம் பனையின் மட்டைச்
சாறுடன் முலைப்பால் தன்னால்
அந்தமாய் அரைத்துண்டை செய்திடில்
அகலு மனைத்திங் கண்ணோயே! 243

சந்தனம், பசுநெய், மனோசிலை, சங்கு, படிகாரம், இந்து, மிளகு, நாகக்கல் ஆகியவற்றை எடுத்து பனைமட்டைச்சாறு, தாய்ப்பால் ஊற்றி அரைத்து உருண்டை செய்து இழைத்துக் கண்ணில் விட கண்ணோய் தீரும்.

அஞ்சனாதிக் குளிகை

அஞ்சனக்கல் முட்டையோடு திப்பிலி
விஞ்சுகின்ற தலையோடு வியந்தான் சந்தனம்
தோஞ்சவே அரைத்துண்டை செய்து கண்ணிலிட
பஞ்சுபோலப் பறந்துபோகும் பலமான பலவுமே! 244

அஞ்சனக்கல், முட்டையோடு, திப்பிலி, மண்டையோடு, சந்தனம் ஆகியவற்றை எடுத்தரைத்து உருண்டையாகச் செய்து இழைத்துக் கண்ணில் விட கண்ணோய்கள் நீங்கும்.

இரதாதிக் குளிகை

வெய்ய இரதம் ஒன்றாகும்
வெள்ளைக் குன்றி ரெண்டுடனே
துய்ய வெண்கார மூனும்
துலங்கும் சாரணை வேர்நாலு
அய்ய துரிசி அஞ்சுடனே
ஆன எலுமிச்சம்சாற் றரைத்து
பையக் கண்ணி லிடுவீராய்
படலம் தொண்ணூற் றாறும் போமே! 245

இரதம் ஒரு பங்கு, வெள்ளைக் குன்றி இரண்டு பங்கு, வெண்காரம் மூன்று பங்கு, சாரணைவேர் நான்கு பங்கு, துரிசு ஐந்து பங்கு எடுத்து எலுமிச்சம்பழச் சாறூற்றி அரைத்து மெதுவாகக் கண்ணில் விட படலம் மற்றும் தொண்ணூற்றாறு வகை நோய்கள் நீங்கும்.

பச்சை உருண்டை

வெள்ளைக் காக்கணாம் வேரொன்று
வெண்குன்றி தானி ரண்டும்

பள்ளச் சாரணை வேர்மூனும்
பரவு மஞ்சள் நாலுடனே
உள்ள துத்த மஞ்சாகும்
உகந்த துரிசி ஆறாகும்
வெள்ளெலும்பு பளிங்கு ஏழுடனே
வேண்டும் எலுமிச்சம் சாற்றரைத்து
மேவு முலைப்பாலில் தேய்த்திடுமே! 246

வெள்ளைக் காக்கணம் வேர் ஒரு பங்கு, வெண்குன்றி இரண்டு பங்கு, சாரணைவேர் மூன்று பங்கு, மஞ்சள் நான்கு பங்கு, துத்தம் ஐந்து பங்கு, துரிசு ஆறு பங்கு, வெள்ளையாக இருக்கும் படிகாரம் ஏழுபங்கு எடுத்து எலுமிச்சம் சாறூற்றி அரைத்து உருண்டையாகச் செய்து தாய்ப்பாலில் இழைத்துக் கொள்ளவும்.

மேவு பலபல கண்ணோவும்
விரைவி லேகும் தேனிலிட
பாவும் படலந் தொண்ணூறும்
பலமுளை தானு மிமைத் தடிப்பும்
தூவும் புழுமெச்சல் பிரிசல்
சல மெத்த விழு
வதுவு மாகும் பச்சை உண்டை
இதுயென் றேபொய் சொல்லுவதே! 247

உருண்டையைத் தேனில் இழைத்துக் கொடுக்க படலம், தொண்ணூறும், முளைதடிப்பு, இமைத் தடிப்பு, புழுமேய்ச்சல், பிரிசல், சீழ்பிடித்தல் ஆகியவை குணமாகும்.

அரிதாரக் குளிகை

கடனுரை மிளகு சினக்கார
மத்தித்த மதுரம் வெண்காரம்
அடல்மிகு கடுக்காய் துரிசிதுத்தம்
ஆன மனோசிலை அரிதாரம்
பொடியது திப்பிலி செப்பிலிட்டு
போத எலுமிச்சம் சாறுவிட்டு

திடமுடன் மூனுநா ளரைத்துச்
செய்த உருண்டை குழம்பாமே! 248

கடல்நுரை, மிளகு, சீனாக்காரம், அதிமதுரம், வெண்காரம், கடுக்காய், துருசு, துத்தம், மனோசிலை, அரிதாரம், திப்பிலி ஆகியவற்றைச் செப்பில் போட்டு எலுமிச்சம் சாறூற்றி மூன்று நாளரைத்து உருண்டையாகச் செய்து கொள்ளவும்.

சங்கு சுக்கொடு துய்யதிப்பிலித்
தாரமோ டதி மதுரம்
புங்கும் வித்தோடு பிதரோகணி
கொடிய துத்த மனோசிலை
அங்க னுப்பது சாதிபத்திரிச்
சாறு தேனோட ளாவியே
கங்கு பற்றிய கண்ணிபாடு
காச மானது நாசமே! 249

சங்கு, சுக்கு, திப்பிலி, அரிதாரம், அதிமதுரம், புங்கம் விதை, பீதரோகணி, துத்தம், மனோசிலை ஆகியவற்றை எடுத்துச் சாதிபத்திரிச் சாற்றில் அரைத்துத் தேனில் இழைத்துக் கண்ணில் ஊற்ற காசம் தீரும்.

துரிசுக் குளிகை

துரிசி சங்கு தலையோடு
சொல்லும் பீத ரோகணியும்
அரிசி ஓரிலைத் தாமரையும்
ஆன வெள்ளைக் காக்கணான்
பரிச பன்றிக் கொம்புடனே
பச்சை வளையல் இதெல்லாம்
தரிச தேசி பழச்சாற்றில்
தானே மூன்று நாளரையே! 250

துரிசு, சங்கு, மண்டையோடு, பீதரோகணி, ஓரிலைத் தாமரை, வெள்ளைக்காக்கணம், பன்றி மோந்தைக்கிழங்கு,

திருநீற்றுப் பச்சை, வளையலுப்பு ஆகியவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாளரைத்துக் கொள்ளவும்.

அரைச்ச மருந்து கவுறுகொண்டு
ஆன புளியிலைச் சாற்றிலிட
உரைத்த குந்தம் கண்பிரிச்சல்
ஒடும் பூவும் நிமைதடிப்பும்
பருத்தி சிறுபீளைச் சாற்றிலிட
பன்றும் அமரஞ் சாரணையாம்
நிரைத்த புகைச்சல் கையாந்தகரை
நீடுங்கண்ணோய் முலைப்பால் தண்ணீரே! 251

அரைத்த விழுதைக் கலிக்க மாத்திரைகளாகச் செய்து புளியிலைச் சாற்றில் இழைத்துக் கொடுக்க குந்தம், கண் புகைச்சல், கண்ணில் பூ விழுதல், இமைத்தடிப்பு ஆகியவை தீரும். பருத்திச்சாற்றிலும், சிறுபீளைச் சாற்றிலும் இழைத்துக் கொடுக்க கண்ணில் அமரம், சாரணை தீரும். கையாந்தகரைச் சாற்றில் கொடுக்க புகைச்சலும், தாய்ப்பால், தண்ணீரில் இழைத்துக் கலிக்கமிட கண்ணோய்கள் பலவும் தீரும்.

மூக்குநீர் பாய்ச்சல் - குறிகுணம்

கண்டமேல் முகங்கன் காது
காகத்து நாவுரவ தேபோல்
துண்டமே தும்ம லுண்டாய்
சொறிந்துதான் சலமும் வீழ்ந்து
மண்டையுங் கனத்து நொந்து
வலியுமே மிகவே யாகில்
பண்டு தான்மூக் குநீர்ப்
பாச்ச லென்றிருப னென்றும்! 252

கழுத்தின் மேல் பகுதியில் முகம், கண், காது இவை காகத்தின் நாக்கு போல் சிவப்பாதல், தும்மல் உண்டாதல், அப்போது தண்ணீர் கொட்டுதல், தலை கனமாதல், வலித்தல்

ஆகிய குறிகுணங்கள் ஏற்படின் அது மூக்கு நீர்ப்பாய்ச்சல் என்றும் அது இருபதென்றும் கூறப்படும்.

நிலப்பனைக் கிழங்குஞ் சாறும்
நிலவள்ளிக் கிழங்குஞ் சாறும்
நருக்கனு நெரிஞ்சில் வேரும்
நரண்ட தூதுவளை நன்முருங்கைப் பூவின்
நல்ல முற்றல் வெள்ளரிக்காய்
தண்ணீர் நெருக்குஞ் சிற்றாமுட்டி
கீழாநெல்லி சிறுகீரைப்
பால வெருக்கஞ் சாறு! 253

நிலப்பனைக் கிழங்குச்சாறு, நிலவள்ளிக் கிழங்குச் சாறுடன், நெருஞ்சில் வேர், தூதுவளை, முருங்கைப் பூ, முற்றிய வெள்ளரிக்காய், சிற்றாமுட்டி, கீழாநெல்லி, சிறுகீரை, எருக்கந்துளிர் இவற்றின் சாறுகளையும் உடன் சேர்க்க.

காட்டு மல்லியும் பூனைக்காலி
விரையும் சேரே வொவ்வொன்றுநூற்
பலமிடித்து பாலுங்கூட்டி பின்பதக்குத்
தண்ணீர் மதியாரி கொள்ளும்
இப்படியே மொந்தன் வாழைக்
கிருநாழித் தண்ணீர் கொள்ளே! 254

காட்டுமல்லிகை, பூனைக்காலிவிதை இவற்றை வகைக்கு 3500 கி. எடுத்து இடித்துப் பாலையும் 10.7 லி. தண்ணீரையும் சேர்க்கவும். மொந்தன் வாழையை எடுத்து 2.6 லி. தண்ணீருடன் சேர்த்துக் கொள்ளவும்.

கருப்பஞ் சாறு நாலுபடி
கனக படிஞ்சி முந்திரிகை
பெருத்த ஈஞ்சு விலாமிச்சம்
இருவேலி தாமரை முல்லை
விருத்த முத்தம் நன்னாரி
முருகு சீதேவி கடைச்சரக்கு

இருத்து மேல லவங்கம்
இனிய மதுரம் கோஷ்டமுடன்! 255

கருப்பஞ்சாறு 5.2 லி., முந்திரிகை, ஈஞ்சு, விலாமிச்சம், வெட்டிவேர், தாமரை, முல்லை, கோரைக்கிழங்கு, நன்னாரி, சீதேவி, செங்கழுநீர்க் கிழங்கு, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோஷ்டம்,

கற்கடக சிங்கி இந்துப்பு
அசமோதகம் வேர்க்கொம் புடனே
திப்பிலி சீரகம் கருஞ்சீரகம்
கிராம்பு சாதிக்காய் ஏலம்
தக்கவ சுவாசி நாகப்பூ
சாத்திர வேதி கடுகுநல்
வக்க தாணி செம்பகப்பூ
வரிய தற்கோலம் மஞ்சளிவை! 256

கற்கடகசிங்கி, இந்துப்பு, அசமோதகம், சுக்கு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், கிராம்பு, சாதிக்காய், ஏலம், வசுவாசி, நாகப்பூ, சாத்திரவேதி, கடுகு, தான்றிக்காய், செண்பகப்பூ, தக்கோலம், மஞ்சள் ஆகியவையும்,

மஞ்சிட்டி பச்சிலை தக்கோலம்
மருவு மோரொன் றிருகழஞ்சு
மிஞ்சிட்டப் பசுப்பா லிட்டு
விரைய வரைத்துக் கலக்கியது
கொஞ்சி வடித்து மேல்பூசி
கொள்ளிருள்ளங் கொடிய பித்தம்
மிஞ்சிட்ட பாண்டு காமாலை
மிகையா ரோகம் போன்றிடுமே! 257

மஞ்சிட்டி, திருநீற்றுப்பச்சிலை, தக்கோலம் ஆகிய வற்றையும் வகைக்கு 10 கி., எடுத்துப் பசும்பால் சேர்த்தரைத்துக் கலந்து காய்ச்சி வடித்து மேலே பூசிக் கொள்ளவும். அவ்வாறு செய்ய பித்தம், பாண்டு, காமாலை ஆகிய நோய்கள் தீரும்.

நசியம்

சாரணைக் கிழங்கு இந்துப்பு சகாமிளகு
சீனிமுறிய நெய்தன்னில் கொண்டிடு
முலைப்பா லொக்க விறதா
நைய தட்டி விடுவது
மூக்கில் நசியம்சிறிய
முத்தத்துடன் அடைப்பு போமே! 258

சாரணக்கிழங்கு, இந்துப்பு, மிளகு, சீனி ஆகியவற்றைப் பொடித்துச் சேர்த்து நெய்யையும் கலந்து கொள்ளவும். தாய்ப்பாலைக் கலந்து நசியமாக மூக்கில் ஓரிரு துளிகள் விட மூக்கிலுள்ள அடைப்பு நீங்கும்.

சிற்றா முட்டி சிறுகீரை
சீந்தில் நில வேம்பு
முத்த முடன்தூ துவளை
தேட அமுக்குரா உத்தம்
ஓரிதழ் தமக்கு தும்ம
ஒண சிறிய விட்டு
பத்தி னோடு நன்னாரி
பத்துப் பல மொன்றே! 259

சிற்றாமுட்டி, சிறுகீரை, சீந்தில், நிலவேம்பு, கோரைக் கிழங்கு, தூதுவளை, அமுக்குரா, ஓரிதழ்த்தாமரை, உத்தமதாளி, நன்னாரி ஆகியவற்றை வகைக்கு 35 கி. எடுக்கவும்.

பத்து மருந்தோ ரொன்று
பலமா யிடித்துப் பாங்குடனே
ஆறுபடி தண்ணீர் காய்ச்சி
உற்றபால் நாழி விட்டு
உரிய நெய் உள்ளி
நல்லெண்ணெய் ஒக்க கூட்டே! 260

மேற்சொன்ன மூலிகைகளையும் மருந்துகளையுமிடித்து 7.8 லி., தண்ணீர் ஊற்றிக் காய்ச்சி வடிகட்டி, 1.3 லி. பாலை

உடன் சேர்த்து நெய், உள்ளி, நல்லெண்ணெய் ஆகியவற்றை வகைக்கு 1.3 லி. சேர்த்துக் கொள்ளவும்.

மற்ற கோஷ்ட மதுர
மிலவங்கம் நற்சிரகம் இந்துப்பு உள்
மருவுங் கருஞ்சி ரகம்
மிகுத்த திரிகடுகு யிவைகூட்டி
இருகழஞ்சுகொள் குணமாக வடித்து
நக்கமூக்கு நீர்பாய்ச்சல் போமே! 261

கோஷ்டம், அதிமதுரம், இலவங்கம், நற்சீரகம், இந்துப்பு, கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை வகைக்கு 10 கி. எடுத்துத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி வடித்துக் கொடுக்க மூக்கு நீர்பாய்ச்சல் தீரும்.

பீனசத்தின் குறிகுணம்

தலையும் வலித்து ஒருநாசிச்
சளியும் விழுந்து ஒருப்பட்டு
மலையு நாளேழு சென்றால்
வறண்டே யிறுகித் திரண்டுவிழும்
உலையும் மிகவும் நாற்றமதாய்
உண்டே கண்ணிர் விழ்ந்திடுமே
பிலமுஞ் சென்ற டைக்கி
பீனச மென்பார் பெரியோரே! 262

தலை வலித்தல், ஒருபக்க மூக்கில் சளி விழுந்து கொண்டேயிருத்தல், ஏழுநாட்கள் கழிந்த பிறகு சளியானது கட்டியாகி திரட்சியாகி விழுதல், நாற்றமதிகமாக இருத்தல், கண்ணீர் அதிகமாதல் ஆகிய குறிகுணங்களைக் கொண்டிருப்பது பீனசம் ஆகும்.

தலையுங் கனத்து வலித்திறுகிச்
சளிப்போல் மூக்கால் திரண்டுவிழும்
மலையு மொடுப்போ லொருக்காலு
மதிகப் படவே மாறாது

நிலையுங் கெடவே பரிகாரம்
நீதிப் படியே செய்துவரில்
துலையுஞ் சொன்னோம் பீனசமும்
சேருங் கபால வறட்சியுமே! 263

தலை பாரமாதல், வலித்தல், மூக்கில் சளியானது திரட்சியாகி கட்டியாகி விழுதல், அதிகமாய் விழுதல் ஆகிய குறிகுணங்களுக்கு சரியான சிகிச்சை செய்ய வேண்டும். அல்லாவிட்டால் கபால வறட்சியாகிவிடும்.

சீந்தில் வட்டுத் தூதுவளை
சிவனார் வேம்பு நிலவேம்பு
போந்த பண்ணி குறும்பனை
பொன்னாங் காணி நிலக்குமிழ்வேர்
சேந்தே தேவி அரவிந்தம்
சித்தோர் மல்லி பேராமல்லி
அயந்த முத்தக் காசுழக்கு
அதன்மேல் பால்விட் டுறுவதே! 264

சீந்தில், தூதுவளை, சிவனார்வேம்பு, நிலவேம்பு, குறும்பனை, பொன்னாங்காணி, நிலக்குமிழ் வேர், சீதேவி செங்கழுநீர், அரவிந்தம் எனும் தாமரை, சிற்றாமல்லி, பேராமல்லி, கோரைக்கிழங்கு ஆகியவற்றை வகைக்கு 325 கி. எடுத்து அதனுடன் பாலைச் சேர்த்து ஊற வைத்துக் கொள்ளவும்.

ஊறிக் காஞ்சி ரண்டாய்
உறவெந்து பிழிந்து வடித்து
ஆறிப் போவ ததின்முன்னே
அளந்து நறுநெய் நாழிவுரி
கூறிட் டளவே நல்லெண்ணெய்
குறையா தளவே ஒக்கவிட்டு
வேறிட் டிடித்து வேப்பந்தோல்
மிகாமல் சாறு முரிகூட்டே! 265

ஊறியவற்றை உலரச் செய்து மறுபடி ஊறவைத்து நன்கு ஊறிய பிறகு பிழிந்து பின் வடித்து அக்கலவையுடன் நெய், நல்லெண்ணெய் வகைக்கு 2.5 லி. சேர்த்துக் கொள்ளவும். வேப்பம்பட்டையை இடித்துச் சாறு பிழிந்து 675 மிலி. சேர்க்கவும்.

கூட்டிற் மிளகு திப்பிலியும்
கோஷ்ட மேல திமதுரம்
மோட்டு வசம்பு வெள்ளுளியு
முறுகற் கடக சிங்கிநெல்லி
வாட்டங் குன்றாமல் இருவேலி
மத்தக் கிராம்பு வசுவாசிக்
காட்டில் பயிலும் கிளியூறல்
கண்டிலது வெண்ணெ யதுகொள்ளே! 266

மிளகு, திப்பிலி, கோட்டம், ஏலம், அதிமதுரம், வசம்பு, வெள்ளுள்ளி, கற்கடகசிங்கி, நெல்லி, இருவேலி, கிராம்பு, வசுவாசி, கிளியூறல் பட்டை ஆகியவற்றை இடித்து கண்டில் வெண்ணெயுடன் மேற்கூறப்பட்ட கலவையில் சேர்த்துக் கொள்ளவும்.

கொள்ளே குல மோதகம்
குலவு பச்சிலை கச்சோலம்
தள்ளே கரிய சீரகமும்
நற்சீரகமுங் கொத்த மல்லித்
தள்ளா தொக்க குக்கிலோடு
சடைமாஞ்சில் சாறு ரோகணியும்
பிள்ளே கொள்ள வெந்துகொண்டு
போமே பறந்து பீனசமே! 267

கடுக்காய், பச்சிலை, கச்சோலம், கருஞ்சீரகம், நற்சீரகம், கொத்துமல்லி, குக்கில், சடாமாஞ்சில், கடுகுரோகணி ஆகிய வற்றையும் இடித்துப் போட்டு கலவையைக் காய்ச்சிவேக வைத்தெடுத்து உட்கொள்ள பீனசம் குணமாகும்.

பீனசத்திற்குப் புகை

இரதங் கெந்தகஞ் சாதிலிங்க
மின்னரி தார முஞ்சங்கு
முருகும் கிரிகும் பாசாணம்
எருவிற் வறளிப் பட்டிலிட்டு
சரமதி வேதிரி யாக்கித்
தறுகா நெய்தனில் கொளுத்தி
விரசம் பெறவே நாசிதனில்
விடவே பீனிசம் வேறுமே! 268

இரசம், கெந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், சங்கு, தீமுறுகற்பாடாணம் ஆகியவற்றைச் சேர்த்தரைத்துத் திரியாகத் திரட்டி நெய்யில் கொளுத்தி அப்புகையை மூக்கில் விட பீனசம் குணமாகும்.

உதட்டு வெடிப்புக்குக் கட்டு மருந்து

பசுவின் வெண்ணெய் மெழுகுடனே
பலுக்கக் காய்ச்சி கலப்புறத்தில்
நசிவெண் எருக்கம் பாலதுதான்
இலங்கா வெண்கலந் தான்கொண்டு
வசமாய் தேய்த்து சிமிளில்
வைத்து மருவத்திரம் பொறுக்கமட்டும்
வொசிவெ யில்லா உதட்டிலிட
ஓடும் வெடிப்பும் புழுவுமதே! 269

பசுவின் வெண்ணெயை மெழுகுடன் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ளவும். வெண்கலத்தின் பின்புறத்தில் தேய்த்து வெள்ளை எருக்கம்பாலை விட்டு சிமிளில் வைத்துக் கொள்ளவும். அதை உதட்டில் தேய்க்க வெடிப்பு தீரும்.

எண்ணெய்

பசுவின் நெய்தான் உழக்கோடே
பரிந்தா தண்டை வெற்றிலையுங்
கசிவே யில்லாச் சாறுழக்கு
கானிரு சீரகம் திரிபலையும்

எசவா மதுரம் மிளகரணை
என்னுங் கறுவா கிராம்பூவும்
வசுவாசி சாதிக் காய்மெழுகு
வகுத்து நெய்காஞ் சுதட்டிலிடே! 270

325 மி.லி. பசுநெய், ஆதண்டைச்சாறு, வெற்றிலைச்சாறு 325 மிலி., எடுக்க, நற்சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிமதுரம், மிளகரணை, கருவாப் பட்டை, கிராம்பு, சாதிபத்திரி, சாதிக்காய் ஆகிய சரக்குகளைப் போட்டு மெழுகு சேர்த்துக் காய்ச்சி அவ்வெண்ணெயை உதட்டில் தேய்க்க உதட்டு வெடிப்பு மாறும்.

பற்புழுவுக்கு

நார்த்தம் வேரை நேகரைத்து
நாளும் பூசும் நொந்தபல்லில்
திறத மாக வலியில்லா
தியரும் பல்லில் எண்ணெயிட
பூர்த்த வெயிலில் தானிருக்க
பொன்னே புழுவும் வெளியாகும்
திறத காதில் நெரிஞ்சில்வேர்
தீராக் கட்டுந் தீர்ந்திடுமே! 271

நாரத்தம் வேரை நன்கரைத்து வலியெடுக்கும் பல்லில் தினந்தோறும் பூச மாறும். எண்ணெயைப் பல்லில் தேய்த்து வெயிலில் இருக்க பல்லிலிருந்து புழு வெளியேறும். நெருஞ்சில் வேரை அரைத்துக் காதில் சில துளிகள் விட தீராத கட்டுகள் தீரும்.

பல்வலிக்கு

சிந்தில் கையாந்த கரை
செருப்படை விழி செம்முள்ளி
வாய்ந்த மல்லிகை சாணாக்கி
மருவு மிவையொரு நிறையாக

ஆய்ந்த சாணிக்குள் அரைத்துவைத்து
அடுப்பில் கும்பில் வேகவிட்டு
மாயற்றி ஒற்றப் பல்லடியில்
மருவும் வேதினை மாய்ந்திடுமே! 272

சீந்தில், கையாந்தகரை, செருப்படை, வீழி, செம்முள்ளி, மல்லிகை, சாணாக்கி (மயிர் மாணிக்கம்) ஆகியவற்றைச் சமமாக எடுத்து அரைத்து சாணிக்குள்ளே வைத்து அடுப்பிலுள்ள நெருப்பில் வேகவைத்து ஆறிய பின் எடுத்து பல்லின் அடியில் ஒற்ற வைத்தெடுக்க பல்வலி தீரும்.

பல் கருப்பு நீங்க

அரைப்பொடி பொன்மெ ழுகுசீனி
ஆன தான்றி கடுக்காயும்
கரைப்பத் தாக சமன்கொண்டு
காணாள் பல்லு தான்விளக்கி
உரைப்பேன் கொடுக்காய்ப் புளிபல்லில்
உகந்து தப்பிக் கூசினக்கால்
பார்ப்ப தான்முன் பொடிதானே
பல்லில் தூவக் கறுத்திடுமே! 273

அரைப்பொடி, பொன்மெழுகு, சீனி, தான்றி, கடுக்காய் ஆகியவற்றைச் சமமாக எடுத்துப் பல்லில் தேய்த்துக் கொள்ளவும். கொடுக்காய்ப் புளியைப் பல்லில் தேய்த்து மேற்சொன்ன பொடியைத் தூவ பல் கருப்பு நீங்கும்.

பல்லடி வாதத்துக்கு

வெள்வேல் பட்டை பலம்நூறு
மிகுத்த மஞ்சள் சுக்குடனே
களாவாய் வயிரவன் கருங்காலி
கனத்த மிளகு யிவையெல்லாம்
வளாவ தானி ரிருதூணி
மாறிப் பதக்காய்த் தான்காய்ச்சி
கொள்சேர் எண்ணெய் தோய்ப்பால்
கூடக் காய்ச்சி கொப்பளியே! 274

வெள்வேல்பட்டை 3500 கி., மஞ்சள், சுக்கு, கருங்காலி, மிளகு ஆகியவற்றை எடுத்து 43 லி. தண்ணீரில் போட்டு 10.7 லி.யாய்ச் சுருக்கிக் காய்ச்சி அதனுடன் 280 கி. நல்லெண்ணெயையும் சேர்த்துக் காய்ச்சி பல்லினைக் கொப்பளித்துக் கொள்ளவும்.

அவச்சாரம் திரி பலையும்
ஆன துவச்சி இந்துப்பும்
நவச்சார மஞ்சள் சிறுதேக்கு
நாடும் பெருங்காய மரமஞ்சள்
பவச்சார வசம்பு தேவதாரம்
பரிந்தே யொரொன் றரைப்பலமாய்
நவச்சாரத் தண்ணிக் குறுணிதனி
நன்றாய்க் காய்ச்சி கொப்பளியே! 275

நவச்சாரம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இந்துப்பு, மஞ்சள், சிறுதேக்கு, பெருங்காயம், மரமஞ்சள், வசம்பு, தேவதாரம் ஆகியவற்றை வகைக்கு 17½ கி. எடுத்து நவச்சாரத் தண்ணீர் 5.2 லி. ஊற்றிக் காய்ச்சி கொப்பளித்துக் கொள்ளவும்.

எண்ணெய்

வெள்வேலி முருங்கைப் புங்கதுதான்
வேறு வேறு பதின்பல
பெண்களவா மத்தி யொன்று
பதின்பலமாய் தூணி நீர்தனில்
உளவாய் கறுக்கத் தான்காய்ச்சி
உகந்த எண்ணெய் நாநாழி
வளவாய் தேங்காய்ப் பாலுடனே
மருவும் வெள்ளாட்டுப் பால்கூட்டே! 276

வெள்வேல், முருங்கை, புங்கு, அத்தி இவற்றை 3500 கி. எடுத்து 21.5 லி. தண்ணீரில் போட்டு நன்கு கறுக்கு மளவுக்குக் காய்ச்சி 5.2 லி. எண்ணெயையும் அதனுடன்

தேங்காயெண்ணெயையும் வெள்ளாட்டுப் பாலையும் சேர்த்துக் கொள்ளவும்.

கூட்டாய் கற்கந் திரிபலையும்
கோல மதுரந் தக்கோல
நாட்ட மேல மிலவங்கம்
நயந்த கொடுவேலி சிறுகடுகு
வாட்டும் விழாலும் பெருங்காயம்
மகிழ்ந்த பங்கம் பாளையது
நீட்டு சயிந்தந் தேவதாரம்
நிக்கும் மஞ்சள் சீரகமே! 277

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிமதுரம், தக்கோலம், ஏலம், இலவங்கம், கொடிவேலி, சிறுகடுகு, விழலரிசி, பெருங்காயம், பங்கம்பாளை, சயிந்தலவணம், தேவதாரம், மஞ்சள், சீரகம்,

பின்னு மத்தித் திப்பிலியும்
பெருத்த முத்தக் காசுடனே
மன்ன ரென்றும் அசமோதகம்
மருவ வோரொன் றரைப்பலமாய்
பின்னும் எண்ணெய் பதத்தில்
வடித்தெடுத் தேவாயில் கொப்பளிக்க
அன்ன நாக்குள் வேதினையும்
ஆனபல வேதினை அமத்திடுமே! 278

ஆனைத்திப்பிலி, கோரைக்கிழங்கு, அசமதாகம் இவற்றை வகைக்கு 17½ கி. எடுத்துப் பொடித்து மேற்சொன்ன கலவையில் போட்டுக் காய்ச்சி எண்ணெய் பதத்தில் வடித்து ஆறிய பின் கொப்பளிக்க பல்வலி தீரும்.

பொடுதலைத் தேங்காய்ப் பாலதுதான்
பொருந்த வோரொன்று முன்னாழி
கொடுவேலி வேலிவேர் சுக்குடனே
கோலத் திப்பிலி ரோகணியும்

நடுவா மாடா தோடைவேர்
நலத்த முத்தக் காசுநெல்லி
இடவே மிளகு கச்சோலம்
இலந்தை யடையு மிந்துப்பு! *279*

பொடுதலைச்சாறு, தேங்காய்ப்பால் இவற்றை வகைக்கு 3.9 லி., கொடிவேலிவேர், வெட்டிவேர், சுக்கு, திப்பிலி, கடுகுரோகணி, ஆடாதோடைவேர், கோரைக்கிழங்கு, நெல்லி, மிளகு, கச்சோலம், இலந்தை, இந்துப்பு,

வேப்பந் தோல்மர மஞ்சள்
மிக்கு குளவிந்தம் ஒரொன்று
நாற்பதாக் கழஞ்சு கொண்டு
தக்க எண்ணெய் நாழிஉரி
பொறுப்ப தான கசாயத்தில்
மிற ரைத்துப் பதத்தில்வடி
பூர்பட வாயில் கொப்பளிக்கப்
போகும் பல்லடி வாதமதே! *280*

வேப்பந்தோல், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள் ஆகியவற்றை வகைக்கு 200 கி. எடுக்க. எண்ணெய் 2 லி. எடுக்க. இச்சரக்குகளைக் குடிநீரால் அரைத்துக் கலவையில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து ஆறவைத்துக் கொப்பளிக்க பல்லடிவாதம் தீரும்.

எண்ணெய் நாழி பொடுதலையு
மிதற்கு நாழி யிதனோடே
வண்ணத் திரிபலை வெள்வேலும்
வருத்த மிவையோ பலமாக்கி
நன்றா யரைத்துப் பதத்தில்வடி
நாடும் வாயில் கொப்பளிக்கப்
புண்ணுஞ் சீழுங் கரகரப்பும்
போகும் பல்லில் சூலையுமே! *281*

எண்ணெய் 1.3 லி., பொடுதலைச் சாறு 1.3 லி., எடுக்க. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெள்வேல் இவற்றை

வகைக்கு 35 கி., எடுத்து அரைத்துக் கலவையில் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதனை வாயில் ஊற்றி கொப்பளிக்க பல்லில் புண், சீழ், சூலை ஆகியவை தீரும்.

வெள்வேல் இருபத்து நாற்பலமாம்
மிகுத்த முக்குறுணி நீரிலிட்டு
களவாய் மூன்று நாழியதாய்
கதிக்கக் காய்ச்சி கற்கமது
எனவே தான்காட் டுமஞ்சள்
இதங்குஞ் சதகுப் பைமதுரமும்
வளவ தேவ தாரமிந்து
வசம்பு பெருங்காயம் சாரணையே! 282

வெள்வேல் 840 கி., 15.6 லி. தண்ணீரிலிட்டு 3.9 லி.ராய்ச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும். காட்டு மஞ்சள், சதகுப்பை, அதிமதுரம், தேவதாரம், இந்துப்பு, வசம்பு, பெருங்காயம், சாரணை,

*அமுக்குராய் நறும்பிசின் அஷவறகம்**
ஆகு மிவையோர் கழஞ்சுகொண்டு
நமக்கே நாழி உரியெண்ணெய்
நாடுந் தேங்காய்ப் பால்மூன்று
திமிதப் பதத்தில் தான்வடித்துச்
சேர வாயில் கொப்பளிக்க
எமக்குத் தீருந் தகதத்தில்
எனினுஞ் சூலை வாய்வறுமே! 283

அமுக்குரா, நறும்பிசின் ஆகியவற்றை வகைக்கு 5 கி., எடுத்து இடித்து 2 லி., எண்ணெய், தேங்காய்ப்பால் 3.9 லி., எடுத்துக் கலந்து அதில் சேர்க்க. அடுப்பில் வைத்துக் காய்ச்சிய பக்குவத்தில் வடித்து ஆறியபிறகு வாய் கொப்பளிக்க சூலை வாயு தீரும்.

நாக்கில் கிரந்திக்கு

இச்சிலத்தி வேம்பு நாவல்
இதங்க ஆகாத பிலாவாறும்
வச்சக் கருவேல் மருக்காரை
மருவும் வெள்வேல் எருது எருக்கு
மெச்ச இவைகள் தோலிடாத்து
மேவுஞ் சுக்குக் கடுக்காயும்
இச்சி நீரில் கொப்பளிக்க
ஏகும் நாவில் கிராந்தியக்க! 284

வேம்பு, நாவல், கருவேல், மருக்காரை, வெள்வேல், எருக்கு ஆகியவற்றை எடுத்துத் தோலினை நீக்கிக் கொள்ளவும். சுக்கு, கடுக்காயையும் சேர்த்துக் குடிநீராக்கி ஆறியபின் வாய் கொப்பளிக்க நாக்கில் வரும் கிரந்தி தீரும்.

உண்ணாக்கு வளருதல்

சூரிய காந்த காய்தன்னைத்
தோவித்துப் பசுவின் மோர்தனில்
வாரிய மறுநாள் காலத்தால்
மறுக வரைத்துக் குடிப்பீராய்
பாரிய உண்ணாக் கதுதானும்
பாரு மெட்டு நாள்கொள்ள
அரிய உலகில் மானிடர்கள்
பொருந்தும் பத்திய மாய் நடவே! 285

சூரிய காந்தக்காயின் தோலை நீக்கி பசுமோரில் ஊறவைத்து மறுநாள் காலையில் அரைத்துக் குடிக்க உண்ணாக்கு வளருவது கட்டுப்படும். எட்டுநாள் அவ்வாறே செய்யவும்.

எழுஞாயிறு, படுஞாயிறு விஷத்துக்கு

இரதமொன்று துரிசி ரெண்டு
என்றும் வாளம் நாலாகும்
இரச மான தேசிப்பழம்
இட்டு மூன்று நாளரைத்து

உரசம் பரணி தனில்வைக்க
உகந்து இஞ்சி தனில்
இரசக் குழம்பு இட்டிடவே
எழுஞாயிறு பாம்பு ஏகிடுமே! 286

இரசம் ஒரு பங்கு, துரிசு இரண்டு பங்கு, வாளம் நான்கு பங்கு எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு மூன்று நாள் அரைத்துப் பரணில் வைக்க. பின் இஞ்சிச்சாற்றை இக் குழம்பில் சேர்த்துக் கண்ணுக்கு இட எழுஞாயிறு நீங்கும்.

நாயற்று வணங்கி வேர்தன்னை
நன்ற எருமை மோர்தன்னால்
தியறு அம்மி தனிலரைத்து
திதமாய் பிசைந்து கொடுத்திடவே
மேயும் எடுபடு விஷந்தானும்
ஏகு மென்றே இயம்பியபின்
போயு பிலுப்பைப் புண்ணாக்குப்
புகழ்சோ றரைத்து முழுங்கிடவே! 287

நாயற்று வணங்கி (நாயுருவி) வேரை எருமை மோரூற்றி அம்மியில் வைத்தரைத்து நன்கு குழப்பிக் கொடுத்திட படுஞாயிறு தீரும். இலுப்பைப் புண்ணாக்கும் சோற்றினையும் சேர்த்தரைத்து விழுங்கிட படுஞாயிறு எனும் விஷம் தீரும்.

அக்கரம் ஏழு வகை

அக்கர சோகி அக்கர காந்தி
அக்கரக் குண்டி என்றருள் வோங்கொள்
மிக்க கபாலி உதிரி குமரி
மேவுஞ் சோதி விழியு மாகும்
தக்க ஏழு வகைப்
புறப்புத் தான லதில்
பக்குவமான குணங்கை யானும்
பகர்ந்திடக் கேளும்பாற் பதியொன்றே! 288

சோகியக்கரம், காந்தியக்கரம், குண்டியக்கரம், கபாலியக்கரம், உதிரியக்கரம், குமரியக்கரம், வீழியக்கரம் ஆகிய ஏழுவகை அக்கரத்தின் குறி குணங்களைக் காண்போம்.

அக்கர சூலிகுணம்

அக்கர சூலி தலையது நோகும்
ஆன சுரமும் இடுப்புங் கடுக்கும்
ஒக்க நாவது வெள்ளையா யிருக்கும்
உயர நாக்கு வெள்ளாவி நாளும்
தக்க தொண்டை வெளுத்தி ரசமாய்
தானு முவாந்தி வெள்ளோக் காளம்
மிக்க தண்ணீர் தாக மதாகி
மேவு காமமே கறுத்திடு மென்றே! *289*

தலைவலி, காய்ச்சல், இடுப்புக் கடுப்பு, நாக்கில் வெள்ளைபடிதல், தொண்டை வெளுத்துப்போதல், நாக்கு வெள்ளாவி போல துர்நாற்றம் அடித்தல், வாந்தியாதல், வெள்ளோக்காளம், தண்ணீர்த்தாகம் அதிகமாதல் ஆகியவை அக்கரசூலியின் குறிகுணங்கள்.

சுரைக் கொழுந்தும் பசுவின் நெய்யும்
தொகுத்தே அரைத்தே குழம்பாக்கி
இரசக் குழம்பை யில்பொழுது
இயன்பாற் குமரி யாதி
பரிதமாக மிழுங்கி டவே
பணமா மகத்திப் பட்டையுடன்
உரைத்துப் பசுவின் நெய்
உகந்ததந்தம் தேய்த்திடவே! *290*

சுரைக்கொழுந்தையும் பசு நெய்யையும் சேர்த்தரைத்துக் குழம்பாக்கிக் கொள்ளவும். இதனை இரசக் குழம்புடன் சேர்த்து விழுங்கிடவும். அகத்திப்பட்டையுடன் நெய்யைச் சேர்த்தரைத்துப் பல்லில் தேய்த்து விடவும்.

அக்கரநீதி குணம்

நீதியென்று அக்க ரந்தான்
நின்று குளுந்து தலைவலித்துப்
போத சுரந்தான் வாய்கசந்து
பொருந்தும் நாக்கு சிகப்புவெள்ளை
மாதி மிகுத்த நெஞ்செரித்து
வாயும் வறண்டு தாகமதாய்
ஆதி அக்கர நீதியாகும்
ஆன குணங்கள் அதுவாமே! 291

நீதியக்கரத்தில், குளிர்ச்சியடைதல், தலைவலித்தல், காய்ச்சலடித்தல், வாயானது கசப்பாதல், நாக்கு சிவப்பாகவும், வெள்ளையாகவும் மாறுதல், நெஞ்செரிச்சலாதல், வாய் மிகுந்த வறட்சியடைந்து தாகமெடுத்தல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

கோவைச் சாறுஞ் சந்தனமுங்
கோலப் பூலாக் கொழுந்துடனே
மாவும் மோரிலைத் தாமரையு
மந்தமாம் சீரகம் ஏலரிசி
ஏவப் புகழும் செண்ப கப்பூ
எலுமிச்ச மிவை யதனால்
தாவக் குழப்பி மிழுங்கிடவே
தாகம் தீரும் தப்பாது! 292

கோவைச்சாறு, சந்தனம், பூலாக்கொழுந்து, ஓரிலைத் தாமரை, சீரகம், ஏலரிசி, செண்பகப்பூ ஆகியவற்றை எலுமிச்சம்பழச்சாற்றை ஊற்றி அரைத்து விழுங்கிட தாகம் தீர்ந்துவிடும்.

அக்கரசோதி (சோதி அக்கரக்) குணங்கள்

சொல்வாம் சொல்லு மிடுப்புத்
தலை வலிப்பும் நித்தனைக்
கால்நொந்து தாம நீக்கும்
நாக்குப் பல்ல மூக்காய்

நாற்குண வெதனால் பொன்னே
வெந்து தாக மதாய்
தீதில் வயறு தானெரியும்
இதற்கு மருந்து நிகழ்வோமோ! 293

இடுப்பும், தலையும் வலித்தல், கால்வலித்தல், நாக்கு, பல் அழுக்காதல், நாக்கு வெந்து தாகம் அதிகமாதல், வயிறு எரிதல் ஆகிய குறிகுணங்கள் அக்கர சோதியினுடையவை.

அதி மதுர மேலரிசி
ஆன இலவங்கப் பட்டையுடன்
விதமாம் செண்பகப் பூநாகம்
வில்லைக் குடுப்பைச் சிறுகீரை
இதமாய் காடி தனில்க ரைத்து
இலவங்க னெய்யில் விழுங்கிடவே
விதமாய் இதமாய் ஏகி டுங்காண்
விளங்கு மக்கர சோதியதே! 294

அதிமதுரம், ஏலம், இலவங்கப்பட்டை, செண்பகப்பூ, சிறுநாகப்பூ, வில்வம், கொடுப்பை, சிறுகீரை ஆகியவற்றைக் காடியில் அரைத்துக் கரைத்து நெய்யில் கலந்து விழுங்கிட அக்கரசோதி தீரும்.

அக்கரவீழியின் குணம்

அக்கர வீழி குணந்தானும்
விளங்க குளுந்து தலைநோவும்
தாமக கூச நாக்கதுதான்
தாழங் குருத்துத் தின்றாப்போல்
நேமி உதடு தான்கறுத்து
நெஞ்சே யெரித்துத் தாகம்
போமே யிரல் நொந்திருக்கும்
பொன்னே மருந்து புகலக்கேள்! 295

அக்கரவீழி எனும் வீழியக்கரத்தில் குளிர்ந்து போதல், தலைவலித்தல், நாக்கு கூசுதல், தாழையின் குருத்தைச்

சாப்பிட்டதுபோல் உதடு கறுத்துப் போதல், நெஞ்செரிதல், தாகம் தீர்தல், ஈரல் வலித்தல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

பொன்னாங் காணி சிறுகீரை
பொருத்து நன்னாரி இவைமுன்று
மின்னார் கோவை சந்தனமு
மணத்தக் காளிச் சாற்றரைத்து
என்னார் மதுரம் கூகை
ஏலம் இருசிரகம் கோரோசனையுடன்
நன்னா முலைப்பால் பனாவட்டு
நயந்த தேசிகனன்றை ளவிற்கொள்! 296

பொன்னாங்காணி, சிறுகீரை, நன்னாரி, கோவை, சந்தனம் ஆகியவற்றை எடுத்து மணத்தக்காளிச் சாறூற்றி அரைத்து அதிமதுரம், கூகை, ஏலம், நற்சீரகம், கருஞ்சீரகம், கோரோசனை ஆகியவற்றைச் சேர்த்து தாய்ப்பால், பனைவெல்லம் சேர்த்து எலுமிச்சங்காயளவு உட்கொள்ளவும்.

அக்கரக் குண்டியின் குணம்

குண்டி அக்கரக் குணம்சொல்வோம்
கூசிக் கடுக்கும் நாச்சிவக்கும்
மிண்டி வயிறும் நெஞ்செடுக்கு
மிரும லுண்டு மீரல்னோ
உண்டே தாகம் புளியிலைநெ
யுகந்த கருப்புக் கட்டியுடன்
கொண்டு குழைத்துத் தான்கொடுக்க
குண்டி அச்சிரங் குலைந்திடுமே! 297

பல்கூசுதல், நாக்கு கடுத்தல், நாக்கு சிவந்து போதல், வயிறு, நெஞ்சு வலித்தல், இருமல், தாகமெடுத்தல் ஆகியவை அக்கரக்குண்டியின் குறி குணங்கள். புளியிலையையும், நெய்யையும் சேர்த்துக் கருப்புக்கட்டியையும் கலந்து கொடுக்க குண்டி அக்கரம் தீரும்.

திரிபுரத் தானிலை கொண்டு
திரிந்த வரைத்து அடையாக்கி
வருந்தி ஏரண்ட எண்ணெய்விட்டு
மகிழ்ந்து காய்ச்சிக் கொடுப்பீராய்
அரிந்து பக்கம் நெஞ்சுதொண்டை
ஆன உச்சிக் குழலிலிட்டுப்
பரிந்த காசத் தனைகொள்ள
பாருங் குண்டி அக்கரமே! 298

திரிபுரத்தானிலையை (குப்பைமேனி) நன்கு அரைத்து அடையாகத் தட்டி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி 4 கி. அளவு கொடுக்க நெஞ்சு, தொண்டை, உச்சிக்குழலில் ஏற்படும் வலிகள் தீரும்.

அக்கரக் கபாலியின் குணம்

கபாலி அக்கரக் குணஞ்சொல்வோம்
கனக்கும் காயங் கடந்திருக்கும்
விபாலி அமர சாந்தோன்றும்
விண்விணென் தலை நோவாம்
விபாய நாக்கு வெந்தாப்போல்
உகந்த யீரல் வயிறுதோம
பின்பாய கட்டிச் சோற்று
போல்கை வேகுங் கண்டிடுமே! 299

உடலின் பாரம் அதிகமாதல், பெருத்தல், தலைவலி, விண்விண் என்று தெறித்து விழும் போன்று அதிகமாதல், நாக்கு வெந்துபோதல், ஈரல், வயிறு வெந்து போதல், கட்டிச்சோறு போல் வயிறுவெந்து போதல் ஆகியவை அக்கரக் கபாலியின் குறிகுணங்கள்.

வெடிக்கு மஞ்சா றானாள்
மிகுந்த ரத்தம் வயிற்றில்விடும்
படிக்குள் புளியிலைச் சாறுடனே
பரித்த முந்திரி ஏலரிசி

வடித்த தேசிப் பழச்சாற்றில்
மருவார் காடி யதினாலும்
இடிக்க குழைக்கத் தான்குடிக்க
ஏகும் அக்கரக் கபாலியிதே! 300

ஐந்தாம் ஆறாம்நாளில் வெடித்து நாக்கில் இரத்தம் விழும் பொழுது, புளியிலைச் சாற்றுடன் முந்திரி, ஏலம் இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றிலும், காடியிலும் சேர்த்தரைத்துக் குழைத்துக் குடிக்க கபாலியக்கரம் தீரும்.

வயிற்றுக் கழிச்சல் மிகவானால்
வருத்தும் அத்தி பருத்திக்காய்
நிறுத்திப் பட்டைக் காயாகில்
நீண்ட காடியில் தான்து வைத்து
மிகுத்த கசாயம் வடிகொண்டு
மேவிச் சீரகம் நெல்லிமுள்ளி
தகைத்து மேல்பொடி தான்போட்டு குடிக்கத்
தயங்கும் கபாலி அக்கரமே! 301

கழிச்சல் அதிகமாகும்போது அத்திக்காய், பருத்திக்காய் இவற்றைக் காடி சேர்த்து இடித்துக் குடிநீராய்க் காய்ச்சி வடித்து அதில் சீரகம், நெல்லிமுள்ளி பொடித்துப் போட்டுக் குடிக்க கபாலியக்கரம் தீரும்.

அக்கரக்குமரியின் குணம்

குமரி அக்கர குணஞ்சொல்வோம்
கூசா தடிக்கும் நொந்திருக்கும்
விமரக் கண்கள் நொந்துநொந்து
விளங்குஞ் சுரமுன் வாய்கசந்து
வமன வாந்திக் கண்ணாக்கும்
உண்ணும் பல்லு முகந்தபச்சை
நமது முக்கால் கபாலத்தால்
நாளு மாத்தங் குறுணியதே! 302

நாக்கு தடித்தல், வலித்தல், கண்கள் வலித்தல், காய்ச் சலடித்தல், வாயானது கசந்து போதல், வாந்தியாதல், கண், நாக்கு, பல் ஆகியவற்றில் மாற்றம் தோன்றல் ஆகியவை குமரியக்கரத்தின் குறி குணங்கள் ஆகும்.

இப்படி மூன்று நாள்விழுந்தால்
ஏரங் காறு நாள்தப்பில்
அப்போ ஓரிலைத் தாமரை
ஆன புளியிலைச் சாறுகொண்டு
எப்படி காடி யதனாலும்
இலங்கக் கலக்கிக் குடிப்பீராய்
இப்படி மூணுநாள் முக்காலே விழுந்த
ரத்த மியங்கி டுமே! 303

மூன்றுநாள் இரத்தம் நிற்காமல் கழிந்து, ஆறு நாட்களும் தொடர்ந்தால் ஓரிலைத் தாமரையையும் புளியிலைச் சாற்றையும் காடியையும் சேர்த்தரைத்துக் கலந்து மூன்று நாள்கள் குடிக்க இரத்தக் கழிவு தீரும்.

நீர்ப் பூலா வேர்உருவாளால்
நீகொண் டிழைத்துக் காடியினால்
திமப்ப தாகமும் பொழுதும்
தியங்கக் கொடுக்கத் தீர்ந்திடுமே
கொப்பாம் அக்கர மெழுவகைக்கும்
சொல்நாக் குத்தான் வழிக்க
எப்பூருங் குழல்மட மானே
இன்றேசொல் வொழிய மக்கேள்! 304

நீர்ப்பூலாவேரை வெட்டியெடுத்து காடியைச் சேர்த்தரைத்துக் கொடுக்க தாகம் தீர்ந்துவிடும். அக்கரம்ஏழு வகையும் தீர மருந்தினைக் கூறுகிறேன் கேட்பீர். (நாக்கு வழிக்கும் மருந்தினை)

அக்கரம் ஏழு வகைக்கும் மருந்து

நாயுருவி இந்துப்பு
நயத்த கருஞ்சீரக மணத்தக்காளி
மாய மோரொன்று பணவிடைதான்
மருவுந் தேசிப் பழச்சாற்றில்
ஏயு மிச்சாற்றில் தானரைத்து
இசைந்த வெந்நீர தனில்குழப்பி
ஓயும் நாக்கில் தான்தடவி
ஓலை கொண்டே வழித்திடவே! 305

நாயுருவி, இந்துப்பு, கருஞ்சீரகம், மணித்தக்காளி ஆகிய வற்றை வகைக்கு 488 மி.கி. எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றை விட்டரைத்து அதில் வெந்நீரையும் சேர்த்துக் கொள்ளவும். அதனை நாக்கில் தடவி ஓலையைக் கொண்டு வழித்திடவும்.

ஏழுவகை அக்கரந் தனக்காகும்
இலகுங் குளிகை யியம்பக்கேள்
அழுங்கு பொன்னாங் காணியுடன்
ஆன சிறுகீரை நன்னாரி
தழுங்கா ஓரிலைத் தாமரையும்
சம்பு வளையந் தாமரைப்பூ
இழுங்கா வல்லி செங்கழுநீர்
ஈங்க னிலைகள் வேருடனே
கிழங்கா நீர்ப்பூலாக் கொழுந்து வெட்சி
கிளரும் நந்தியா வட்டப்பூ! 306

ஏழுவகை அக்கரத்திற்குமான குளிகை ஒன்று கூறுகிறேன். கேளுங்கள், பொன்னாங்காணி, சிறுகீரை, நன்னாரி, ஓரிலைத் தாமரை, நாவல், தாமரைவளையம், தாமரைப்பூ, செங்கழுநீர் ஆகியவற்றின் இலைகள், வேர்கள் எடுக்க, நீர்ப்பூலாவின் கொழுந்து, வெட்சிப்பூ, நந்தியாவட்டப் பூ,

கோரைக் கிழங்கு வெட்டிவேர்
குலாவு மிலுப்பை இலாமிச்சை
வீரச் சுரையுங் கொழுந்துடனே
விளங்கு சந்தனக் குழம்பு
சேருங் கலையுங் கொம்புடனே
செந்த சந்தனம் ருத்திராட்சம்
மாரும் முந்திரிகை கற்கண்டு
வருத்த லவங்கப் பட்டையதே! 307

கோரைக்கிழங்கு, வெட்டிவேர், இலுப்பை, இலாமிச்சை, சுரைக்கொழுந்து, சந்தனக் குழம்பு, கலைக்கொம்பு, செஞ்சந்தனம், ருத்திராட்சம், முந்திரிகை, கற்கண்டு, இலவங்கப்பட்டை ஆகியவையும்,

ஏலங் கோஷ்ட மதிமதுரம்
இயன்ற கூகைநீறு கல்நார்
பாலாஞ் சாத்திர வேதியுடன்
பருகுஞ் சீரகஞ் செண்பகமும்
மேலா மிவையே சமன்கொண்டு
மிகுத்த கரும்பு முலைப்பாலும்
பாலா மிளநீ ரிவைமுனில்
பரிந்தே மூன்றுநாளரையே! 308

ஏலம், கோட்டம், அதிமதுரம், கூகைநீறு, கல்நார், சாத்திரவேதி, சீரகம், செண்பகம் ஆகியவற்றைச் சமமாக எடுத்து கரும்புச்சாறு, தாய்ப்பால், இளநீர் ஆகியவற்றில் முறையே மூன்று நாள் அரைத்துக் கொள்ளவும்.

அரைத்த உருண்டை சுண்டைக்காய்
ஆன நிழலில் தானுலர்த்தி
வருத்த அக்கர யெழுவகைக்கு
மருந்து கொடுக்கும் வகைகேளீர்
திருத்தமுந் தருபோல் தனிலிடத்
திரா தாகில் வெண்ணெய்தனில்
வருத்த மாக மிரினக்கால்
மகிழும் புளியிலைச் சாறாகும்! 309

விழுதைச் சுண்டைக்காயளவு உருண்டைகளாய்ச் செய்து நிழலில் காய வைத்து தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்கவும். தீராவிடில் வெண்ணெயிலும் கொடுக்க. மேலும் குணமடைய வில்லையென்றால் புளியிலைச் சாற்றில் இழைத்துக் கொடுக்கவும்.

மெத்த மெத்த மீறினக்கால்
மிகுத்த நாளில் முப்பொழுதும்
அத்தி வயிறு கழியாது
அதுக்கு ரெண்டு குளிகைவெண்ணெய்
சத்தி நீரும் தயங்கக்
காய்ச்ச லதுதான் வந்தக்கால்
அத்தனை ஏழு நாள்விடுமே
அன்னா ளதனில் விடாதாகில்! 310

அவ்வாறும் குணமடையவில்லையென்றால் ஒருநாளைக்கு மூன்று பொழுதும் அளிக்கவும். கழிச்சல் தீரும். இரண்டு குளிகைகள் வெண்ணெயில் இழைத்துக் கொடுக்க வாந்தி நிற்கும். காய்ச்சல் வந்தால் ஏழுநாளில் தீரும். அவ்வாறு ஏழு நாட்களில் தீராவிட்டால்,

இக்காய்ச்சல் கொடுத்து விட்ட
இருத் தோரான் நாள்வரையு
மிக்க மிளகு மாகாது
மிளகிலிட்ட கறிதா னாகாது
ஒக்கர மூக்கி ரத்தம் விழியில்
உகந்த தலைக்கு எருமைவெண்ணெய்
ஒக்க ஏரண்ட எண்ணெயுடன்
உகந்த முலைப்பா லுச்சியிடே! 311

இருபத்தொரு நாட்கள் வரையிலும் மிளகு மற்றும் மிளகு சேர்த்த கறி வகைகள் உதவாது. மூக்கில் இரத்தம் வழிந்தால் எருமை வெண்ணெயுடன் விளக்கெண்ணெய், தாய்ப்பாலையும் சேர்த்து தலை உச்சியில் வைக்க குணமாகும்.

கறுப்பு அக்கரத்துக்கு

அவுரி எலுமிச்சம் பழச்சாற்றி
லரைத்துப் பசுவின் நெய்யதனில்
மிவா எரித்து மெழுகுபதம்
விளங்கக் குடுக்க நன்றாகும்
பவுரி மற்ற அக்கரத்து
பழம்புளி வல்லா ரையுடன்
உவச்ச சந்தனம் நாமஞ்சீரகம்
உகந்த வல்லாரைச் சாற்றிலிடே! 312

அவுரியுடன் எலுமிச்சம் சாற்றை ஊற்றி அரைத்து அடுப்பினில் வைத்தெரித்து மெழுகு பதத்தில் காய்ச்சிக் கொடுக்க கறுப்பு அக்கரம் குணமாகும். பிற அக்கர வகை களுக்கு பழமையான புளியுடன் வல்லாரை, சந்தனம், சீரகம் சேர்த்து வல்லாரைச் சாற்றில் அரைத்து உட்கொள்ளவும்.

ஏழுவகை அக்கரத்துக்கு மருந்து

பொன்னாங் காணி சிறுகீரை
பூலாக் கொழுந்து வெட்டிவேர்
நன்னாய் தேசிப் பழச்சாற்றில்
நன்னா யரிந்து யிவைபண்ணி
நற்சீரகம் செம்ப ருத்தி
குன்றாய் ஏலம் இலவங்கம்
கொள்தே சிப்பழச் சாற்றில்கொள்! 313

பொன்னாங்காணி, சிறுகீரை, பூலாக்கொழுந்து, வெட்டி வேர் ஆகியவற்றை அரிந்து கொள்ளவும். நற்சீரகம், செம்பருத்தி, ஏலம், இலவங்கம் ஆகியவற்றைச் சேர்த்தரைத்து எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து உட்கொள்ளவும்.

கண்டமாலைக்குப் பூச்சு

தேசிச் சாறு தன்னாலே
திகழும் செங்ககல் லுடனே

நேசபசம் எட்டி விரை
நேர அரைத்துக் குழம்பாக்கி
மூசு கண்ட மாலைக்கு
முசியாலோர் பத்து நாளிடவே
ஆசுங் கழுத்தில் தான்பூச
ஆறும் உஷ்ண மருந்ததுவே! 314

சிவப்புக்கல், எட்டிவிதை இவை இரண்டையும் அரைத்துக் குழம்பாக்கி கண்டமாலை நோய்க்குப் பத்து நாட்கள் தொடர்ந்து கழுத்தின் மீது பூச கழுத்தின் வெப்பம் குறைந்துவிடும்.

எண்ணெய்

நன்னாரி சிற்றா முட்டி
நயந்த சீந்தி லமுக்குரா
இன்னேர் முத்தக் காசு
இயன்ற சீதேவி செங்கழுநீர்
மன்னக் கோஷ்டம் அரத்தைசுக்கு
மருவ வோரொன் றிருகழஞ்சாய்
உண்ண முலைப்பால் தனிலரைத்து
உகந்த நல்லெண்ணெய் காய்ச்சுவதே! 315

நன்னாரி, சிற்றாமுட்டி, சீந்தில், அமுக்கரா, கோரைக் கிழங்கு, சீதேவி, செங்கழுநீர், கோட்டம், அரத்தை, சுக்கு ஆகியவற்றை வகைக்கு 10 கி. எடுத்துத் தாய்ப்பாலில் அரைத்து நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சிக் கொள்ளவும்.

காய்ச்சி எண்ணெய் பதத்தில் வடி
கனத்த காய முடனாக
வீச்சு மெண்ணித் தான்பூச
உள்ளுங் கழஞ்சு மிழுங்கிடவே
தேச்ச எண்ணெய் மூணானாள்
...
ஆச்சரச் சென்று நினையாதே
ஆறுங் கண்டாய் திட்டமதே! 316

நன்கு காய்ந்ததும் எண்ணெய் பக்குவத்தில் வடித்து இளஞ்சூட்டில் உடலில் பூசி, 5 கி. எண்ணெயை உள்ளுக்கு குடிக்கவும். மூன்றாம் நாள் கண்டமாலை குணமாகும்.

நெய்க்குழம்பு

பேய்க் கோரை வேருடனே
பெருத்த செந்தலை அழிஞ்சில்வேர்
மாய்க்கு நீள மிளகுடனே
மருவும் வெள்ளுளி இவைகூட
தேய்க்குந் தேற்றாங் கொட்டைபோல்
தீர நிறையா தானரைத்து
வாய்க்கு அரைத்து உட்கொள்ளு
மருவுங் கண்ட மாலைக்கே! 317

பேய்க்கோரைவேர், செந்தலை, அழிஞ்சில்வேர், நீள்மிளகு, வெள்ளுள்ளி ஆகியவற்றை எடுத்தரைத்து தேற்றாங்கொட்டை அளவெடுத்து உட்கொள்ள கண்டமாலை குணமாகும்.

வழுவிக் கொழுந்து முடக்கொற்றான்
மிளகு வசம்பு உள்ளியுடன்
நழுவிப் போகா தொருநிறையா
நன்றாம் வெள்ளாட்டுப் பாலரைத்து
வழுவிப் போகா துட்கொள்க
மாறு புண்ணில் தானழுக்க
கழுவி முனு நாளதுதான்
கண்ட மாலை கரைத்திடுமே! 318

வழுவிக் (அத்தி) கொழுந்து, முடக்கொற்றான், மிளகு, வசம்பு, உள்ளி ஆகியவற்றை எடுத்து வெள்ளாட்டுப்பால் ஊற்றி அரைத்து உட்கொள்ளவும். புண்ணில் அரைத்த விழுதை வைக்க மூன்று நாட்களில் கண்டமாலை கரைந்து குணமாகும். புண்கள் ஆறும்.

கம்பளிப் புழுவைத் தான்உலர்த்தி
கனத்த புண்ணில் பொடிபோட

இன்பமாகக் கறண கரையு
மிருது மேலு மோடாது
உம்பர் புகழும் நாரதனார்
உகந்த பரம்பொருள் போற்றவென
தம்ப மில்லை யென்றதுபோல்
தானே தயங்கும் பலபுண்ணே! 319

கம்பளிப்புழுவைக் காயவைத்துப் பொடித்துப் புண்ணில் போட கரணைகள் கரைந்துவிடும். தேவர்கள் புகழும் நாரதனார் போற்றும் பரம்பொருளைப் போல் பல புண்கள் மறைந்தன.

எண்ணெய்

சொன்ன கடுக்காய் இந்துப்பு
துய்ய சீரகம் தூதுவளை
சின்ன முத்த நன்னாரி
தினந்தோ றொன்று கழஞ்சுகொண்டு
வண்ண எண்ணெய் தனில்காய்ச்சி
மாறுந் தொண்டை வீக்கத்தில்
மின்னார் எண்ணெய் தானிட்டு
வாகும் தொண்டை வீக்கமதே! 320

கடுக்காய், இந்துப்பு, தூதுவளை, சீரகம், கோரைக்கிழங்கு, நன்னாரி ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்து எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி பக்குவத்தில் வடிக்கவும். தொண்டை வீக்கத்திற்கு உகந்த எண்ணெய் இது.

முன்னே எண்ணெ யுட்கொள்ள
முசியாமல் வீக்க மதில்பூச
பின்னும் பூச முள்ளிலவம்
பெருத்தப் பட்டை முலைப்பாலில்
சொன்னங் குழலாய் சாரித்து
சுகித்த காது கண்டத்தில்
மின்னு வீக்க மதில்பூச
மெழுந் திரட்சி சேற்றுமமே! 321

இவ்வெண்ணெயை அளவறிந்து உள்ளுக்குக் குடித்தும், வீக்கத்திலும் பூச குணமாகும். முள்ளிலவின் பெருத்த பட்டையைத் தாய்ப்பாலில் சேர்த்தரைத்து காது, கழுத்து வீக்கத்தில் பூச சிலேத்துமத்தால் ஏற்பட்ட அவ்வீக்கங்கள் மறையும்.

பெருவீக்கத்துக்குக் குழம்பு

காடி நாழி ஆவதுதான்
கனக்கும் (பசுக்)கோமியம் நாநாழி
நீடிய வத்திப் பட்டை
நிகழனாற் பலம்தா னரைத்து
வாட எரித்து வடியிட்டு
மகிழ்ந்த கற்க மதிற்கடுகு
விடிய மனோசிலை யிருசீரகம்
விளங்கரி தாரம் வசம்புடனே! 322

1.3 லி. காடி, கோமியம், 5.2 லி., எடுத்து 140 கி. அத்திப் பட்டையைக் கலவை ஊற்றி அரைத்துக் கலந்து அனலில் வைத்துக் காய்ச்சி வடிக்கவும். கடுகு, மனோசிலை, நற்சீரகம், கருஞ்சீரகம், அரிதாரம், வசம்பு,

கெந்தகத் தோடரி தாரங்
கிளரு மரக்கு சங்குவிரை
வந்த புங்கின் விரைகுன்றி
வரையின் கோஷ்ட்ட மிவைசமனாய்
வெந்து குழம்பு மிழுங்கிடவே
மேகும் பேயின் வீக்கமெல்லாம்
சந்து குந்து பாராமல்
தானே யோடுந் தப்பாதே! 323

கெந்தகம், அரிதாரம், அரக்கு, சங்கன் விதை, புங்கு விதை, குன்றிவிதை, கோட்டம் ஆகியவற்றைச் சமமாய் எடுத்துப் பொடித்து வடித்து எண்ணெயில் போட்டுக் காய்ச்சி குழம்பு பக்குவத்தில் வடித்துக் குடிக்க வீக்கங்கள் தீரும்.

முருங்கை யிலைதான் அஞ்சுபிடி
முகியாமல் நாழித் தண்ணிதனில்
மிஞ்சக் காய்ச்சி வடிகொண்டு
வெண்காரம் பணவிடை பொரித்திட்டு
அஞ்சா துள்ளே தான்கொள்ள
ஆன சோகை பேய்வீக்கம்
மிஞ்சா குளுப்பைத் தானோடும்
மேஷிங் கசாய மிதுதானே! *324*

முருங்கை இலை ஐந்து பிடி எடுத்து *1.3* லி. தண்ணீரில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். வெண்காரத்தை *488* மி.கி. எடுத்துப் பொடித்து இக்குடிநீரில் உட்கொள்ள சோகை, வீக்கம், குளுப்பை (கண்ணிற்குக் கீழ்) பெருவீக்கம் ஆகியவை குணமாகும்.

சோமரோகத்துக்குக் குடிநீர்

கலியாண முருக்கின் பட்டை
கனத்த பாக்கி னளவுகொண்டு
நலியா மிளகு வெந்நீரில்
நன்றாய் அரைத்துத் தான்கொடுக்க
கிலிதான் கொண்ட சோமரோகம்
கிளறு மிருபது நாட்கொள்ள
சலியா திகக்குடி நீரது தான்
தானே கொள்ளுந் தப்பாதே! *325*

கலியாண முருக்கின் பட்டையைத் தடித்த இரண்டு பாக்களவாக எடுத்து மிளகுக் குடிநீரில் அரைத்து 20 நாட்கள் உட்கொள்ள சோம நோய் தீரும்.

சூரணம்

சிந்தில் தண்டு நூறுபலம்
தீர இருதூணி நீர்பதக்காய்
தீந்த சூரியப் புடம்வைத்து
தெளிந்த வடியில் படிகுத்தவும்

போந்ததே உலர்த்திப் பொடிசெய்து
புகழ்சேர் சீலை வடிகொண்டு
வாய்ந்த நிலப்பனை அமுதவல்லி
மருவும் பூனைக் காலிவிரை! 326

சீந்தில் தண்டு 3500 கி. எடுத்து 43 லி. தண்ணீரில் இடித்துப்போட்டு வெயிலில் வைத்து 10.7 லி.-யாகச் சுண்டின பிறகு எடுத்து வடித்துச் சீலையில் வடிகட்டி காயவைத்துப் பொடித்துக் கொள்ளவும். நிலப்பனை, அமுதவல்லி, பூனைக்காலி விதை,

முருங்கை விரையும் திரிகடுகு
முசியா திரிபலை தானாகும்
இறங்கு சீரக சாதிக்காய்
இயற்கை மதுரம் சர்க்கரை
உருக நிறையே சமன்கொண்டு
உகந்த தேனில் தான்விழுங்க
போருங்கே சோமரோக மெல்லாம்
ஓடிப் போகுங் கண்டாயே! 327

முருங்கை விதை, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சீரகம், சாதிக்காய், அதிமதுரம், சர்க்கரை ஆகியவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்து அனைத்துப் பொடியையும் சேர்த்துத் தேனில் உட்கொள்ள சோமநோய் தீரும்.

குழம்பு

சீந்தில் நூறு பலம்குறையா
திடித்து இரு தூணி
இடிதா னில்லா சட்டிதனில்
மேவக் காய்ச்சி சர்க்கரைபோல்
படியா மிதுதான் மிருகூறும்
பச்சிலை சீரகம் கோட்டமுடன்
உடனே ரேணு ஏலமுடன்
உகந்த முந்திநிகை பேர்ச்சம்! 328

சீந்தில் 3500 கி. எடுத்து 43 லி. தண்ணீரில் இடித்துப் போட்டுக் குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும். சட்டியில் கீழே சர்க்கரையாய்ப் படியும். இதில் போடும் கற்கங்கள் கீழ்வருமாறு. திருநீற்றுப்பச்சிலை, சீரகம், கோட்டம், ரேணுகம், ஏலம், முந்திரிகை, பேரீச்சம்,

நாகப்பு சந்தனம் அதிமதுரம்
நன்மை யான திரிகடுகு
ஏகச் சாதிக் காயாகும்
இயன்ற கற்கடகம் தக்கோலம்
போக மாகுரில் கச்சோலம்
பொருந் திருவே நெல்லிமுள்ளி
தாக்க குங்குமத் தாமரையும்
தருமே நெற்பொரி கற்பூரம்! 329

நாகப்பூ, சந்தனம், அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், கற்கடகச் சிங்கி, தக்கோலம், கச்சோலம், நெல்லிமுள்ளி, குங்குமம், தாமரை, நெற்பொரி, கற்பூரம்,

அமுக்கு ராய்வே ரிவைமுதலாய்
ஆகு காசிடை யொரொன்று
தடித்த நெய்தேன் தானிட்டு
தானே குழம்பு வெருகடிகொள்
திமிகத சோம ரோகமது
தீரும் நிச்சயந் தானென்று
அவத்த மனத்தில் எண்ணாதே
ஆறுந் திட்ச மாகுமதே! 330

அமுக்குராவேர் ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்துக் கலவையில் போடவும். நெய், தேனையும் சேர்த்துக் குழம்பாய்க் காய்ச்சி அதனின்று மூவிரலளவு கொடுக்க சோமநோய் தீரும்.

சோம ரோகம் சதாவேரி
சுடுபுற்ற நெய்தான் நாநாழி
ஈய சதாவேதிச் சாறதுதா
னிதங்கப் பதக்குப் பால்குறுணி
தாம ஏலம் கச்சோலம்
தகுந்த அகிலும் நாகப்பூ
நாமச் சந்தனம் தாமரையும்
நயந்த மதுரம் செங்கழுநீர்! 331

சதாவேரிச்சாறு 10.7 லி., 5.2 லி. நெய், 5.2 லி. பால் எடுத்துக் கலந்து கொள்ளவும். ஏலம், கச்சோலம், அகில், நாகப்பூ, சந்தனம், தாமரை, அதிமதுரம், செங்கழுநீர்,

எலுமிச்சங் கோஷ்ட்டம் நன்னாரி
இசங்கு முத்தக் காசு
இலுப்பை சலம்தான் முந்திரிகை
தாம மேதை பேரிச்சம்
சலக மேதை கார்கொள்ளி
தான கடுகு ரோகணியும்
வலக சீரகம் ஒரொன்று
வறுத்த நான்கு காசிடையே! 332

எலுமிச்சம், கோட்டம், நன்னாரி, இசங்கு, கோரைக் கிழங்கு, இலுப்பைச்சாறு, முந்திரி, கடுக்காய், பேரீச்சம்பழம், கார்கோலரிசி, கடுகுரோகணி, சீரகம் ஆகியவற்றை வகைக்கு 16 கி. எடுக்க.

எல்லா மருந்தும் பொடிசெய்து
இலங்குத் தேனும் நாழிவிட்டு
நெல்லாய் குழம்பு வெருகடிகொள்
நயந்த சோம ரோகமன்றி
எல்லாந் தீரும் வாததோஷம்
இயன்ற கடுப்பு கல்லெரிப்பு
வல்ல திரட்சி மலவாயு
மாறும் வியாதி மன்றமற! 333

அனைத்தையும் பொடித்து 1.3 லி. தேனையும் சேர்த்துக் குழம்பாய்க் காய்ச்சிக் கொள்ளவும். மூவிரலளவு கொடுக்க சோமநோய், வாததோடம், கடுப்பு, கல்லெரிப்பு, திரட்சி, மலவாயு ஆகிய நோய்கள் குணமாகும்.

சத்திகசன்னியின் குணம்

பண்ணுஞ் சிவப்போடு கரி
பாயிருந்தே பலகாலும் எழுந்திருந்தே
எண்ணுங் களத்தில்மிக வறிவானதே
இளவறியவங் குலைந்து விடமென்று
நண்ணு நாக்குவலிப்புளவாய் வெதும்பு
நடுத்துண்டம் மிகவறி வாகியே
உண்ணின் றழுந்து மிவையாகும்
மெனறிங்குரை சத்திக சன்னிசியலே! 334

படுக்கையில் பலமுறை எழுந்திருத்தல், விடமென்று நினைக்கும் அளவுக்கு நாக்கு இருத்தல், வாய்வெதும்பிப் போதல், கழுத்து, தொண்டை புண்ணாதல், உணவைச் சாப்பிட்டால் அழுந்துதல் ஆகியவை சத்திக சன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்

சொற்படருங் கிளாவடா தொடையிலையின்
தூது வளைசிறு வழுதிலைகற்
துடைசொற் சிற்றா முட்டிவேர்
சுக்கு கலந்து முத்தக்காசு
பற்படாகஞ் சந்தனமிலுப்பைப் பூவினோடு
பன்னிரு கழஞ்சு கொண்டே
பிற்படை நீருயிரு நாழியது
உழக்கென்றுச் செப்பிடச் சன்னிகெடுமே! 335

கிளா, ஆடாதோடைஇலை, தூதுவளை, சிறுவழுதுணை, சிற்றாமுட்டிவேர், சுக்கு, முத்தக்காசு, பற்பாடகம், சந்தனம், இலுப்பைப் பூ ஆகியவற்றை வகைக்கு 60 கி. எடுத்து 2.6 லி.

தண்ணீரில் போட்டு 325 மி.லி.-யாகச் சுருக்கிக் காய்ச்சிக் கொள்ளவும்.

சீந்தில் முத்தக் காசு
கூவிளை வேரில் வேர்சீர்
மருவும் பேய்ப்பு டோல்வேர்
வாரந்தி சீரகங் கொத்தமல்லி
சுக்கோ டிருநாழி நீர்வார்த்து
ஒரு குடிநீரிது..............
பொந்த சினக்காரம் நன்னாரி
திப்பிலி புகழ்சிற்றா முட்டிவேர்
சுக்கோ அந்தச் சொற்கடுகு
ரோகணி இவைகள் கூட்டிடுமே! 336

சீந்தில், கோரைக்கிழங்கு, கூவிளைவேர், பேய்ப்புடல் வேர், சீரகம், கொத்துமல்லி, சுக்கு ஆகியவற்றை இடித்து 2.6லி. தண்ணீர் ஊற்றிக் காய்ச்சுக. சீனக்காரம், நன்னாரி, திப்பிலி, சிற்றாமுட்டிவேர், சுக்கு, கடுகுரோகணி ஆகியவற்றை இடித்துப் போட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்.

இரத்த நாடி சன்னியின் குணம்

பல்லடிகள் இருநாசி கண்களும் சொருகியே
பரிமேல் லணையதி ஏிற்ற மேறி
சொல்லிடுங் களாதி யியல்பாகியே உற்ற
துயிரோடுங் கூப்பி டலுமாய்
நல்லடைவு கொடுநெறி வுறிவானதுஞ் சிற்றில்
நல்விலா வறிவற் குமே
வல்லுடைய ரத்தநாடி நன்னுஞ் சன்னியிது
வல்லோர்கள் சொல்லு மிதுவே! 337

பல்லடிகள், இரண்டு மூக்கு துவாரங்கள், கண்கள் சொருகிக் கொள்ளுதல், குதிரை மேலேறி சுற்றுவது போலிருத்தல், பின் இயல்பாதல், உயிரோடுங் கூடிய உடலுள்ளதே என்பது போன்று துயரோடும், வலியோடும் இருத்தல். விலாவலித்தல் ஆகியவை இரத்த நாடி சன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்

இன்பந் தரும் பூசணித் தண்டு தன்னுடனே
இசைந்த முத்தக் காசுதான்
பும்பந் துராய் தூதுவளை இவைரெண்டு
பகர்ந்தசிறு வழுதிலை யின்வேர்
நம்பினது கொத்த மல்லிகை சுக்கினியப்
பற்படாகந் தன்றுமிரு
நாழி நீரால் வசம்பு நீரத்த
நாடி மறித்தடுக்க வகை! *338*

பூசணித் தண்டுடன் கோரைக்கிழங்கையும் கச்சந்திராய், தூதுவளை, சிறுவழுதுணை வேர், கொத்துமல்லி, சுக்கு, பற்பாடகம், ஆகியவற்றையும், வசம்பையும், இடித்துப் போட்டு 2.6 லி. தண்ணீரூற்றி முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க இரத்த நாடி சன்னி தீரும்.

அந்தகச் சன்னியின் குணம்

உடலதனில் மேல்வெ தும்பு
மிக்க காய மதுவ றண்டு
எழில் நாவது கறுப்பதுதான்
தசைபரவு கைகால் குளுந்து
கையப்பு றோண்ட லோடுச்ச மிக்க
கழியும் முகப்பி னோடு
தலையும் சொறிந்திரு மார்பற் றவிறல்
அந்தக னென்னுஞ் சன்னி சுரமே! *339*

மேல் மூச்சு வருதல், உடல் வறட்சியாதல், நாக்கு கறுப்பாதல், கைகால் குளிர்தல், கையில் நீர் கோர்த்தல், கழிச்சலாதல், மயக்கமாதல், சோர்வடைதல், மார்பு படபடத்தல் ஆகியவை அந்தகச் சன்னியின் குறிகுணங்கள்.

வேரொடு மிலா மிச்சை
யினிய பற்படா கமதுவும்
சீரா வருஞ்சுக் குமிகவே
சிறந்ததோர் சிறுதேக் குயிடுங்

கடுகவே பாரொத்த இருநாழி
நீர்தானு முன்னும் பின்னும்
ஒருழக்கான பின்கோரோசனை முலைப்பால் கூட
மாறிடுங் கூர்ந்தசன்னி கேடுமே! 340

இலாமிச்சை, பற்பாடகம், சுக்கு, சிறுதேக்கு ஆகியவற்றைச் சமஅளவெடுத்து 2.6 லி. தண்ணீரூற்றி 325 மி.லி.யாய்க் குறுக்கிக் கொண்டு அதில் கோரோசனை, தாய்ப்பால் சேர்த்துக் கொடுக்க அந்தகச் சன்னி தீரும்.

சீதாங்கச் சன்னிகுணம்

குளுந்து மயிரெறியு விதிலுமிக வெதும்பும்
நெறி நிலவுஞ் தண்ணீரில் தாகமாய்
தளந்து பசியாமலே தானும் ஆசையும்
அமவற ருடனேயுஞ் செறிந்த வகையாய்
விளைந்த தலையணையது கண்ணிற் றிலையு
மிசையாம லவைக்கு மிவைபல குணமுமாய்
விளைந்தவ வளந்த விதுசி தாங்க
சன்னியென்று மிகச் சேர்ந்த படியே! 341

குளிர்ச்சியடைதல், ம்யிர்க்கூச்செறிதல், உடல் வெதும்புதல், தண்ணீர் தாகம் அதிகமாதல், உடல் தளர்ந்து போதல், பசிக்காமலே விருப்பப்பட்டு உணவுக்கு அமர்தல், பின் சாப்பிடாமலே எழுந்திருத்தல், இவ்வாறு பல குணங்களாய் காட்டுவது சீதாங்கச் சன்னியாகும்.

குடிநீர்

அஞ்சாத சீதாங்கச் சன்னியது
மாறிட யினியேல மிலவங்கமும்
மெஞ்சாத சந்தனமும் பூசணித்
தண்டோடு சுரைத்தண்டு தனையும்
இஞ்சாத் தூதுவளை வேர்மிக்க சுக்கு
மிவைகள் மேவும்பன் னிருக ழஞ்சு

நெஞ்சார இருநாழி இறுத்திடு
நிறுத்து சுரமே! 342

ஏலம், இலவங்கம், சந்தனம், பூசணித்தண்டு, சுரைத் தண்டு, தூதுவளை வேர், சுக்கு ஆகியவற்றை வகைக்கு 60 கி. எடுத்து 2.6 லி. தண்ணீர்விட்டு குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க சீதாங்கச் சன்னி தீரும்.

பிரலாப சன்னியின் குணம்

பலகாலு மருள்கொண்டு சொல்லாது சொல்லிப்
பயின்றும் படுக்கை தன்னிலே
சுலவா தடிக்கடி தெழுந்திருந்தே யிருத்திடுங்
கங்குலின் போது சுரமுமாம்
குலவாத யெழுத்தும் பின்னையுடனே நகையுங்
கொடுத்து ழலை தானமன முரபஞ்
சில்னென்று குமிகு பிரலாப சன்னி
செய்து மெயின வகையே! 343

பலமுறையும் மயக்கங் கொள்ளுதல், பிதற்றுதல், படுக்கையில் பொருந்தி படுக்காமை, அடிக்கடி எழுந்திருத்தல், விடியலில் சுரம்காய்தல், சில சமயங்களில் சிரித்தல், ஆகியவை பிரலாப சன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்

ஆறாத பிரலாப சன்னியை நிறுத்தும்
வகையாகும் நிலம்பி னுடனே
கூறாத நல்சிறு தேக்கு கலத்துற்ற
குலவு சுக்கதுவு விரவித்தான்
சிறான காஞ்சொறி வட்டத் திருப்பிவேர்
திகழுஞ் சிறுவழு திலைவேர்
மாறான யிருநாழி நீரின்முத்தக் காசு
வைக்க முன்சொன்ன வகையே! 344

சிறுதேக்கு, சுக்கு, சிறுகாஞ்சொறி, வட்டத்திருப்பி, சிறுவழுதுணை வேர் ஆகிய கடைச்சரக்குகளை எடுத்து 2.6 லி. தண்ணீர் விட்டு கோரைக்கிழங்கையும் போட்டு முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க பிரலாப சன்னி குணமாகும்.

எண்ணெய்

சிவனார் வேம்பு சாறபின் குன்று
சித்தா வாரை சேவகனார்
நவஞ்சேற்று நாககெருடன் வேப்பமுத்து
நன்மை பச்சைப் பாம்பு கண்டம்
வனதா னில்லை சமனது கொண்டு
அரைத்துநல் லெண்ணெய் அதிலெ ரித்து
பவளச் செம்பைச் சாற்றெ ரித்து
பருத்த நாசி தனில்பூசே! 345

சிவனார் வேம்புவின் சாறு, அபின், குன்றிமணி, சிற்ற வரை, சேவகனார் பூண்டு, கெருடன் கிழங்கு, வேப்பமுத்து, பச்சைப்பாம்பு கண்டம் ஆகியவற்றைச் சமமாய் எடுத்தரைத்துக் கொள்ளவும். நல்லெண்ணெயையும் சிவப்புச் செம்பைச் சாற்றையும் சேர்த்துப் பக்குவத்தில் எரித்து வடித்து ஆறியபின் மூக்கில் பூச பிரலாப சன்னி தீரும்.

கண்டகூசன் என்கிற சன்னியின் குணம்

கழுத்தும் பதைப்ப மிகவசைந்துக்
கவிசை கடுக்குங் சிரத்தொடுப்பு
மழுத்தும் நாவினை யிரவேனும்
பொருத்த சுரமது மிகவுமாயி
இழித்திருதோ பயின்றி ரைக்கொள் ளாதோ
இருந்து பெரு மூச்சுடனே
சுழித்த உருலமல நாவினாற் சடியிற்கழியும்
சொற்கண்டம் கூச மிதுவே! 346

கழுத்து நிலையாக நிற்காது இங்கும் அங்கும் அசைதல், வயிறு கடுப்படைதல், தலைவலித்தல், நாவழுத்துதல், இரவில் காய்ச்சல் அதிகமாதல், பெருமூச் சுண்டாதல், நாக்கும் மலமும் உலர்தல், கழிச்சலுண்டாதல் ஆகியவை கண்ட கூசன் என்னும் சன்னியின் குறி குணங்கள்.

குடிநீர்

அரத்தை சொற்தேவ தாரங்கடுகு ரோகணி
அணிந்த சிறுதேக்கு டனே
தெரித்த நிலவேம்பு உகரி
சுக்குயிவை கலந்துற்ற
தீதிலாச் சிறுவழு திலையின்வேர்
உற்றிவை பன்னிரு கழஞ்சு
தீருமற வுழக்காக்கி யுடவேநிலத்துட கண்ட
கூசனசன்னியை நில்லென்று நிறுத்திடுமே! 347

அரத்தை, தேவதாரம், கடுகுரோகணி, சிறுதேக்கு, நிலவேம்பு, சுக்கு ஆகியவற்றை எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும். சிறுவழுதிலை வேருடன் மேற்கூறிய சரக்கையும் சேர்த்து வகைக்கு 60கி. எடுத்துத் தண்ணீருற்றி 325 மி.லி.யாய்ச் சுருக்கிக் காய்ச்சி அளவறிந்து கொடுக்க கூசனசன்னி குணமாகும்.

கண்டக சன்னி

அங்கங்கள் மிகுபுண்போ லிருப்பனவும்
அன்றி அறுசத்து களிடமே
எங்குஞ் சுரந்து தனிப்புடன்வயி
றெரிப்புடன் கடுஞ்சுரமு மாய்தங்கு
தங்கு சிலவான யேறு அஞ்செலாதே
கரிப்பற வெள்ளோக் காளமாய்
பங்கனு முறங்க லாற்றாங் கறுத்துகறுப்
பயன்கண்ட னென்னுஞ் சன்னியே! 348

உடலுறுப்புகள் அனைத்தும் புண்ணாதல், அங்கங்குள்ள பொருத்துகள் வீங்குதல், கடுமையான காய்ச்சல், வெள்ளோக் காளம் ஆகிய குறிகுணங்கள் கண்டக சன்னியினுடையவை.

குடிநீர்

கடுகுரோகணி தேவதாரம் வெண்காயுள்ளி
கார சுக்கு நொச்சில்
எடபே பேராமுட்டி வேர்கண்ட நிடைந்திட
யெழில் பூசணித் தண்டு
மெலவிழி நீருநாழி பன்னிரு கழஞ்சிவை
மேவியொரு உழக்கான பின்னிடு
மெலிடும் போது அதில்இஞ்சி யின்சாறு
எட்டி லொன்று கொள்ளுமே! 349

கடுகுரோகணி, தேவதாரம், வெள்ளுள்ளி, சுக்கு, நொச்சி, பேராமுட்டிவேர், பூசணித்தண்டு ஆகியவற்றை வகைக்கு 60 கி. எடுத்து 2.6 லி. தண்ணீரூற்றி 325 மி.லியாய்ச் சுருக்கி இஞ்சிச்சாறு 1/8 பாகம் கலந்து கொள்ளவும்.

கண் குழிச்சல் சன்னியின் குணம்

கண்மிக மிகவு வெண்ணுங் குழிவதாயுங்
கிறபோசெறுக்கும் மெய்யுறும் பல்லுமா
எண்மிகு கடுஞ்சுர மிகுத்த உழலை
மின்பகுதியை அதிகமெய்யும் தளர்வதாய்
வண்மை திழில் நித்திரையும் வாராது
வாகாரமற்றது ஒருசற்றுஞ் செயலா
உண்மை யாதுவே கண்குழிச்ச லென்னும்
ஒரு சன்னியின் செயலே! 350

கண் வெளுப்பாதல், குழிவிழுதல், உடலில் அனலடித்தல், காய்ச்சலடித்தல், உடல் தளர்ச்சியாதல், தூக்கம் வராமை, உணவு எடுத்துக்கொள்ளாமை, ஆகியவை கண் குழிச்சல் சன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்

மாட்டார் கிராம்புவிடுங் கடுகு ரோகணி
பற்ப டாகம்மிக
வெட்டான் பலவும்கண்டங் கத்திரியின் பிறவு
மற்ற வகையான
காட்டான் செழுங்கான மல்லியுடன்
கலந்து பன்னிரு கழஞ்சு
மிட்டால் விடுங்கண் குழிச்சல் என்றுரை
செய்யும் இச்சன்னிய தேன்றிடவே! 351

கிராம்பு, கடுகுரோகணி, பற்பாடகம், கண்டங்கத்திரி, மல்லி ஆகியவற்றை வகைக்கு 60 கி. எடுத்துத் தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி சுருக்கி அளவறிந்து கொடுக்க கண் குழிச்சல் சன்னி குணமாகும்.

நெறிமறி என்கிற சன்னியின் குணம்

நீரின்கடு பற்பமிகுத்திட மகாபெலம்
நிறைந்த தேனும் மெல்லுமாய்
போரினி னிசைக்கல்லது துணுக்கிட
மிடுத்தளவும் விற்புய நெளித்திடாவும்
மேலருந் திரட்டியிறு யிவையித்தனை
நெறியாகி செறிந்த நெறிதா
னோரிங்குணத்தின் நெறிமறி யென்ற
சன்னியை உரைப்பார்கள் நல்லோர்களே! 352

சிறுநீரின் கடுப்பு அதிகமாதல், போரில் கற்கள் மோதி சத்தம் எழுப்புவது போன்று தோள்கள் நெளிந்து போதலும் ஆகிய குறிகுணங்கள் நெறிமறி எனும் சன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்

வாசங் குமிழும் பெருவாகை
கூவிளை முன்னைவே சலவோரசு
கோசை மிகுசிற்ற மல்லிகையும்
பேரமல்லி சிற்றமுட்டி யுடனே

தேசற...ரி யோவாயே நெருஞ்சில்
செழும் பேரா முட்டி யதுதான்
தேசமிகு கண்டங் கத்திரிவேர்
சுண்டியபின் யிஞ்சியின் சாறுமே! 353

குமிழ், பெருவாகை, கூவிளை, முன்னை, அரசினிலை, சிற்றாமல்லி, பேராமல்லி, சிற்றாமுட்டி, நெருஞ்சில், பேராமுட்டி, கண்டங்கத்திரி ஆகியவற்றைச் சமமாய் எடுத்துத் தண்ணீர் விட்டு எட்டொன்றாய்ச் சுருக்கி அதனுடன் இஞ்சிச்சாற்றைச் சேர்த்துக் கொடுக்க நெறிமறி எனும் சன்னி குணமாகும்.

அதிகமெனும் சன்னியின் குணம்

ஒன்றரைநாள் மிகவாகி வெதும்பிமிக
ஒழித்தலு முளவாய் நின்ற
தண்ணீர் அது தாகமாயிட
நீர் வயிறு கிரகித்து
தன்றிய நீர்தெளி வாய்ஒருநாள்
சுர மூறில் வெம்பரிதான்
அன்றுள வதிபோல் வழுங்குவழந்திடும்
அதிக சன்னி யின்செயலே! 354

ஒன்றரை நாளில் அதிகமாக வாடிப்போதல், கண்ணீர் வடிதல், தாகம் அதிகமாதல், பின்குடித்த தண்ணீரால் வயிறு நிரம்புதல், பின் காய்ச்சலடித்தல் ஆகியவை அதிகமெனும் சன்னியின் குறி குணங்கள்.

குடிநீர்

நொச்சி யிலையது பூசணித்தண்டு
பற்படாகம் மேலுள்பேரா முட்டியது
வேறெச்சு திப்பிலிசுக்கு நிலவேம்பு
தன்னுடன் மேவுபன் னிருகழஞ்சு
நிறைசெய்து வென்று வைத்துயிரு
நாழி நீரையு மளவிலே

இச்சைகொள் மெச்சதிக சன்னியது தான்
இடைந்து யுள்நடந்து விடுமே! 355

நொச்சியிலை, பூசணித்தண்டு, பற்பாடகம், பேராமுட்டி, திப்பிலி, சுக்கு, நிலவேம்பு ஆகியவற்றை வகைக்கு 60 கி. எடுத்து 2.6 லி. தண்ணீரை ஊற்றிக் காய்ச்சி எட்டில் ஒன்றாகச் சுருக்கி அளவறிந்து கொடுக்க அதிகமெனும் சன்னி குணமாகும்.

அசுவேத சன்னியின் குணம்

வேர்வையொரு காலு மில்லை
மிக்கதோர் சுரம தாகி
ஆவதோர் அசனஞ் செல்லும்
அருந்தண்ணீர் தாப முண்டாய்
ஆவதோர் உடம்பி ளைக்கும்
அசந்தநித் திரையும் பண்ணும்
சோவதோர் சன்னி யின்பேர்
திகழசு வேத மாமே! 356

வியர்வை வெளிவராது இருத்தல், காய்ச்சலடித்தல், உணவெடுத்துக் கொள்ளல், தண்ணீர்த்தாகமெடுத்தல், உடம்பு வலியெடுத்தல், தூக்கம் உண்டாதல் ஆகியவை அசுவேத சன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்

செண்பகங் கடுகு ரோகணி
சேர வரும் கொத்தமல்லி
மிஞ்சியசெங் கழுநீர் கோஷ்டம்
மேவுபற் படாகம் மேலில்
அஞ்சிட்ட சிதேவி செங்கழுநீர்
ஆறு வகைச் சமன்கொண்டு
மிஞ்சிட்ட திப்பி லிதான்
மேற்பொடி தூவிக் கொள்ளே! 357

செண்பகம், கடுகுரோகணி, கொத்துமல்லி, கோட்டம், பற்பாடகம், சீதேவி செங்கழுநீர் ஆகிய சரக்குப் பொருட்களை வகைக்குச் சமமாக எடுத்து நீரூற்றி முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி அதில் திப்பிலிப் பொடியைத் தூவிக் கொடுக்க அசுவேத சன்னி தீரும்.

அலற்று சன்னியின் குணம்

மிகவே அலறி அழுமறி உண்டாக்கி
இடுமிருக்கு கிருத்தக்கவர்களை தொகைதொடு
குடுத்தலும் ஒடுதலு மாகியே
சூழ்நிலையைப் பிரிதல் செய்யும்
பகலு முலத்தான் அதிலிருதைய சென்றே
பொருந்திடு மிந்த வியல்பாய்
நிகரோக மாலாது அலற்று சன்னியோ
குறியோ ருரைத்த படியே! 358

தூக்கத்திலிருந்து அலறி அழுதல், எழுந்து பக்கத்திலிருப்பவர்களைத் தொடுதல், அடித்தல், அங்குமிங்கும் ஓடுதல், தான் இருக்கும் சூழ்நிலையை மறத்தல் ஆகிய குறிகுணங்கள் அலற்று சன்னியினுடையவை.

செங்கழு நீர்க்கிழங்கு தாமரை
வளையச் சிந்தில் தண்டு
மிசைந்தி குமிபேய் புடோல் குரியவேரின்
இனியஏலம் துய்யதி மதுரமும்
ஏங்கிய சிறுதேக்கு னோடு திப்பிலி
இலுப்பைப் பூவோடு தாம
எங்கு மிருநாழி நீரோடு காய
முலைப்பால் தடுத்திடும் அலற்றுமிதுவே! 359

செங்கழுநீர்க்கிழங்கு, தாமரை வளையம், சீந்தில் தண்டு, பேய்ப்புடல், ஏலம், அதிமதுரம், சிறுதேக்கு, திப்பிலி, இலுப்பைப்பூ ஆகியவற்றைச் சமமாய் எடுத்து 2.6 லி.

தண்ணீரூற்றி எட்டிலொரு பாகமாய்ச் சுருக்கிக் காய்ச்சி அதில் தாய்ப்பாலைக் கலந்து கொடுக்கவும்.

சீந்தில் பற்படாகம் இருவேலி
இதின்வேர் கொத்த மல்லி
முன்சொன்ன சுக்கு யிவை
களோடு பன்னிரு கழஞ்சு
நொந்த இருநாழி பன்னிய துழக்கென்று
நீறுபோட மேலான்பார் திப்பிலி முலைப்பால்
தன்னையுங் கூடவே கொண்டிடில்
அலற்று சன்னிதா விடையுமே! 360

சீந்தில், பற்பாடகம், இருவேலி ஆகியவற்றின் வேர், கொத்துமல்லி, சுக்கு ஆகியவற்றை வகைக்கு 60 கி. எடுத்து 2.6 லி. தண்ணீரூற்றி காய்ச்சி 325 மி.லி.யாய்ச் சுருக்கி திப்பிலி யையும் தாய்ப்பாலையும் அளவறிந்து கலந்து கொடுக்க அலற்று சன்னி குணமாகும்.

முந்திரிகை யிளம்பழம் பேரீச்சம்பழம்
முன்னேன்று பற்ப டாகம்நெற்
சந்தன மிலாச்ச மிருவேலிவேர்
தக்க நன்னாரி சுக்கின்
சொந்த மாடா தொடையிலை பூசணித்
தண்டு குலவுமிரு பன்னிரு கழஞ்சு
இந்த வகையின் திப்பிலியின் மேற்பொடி
முலைப்பாலிடு மிகுத்து அலற்றில் கெட்டிடுமே! 361

முந்திரிகை, பேரீச்சம்பழம், பற்பாடகம், சந்தனம், இலாமிச்சை, வெட்டிவேர், நன்னாரி, சுக்கு, ஆடாதோடை யிலை, பூசணித்தண்டு ஆகியவற்றை வகைக்கு 60 கி. எடுத்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி அதில் திப்பிலியின் பொடியையும் தாய்ப்பாலையும் கலந்து கொடுக்க அலற்று சன்னி தீரும்.

மூட்டுமாற்று சன்னிக் கெண்ணெய்

மாட்டு குறும்பி கழற்சிவேர்
மருதின வெண்ணெயில் புகையிடவே
காட்டுக் கார்த்திகை கிழங்கதுதான்
கனத்த கொம்புப் பாலைவேர்
நாட்டு வசம்பு வெள்ளுள்ளி
நாடு நல்லெண்ணெயில் கொதித்து
மூட்டு மாற்று சன்னிக்கு
உள்ளே கொள்ளும் முசியாமல்! 362

மாட்டின் காதிலுள்ள அழுக்கு, கழற்சிவேர் இவற்றை வெண்ணெயில் போட்டுப் புகையாகச் செய்து மூக்கில் புகைக்கவும். காட்டுக் கார்த்திகைக் கிழங்கு, கனமான கொம்புப்பாலை வேர், நாட்டு வசம்பு, வெள்ளுள்ளி ஆகிய வற்றை நல்லெண்ணெயில் போட்டுக் கொதிக்கச் செய்து உள்ளுக்குக் கொடுக்க மூட்டு மாற்று சன்னி குணமாகும்.

பித்த சன்னியின் குணம்

பித்தம் சளிக்கு முகஞ்சுளிக்கும்
புருவ னெரிக்கும் மோதிக்கும்
போத வழற்றும் வாய்பிதற்றும்
பருகும் கழியும் பலமுமடையப்
....
....
புன்றாது கருகுஞ் சன்னி
பவாதத்தால் சாலனென்றுங் கருதாயே! 363

பித்தம் அதிகரித்தல், முகம் சுளித்து மாறல், புருவம் சிலிர்த்தல், வாய்புண்ணாதல், என்ன பேசுகிறோம் என்று தெரியாது உளறுதல், தண்ணீர் குடித்தல், கழிச்சலாதல், உடல் பலவீனமாகவே ஆதல் ஆகியவை பித்த சன்னியின் குறிகுணங்கள்.

காதும் மந்தம் மூக்குநீர்
கணுக்கால் வீடு மென்பார்
போதக் குளிர்ந்து தான்பூசும்
பொருந்தும் சுரம்தான் தோனும்வழி
சீதல மகலாத் தொடாதபொழு
தொருநாள் ....
ஓதும் பித்த சன்னி யென்று
உலகோர் உரைத்த உரைப்படியே! 364

காது மந்தமடைதல், மூக்கில் தண்ணீர் வழிதல், கணுக்கால் வலித்தல், குளிர்ச்சியாதல், காய்ச்சலடித்தல் ஆகிய குறிகுணங்கள் பித்த சன்னிக் குரியவை என்பர்.

நெய்

அறிந்து கொண்டு புடோல்நெய்யை
அளவிற் கூட்டி வைத்தபின்பு
சிறந்த பனிக்கதிர் பட்டாலீக்
கையால் முழுங்குத் தோல்போ
லறிந்து விழுஞ் சன்னியதும்
மயக்கந் தீராது பங்கங்கொள்
ளறிந்துபதே சன்னிக்கு பேச்சுங்
கொள்ளும் பிதற்று மவே! 365

மேற்சொன்ன குறிகுணங்களை அறிந்து புடோல் நெய்யை அளவாகச் சேர்த்து நிலவொளியில் வைத்து எடுக்கவும். பின் அதனை உள்ளங்கையில் வைத்து விழுங்க சன்னியும் மயக்கமும் தீரும்.

முகவாத சன்னியின் குணம்

கண்ணிற் தலையில் புருவத்தில்
காதிற் செவியிற் குத்துண்டாய்
பண்ணி பதிக்கு முகந்தன்னைப்
பகப்பற் றிலரே யதிருலகில்
எண்ணில் சொல்லு முகவாத
இடற்குஞ் சன்னி இதையன்றி

நன்றி சொன்னோம் சிலர்வாழ்
நாடுங் குணங்களிது கண்டாய்! 366

கண், தலை, புருவம், காது ஆகிய இடங்களில் தண்ணீர் கோர்த்துக் கொள்ளல், முகம் முழுவதிலும் நீர் கோர்த்தல், குத்தல் வலியுண்டாதல் ஆகியவை முகவாத சன்னியின் குறி குணங்கள்.

கபால சன்னியின் குணம்

காதுங் குத்தித் திமிரானவும்
கருத்த செருவில் ஈடாடி
போதத் திரிய வொட்டாது
பொன்னே யாகந் திமிரப்பெறும்
சேதப் படாம லிவைபலவுஞ்
செய்யும் யாகம் மெய்வேர்க்கும்
ஏது மிவைதான் போல சன்னி
இயம்புங் குணங்களிது வாமே! 367

காதில் குத்தல் வலி ஏற்பட்டு சில நேரங்களில் செயலிழந் திருத்தல், உடலைச் சுறுசுறுப்பாக இயங்க ஒட்டாது உடல் செயலிழந்து மரத்துப்போதல், உடல் வியர்த்தல் ஆகியவை கபால சன்னியின் குறிகுணங்கள்.

வாத சன்னியின் குணம்

சன்னி தோன்றில் வெளுத்தேறும்
காலுங் கையுஞ் சமித்தேனும்
நன்று நாவு சொற்றளர்ந்து
நாவு முன்னே குழறிவிடும்
என்னுஞ் செவிகள் சில்லென்று
இருக்குங் காயஞ் சோபிக்கும்
வண்ண மறிந்து கண்டிடவே
வாத சன்னி பகைபோமே! 368

உடல் வெளுத்தல், கை கால் நடுங்கல், நாக்கு தளர்ச்சியாகி சொல் செவ்வையாய் வராது குழறுதல், முன்னுக்குப்

பின் தொடர்பின்றி உளறுதல், காதுகள் சில்லிட்டுப்போதல், உடல் மினுமினுப்படைதல் ஆகியவை வாத சன்னியின் குறிகுணங்கள்.

உடம்பு கடுக்குந் தலைநோவாம்
உண்மை வேகங் கொண்டோமே
அடிம்பு வரிக்கும் பேயாக்கு
மான கைகால் தான்கடுக்கும்
நெடும்பு போல அறிவுகெடும்
நேரும் பலவிரை நிச்சயமே
வடிம்பு போல தான்முறுக்கும்
வாத சன்னி வகையாமே! 369

உடல் வலித்தல், தலை வலித்தல், பாதங்கள் அரிப் பெடுத்தல், கை, கால் வலித்தல், அறிவு கெட்டுப்போதல், அதனால் பலவிதமாய் வேறுபாடுகளுடன் பேசுதல், உடல் முறுக்குதல் ஆகியவை வாத சன்னியின் குறிகுணங்கள்.

நெல்லி தான்றி செங்கழுநீர்
நெடுங் கோஷ்டம் வெட்பாலை
புல்லுஞ் சீந்தில் கடுக்காயும்
போத வைந்தும் சமன்கொண்டு
எல்லா மருந்தும் பதின்கழஞ்சு
என்னு மிருநாழி நீருழக்காய்
நல்லாய் குடிக்க வாதசன்னி
நாடா துலகில் நாட்சொன்னோம்! 370

நெல்லி, தான்றி, செங்கழுநீர், கோட்டம், வெட்பாலை, சீந்தில், கடுக்காய் ஆகியவற்றைச் சமமாக எடுத்து அதாவது வகைக்கு 50 கி. எடுத்து 2.6 லி. தண்ணீரில் போட்டுக் குடிநீராக்கி 325 மி.லி. வீதம் குடிக்க வாத சன்னி தீரும்.

சன்னி வாதத்தின் குணம்

வெள்ளோக் காள மிகவுண்டாம்
வேர்க்கப் பார்க்கு மிகவ்ழைக்கும்

வெள்ளவக்க நாத்திவேர் பட்டையுடன்
கனத்த யிந்து திரிகடுகு
வள்ளா தேகு பழச்சாற்றில்
வீர வரைத்துப் பாக்களவு
கொள்ளா யுண்டை முலைப்பாலில்
குலையும் வாத சன்னியதே! 371

வாந்தி, கக்கல் இல்லாது ஓக்காளித்தல் அதிகமாதல், முற்றிய நாரத்தம் வேர்ப்பட்டை, இந்து, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றைச் சமஅளவு எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து 2.2 கி. அளவுள்ள உருண்டைகளாய் உருட்டி தாய்ப்பாலில் உரைத்துக் கொடுக்க வாதசன்னி குணமாகும்.

அவ்வுண்டை முலைப் பாலில்
ஆகும் நசிய மஞ்சினமும்
வவ்வா சன்னி வாதமது
வரவே வழியில்லை யென்றோடும்
மெய்வா யிந்திராணித் தயிலமது
வீறப் பண்ணும் வகைவிளம்ப
கைய்வாய் நிலவேம்பு ஆயில்பட்டை
கனத்த செங்கத்தாரி புங்கம்வேர்! 372

அவ்உருண்டையையே நசியமாகச் செய்து கொடுக்க சன்னிவாதம் எப்போதும் வராது. இந்திராணித் தைலத்தை மேற்பூச்சாகத் தடவவும். நிலவேம்பு, ஆயில்பட்டை, செங்கத்தாரி, புங்கம்வேர்,

கண்டங் காலி திரிபுரத்தான்
கனத்த வழுலை தென்னம்பால்
மிண்டாம் வேலிப் பருத்தி நொச்சில்
மிகுத்த நெருஞ்சில் விழிபிராய்
உண்டே ஆடாதோடை மணத்தக்காளி
உகந்த துளசிப் பாகலுடன்
மிண்டு சாரணை முதியான்கூந்தல்
மேவும் வன்னெற்று அவுரியுடன்! 373

கண்டங்கத்தரி, வழுதுணை, குப்பைமேனி, வேலிப் பருத்தி, நொச்சி, நெருஞ்சில், வீழி, பிராய், ஆடாதோடை, மணத்தக்காளி, துளசி, பாகல், சாரணை, முதியார்கூந்தல், அவுரி,

எருக்கு முதலா யிவையுடனே
மிகுத்த எண்ணெய் நாழிக்கு
நருக்கிச் சாறு உரியாக
நாடு மோரொன்று வகைகொண்டு
உருக்கி கசாயம் எண்ணெயுடன்
ஒன்று மான கடைமருந்தும்
....
வைய்த்திடும் வகைதான் வருத்தக்கேள்! 374

எருக்கு ஆகியவற்றின் சாறுகளையும் தேங்காய்ப் பாலையும் வகைக்கு 675 மி.லி. எடுக்க. 1.3 லி. எண்ணெய் சேர்க்க. அனைத்தையும் சேர்த் தெரித்துப் பின் அதில் போடும் கடைச்சரக்கு மருந்துகளின் பட்டியல் கீழ் வருமாறு.

தேவ தாரம் செங்கழுனீர்
தெளிந்த வசம்பு கோஷ்டம்
ஆவச் சதகுப்பை
ரோகணி யும்மும் மஞ்சள்
ஏவச் சந்தனம் ஏல மிலவங்கம்
இருசீரகம் கற்கடக சிங்கி
கோபச் சிறுதேக்கு பெருங்குரும்பை
குறித்ததி விடையம் திரிபலையும்! 375

தேவதாரம், செங்கழுநீர், வசம்பு, கோஷ்டம் சதகுப்பை, கடுகுரோகணி, மஞ்சள், சந்தனம், ஏலம், இலவங்கம், நற்சீரகம், கருஞ்சீரகம், கற்கடகசிங்கி, சிறுதேக்கு, பெருங் குரும்பை, அதிவிடையம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்,

அரத்தை கெந்தகம் நிலவேம்பு
ஆன செவ்வியம் திப்பிலியும்
வரைத்த யிந்து திப்பிலிமூல
மன்னு மிவையோ ரெண்ணெய் நாழி
இரைத்த கழஞ்சு பூநாகம்
இன்னுங் கோழிக் கார மிரண்டு
உரத்த பாம்பு மிருக ழஞ்சு
உகந்து வடித்துக் கொள்ளுவதே! 376

அரத்தை, கெந்தகம், நிலவேம்பு, செவ்வியம், திப்பிலி, இந்துப்பு, திப்பிலிமூலம் ஆகியவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடியாக்கவும். 1.3 லி. எண்ணெய் எடுக்கவும். பூநாகம் 5 கி., எனும் கோழிக்காரம் எனும் கோழிஎச்சம் 10 கி., பாம்புசட்டை 10 கி. எடுத்துப் பொடித்து எண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

உள்ளுங் கொள்ள மேல்பூச
உகந்த சன்னி வாதமுடன்
கள்ள வாதம் எண்பதுடன்
கருதுஞ் சன்னி பதிமூன்றும்
விள்ள யிருக்க யிடமில்லை
ஏகு மென்று மேவியபின்
கொள்ளக் கழஞ்சு எண்ணெயிது
குலைந்தே ஓடும் குறியாதே! 377

அதனை அளவறிந்து உட்கொள்ளவும், உடம்பில் பூசவும் செய்தால் வாதசன்னி, எண்பது வகை வாதம், பதிமூன்று வகை சன்னி குணமாகும். 5 கி. எண்ணெயை அளவாகக் கொள்ளலாம்.

தேங்காய்த் தைலம்

பொடுதலைச் சாறு நாழி
தேங்காய்ப்பால் குறுணி கொண்டு
இடுமே எண்ணெய் நாழிஉரி
இதுக்கு மருந்து இயம்பக்கேள்

திடமே வெள்வேல் தேவதாரம்
செழிக்க ஒரெழுத்து முக்கழஞ்சு கொண்டு
திடமாய் அரைத்துப் பதத்தில்வடி
தீருங் கழஞ்சு தினங் கொள்ளே! 378

பொடுதலைச்சாறு 1.3 லி., தேங்காய்ப்பால் 5.2 லி., எண்ணெய் 2 லி. ஆகியவற்றை ஒன்று சேர்த்துக் கொள்ளவும். வெள்வேல், தேவதாரம், இவற்றை வகைக்கு 15 கி. எடுத்து அரைத்துக் கலவையில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து அதில் 5 கி. அளவு உட்கொள்ளவும்.

கைப்புப் புளிப்புத் தான்விடவே
கனத்த பல்லுச் சூலையுடன்
மெய்ப்ப தாகத் தான்தீரும்
விலங்கு மிடை தீரும்
வைப்பு வரம்பு மில்லாமல்
மாறும் வியாதி யனேமுடன்
மெய்ப்ப தானஎண்ணெயென
விளம்பும் வகையென்று மேவியதே! 379

கசப்பு, புளிப்புச்சுவையை நீக்கவும். பல்சூலை நீங்கும். இவ்வெண்ணெயைக் கொள்ள பல நோய்கள் தீரும்.

வெடி சன்னியின் குணம்

காதுக் குள்ளே திரண்டெழுந்து
கதிக்க குதிவ லிப்புண்டாய்
சேதப் படவே முகந்தன்னைத்
திருக நாக்குத் தடுமாறும்
வேதப் படியே வெடிசன்னி
விழுந்தே இருக்கும் செவியெழும்
பேதப் படவே வியாதிதன்னைப்
பெருக்கப் பிரித்துப் பேசுமதே! 380

காதுக்குள் வலியானது அதிகமாக எழும்புதல், குத்தல் வலி ஏற்படுதல், முகத்தைக் கோண வைத்தல், நாக்கு

தடுமாறுதல், செவியெழுச்சி ஆகியவை வெடிசன்னியின் குறிகுணங்கள்.

குடிநீர்

கடுக்காய் கருகப் புடமிட்டு
கதிக்க வதனைப் பொடிசெய்து
மிடுக்கா மிந்து திரிகடுகு
மிதுவும் வெச்சில் பொடிசெய்து
முடிக்குஞ் சதாவேரிக் கிழங்குத்தண்ணீர்
சொல்லுங் கசாய மிடவீராய்
மிடுக்க முள்ள வெடிசன்னி
மேவா தழலும் விரும்பியதே! 381

கடுக்காயினைப் புடம் வைத்தெடுத்துப் பொடி செய்து கொள்ளவும். பிறகு அதனுடன் இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றையும் பொடித்துச் சேர்த்து சதாவேரிக் கிழங்குச் சாற்றையும் சேர்த்துக் குடிநீராக்கி உட்கொள்ள வெடிசன்னி குணமாகும்.

உற்ற மதுரம் வெளுத்தபிசின்
உன்னும் ரசவல்லி யுடனாகம்
மற்றமா தேவி யுடன்தாது
வண்மை திரிகடுகு மகிழ்கொண்டு
பத்தி யுடனே நன்னாரி
பருத்த ஆவாரை நாயுருவி
உள்ள முதியான் நிலவேம்பு
உண்ணீர்க் காயம் வெடிசன்னி! 382

அதிமதுரம், வெளிச்சிப்பிசின், இரசவல்லி, நாகம், அரிதாரம், தூதுவளை, சுக்கு, மிளகு, திப்பிலி, நன்னாரி, ஆவாரை, நாயுருவி, முதியார் கூந்தல், நிலவேம்பு, பெருங்காயம் ஆகியவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கி உட்கொள்ள வெடிசன்னி குணமாகும்.

சிலேத்தும சன்னியின் குணம்

கறடு முதுகு தலைப்பிடரி
காணும் பக்கம் ரெண்டுடனே
வருடி கைகால் புண்போலே
வருமே இருமல் ஆகாரம்
தருடி கொள்ளா மூக்குடனே
தாணு நாக்கு புண்போலே
மிருடி சேற்றும சன்னியிது
என்றே பேரா மியம்புவரே! 383

முதுகு, தலை, பிடரியின் இரண்டு பக்கங்களும், கைகால் ஆகியவற்றிலும் புண்போல் வருதல், இருமுதல், உணவு ஏற்காமை, மூக்கு, நாக்கு இவை புண் போலாதல் ஆகியவை சிலேத்தும சன்னியின் குறிகுணங்கள்.

நவசன்னியின் குணம்

அலற்றும் பித்தும் நகைமரணம்
ஆகு மோகனி அயந்தோடே
நலத்த வாதம் சேற்றுமத்தன்
நாடும் பித்த சன்னியுடன்
இலத்த வெடிசன்னி இவையுடனே
என்றும் நவசன்னி இதுவாகும்
நலத்த அசாத்தி மிதுவென்றே
நாடு முலகில் நருளோரே! 384

அலற்றுதல், பிதற்றுதல், சிரித்தல், மரணம் சம்பவித்தல், வாதம், சிலேத்துமபித்தம் அதிகமாதல், வெடிசன்னி ஆகிய அனைத்தும் நவசன்னியின் குறிகுணங்கள். இது அசாத்திய மாகும் என்பர்.

பல சன்னி அறியும் படி

கருத்துறு சன்னி தன்னை
கசங்கிட அறிய வேண்டி

குத்து ராக்க மத்தை
நேரஅரைத்து வாய்தனி லூட்டி
திருத்தமாய் கருமை கண்டால்
தீதுறு சன்னி யாகும்
பெருத்தது வெளுப்ப தாகில்
பின்னை யதல்ல வென்றே! 385

சன்னியின் வகைகள் அறிவதற்கு குந்துருக்கத்தை அரைத்து வாயில் போட கருப்பானால் தீமைதரும் கொடிய சன்னி என்றும் வாய்வெண்மையானால் வேறு வகை என்றும் அறிந்து கொள்ளலாம்.

பல சன்னிக்கும் சந்திரப் பிரயோகம்

சாதி நெல்லி திப்பிலியும்
தனிகோ ரொன்று முக்கழஞ்சு
தீதே யிலாத கெந்தகநாபி
தீரா யோரொன் றொருகழஞ்சு
போத யிஞ்சிச் சாற்றரைத்து
பொருந்தும் குன்றி பிரமாணம்
மாதே யிஞ்சிச் சாற்றிலிட
மருந்து நிற்கும் பிணிகேளீர்! 386

சாதிக்காய், நெல்லிக்காய், திப்பிலி ஆகியவற்றை வகைக்கு 15 கி. எடுத்துக் கொள்ளவும். கெந்தகம், நாபி இவற்றை வகைக்கு 5 கி. எடுத்து இஞ்சிச்சாறு விட்டு அரைத்து 130 மி.கி. அளவுள்ள உருண்டைகளாகச் செய்து இஞ்சிச்சாற்றில் இழைத்துக் கொடுக்கவும்.

கேளீர் சந்திரப் பிரயோகம்
கிளர்ந்த சன்னி பதிமூன்றும்
நாளு முதலில் வாதம்பல
நன்றாய்த் தீரும் தப்பாது
ஆனா மாவின் பாலுடனே
அரிசி கூட தான்போட்டு

மூலும் பசிக்குத் தான்கஞ்சி
மூன்னோ ருரைத்த மொழிப்படியே! 387

இச்சந்திரப்பிரயோகம், பதின்மூன்று சன்னி வகைகள், பலவகை வாதங்களைத் தீர்க்கும். பசும்பாலையும் அரிசியையும் சேர்த்துக் கஞ்சியாகக் காய்ச்சிக் குடிக்கவும்.

குக்குட உருண்டை

திரி கடுகு ரோகணியும்
தியந்த இலுப்பைப் பூவுடனே
மரியாங் கோழி முட்டையது
மஞ்சள் கருவும் சரிகொண்டு
இறையா முலைப்பால் விட்டரைத்து
இயன்ற சுண்டைக் காயளவு
குறையா திஞ்சி முலைப்பாலில்
கொடுக்க உருண்டை குணமாமே! 388

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, இலுப்பைப்பூ, கோழிமுட்டையின் மஞ்சள்கரு ஆகியவற்றைச் சமஅளவெடுத்து தாய்ப்பால் ஊற்றி அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள உருண்டை களாய்ச் செய்து இஞ்சி, தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்கவும்.

சூசிகா பரணக் குளிகை

கஞ்சா இலையுங் கெந்தகமுங்
கனத்த அபினும் வெண்காரம்
மிஞ்சா வூமத்தை விரைசாதி
மிகுத்த எகினப் பொடியுடனே
தஞ்சப் படவே கொடுவேலி
தனிந்த நாபி இரதமுடன்
நஞ்சப் பிறையணி கண்டானார்
நமக்கே உரைத்தார் நலமாக! 389

கஞ்சா இலை, கந்தகம், அபின், வெண்காரம், ஊமத்தை விதை, சாதிக்காய் ஆகியவற்றைப் பொடிசெய்து கொள்ளவும்.

புளி பொடியுடன், கொடிவேலி, நாபி, இரசம் இவற்றைச் சுத்தித்துப் பொடிக்கவும்.

எல்லா மருந்தும் சமன்கொண்டு
இதமாய் பொன்னூமத்தைச் சாற்றரைத்து
நலமாய்ப் பழுத்த மிளகளவாய்
நவிலுஞ் சூசிகா பரணமதை
சொல்லார் தோஷம் சன்னிபல
சுகித்த இஞ்சி நொச்சிலிலை
மல்லார் வீசூழி பாண்டுசூலை
மருவுந் தேனில் அதிற்கொள்ளே! 390

ஆகியவற்றைச் சமமாய் எடுத்துப் பொன்னூமத்தைச் சாற்றால் அரைத்து மிளகளவுள்ள குளிகைகளாய்ச் செய்து கொள்ளவும். தோடம் சன்னிக்கு இஞ்சிச்சாற்றிலும் நொச்சி யிலைச் சாற்றிலும் விசூழி, பாண்டு சூலைக்குத் தேனிலும் இழைத்துக் கொடுக்கவும்.

சூசிகா பரணக் குழம்பு

இரதங் கெந்தக மரிதாரம்
என்று மனோசிலை நேர்வாளம்
துரந்த கெவுரி துத்தமுடன்
சொல்லும் நாபி வெண்காரம்
நிறநற பொட்டிலி யவட்சாரம்
நீடுஞ் சத்தி யெவச்சாரம்
உசித தாம்பிர பற்பமுடன்
உண்ணும் ஏலஞ் சரிகொள்ளே! 391

இரசம், கெந்தகம், அரிதாரம், மனோசிலை, நேர்வாளம், கெளரி, துத்தம், நாபி, வெண்காரம், பொட்டிலுப்பு, எவட்சாரம், சத்திச்சாரம், தாமிரபற்பம், ஏலம் ஆகியவற்றைச் சமமாய் எடுக்கவும்.

கொள்ளீர் பாம்பு பிச்சொருநாள்
கோல ஊமத்தைச் சாற்றொருநாள்

மெள்ள எருமை மயில்பிச்சு
மீள ரெண்டு நா ளரைத்து
கொள்ள சன்னி விஷமூர்ச்சை
கோலத் தலையில் குடோரியிட்டு
மெள்ளப் பணவிடை மருந்திட
(பாயிடுமே கயவியாதி யதே)! 392

பாம்புப் பித்தினைச் சேர்த்து ஒரு நாளும் ஊமத்தைச் சாற்றில் ஒருநாளும் எருமை, மயில் பித்தினைச் சேர்த்து இரண்டு நாட்களுமாக அரைத்துத் தலையில் கீறி 488 மிகி. அளவு வைத்துக் கட்ட சன்னி, விஷமூர்ச்சை நோய் குணமாகும்.

எருக்கம் பழுப்பைத் தலை
குடோரி யிட்டுச் சிரத்தில்
வருக்கம் பாவட மிட்டுக்கட்டி
மருவுஞ் சட்டியில் தணல்கொண்டு
பெருக்க வைத்துக் குப்பிக்க
பெருகுஞ் சன்னி ஷயம்தோஷம்
இருக்கத் தானு மிடமில்லை
என்றே யோடியிடு வதுவே! 393

தலையில் கீறி எருக்கில் பழுப்பிலையைப் பாவட்ட மாகக் கட்டிக் கொள்ளவும். சட்டியில் நெருப்பை இட்டு இதமாக ஒற்றடம் வைக்க சன்னி, சயம், தோடம் அனைத்தும் தீரும்.

குழம்பு

பின்னும் குழம்பு துத்தம்
துரிசி நேர்வாளம் கடுகுரோகிணி
கொல்லும் நாபி வெண்காரம்
அத்தா தந்த இரதமுடன்
ஆன கெந்தக மரிதாரம்
வொத்த மனோசிலை பொன்நிமிளை

இன்னும் முந்திரிகைப் பழம்முகந்து
மெத்த சமதான் கறிகொண்டு
அரைத்தெடுத்த பின்பு
மேவுங் கற்றாழைச் சாற்றரையே! 394

துத்தம், துருசு, நேர்வாளம், கடுகுரோகிணி, நாபி, வெண்காரம், இரசம், கெந்தகம், அரிதாரம், மனோசிலை, பொன்னிமிளை, முந்திரிகைப் பழம் ஆகியவற்றைச் சமமாக எடுத்து கற்றாழைச் சாறூற்றி அரைத்துக்கொள்ளவும்.

அரைத்த குழம்பு யியமது
ஆன சிமிளில் தானடைத்து
வரைத்த நல்விஷ மூர்ச்சை
மற்று முயலன் காக்கைவலி
சிரைத்துத் தலையைக் குடோரியிட்டுச்
சேரக் குன்றிப் பிரமாணம்
தரித்த சிரத்தில் இட்டுவிட
தயங்குஞ் சன்னி யானவையே! 395

அரைத்த விழுதை ஈயச் சிமிளில் அடைத்துப் பத்திரப் படுத்திக் கொள்ளவும். விஷமூர்ச்சை, முயல்வலி, காக்கை வலி ஆகியவற்றிற்குத் தலையில் கீறி 130 மி.கி. அளவு இக்குழம்பைவிட தீரும். மேலும் சன்னி வகைகள் பலவும் குணமாகும்.

நாராயணக் கசாயம்

பிரமி முந்திரிகை வசம்புடனே
பேணு முத்தக் காசுகொன்றை
உரமித் தண்ணீர் மிட்டானும்
உன்னும் ரோகணி திரிபலையும்
வரம நின்பம் நிலவேம்பு
வாழுஞ் சிறுமுட்டித் திரிகடுகு
தரம தான கொடுவேலி
தயங்கு பெருவாகை பெருங்குமிழே! 396

பிரமி, முந்திரிகை, வசம்பு, கோரைக்கிழங்கு, கொன்றை, தண்ணீர்விட்டான், கடுகுரோகணி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வேம்பு, நிலவேம்பு, சிற்றாமுட்டி, சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலி, பெருவாகை, பெருங்குமிழ்,

தேவதாரம் பாதிரி முன்னை
தேயந்தி வில்வம் சித்தமல்லி
ஏவ மில்லா பேராமல்லி
இகழுங் கண்டங் காலியுடன்
தாவ நெருஞ்சில் வழுதிலையுந்
தந்த மருந்தோர் கழஞ்சுகொண்டு
பாவத் தீரிரு நாழியது
பலுக உழக்காய்த் தான்குறுக்கி! 397

தேவதாரம், பாதிரி, முன்னை, வில்வம், சிற்றாமல்லி, பேராமல்லி, கண்டங்கத்தரி, நெருஞ்சில், வழுதிலை ஆகியவற்றை 5 கி. எடுத்து 2.6 லி. தண்ணீருற்றி 325 மி.லி.யாய் முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

இக்க சாயந் தன்னுடனே
ஏரண்ட பெண்ணு ரித்து
தக்க கசாயம் உட்கொள்ள
தந்தஞ் சய ரோகமெல்லாம்
ஒக்க நமக்கு மிடமில்லை
ஓடுஞ் சன்னி பலதோஷம்
நக்க நாளும் ஒன்பதுடன்
நாராயண கசாயம் நல்குவதே! 398

இக்குடிநீருடன் ஆமணக்கு விதைகளை இடித்துச் சேர்த்து உட்கொள்ள பல்நோயும், சயநோயும் தீரும். சன்னி, பலவகைத் தோடம் ஆகியவை இக்குடிநீரை ஒன்பது நாட்கள் உட்கொள்ள தீரும்.

பிறலாப தாக மோகமுடன்
பெருவாத சூலம் மறகோசம்

இறைவா தாகம் சலதோஷம்
இயன்ற தனுர்வாத சீதசுரம்
மறவா வாத பித்தமுடன்
மன்னும் பிதற்றிப் பேசுறதும்
இறைவா தீருமிது வன்றே
இயங்கும் நாராயணக் கசாயமிதே! 399

பிரலாபம், தாகம், மோகம், பெருவாதம், சூலம், கோச நோய்கள், சலதோடம், தனுர்வாதம், சீதசுரம், வாதபித்தம், பிதற்றுதல் ஆகியவை இக்குடிநீரால் குணமாகும்.

இராமபாணக் கசாயம்

இரு மஞ்சள் முத்தக்காசு
இயன்ற கடுகு ரோகணியும்
வருமே சிறுபுடோல் திரிபலையு
மன்னும் வேம்பு கசாயமதே
தகுமே இருநாழி நீருழக்காய்
தானே குறுகக்காய்ச்சி மெள்ள
பருகக் காய்ச்சிஉள் கொள்ளீர்
பலுகு ராம பாணமதே! 400

மஞ்சள், விரலி மஞ்சள் ஆகிய இரண்டு வகை மஞ்சள், கோரைக்கிழங்கு, கடுகுரோகணி, சிறுபுடல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வேம்பு ஆகியவற்றைச் சமஅளவெடுத்து 2.6 லி. தண்ணீரூற்றி 325 மி.லியாய்ச் சுருக்கி முறைப்படி குடிநீராய்க் காய்ச்சுக.

திரிகுலாதிக் கசாயம்

தகரம் அமுக்குராய் பற்படாகம்
மன்னுஞ் சங்கு திப்பிலியும்
இதமாந் தேவ தாரமுடன்
என்னும் முத்தக்காசு கொன்றை
விதமா முத்தக்காசு கொன்றை
விளங்கும் பூசணித் தண்டுடனே

பதமாம் முந்திரிகைப் பழமுடனே
பகருந் திரிகுல கசாயமதே! 401

தகரம், அமுக்குரா, பற்பாடகம், சங்கு, திப்பிலி, தேவதாரம், கடுகுரோகணி, கருங்காலி, கோரைக்கிழங்கு, கொன்றை, பூசணித் தண்டு, முந்திரிகைப் பழம் ஆகியவற்றைச் சேர்த்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

சத்திக் கசாயம்

முத்தக் காசு பெருவாகை
முன்னை பாதிரி வில்வமுடன்
சிற்றா மல்லி பேராமல்லி
சிறுவ ழுதிலை கண்டங் காலி
அத்தா சொன்ன இருவேலி
ஆன நெரிஞ்சி அவைகொண்டு
சத்திக் கசாயம் தான்கொடுக்க
சன்னி பலவுந் தான்போமே! 402

கோரைக்கிழங்கு, பெருவாகை, முன்னை, பாதிரி, வில்வம், சிற்றாமல்லி, பேராமல்லி, சிறுவழுதிலை, கண்டங்கத்தரி, இருவேலி, நெருஞ்சில் ஆகியவற்றைச் சமமாக எடுத்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க பலவகைச் சன்னி தீரும்.

நசியம்

திரி கடுகு இந்துப்பு
சேர்ந்த கொம்மட்டி மாதுளைதான்
அறிவே அப்பழச் சாற்றரைத்து
ஆன நாக்கி லதுவிட்டு
குறியாம் அரசிலை மூக்கில்
கோல நிசயம் தான்பண்ண
நிறை யாளு பதிமூன்றும்
நீண்ட விஷமும் நிச்சயமாய்

குறைவே இன்றித் தான்திரு
கோல நசிய மிதுவாமே! 403

சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கொம்மட்டி, மாதுளை, இவற்றின் சாறு ஆகியவற்றை எடுக்க. இச்சாற்றில் சரக்குகளை அரைத்து மூக்கில் நசியமாக விட பதின்மூன்று வகைச் சன்னியும் விடமும் தீரும்.

நிலவேம்பு திப்பிலி இந்து
நீழ்பெருங் காயம் வசம்பாகும்
குலமா மிளகு இலுப்பைப்பூக்
கோல தேனில் தானரைத்து
இலகில் மூக்கில் அரசிலைப்பால்
இயன்ற நசியம் தான்பண்ண
அலக தான நவசன்னி
அனேகர் வியாதி தீர்ந்திடுமே! 404

நிலவேம்பு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், வசம்பு, மிளகு, இலுப்பைப் பூ ஆகியவற்றை எடுத்துத் தேனில் ஊற்றி அரைத்து அரசிலைப் பாலையும் சேர்த்து மூக்கில் நசியமாக விட ஒன்பதுவகைச் சன்னிகள் குணமாகும்.

திரிகடுகு பேய்தும்பைச் சாற்றில்
சேர்ந்த வேம்பு தும்பையுடன்
அறிவாய் வெள்ளுள்ளிச் சாறதனால்
ஆகு நசியம் அவையொன்றாம்
நெறிவாம் திப்பிலி நாயுருவி
நேர்த்த வெந்நீர் நசியத்தாம்
குறியாம் மாதளம் பூச்சாறு
..................தேனிலிடே! 405

திரிகடுகு, பேய்த்தும்பை, வேம்பு, தும்பை எடுத்து வெள்ளுள்ளிச் சாறூற்றி அரைத்து மூக்கில் நசியமாக விடவும்.

திப்பிலி, நாயுருவியை வெந்நீர் சேர்த்தரைத்து மாதுளம்பூச்சாறு அல்லது தேனில் சேர்த்துக் கொடுக்க சன்னி தீரும்.

திரிபு ரத்தான் முருங்கையிலை
தீர வரைத்து வெச்சொட்டி
அரிய சனறில் வேகவைத்து
அரசி லையில் நசியமிடக்
கடுகு சன்னி பதிமூன்றும்
காய தோஷம் பலவகையும்
அருகில் நில்லா தகன்றிடுமே
ஆன நசிய மதுகண்டு! 406

சிவனார்மூலி, முருங்கையிலை ஆகியவற்றை அரைத்து இலேசாகச் சூடுபடுத்தி அரசிலையில் வைத்து மூக்கில் நசியமாக இட பதின்மூன்று வகைச் சன்னியும் தோடம் பலவகையும் தீரும்.

தூபம்

அகில்கற் பூரம் உதிரிசந்தனம்
மடையக் கூட்டித் தூமிட வேதான்
இகலிம் பச்சைப் பாம்பு கண்டம்
என்றும் பச்சோந்தி இவையு லர்த்தி
அகலச் சட்டி தணல்கொண்டு
ஆகம வேகத் தூமிட
நகமே யில்லாப் பலசன்னி
ஓடுந் தோஷம் ஒருபொழுதே! 407

அகில், கற்பூரம், சந்தனம் ஆகியவற்றைச் சேர்த்து தூபமாக இட்டு அப்புகையை இழுக்க சன்னி பலவகை தீரும். பச்சைப்பாம்பு கண்டம், பச்சோந்தி, ஆகியவற்றைக் காயவைத்து முறைப்படி தணலிலிட்டு அப்புகையைக் காட்ட பலவகைச் சன்னிகளுந் தீரும்.

அஞ்சனம்

வெண்காரம் அலரி யிலைக்காம்பு
மிகுத்த மனோசிலை திப்பிலியும்
கண்காணத் தேசிச் சாற்றில்
கதிக்க அரைத்துக் கண்ணிலிட
பண்பான மகிழம்விரை மிளகரணை
பருநேர் வாளம் படியாக
எண்காண தேசிச் சாற்றில்
இதமாக வரைத்துண்டை எண்ணெயிலிடவே! 408

வெண்காரம், அலரியிலையின் காம்பு, மனோசிலை, திப்பிலி ஆகியவற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து கண்ணில் மையாக இடவும். மகிழம்விதை, மிளகரணை, நேர்வாளம் இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து இவ்வுருண்டையை எண்ணெயில் இழைத்துக் கண்ணில் இடவும்.

கோட்டம் வெள்ளைக் காக்கணான்
குலவும் விரையும் திரிகடுகும்
நிட்டு மஞ்சள் வசம்புடனே
நிறையாம் வெள்ளாட்டுக் கோமியத்தில்
ஒட்டி அரைத்துத் திரிபுரத்தான்
உகந்த நொச்சில் முலைப்பாலில்
திட்டு மிஞ்சிச் சாற்றாலும்
திகழும் கண்ணில் தானிடவே! 409

கோட்டம், வெள்ளைக் காக்கணான் விதை, சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், வசம்பு ஆகியவற்றை வெள்ளாட்டுக் கோமியத்தில் அரைத்துக் கொள்ளவும். சிவனார் மூலி, நொச்சி, தாய்ப்பால், இஞ்சிச்சாறு ஆகியவற்றில் இழைத்துக் கண்ணில் கலிக்கமாக இடவும்.

முன்னங் காலில் பெருவிரல்மேல்
முசியா ரடசை தானிடுமே

பின்னுங் கண்ணில் தானிடவே
பெருத்த வசம்பு மனோசிலையும்
நன்ன வாகை விரையிந்து
நயந்த மிளகு திப்பிலியும்
பின்னத் தேசிச் சாற்றரைத்து
இச்சா ரதனா லரைத் திடவே! 410

வசம்பு, மனோசிலை, வாகை விதை, இந்துப்பு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை எலுமிச்சம்பழச்சாறூற்றி அரைத்து காலின் பெருவிரலின் மேல் தடவவும். கண்ணில் ஊற்றவும்.

புகை மருந்து

சிறுவழு திலைவேர் மயிற்பீலி
சேருங் கறுவா பூசணிவேர்
குறுகா வேருக்கு பீநாறி
கோலப் பாம்பின் கண்டமுடன்
இறுகும் மந்த கிலுகிலுப்பை
எலுமிச்சை நார்த்தை கழக்கொடிவேர்
மறுகாத் துகதி கொடிவேலி
மகிழ்ந்த நொச்சில் ஊமத்தை! 411

சிறுவழுதிலை வேர், மயிற்றோகை, பூசணிவேர், பீநாறி, பாம்புக் கண்டம், கிலுகிலுப்பை, எலுமிச்சை, நாரத்தை கழற்கொடியின் வேர், கொடிவேலி, நொச்சி, ஊமத்தை,

ஒரநார் மருளு மத்தை
ஆன காரவள் ஆடாதொடை
வரமே புரியும் நன்னாரி
மகிழ நாயுருவி மிளகரணை
உரமாம் அமுக்கிராய் முருங்கைவேர்
உகந்த கடுகு பெருங்காயம்
மருநேர் வசம்பு வெள்ளுள்ளி
மகிழ்வேர்க் கொம்பு தன்னுடனே! 412

மருளூமத்தை, ஆடாதோடை, நன்னாரி, மகிழம், நாயுருவி, மிளகரணை, அமுக்குரா, முருங்கைவேர், கடுகு, பெருங்காயம், வசம்பு, வெள்ளைப்பூண்டு, வேர்க்கொம்பு எனும் சுக்கு,

பச்சை நாபி வெண்தோன்றி
பருகு மிவைதான் சமன்கொண்டு
இச்சை யுடனே தானரைத்து
இயன்ற சீலையில் தான்பூசி
வைச்ச சீலைவேர் மருந்து
மருவத் திரிதந்துப் பந்தம்போல்
இச்சை யுடனே அஞ்சுவகை
எண்ணெய் தோய்த்து புகைகாட்டே! 413

நாபி, வெண்தோன்றி ஆகியவற்றைச் சமமாக அரைத்து அவ்விழுதைத் துணியில் தடவி திரியாகத் திரித்து பந்தாக உருட்டிக் கொள்ளவும். ஐந்து வகை எண்ணெயை ஊற்றி திரியை எரித்து அப்புகையைச் சுவாசிக்க சன்னி தீரும்.

பேய்ப்புடோல் முத்தக் காசு
பெருகிய வசம்பு தானுள்ளி
தேய்த்திடும் தேவ தாளி
தெய்வாம் நல்ல மரமஞ்சள்
வாய்த்து சுட்டி டித்து
வறுத்துக் கட்ட
போயற போமே சன்னிப்
பொடி படும்பூ தலத்தே! 414

பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, வசம்பு, உள்ளி, தேவதாளி, மரமஞ்சள் ஆகியவற்றைச் சேர்த்து இடித்து வறுத்துப் பொடித்து சன்னிக்குப் புகையூட்டும் பொடியாகப் பயன்படுத்தலாம்.

முட்டை யோடு கழல்பருப்பு
முசியா பொடிசெய்து சீலைதனில்
விட்டுத் திரித்துப் புகைகாட்ட
விளங்கும் குக்குடப் புகையாகும்

வாட்ட ரவித்துப் புகையாகும்
மருவும் பூநாக சாரணைவேர்
இட்ட பச்சைப் பாம்புடனே
இசைந்த நறும்பி இவையெல்லாம்! 415

முட்டையோட்டினையும் கழற்சிப் பருப்பையும் சேர்த்துப் பொடித்துத் துணியில் கட்டி திரியாகச் செய்து, பத்து வறட்டிக்கான நெருப்பில் காட்டி புகைக்கவும். பூநாகம், சாரணைவேர், பச்சைப்பாம்பு, நறும்பிசின்,

காய முருவி வெய்யகஞ்சா
கனத்தக மிட்ட பெருங்காயம்
ஆயந் தாயைக் கொன்றானும்
அருளிரு சீரக மிளகழிஞ்சில்
மாய யில்விரை களெல்லாம்
மகிழச் சமனாய் தான்கொண்டு
ஒய நோகப் பொடிசெய்து
இடுமே தணலில் புகையாமே! 416

பெருங்காயம், கஞ்சா, வாழை, சீரகம், மிளகு, அழிஞ்சில், ஆகிய கடைச்சரக்குகளைச் சமனெடுத்துப் பொடித்து அனலில் போட்டுப் புகைக்க சன்னி குணமாகும்.

ஈஞ்சில் பங்கம் பாளைவேர்
இசைந்த ஏரண்டம் கொடிவேலி
பாஞ்சக் கொடிக்கழல் நிலாவகை
பருத்த மீசுர மூலியுடன்
காஞ்ச கோழி எச்சமுடன்
கதிக்க சமனாய் தான்கூட்டி
தீஞ்ச எண்ணெய் விளக்கேற்றி
திரியைக் கொளுத்திப் புகைகாட்ட! 417

பங்கம்பாளைவேர், ஆமணக்கு, கொடிவேலி, கொடிக் கழல், நிலவாகை, ஈசுரமூலி, கோழியின் எச்சம் ஆகியவற்றைச் சமமாய் எடுத்துப் பொடித்துத் திரியாகத் திரித்து வைக்கவும்.

எண்ணெயில் விளக்கேற்றி இத்திரியைப் பற்றவைத்து புகையைப் பிடிக்க சன்னி குணமாகும்.

பூசு மருந்து

ஆவாரை பொன்னாங் காணி
அழிஞ்சில் வேளை கொன்றையுடன்
ஏவாச்சாரம் மூவிலை நொச்சில்
இரும்பிலி வட்டத் திப்பிலியுடன்
மேலா பெருமுட்டி சீந்தில்
வெட்பூ லாமுத் தெருக்கு
பாவாத் தும்பைத் தமித்தை
பருகுந் துவரை துராய வேம்பும்! 418

ஆவாரை, பொன்னாங்காணி, அழிஞ்சில், வேளை, கொன்றை, எவச்சாரம், மூவிலை நொச்சி, வட்டத்திப்பி, பேராமுட்டி, சீந்தில், வெட்பூலா, முத்தெருக்கஞ் செவி, தும்பை, துவரை, துராய், வேம்பு,

பெருங்காய மஞ்சள் கும்மட்டி
பேணு மிதுவும் கோட்டமுடன்
நருங்கா தேவ தாரமிவை
நன்றாம் எருக்கம் பாலரைத்து
மருங்கே உடம்பு ரோகமெல்லாம்
வருகப் பூசும் பலசன்னி
இருங்கோ யிருங்கோ ளெனவிட்டு
இயங்கும் பலசன்னி யிப்பொழுதே! 419

பெருங்காயம், மஞ்சள், கும்மட்டி, கோட்டம், தேவதாரம் ஆகிய மருந்துச் சரக்குகளை எருக்கம்பால் ஊற்றி அரைத்து உடல் முழுதும் தேய்த்து விட பலவகைச் சன்னிகள் தீரும்.

எருக்கம் பால்செம் பரத்தைப்பூ
என்னுங் கோஷங் கொடிவேலி
பெருத்த யிய்யங் கூடரைத்து
பேணி மேலே பூசுவது

திருத்தமான இலந்தை யிலை
செய்ய கடல்நுரை யிவையரைத்து
அருந்துங் காலில்தான் பூசு
ஆறும் பலசன்னி ஆகுமதே! 420

எருக்கம்பால், செம்பரத்தைப்பூ, கொடிவேலி ஆகியவற்றைச் சேர்த்தரைத்து உடலின் மேல் பூச சன்னி குணமாகும். இலந்தை இலை, கடல் நுரையை அரைத்துக் காலில் பூசிவிட பலவகைச் சன்னியும் தீரும்.

மிளகு திப்பிலி அமுக்குராய்
வெள்ளுள்ளி இலுப்பைப் பூவரைத்து
இளக வரைத்துப் பூசுவது
எண்ணு மருந்திவை கண்டாய்
களப்ப பூங்குழல் மதிமானே
காணும் வகையள கண்டிடவே
வளபமாக மேல்பூசிர் மாறு
பல சன்னி மாய்வதே! 421

மிளகு, திப்பிலி, அமுக்குரா, வெள்ளுள்ளி, இலுப்பைப் பூ ஆகியவற்றை அரைத்து உடலில் பூச பலவகைச் சன்னிகள் குணமாகும்.

காதில் கட்ட

அலரி திப்பிலி இந்துப்பு
அரைத்துக் காதில் கட்டிடவே
இலகி யான காவேளை
என்றும் வேளை யிவையாகும்
அலக யிதுவே மருந்தென்று
அரைத்துக் காதில் தான்கட்ட
உலக மில்லாச் சன்னிபல
ஒடுங் கண்டீர் உலகோரே! 422

அலரி, திப்பிலி, இந்துப்பு இவற்றைச் சேர்த்தரைத்துக் காதில் பூசி கட்டிவிடவும். காவேளை, வேளை இவற்றைச்

சேர்த்தரைத்து காதில் வைத்துக்கட்ட பலவகைச் சன்னியும் தீரும்.

அரக்கெண்ணெய்

சிற்றா முட்டி பொன்மெழுகு
சிறந்த முக்குராய் வகைமூன்றும்
மெத்தப் பதக்கு நீர்விட்டு
மேவக் காய்ச்சி நாலிலொன்றாய்
வைத்த தயிர்நீ ரிரு நாழி
வண்ண எண்ணெய் நாழியுடன்
ஒத்த அமுக்குராய்..........
உகந்த அரத்தை சிறுமுட்டி! 423

சிற்றாமுட்டி, பொன்மெழுகு, அமுக்குரா இவற்றை 10.7 லி. தண்ணீருற்றி குடிநீராய்க் காய்ச்சி 2.6 லிட்டராய்ச் சுருக்கிக் கொள்ளவும். தயிர்த்தண்ணீர் 2.6 லி., எண்ணெய் 1.3 லி. சேர்த்துக் கொள்ளவும். அமுக்குரா, அரக்கு, சிற்றாமுட்டி,

கோஷ்ட்ட முத்த மரமஞ்சள்
குலவுங் கடுகு ரோகணியும்
வாட்ட பெருங்காயம் பொன்மெழுகு
வாழு மதுரம் தேவதாரம்
நீட்டு நன்னாரி இலாமிச்ச
மிவை யோரொன் றிருகழஞ்சு
கூட்டி அரைத்துப் பதத்தில்வடி
கொள்ளுங் கழஞ்சு அரக்கெண்ணெய்! 424

கோட்டம், கோரைக்கிழங்கு, மரமஞ்சள், கடுகுரோகணி, பெருங்காயம், பொன்மெழுகு, அதிமதுரம், தேவதாரம், நன்னாரி, இலாமிச்சு ஆகியவற்றை வகைக்கு 10 கி. எடுத்தரைத்துக் கலவையில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ளவும். 5 கி. எண்ணெயை வெளிப்பிரயோகமாக உபயோகிக்கவும்.

சீதாங்கத் தைலம்

எருக்கு ரெண்டு திரிபுரத்தான்
இயன்ற நொச்சி கண்ணியிலை
வருக்க வேளை சதுரக்கள்ளி
மகிழுந் தும்பை சிறுமுட்டி
இருக்கு முதியான்கூந்தன் முன்னை
இயன்ற கொடிவேலி எலுமிச்சை
வருக்கத் தேசிப் பழச் சாறு
வசம்பு வெள்ளுகாய் யிலைவேறே! 425

எருக்கிலை இரண்டு, சிவனார்வேம்பு, நொச்சி, கண்ணி இவற்றின் இலைகள், வேளை, சதுரக்கள்ளி, தும்பை, சிற்றாமுட்டி, முதியோர் கூந்தல், முன்னை, கொடிவேலி, எலுமிச்சம், வசம்பு, வெள்ளுகாய்,

இந்நீர் பெருங்காயம் இந்துப்பு
இவை நாழி எண்ணெய்க்கு
யிருகழஞ்சு வளமாய்க் கூட்டி
வடித்துடனே மகிழு நாள்கழஞ்சு
கொள்ள யதன்மேல் யாகம்
சறுவாங்கம் தயங்கா திடவே
திரவள்கேள் யிளகா கிராணிமந்த
மூர்ச்சை எண்பது வாதமிவை தீரும்! 426

பெருங்காயம், இந்துப்பு ஆகியவற்றை வகைக்கு 10 கி. எடுத்து எலுமிச்சம்பழச் சாறு விட்டரைக்க. 1.3 லி. எண்ணெயைச் சேர்த்துக் காய்ச்சி பக்குவத்தில் இறக்கி 5 கி. உள்ளுக்குக் கொள்ளவும். மேலும் எண்ணெயை உடல் முழுதும் தேய்த்துவிட கிராணி வகைகள், மந்தம், மூர்ச்சை, எண்பது வகை வாதம் தீரும்.

பூதத் தைலம்

பச்சைப் பாம்பு பூநாகம்
பச்சைக் குன்றி இலைமஞ்சள்

இச்சைத் தணலில் குங்கிலியமிவை
எண்ணெய் நாழிக்கு ரெண்டுபலங்
வச்சுக் கூட்டி தான்காய்ச்சி
மகிழ்ந்து நக்க மேல்பூசி
இச்சக் குன்மம் மூலகரம்
இடையுஞ் சன்னி தோஷமுமே! 427

பச்சைப்பாம்பு, பூநாகம், குன்றியிலை, மஞ்சள், குங்குலியம் ஆகியவற்றை வகைக்கு 70 கி. எடுத்து 1.3 லி. எண்ணெயில் இடித்துப்போட்டு காய்ச்சி பக்குவத்தில் வடித்து உள்ளங்கையில் ஊற்றி நக்கவும். எண்ணெயை உடலில் பூசவும். குன்மம், மூலம், சன்னிதோடம் தீரும்.

பஞ்சமூலாதி எண்ணெய்

முசிற்று முட்டை கருஞ்சிரகம்
மூளி மஞ்சள் கிலுகிலுப்பை
நசித்தச் சந்தனம் நன்னாரி
நயந்த கோட்ட முலைப்பாலில்
சிறந்த அஞ்செண்ணெய் தனிலெரித்து
காசத் தனைதான் உள்குடுக்கப்
பொசித்துப் பூசத் தானங்கள்
போகுஞ் சன்னி பலவகையே! 428

முசிறு முட்டை, கருஞ்சீரகம், மஞ்சள், கிலுகிலுப்பை, சந்தனம், நன்னாரி, கோஷ்டம் ஆகியவற்றைத் தாய்ப்பாலில் அரைத்து ஐந்தெண்ணெயில் கலந்து காய்ச்சிக் கொள்ளவும். அதனை 4 கி. உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச பலவகையான சன்னி குணமாகும்.

முருங்கை வேர்ப்பட்டைச் சாறதனால்
முசியாத தேனைத் தான்கலந்து
ஒருங்கா தந்தம் நாப்பல்லு
உகந்தே அதனில் தான்தேய்த்து

அதங்கா பாத மிகப்போற்றி
அந்த சாகம் அனல்வெதும்பி
நருங்கா நாவில் கழஞ்சதுகொள்
நாடா தகலும் பலசன்னி! 429

முருங்கை வேர்ப்பட்டைச் சாற்றில் தேனைக் கலந்து கொள்ளவும். தந்தம் நான்கினை இதில் இழைத்து மிகவும் மெல்லியதான அனலில் வைத்து ஆறிய பிறகு நாக்கில் 5 கி. எண்ணெயைத் தடவ பல வகைச் சன்னியும் குணமாகும்.

மகாபேரண்டத் தைலம்

எருக்க வேர்சிறு கீரை
இயன்ற முருங்கை அவுரிவேர்
நருக்கிக் கசக்கும் காவேளை
நாடும் வட்டத் திருப்பியுடன்
இருக்க இடித்து வையொன்று
இசந்தபதி னாறுபல மிவைகொண்டு
அருக்கியிரு தூணி நீரிலிட்டு
அனலில் பதக்காகும் அடவாக! 430

எருக்கம்வேர், சிறுகீரை, முருங்கை, அவுரி ஆகியவற்றின் வேர்களை வெட்டி எடுத்துக் கொள்ளவும். காவேளை, வட்டத்திருப்பியையும் வகைக்கு 560 கி. எடுத்து 43 லி. தண்ணீரூற்றி காய்ச்சி 10.7 லி.ராய்ச் சுருக்கிக் கொள்ளவும்.

பசுமஞ்சள் வவ்வால் பிழுக்கை
பழுத்த கோழிக் காரமுடன்
அசுதான் அவுரி கற்றாழை
ஆன கொடிவேலி அரத்தையுடன்
வசுவ தாகம் யிம்மருந்து
மற்று மருந்து வசம்புள்ளி
அசுவதி மான வெளுத்தபிசின்
பரிந்திரு சீரகம் திப்பிலியும்! 431

மஞ்சள், வவ்வால் பிழுக்கை, கோழிக்காரம் எனும் கோழிஎச்சம் அவுரி, கற்றாழை, கொடிவேலி, அரத்தை,

அசமதாகம், வசம்பு, உள்ளி, வெளிச்சிப்பிசின், நற்சீரகம், கருஞ்சீரகம், திப்பிலி,

சுக்கு மிளகு திப்பிலியும்
சொல்லுஞ் சதகுப்பை ரோகணியு
மிக்க கடுகு பாம்புகண்டம்
எருக்கம் வேரும் பெருங்காயம்
தக்க குன்றி பருப்பரத்தை
தானே இவைகள் சமன்கொண்டு
ஒக்க நாழி எண்ணெய்க்கு
உகந்து ரெண்டு பலமாக! 432

சுக்கு, மிளகு, திப்பிலி, சதகுப்பை, கடுகுரோகணி, கடுகு, பாம்புக் கண்டம், எருக்கம்வேர், பெருங்காயம், குன்றிப் பருப்பு, அரத்தை ஆகியவற்றைச் சமமாக எடுத்து, அதாவது 1.3 லி. எண்ணெய்க்கு 70 கி. வீதம் எடுத்துப் பொடித்துச் சேர்த்துக் கொள்ளவும்.

அரைத்துக் கரைத்து அஞ்செண்ணெய்
ஆன கசாயத்தில் அஞ்ஞாழி
உரைத்துக் காய்ச்சி நான்காம்நாள்
ஒன்றக் காய்ச்சி வடித்தெண்ணெய்
பரித்துக் கழஞ்சு உட்கொள்ள
பலகால் மேலும்தான் பூசியிருத்தி
உரதில் வந்த சன்னி
ஏகும்பல சன்னி தோஷமதே! 433

சரக்குப் பொருட்களை அரைத்துக் கலவையில் கலந்து ஐந்தெண்ணெய் கலந்த குடிநீரில் போட்டு 2 மணிநேரம் காய்ச்சி பக்குவத்தில் வடித்து 5 கி. அளவு உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் தடவிவர பலவகைச் சன்னியும் தீரும்.

இந்த மகா பேரண்டத் தயிலத்தில்
ஏகும் சன்னி பதிமூன்று

வந்த வாதம் எண்பதுடன்
வீக்கங் கரப்பான் மற்றுளதும்
தந்த வியாதி உரவியாதி
தானே உதிர வியாதியெல்லாம்
சிந்தை தளர்ந்து தியங்குமதாம்
செய்ய பேரண்டத் தயிலமதே! 434

இந்த பேரண்டத் தைலத்தை உபயோகித்து வர பதிமூன்று வகை சன்னியும் எண்பது வகை வாதமும் வீக்கம், கரப்பான், மார்பு மற்றும் பல் வியாதிகள் இரத்த தொடர்பான நோய்கள் ஆகியவை நீங்கும்.

சங்கெண்ணெய்

சங்கு புங்கு சாரணை
சரச வேலிப் பருத்தியுடன்
எங்கு மென்னுந் திரிகடுகு
இயன்ற உள்ளி அசமதாகங்
தங்கு கடுக்காய் களிப்பாக்கு
தயங்குங் காசுக் கட்டியுடன்
எங்கு சிறுவழுதலை நாய்வேளை
இயன்ற ஆயில் மாவிலங்கை! 435

சங்கங்குப்பி, புங்கு, சாரணை, வேலிப்பருத்தி, சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, அசமதாகம், கடுக்காய், களிப்பாக்கு, காசுக்கட்டி, சிறுவழுதலை, நாய்வேளை, ஆயிலியப்பட்டை, மாவிலங்கு,

வக்க நாத்திப் பட்டையுடன்
மகிழ அழிஞ்சில் பிராயப்பட்டை
மிக்க உள்ளி வசம்புடனே
மேவு முண்டை களிப்பாக்கு
தக்க திவைதான் ஒரொன்று
தானே ரெண்டு காசிடைதான்
ஒக்க நல்லெண்ணெய் தனில்கூட்டி
உகத்தி மேலும் பூசுவதே! 436

நாத்திப்பட்டை, அழிஞ்சில், பிராயப்பட்டை, உள்ளி, வசம்பு, களிப்பாக்கு ஆகியவற்றை வகைக்கு 8 கி. எடுத்துப் பொடித்து நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி பக்குவத்தில் வடித்து உடம்பின் மேலே பூசவும்.

இனிய குரலுக்குச் சூரணம்

சுக்கு திப்பிலித் துய்ய வமுக்குராய்
தக்க பிரமி வசம்பிவை தானைந்து
மெத்தப் பொடிசெய்து தேனில் குழைத்துணில்
மிக்கக் கின்னரம் போலுமி ராகுமே! 437

சுக்கு, திப்பிலி, அமுக்குரா, பிரமி, வசம்பு ஆகியவற்றைப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்க கின்னரம் எனும் இசைபாடும் பறவையின் குரல் போல் இனிமையாகும்.

இராசாதிக் குடிநீர்

அரத்தையுடன் சுக்கு அமுக்கரா திப்பிலியு
முரக்க நறுக்கொக்க வரைநன்றாய் - கரைத்தருந்தச்
சீதசுரம் விட்டுமிசித் தீபனமுந் தானுமுண்டாங்
கோதுகுயில் மாகயிலே கூறு! 438

அரத்தை, சுக்கு, அமுக்கரா, திப்பிலி ஆகியவற்றைச் சமமாக எடுத்துக் குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க சீதசுரம் தீரும், பசியுண்டாகும்.

நடுக்குவாதக் குடிநீர்

கார மட்டுங் கருங்குழற் செய்யவாய்
வார மட்டும் வனமுறை மாதநீர்
பேர மட்டியுஞ் சுக்குங் குடித்திடி
லூர மட்டுங் குலைப்பு விட்டோடுமே! 439

பேராமுட்டியையும் சுக்கையும் இடித்துப் போட்டு குடிநீராக்கிக் கொடுக்க நடுக்குவாதம் குணமாகும்.

அரியமாம் வாகடத் தினுட பொருளை
ஆராய்ந்து சரியதாச் செந்தமிழைத் செப்புகிறேன்
குரியதா யுள்ள நிதானத்தில் நின்று
ஓதும் பராபிரனே வள்ளலே என்மனத்தில்
வாவா வெனவே சேற்று மத்திற்
வந்த கிரந்திகளும் போவெனவே நாவிலிடப்
போகிவிடும் வாவனையாம் வாக்கான பீனசமும்
மற்றுஞ் சளிபோக ஆக்கிராணம் பன்னிரரத்தை! 440

மருந்தின் பொருளை அறிந்து செந்தமிழில் கூறப் புகுகிறேன். பராபரமாய் விளங்குகின்ற இறைவனே! என் மனதில் வந்து நிலைத்து நின்று சிலேத்துமத்தினால் தோன்றும் கிரந்திகளும் நீங்க நாக்கில் தடவுவதற்கான மருந்துகளும் பீனசமும், சளியும் நீங்குவதற்கு மூக்கின் வழி (சுவாசம்) உட்செலுத்தும் ஆக்கிராண மருந்துகளும் கூறப்படும்.

சுரக்குடிநீர்

அரத்தை சதகுப்பை சுக்கு
ஆன நொச்சில் சாற்றி
லுரைத்திழைக்கக் காய்ச்சியதை
லுண்ணா வருத்த தலைவலியும்
நீரெத்தந் தன்னுடனே வந்தசுரங்
குலைகுலைந்து போமெனவே கூறு! 441

அரத்தை, சதகுப்பை, சுக்கு இவற்றை நொச்சிச் சாற்றில் அரைத்துக் குடிநீராய்க் காய்ச்சவும். அதை அளவறிந்து கொடுக்க தலைவலி, சுரம் நீங்கும்.

கூறுமெனும் பாவட்டை கொண்டசிறு ஏரண்டம்
விறுடனே வேலிப் பருத்திவேர் - காணுகின்ற
கனமிளகுங் கூட்டி கயமாய்க் கசாயமிடில்
செனமில்லையாஞ் சுரங்கள் செப்பு! 442

பாவட்டை, சிற்றாமணக்கு, வேலிப்பருத்திவேர் ஆகிய மூலிகைகளுடன் அடர்த்தியான மிளகையும் சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க சுரங்கள் தீரும்.

வாதத்திற்குத் துவாலை

செப்புமெனும் பேரிலந்தை சேர்ந்த பிளியாரை
ஒப்புடனே காடியுட னரைத்து - மெய்ப்பமுடன்
மத்திட்டுங் கடைந்து வந்தநுரை பூசிவைக்கச்
சத்தியமாம் வாதமில்லை தான்! 443

பேரிலந்தை, புளியாரை, இரண்டையும் காடியுடன் சேர்த்தரைத்து, மத்தினால் கடைந்தபின் வரும் நுரையை உடலில் பூசி துவாலையிட வாதம் தீரும்.

வாயுக் குடிநீர்

தானென்னும் வெள்ளுள்ளி தப்பானா லுப்புமேற்றி
வேனென்று மக்கினியில் வேகவைத்து - நானென்று
மிங்குவுட னுரைத்துவெந்த நீரேகுடிக்கில்
வங்குதிர வாயுவில்ல மான்! 444

வெள்ளுள்ளியை உப்பின் நடுவில் வைத்து வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். பெருங்காயத்தைச் சேர்த்து வேக வைத்து அக்குடிநீரை வாயுத் தொல்லைகளுக்குக் கொடுக்க நீங்கும்.

நீரடைப்புக் குடிநீர்

மானேகேள் நீரடைக்கில் வாழும் பசிரியுடன்
தானேநற் கத்திரியிலை பனைவேர் - பானைதனில்
வேர்க்கசாய மிட்டோடும் வெண்கார மிடில்சுக்கான்
கல்தா னுடைக்குங் காண்! 445

கத்திரியிலை, பனைவேர், இரண்டையும் சேர்த்துப் பானையில் போட்டுக் குடிநீராய்க் காய்ச்சி அதனுடன்

வெண்காரத்தையும் சுக்கான் கல்லையும் உடைத்துப் போட்டு உட்கொள்ள நீரடைப்பு தீரும்.

அண்ட வாதக் குடிநீர்

காணும் பெருங்காயம் நறணகாய் கழற்கொடியும்
பூணுங்கொற் றானுடனே போந்தசுக்கு - வேணுமெனப்
பன்னீர் கசாயம்பருகீர் பருகியபின்
விண்ணிலண்ட வாதம்போம் விட்டு! 446

பெருங்காயம், கழற்கொடி, கொத்தான், சுக்கு, பன்னீர் சேர்த்துக் குடிநீராக்கிக் கொடுக்க அண்டவாதம் நீங்கும்.

செரியாமை, கிராணிக் குடிநீர்

விட்டவோதி யிறகு மேவுகரு வேம்பிறகு
முட்டுசுக்கு சீரகமு மோதகமுந் - தட்டியிட்டு
காய்ந்தே கசாயங்கொள் காணும் சீரணமும்
பாய்ந்தே கிராணிபோம் பார்! 447

ஒதிய மரத்தின் ஈர்க்கு, கருவேப்பிலையின் ஈர்க்கு, சுக்கு, சீரகம், மோதகம் ஆகியவற்றைச் சேர்த்துக் குடிநீரிட்டுக் காய்ச்சிக் கொடுக்க செரியாமை, கிராணி தீரும்.

பித்தக் குடிநீர்

பாரிசைந்த நெல்லிமுள்ளி பாரிந்த கூவிளையுஞ்
சீரிசைந்த சீரகமும் சேர்ந்தகுடி நீர்தான் - இசைந்த
சித்தாமுட்டி நெற்பொரியுஞ் சிறந்தக் கசாயமிடில்
பித்தம்விட்டு போமிதனைப் பேசு! 448

நெல்லிமுள்ளி, கூவிளை, சீரகம் ஆகியவற்றைச் சேர்த்து முறைப்படி தயாரித்த குடிநீரும் சிற்றாமுட்டி, நெற்பொரி சேர்த்துத் தயாரித்த குடிநீரும் பித்தத்தைப் போக்கும்.

குன்மம், கிருமி நீங்கக் குடிநீர்

பேசும் பிரண்டையுடன் பேரிசைந்த மூசும்
புரோசு விதனைமோதகமும் வாசி பண்ணிக்
கொள்ளீர் கசாயமிடில் குன்மம்வலி கிருமி
விள்ளீர் விழுந்தேகு மிது! 449

பிரண்டையுடன் மோதகத்தையும் சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க குன்மம் தீரும். கிருமி போகும்.

பீலிகைக்குப் பற்பம்

இதுவேனுங் கண்ணு நடுவெந்தே நிறபமேற்றி சுண்ணாம்பு
போதமுட னக்கினியிற் புடமிட்டு ஊதி உண்ணில்
வீக்கம் பீலிகையுடன் விறு - மக்கினி மந்தம்
யாறதும் பறந்துபோம் பண்ணு! 450

சுண்ணாம்பினைப் புடம் போட்டெடுத்து அப்பற்பத்தைக் கொடுக்க வீக்கம், பீலிகை, அக்கினி மந்தம் தீரும்.

வாந்திக்குச் சூரணம்

பண்ணும் பருத்திவிரை பாரிசைந்த நெல்லிமாரியு
மின்னுசிறு திப்பிலியு மேலமுடன்
நன்றுபொடி சர்க்கரையுந் தேனுந் தானாக
வுன்னில் உடன்சத்தி போகும் விரும்பு! 451

பருத்தி விதை, நெல்லி, சிறுதிப்பிலி, ஏலம், சர்க்கரைப் பொடி, தேன் எடுக்க. மேற்கூறப்பட்ட கடைச்சரக்குகளைப் பொடித்துச் சர்க்கரையையும் தேனையும் கலந்து கொடுக்க வாந்தி தீரும்.

பித்தத்திற்குச் சூரணம்

விரும்புகின்ற சீரகமும் மென்மைநெல்லி முள்ளி
பொரும்புகின்ற சுக்கும் பொடிசரியாய் - நிரம்பிடவே
சர்க்கரையுந் தேனுந் துளாவி இழைத்துண்ண
சேர்க்காதிரும் பேர்பித்தஞ் சோம்பு! 452

சீரகம், நெல்லிமுள்ளி, சுக்குப்பொடி ஆகியவற்றைச் சமமாகச் சேர்த்து சர்க்கரைப் பொடியையும் தேனையும் கலந்து கொடுக்க பித்தம் தீரும்.

அட்டகுன்மக் குடிநீர்

சோம்புசித்த மண்டூரம் சுற்றி நாயுருவிச்
சாம்பல் மிளகு பொடிதான் சரியாய்
தேம்பிடவே எட்டிலொரு காயமிட் டிறக்கிக்
கழஞ்சுகொள்ள அஷ்டகுன்மம் போகு மலைந்து! 453

சோம்பு, சிறுமண்டூரம், நாயுருவிச் சாம்பல், மிளகுப் பொடி ஆகியவற்றைச் சமமாக எடுத்துத் தண்ணீர்விட்டு எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சி 5 கி. அளவு உள்ளுக்குக் கொடுக்க அட்ட குன்மம் தீரும்.

வீக்கத்திற்குச் சூரணம்

அலையுங் கருவளை யுலராகப் பொடி செய்து
சிலையு மிளகு பொடிகற் சரியாய்
மலையிற் பெருங்காயம் கூட்டிற் பொருவாக
தான்வரும் பானை வீங்குவதும் வாடும்! 454

வளையலுப்பு, மிளகுப்பொடி, பெருங்காயம் ஆகிய வற்றைச் சேர்த்துப் பொடித்துக் கொடுக்க வீக்கம் நீங்கும்.

எரிகுன்மத்திற்குச் சூரணம்

வாடுகின்ற இந்துவுக்குப் பாதியவிட சாரத்தில்
தேடுகின்ற காயமிதின் பாதி நாடுபுகழ்
செம்பிற் கலத்திற் செலுத்திற் செலுத்தியபின்
வேம்புமெரி குன்மம் விரைந்து! 455

இந்துப்பு, இதில் பாதி நவாச்சாரம், சாரத்தில் பாதி பெருங்காயம் எடுத்துப் பொடி செய்து செம்பு கலசத்தில் போட்டு உள்ளுக்குக் கொள்ள எரி குன்மம் தீரும்.

காய்ச்சலுக்கு மருந்து

விரைந்த மிளகுரைத்து வெந்நீருடன் கலந்து
அருந்த வருந்து அருந்து மிருந்த
சிலதோஷச் சூலை சிரண சூரம்
பெலனோடிப் போமே பெறு! 456

மிளகினை வெந்நீரில் இழைத்துக் கொடுக்க சலதோடம், சூலை, செரியாமை, காய்ச்சல் ஆகியவை குணமாகும்.

மேல் சுவாசத்திற்கு மருந்து

பெறுவீர் பிராயஞ் சுரபெந்த சங்குங் கூட்டி
மறுகீர்பிட் டாவிதனி வாங்கீர் - குறுகீர்
திப்பிலியும் வெண்காரத் தேனுமிடீர் மென்பொடியாய்
ஒப்புடனே சுவாசமது வோட! 457

பிராய், சங்கங்குப்பி, திப்பிலி, வெண்காரம் ஆகியவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்க மேல் சுவாசம் தீரும்.

வாயு கரப்பான், வீக்கத்திற்குக் குடிநீர்

ஒடுகின்ற சாரணையு முப்பு மரிதகியும்
வாடுகின்ற சுக்கும்வகை குடிநீர் - ஒடணைநீர்
மறுகமறுகக் குடிநீர் வாயுகரப் பான்வீக்கம்
பறுகுளொக்க வேகழியும் பார்! 458

சாரணை, முப்பு, கடுக்காய், சுக்கு ஆகியவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொடுக்க வாயுகரப்பான், வீக்கம் தீரும்.

வெப்பக் காய்ச்சலுக்குச் சூரணம்

பாரீரோ நீர்மணிகள் வந்தபேயன் பழத்தில்
சேரீரோ சர்க்கரையுஞ் சீரகமும் - நாரீரோ
உண்டக்காற் போகாதோ உஷ்ணக்காய்ச்சல் பிரமியமும்
கண்டக்காற் போகாதோ காண்! 459

சர்க்கரையையும் சீரகத்தையும் பொடித்துப் பேயன் பழத்திற்குள் வைத்து உள்ளுக்குக் கொடுக்க வெப்பக் காய்ச்சல், பிரமியம் ஆகியவை தீரும்.

காசம், இரைப்புக்குக் குடிநீர்

காணி ராடாதொடை கண்டங்கத்திரி துளசி
தோணிர பிட்டிப் பிலியுந் தானிடிநீர் - நாணீர்
கொக்குக்கொக் கென்றிருமுங் காசமிரும விரம்பும்
பொக்குப் போக்கென ஒடிப்போம்! 460

பொன்னாங்காணி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, துளசி, திப்பிலி ஆகியவற்றை இடித்துத் தண்ணீரிலிட்டு குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க காசம், இரைப்பு தீரும்.

இரத்த பித்தத்திற்குக் குடிநீர்

போதிவீர் கொண்டையிலை பெந்ததொரு முந்திரிகை
சேதியிர் நற்குடிகை நீர்செய்திடீர் - மாதசாயாய்
காயங் கூட்டி குந்தி ரருந்தியபின்
உயக்காண ரெத்தபித்த மோட! 461

கொண்டையிலை, முந்திரிகையைச் சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சி அதனுடன் பெருங்காயத்தைச் சேர்த்துக் கொடுக்க இரத்த பித்தம் குணமாகும்.

அரோசிகத்திற்குச் சூரணம்

ஒடுகின்ற தாளிசப் பத்திரியுங் கோலமிளகுந்
தேறுகின்ற நாகமுந் திப்பிலியு - மாறியிதில்
கூகை நீறினனுடனே கூட்டுமேல மிலவும்
பாகமாம் சூரணமும் பண்ண! 462

தாளிசப்பத்திரி, ஏலம், மிளகு, நாகம், திப்பிலி, கூகை நீறு ஆகியவற்றை ஒன்று சேர்த்துப் பொடித்துச் சூரணமாய்ச் செய்து கொள்ளவும்.

பண்ணியபின் காரம் பாகமாகக் கூட்டி
எண்ணியிரு கழஞ்சு யேற்கயிட்டு - நண்ணேன்
வேனா னனுபானத்தில் நாவிலிட அருசிகமும்
போனா லமையுமெனப் போம்! 463

சூரணத்துடன் வெண்காரத்தைப் பாதியளவு சேர்த்து 10 கி. அளவு சூரணத்தைத் தக்க அனுபானங்களில் கலந்து கொடுக்க அரோசிகம் தீரும்.

ஐயம், குத்திருமலுக்குச் சூரணம்

போமே கடும்நெல்லி போற்றரிய தான்றிசிங்கி
தானேநற் கோட்டஞ் சடாமாஞ்சி லாமே
திரிகடு கிந்துப்பு தேக்குகண்டங் கத்தரி
மறுகிடவே சூரணம் வகைசெய்! 464

நெல்லிக்காய், தான்றிக்காய், கற்கடகசிங்கி, கோட்டம், சடாமாஞ்சில், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, தேக்கு, கண்டங்கத்திரி ஆகியவற்றைச் சமஅளவெடுத்துச் சூரணமாகச் செய்து கொள்ளவும்.

செய்த மருந்து செலுத்த விரும்பக்கேள்
எய்த இஞ்சிச்சாறு தேனிலிட் டுண்ணில் - அய்யம்
குத்திக்க குத்தியிருமுங் கடுமுப்புக்கு சுவாசத்
தத்திதத்தி யோடுந் தான்! 465

இஞ்சிச்சாறு அல்லது தேனில் மேற்குறிப்பிட்ட சூரணத்தைக் கலந்து குடிக்க சிலேத்துமம், குத்திருமல், செரியாமை, மேற்சுவாசம் தீரும்.

எழுஞாயிறுக்கு மருந்து

தானே அடப்பம்விரை தப்பாம லேகழஞ்சு
மானே மறுநீர் வாங்கியுண்ண - நானேசொல்
எழுஞாயிறு கிரந்திகளை எலியுப் பிசமும்
விழுமாறு சொன்னேன்கேள் வேண்டி! 466

அடப்பம்விதை 5 கி. எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து அந்நீரைக்.குடிக்க எழுஞாயிறு, கிரந்தி, ஈளை, செரியாமை ஆகிய நோய்கள் குணமாகும்.

பஞ்சகாசத்திற்கு நெய்

வேண்டுமெனும் வேலியிலைச் சாறுங் காயமுடன்
ஆண்டுசென்ற ஆமணக்கு நெய்கூட்டி - பாண்டமதி
லிட்டே வடித்துண்ணி ரினைபஞ்ச காசமது
விட்டேகிப் போமே வெகுண்டு! 467

வேலியிலைச்சாறும் பெருங்காயமும் சேர்த்து ஆமணக்கு நெய்யையும் தக்க அளவு உடன் கலந்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் ஊற்றி காய்ச்சி வடித்து உட்கொள்ள பஞ்சகாசம் நீங்கும்.

பஞ்சகாசத்திற்கு மிளகுப்பொடி

வெருண்ட மிளகுமூன்று னாளுஞ் சிலேட்டுத்
திரட்டே பொடிகழஞ்சு தேனிலுண்ண - அருண்டிதற்
பட்டென பட்டேனென்னும் பஞ்சகாச சுவாசங்
கெட்டென கெட்டேனெனுங் கேள்! 468

மூன்று நாளும் மிளகினை நன்கு பொடித்து 5 கி. தேனில் கலந்து உட்கொள்ள பஞ்சகாச சுவாசம் தீரும்.

சிலேத்துமத்துக்கு எண்ணெய்

கேளுங்கை யாந்தகரைச் சாறுங் கிளாகடுக்காய்
மீளுநல் லெண்ணெயுடன் வெந்திறக்கி - நாளு
மென்றிதண்ணீர் பதினஞ்சு சேற்றுமத்தில் வந்தபிணி
சொன்னேன்கேள் தேன்மொழியாய் தூது! 469

கையாந்தகரைச் சாறு, கிளா, கடுக்காய் இவற்றை நல்லெண்ணெயில் கலந்து வேக வைத்து வடித்திறக்கி தினமும் 15 கி. உட்கொள்ள சிலேத்துமத்தினால் ஏற்படும் நோய்கள் நீங்கும்.

சுவாசகாசத்திற்கு நெய்

தூதுவளையும் பழத்திற் சாறுசுத்த நெய்யாலுந்
தீதுதிரி கடுகுரெண்டு சீரகமு - மாதேகேள்
கரகரென வேஎழும்புங் காசம்பல சுவாசம்
பரபரென வேஏகும் பார்! 470

தூதுவளைப் பழச்சாறு, சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம் எடுத்து, கடைச்சரக்குகளைப் பொடித்துச் சாற்றில் கலந்து அப்பழுக்கற்ற நெய்யையும் கலந்து காய்ச்சி உட்கொள்ள சுவாசகாசம் தீரும்.

சுவாசகாசத்திற்கு எண்ணெய்

பாரறிய நார்த்தம் பழச்சாறு திரிபலையும்
தேருந்திப் பிலிமிளகு சேர்த்தஇந்து - வீறியதோர்
தேற்றா னதித்தயிலஞ் சிங்கி அரைத்திறக்கி
வாத்தன் சுவாசம் மாறும்! 471

நாரத்தம் பழச்சாறு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், திப்பிலி, மிளகு, இந்துப்பு, தேற்றான் தைலம், மிருதார்சிங்கி எடுக்க. அரைக்க வேண்டியவற்றைச் சாற்றில் சேர்த்தரைத்து தைலத்தில் கலந்து காய்ச்சி வடித்துக் கொடுக்க சுவாக காசம் தீரும்.

பித்தத்திற்கு நெய்

மாறுந் தோடைச் சார்ந்தாவின் நெய்பாலுந்
தேறுகின்ற திப்பிலி யத்தித் திப்பிலியும்
கூறும் கொடிவேலி தன்னுட னேகூடி
யவஷாரம் வடமாக வேவே கவை! 472

ஆடாதோடைச்சாறு, பசும்பால், பசுநெய், திப்பிலி, அத்தித்திப்பிலி, கொடிவேலி, யவாட்சாரம் எடுக்க. சரக்கு களைச் சேர்த்தரைத்துக் காய்ச்சி வைக்கவும்.

வேக வைத்த நெய்யில் ரெளி சுவாந்
தானியம் பாகம் வைக்கில் நத்தம்
பார்பறியும் தேகத்தில் வந்த வலிபோக
மற்று மருசிசூரம் பித்து மொன்றாடே! *473*

பக்குவத்தில் எடுத்துத் தானியத்திற்குள் புடமாக வைத்து நாளறிந்து கொடுக்க உடலில் ஏற்படும் வலி, சுவையின்மை, காய்ச்சல், பித்தம் நீங்கும்.

சுரத்திற்குக் கற்கம்

வளமான சிறந்த யிள நீரில்
பின்முதியான் கூந்தல் தன்னில் அதன்வேரு மரைத்தும்
பிறிந்து வெறிசுரமும் போய்குளிரும் போய்
மாமடவீர் சிறுசுரமும் போமே! *474*

முதியார் கூந்தலின்வேரை இளநீர் சேர்த்தரைத்துக் கொடுக்க வெறிசுரம், குளிரெடுத்தல், சிறுசுரம் தீரும்.

செரியாமைக்குக் கற்கம்

தானென்ற காக்கணான் வேருங்கேள்.....
நன்மிளகு கூட்டி இளவெந்நீர் கொண்டு விடில்
நாட்டைவிட்டுப் போமே அசிரணம் புகுமே
சமுத்திரத்தில் தாமே யுரைக்கக் கேளே! *475*

காக்காணம் வேரினையும் மிளகையும் சேர்த்து இளவெந்நீர் ஊற்றி அரைத்துக் கொடுக்க செரியாமை தீரும்.

மந்தத்திற்குக் குடிநீர்

சீரான கொம்புநற் சாரடை வேரும்
ஓரான கசாயமிட்டு உண்டுவிடி லன்றேதான்
ஓடுமே மந்தம் ஒளியாமல் நாடுவிட்டு
வாடுமே கேட்கு மனம்! *476*

சுக்கு, சாரணைவேர், சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்கவும், மந்தம் தீரும்.

விஷத்திற்கு மருந்து

மனமென தான்தான் மகிழ்ந்து நசியும்
கனமாம் விஷருசி காமாகும் சினமென
உப்பு கரைத்து வெந்நிருண்டவுடன் வாந்திபண்ணி
தப்பற விஷ வுருச்ச னிற்கும்! 477

விஷமானது உடலுக்குள் சேர்ந்துவிடின் உப்பினை வெந்நீரில் கரைத்து வாந்தியாகச் செய்ய விஷம் தீரும்.

சமிக்கு பரிம்புதனை தப்பாத லுட்ருதியில்
கமுகம் பனையிலைமேல் காய்ச்சி வைக்க
பிரமை கனலிட்டுத் சாருந் தோஷி
அருசி தாகமிவை தின்ன மெல்லாம்! 478

கமுகம் பனையிலையின் மேலே அதனைக் காய்ச்சி வைக்கும்போது பிரமை, தோடங்கள், சுவையின்மை, தாகம் தீரும்.

எல்லாக் கிரந்த மெழும்வாத பித்தம்
பொல்லாத சேற்றுமத்தைப் போக்கிவிடும் - வில்லாகும்
நிழ்புருவத் தாளே நிறந்தயங் காப்பான
ஏழ்வுருவத் தாளே இயல்பு! 479

மேலும் அனைத்து வகை கிரந்தம், வாத பித்தங்கள், சிலேத்துமங்கள் தீரும்.

வாத கரப்பான் - குறிகுணம்

இயந்துரக் காய்ச்சல் எங்கும் வீக்கந் திரட்சி
தயங்கும் கணுக்கள் சூரணவுந்த கடுங்காயம் - பயன்படவே
வந்தாமரைக் கணத்தில் வாதகரப்பான் வண்ணஞ்
செந்தாமரை முகந்தான் செப்பு! 480

சுரம், வீக்கம், திரண்டுபோதல், கணுக்கள் வலித்தல், தாமரைக் கணம் ஆகியவை வாத கரப்பானின் குறி குணமாகும்.

பித்த கரப்பான் - குறிகுணம்

செப்புத் தலைநெரித்து சேருங்காய்ச் சற்றினவும்
ஒப்பச்சிவத் தெரித்ததுடன் கடிப்பாந் - தப்பாமல்
வாந்திவரும் நீர்சிவக்கும் வந்தமலஞ் சிக்கிவிடும்
சேர்ந்தபித்தஞ் சேர்கரப்பான் திணறும்! 481

தலைவலித்தல், காய்ச்சல், தினவெடுத்தல், வாந்தியெடுத்தல், கண் சிவத்தல், மலம் சிக்கிக் கொள்ளுதல் ஆகியவை பித்த கரப்பானின் குறிகுணங்கள்.

சிலேத்தும கரப்பான் - குறிகுணம்

திண்ணஞ் சேற்றுமகரப்பன் செய்யும்வகை நெஞ்சுகம்மல்
பண்ணும் வாயிற்கிரந்தி பற்றிவிடும் - எண்ணரிய
மண்டைவலிக்கும் புடைக்கும்வளர் காதில் சீயெடுக்கும்
கெண்டைவிழியே உரைக்கக் கேள்! 482

சிலேத்தும கரப்பானில் குரல் கம்மல், வாயில் புண்ணாதல், தலைவலித்தல், காதில் சீழ் பிடித்தல் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

தோட கரப்பான் - குறிகுணம்

கேளாய் குளிர்காய்ச்சல் கிளறுங் கண்டுங்கழலு
மீளா வினைபோல் விளைந்து வரும் - நாளாகப்
பூதம்போல் வீங்கிவற்றும் புண்போலெங்கும்
திமிர்க்குமோதுந் தோஷகரப்பா னூற்று! 483

குளிர்க் காய்ச்சலடித்தல், கண், கால்கள், மீளாத வினை போல் பூதம்போல் வீங்கிக் கொள்ளுதல், பின் வற்றிப் போதல், எல்லா இடமும் புண்ணாதல், திமிர்த்துப் போதல் ஆகியவை தோட கரப்பானின் குறிகுணங்கள்.

அரிகரப்பான் - குறிகுணம்

உள்ளஅரி கரப்பா னொக்கக்கொ ளொண்டொடியிர்
மற்றுலிங்கம் யோனிசூதம் வந்திடும்புண் - சற்றெண்ணி

ஆறாமற் புண்கரைக்கு மான கருவழிக்கு
மாறாது இக்குணத்தின் வாறு! 484

அரிகரப்பானில் ஆண்குறி, பெண்குறியில் புண் தோன்றும். அவ்வளவு எளிதில் புண் ஆறாது, கருவை அழிக்கும்வரை நிலைத்திருக்கும்.

பலவகைக் கரப்பானுக்குக் குடிநீர்

வாறு கொடிவேலி குறிஞ்சாவக் கணைஅறுகு
கூறுக்கு வேம்பு குடசப்பாலை - னிறுஞ்
சிவனார் பெருமருந்து செங்கத்திரி மிளகு
இவையேகொள் பலகரப் பானே! 485

கொடிவேலி, குறிஞ்சா, அறுகு, வேம்பு, குடசப்பாலை, சிவனார்வேம்பு, பெருமருந்து, செங்கத்தாரி,

ஏகுஞ் சரிநொச்சில் ஏறழிஞ்சில் சாணாக்கி
ஆகுங் கரந்தை சின்னியாமணக்கு பாகம்
வனயீர் வசம்புள்ளி வாழ்கடுகு ரோகணியில்
குடியீர் பூசிக் கரப்பான் கணு! 486

நொச்சி, ஏறழிஞ்சில், சாணாக்கி, கரந்தை, சின்னி, ஆமணக்கு, வசம்பு, உள்ளி, கடுகுரோகணி,

கூறுஞ்செங்கத் தாரிப்பட்டை சின்னி கூர்மிளகு
வீறுஞ்சிறு குறிஞ்சாவேர் கூட்டிக் காசினியால்
எண்ணியிடவே குடிநீர் ஏற்கும்பல கரப்பான்
தின்னுவிடப் போமே தினம்! 487

செங்கத்தாரிப் பட்டை, சின்னி, மிளகு, சிறுகுறிஞ்சாவேர் ஆகியவற்றைச் சேர்த்துக் குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து கொடுக்க பலவகைக் கரப்பான் குணமாகும்.

வீக்கத்திற்குக் குடிநீர்

தினத்தாளி சங்குசுரை சிறுநெரிஞ்சி லிஞ்சி
மன்த்தால் நீர்முள்ளி மாமலையுங் கனத்துவரில்

வெங்காரம் மேற்பொடியாய் மேவுகுடி நீரிலிடு
பொங்கான வீக்கம்போகுங் காண்! 488

தாளி, சங்கு, சுரை, சிறுநெருஞ்சில், இஞ்சி, நீர்முள்ளி ஆகியவற்றை எடுத்திடித்துக் குடிநீராக்கி அதில் வெங்காரத்தைப் பொடித்து மேற்பொடியாகத் தூவிவிட வீக்கம் தீரும்.

செரியாமைக்குக் குடிநீர்

காரம்நவச் சாரங் கனத்தயிந்து மேற்பொடியாய்
வீரவுள்ளி இருசீரகம் விழுங்கில் - னாரமுற்ற
வீக்கம்வற்றித் தூக்கமுண்டாய் மேலுப்பிசம் நெகிழ்ந்து
நோக்குநீர் சாய்க்குமல நீர்! 489

காரம், நவச்சாரம், இந்துப்பு, உள்ளி, நற்சீரகம், கருஞ்சீரகம் இவற்றைக் குடிநீராய்க் காய்ச்சிக் கொடுக்க வீக்கம் வற்றிப்போகும். தூக்கமுண்டாகும். செரியாமை நீங்கி மலம், சிறுநீர் வெளியேறும்.

கரப்பான் - வீக்கத்திற்குக் குடிநீர்

மலநீரிரைத்து விம்மல்வாயு கரப்பான் வீக்கம்
பலன்போ மரிதகியைப் பிட்டுப் பலமொன்று
இருகழஞ்சி கோமியத்தி லிட்டிறக்கிச் சிலைவடி
நீருழக் கொண்டாம் நேயதின்! 490

கடுக்காயை 35கி. எடுத்து இடித்து 10 கி. கோமயத்தில் போட்டுக் குடிநீராய்க் காய்ச்சி 325 மி.லி. கொடுக்க மலம், சிறுநீர் கடுப்பு, விம்மல், வாயு, கரப்பான், வீக்கம் தீரும்.

வீக்கம் நீங்க எண்ணெய்

தின்னார் சிறுகுறட்டை தேங்காய் சங்குப்புள்ளி
தன்னந் தனித்தனியே தானுழக்காய் மின்னக்கேள்
ஆமணக்கம்நெய் கடுகுரோகணியிற் காய்ச்சிண்ணத்
தாமசத்தில் வீக்கமலஞ் சயிக்கும்! 491

சிறுகுறட்டை, தேங்காய், சங்கு ஆகியவற்றை வகைக்கு 325 கி. எடுத்து ஆமணக்கெண்ணெய், கடுகுரோகிணியையும் சேர்த்துக் காய்ச்சி அளவறிந்து கொடுக்க வீக்கம் நீங்கி மலம் வெளியேறும்.

கிரந்திக்குப் பன்னீர்ச் சூரணம்

சாய்க்கும்படி கேளாய்தான் கிரந்திபுண் சூலை
மாய்க்கும் வயிற்றுவலி வாத குட்டம்
நீக்கு மருந்துண்ணி ருலகத்தி லுய்யாமல்
மானிடற்குப் பன்னிர்ச் சூரணமும் பார்த்து! 492

கிரந்தி, புண், சூலை, வயிற்றுவலி, வாதகுட்டம் ஆகியவை நீங்குவதற்கு பன்னீர்ச் சூரணத்தைக் கொள்ள வேண்டும்.

பார்த்துக் கடைமருந்து பஞ்சமூலக் கழலும்
சாற்றுங் கருஞ்சீரகம் மோதம் - ஏற்ற
பொடியிட்டுப் பட்டசூரணமு மிரண்டுபங்கு முன்கலந்து
தட்டிக் கொட்டித் தின்னுந்தான்! 493

சுக்கு, செவியம், சிற்றரத்தை, பேரரத்தை, கண்டு பாரங்கி, கருஞ்சீரகம், ஓமம் ஆகியவற்றைப் பொடித்து இரண்டு பங்கு சூரணத்தைக் கலந்து கொடுக்கவும்.

தின்னுந்தேன் நெய்மதுநீர் சேர்ந்தபொடி முக்கழஞ்சு
பன்னுந்தான் காலம் பருகியிடில் - அன்னங்கேள்
பத்தியம்பால் நெய்கிரைத் தண்டு உப்பிலாத் துவரையும்
வள்ளி நெற்றொலி யிறாவுன்! 494

தேன், நெய், சர்க்கரை நீர் ஆகியவற்றில் 15 கி. சூரணத்தைக் கலந்து காலையில் உட்கொள்ளவும். நெய், கீரைத்தண்டு, பால், உப்பிலாத் துவரை, வள்ளி ஆகியவற்றைப் பத்தியமாய்க் கொள்ளவும்.

உண்ணுமேலந் திரிகடுகு ஓதுந் திரிபலையுந்
திண்ணிய நாகப்பூ சேர்ந்த முத்தம் - பண்ணுபொடி
பாலுடனே சிவதை பாகமுடன் சுத்திபொடி
நாலுடன் முன்பொடி சேர் நன்று! 495

ஏலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், நாகப்பூ, கோரைக்கிழங்கு ஆகிய கடைச்சரக்கு களைச் சேர்த்துப் பொடித்து நான்கு பங்கும் மேற்சொன்ன பொடி ஒரு பங்கும் எடுத்துப் பாலில் கலந்து கொடுக்கவும்.

நன்றுபொடி முக்கழஞ்சு நாளுந்தேன் சர்க்கரையில்
திண்ணமிகு நோய்கள் சிதறிவிடும் - எண்ணரிய
தோர்விழா மறக்கட்டு மிக்க பித்தவாயு
வெப்புக்கீழ் நோக்குங் கிரந்தி! 496

15 கி. அளவு இச்சூரணத்தைத் தேன், சர்க்கரையில் கலந்து கொடுக்க பலவித நோய்கள் தீரும். விஷம், பித்த வாயு, வெப்பம் கீழ் பரவும் கிரந்தி தீரும்.

கிரந்திக்கட்டுக்குக் குடிநீர்

கிரந்திக்கட்டு நாசூலைக் கேற்றநவச் சாரம்
பொற்றவிய பேராமருந்து பச்சைநாவி அடப்பம்
விரைந்த கோட்டம் வாள மிருவிமேவு
நிம்பச் சாற்றிலிட மீளும்! 497

கிரந்திக்கட்டு, நாக்குசூலை, இவற்றிற்கு நவச்சாரம், பெருமருந்து, பச்சைநாவி, அடப்பம், கோட்டம், வாளம், இருவி ஆகியவற்றைப் பொடித்து வேப்பஞ்சாற்றில் போட்டுக் கொதிக்க வைத்து உட்கொள்ள ஒழியும்.

பித்தத்திற்குச் சூரணம்

மீளுமிலைக் கள்ளிதனில் வேரிற்றோல் தானுலத்தி
தூளுமெவே இடித்துத் துய்ய பொடி - கேளிரண்டு
காசத்தனை பொடியைக் காலமே தேனிலுண்ண
தேகத்திற் பித்தம்போம் தேறு! 498

இலைக்கள்ளி வேர்ப்பட்டையைக் காய வைத்து இடித்துப் பொடித்து 4 கி. அளவு எடுத்துத் தேனில் கலந்து உட்கொள்ள பித்தம் நீங்கும்.

மகோதரத்திற்குச் சாறு

தேறும்பேய் பீர்க்கங்காய் சிதறநறுக்கித் துவைத்துச்
சாறு பரிவுடன் தான்பதக்காய் - கூறுகின்ற
நற்பெருங் காயங்கழஞ்சு னான முறிலாங் குண்ண
சொற்பெரும் மகோதரம்போஞ்சொல்! 499

பேய் பீர்க்கங்காயை வெட்டி இடித்து 10.7 லி. சாறெடுத்து அச்சாற்றில் பெருங்காயத்தை 5 கி. அளவெடுத்து கரைத்துக் கொடுக்க மகோதரம் தீரும்.

கிராணிக்கு எண்ணெய்

சொல்லாய் கருங்கோழித் தோல்போக்கி யுட்சதையில்
நில்லாய் திரிகடுகு ஓமம் நோதாயம் - எல்லாமாம்
பஞ்சலவணத் தயிரில்பண்ணு மெண்ணெயிற் குடுக்க
அஞ்சுமரிக் கிராணி யறும்! 500

கருங்கோழியின் மேல் தோலை நீக்கி உள்ளிருக்கும் சதையில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், பெருங்காயம், இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, தயிர் ஆகியவற்றைச் சேர்த்து வைத்து தைத்து எண்ணெயில் காய்ச்சிக் கொடுக்க கிராணி தீரும்.

கிராணிக்குக் கற்கம்

ஆறுமுடம்பு சதையான வுடனே திரிகடுகுங்
கூறுங் கொடிவேலி கூரமிளகும் - வீறுடைய
உள்ளிவசம்பு சீரகமு வொக்கரைத்து மோரிலெண்ணெய்
கொள்ளக் கிராணி குணமாம்! 501

சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலி, உள்ளி, வசம்பு, சீரகம் ஆகியவற்றைச் சமனாக எடுத்து நன்கரைத்து மோர் அல்லது எண்ணெயிற் கலந்து கொடுக்க கிராணி குணமாகும்.

கிராணிக்கு நெய்

வண்ணங் கலயங்கடுகு மானயிந்து நாற்பலமும்
கிண்ணந் தயிரில் செய்குடிநீர் - நன்றுநீ
சுக்குடனே மூன்றுவலந் தோல்புங்கஞ் சாதடையுந்
தக்கவட்டத் திருப்பி வேர்தான்! 502

பெருங்காயம், கடுகு, இந்துப்பு ஆகியவற்றை வகைக்கு 140 கி., தயிர் ஒரு கிண்ணம், சுக்கு, புங்கங்காய்ச்சாறு, வட்டத் திருப்பி வேர்,

வேரும் கிராம்பூவும் வெண்சாதிப் பத்திரியும்
சேருங் காயம் ஓமம்சேர் திரிபலை - வாரும்
கருவேப்பிலைக் கடுகுகாயம் எவட்சார மெண்ணெயரி
நறுநெய் கிராணி யகல்! 503

கிராம்பு, வெண்சாதிபத்திரி, காயம், ஓமம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கருவேப்பிலை, கடுகு, காயம், எவட்சாரம் ஆகிய அனைத்தையும் எடுத்து இடிக்க வேண்டிய வற்றை இடித்து எரித்து நெய்யாக்கிக் கொடுக்க கிராணி தீரும்.

கிராணிக்குச் சூரணம்

அகலுனுணாச் சாற்றிலான தயிர்நீர் சரியாய்
புகலுந்திரி கடுகிந்துப் பேர்டுவிடையம் - இகலும்
வடிவுடைய சாதிக்காய் வாருமெண்ணெய் கடுகுப்பொடி
படுவாபோற்றும் பிரண்டை சுக்குப்பொடி 504

நுணாச்சாறு, தயிர்த்தண்ணீர் இரண்டையும் சம அளவெடுக்க. சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, அதிவிடையம், சாதிக்காய், கடுகுப்பொடி, பிரண்டை, சுக்குப்பொடி எடுத்து பொடிக்கவேண்டியவற்றைப் பொடித்து இக்கலவையில் கொடுக்க கிராணி தீரும்.

கிராணிக்கு எண்ணெய்

மிளகு திப்பிலியு மேற்றும வட்சார மிருசீரகம்
வீற்றிருந்த விடையந் தயிருமெண்ணெய்
வேக வைக்கலாங் கடுககொள்பொடியாங் கிராணி
விடும்போம்! 505

மிளகு, திப்பிலி, எவட்சாரம், நற்சீரகம், கருஞ்சீரகம், அதிவிடையம் ஆகியவற்றைச் சம அளவெடுத்துப் பொடித்துத் தயிர், எண்ணெயில் கலந்து காய்ச்சி வடித்து அளவறிந்து கொடுக்க கிராணி தீரும்.

குன்மத்திற்கு எண்ணெய்

விடும்பேயின் கொம்மட்டிக்காய் வேகவைக்கு மப்போ
திரிகடுகு திரிபலையுஞ் சேர்த்துவுட ரினிங்கு
படும்போது சித்தமணக் கெண்ணெய் சேர்த்துவிடில்
வாயுகுன்மம் போற்றார் மலங்க ழிக்கும்பின்! 506

பேய்க்கொம்மட்டிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் ஆகியவற்றை சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்க வாயு, குன்மம் நீங்கி மலம் கழிந்துவிடும்.

பின்னிறு மீட்டான் சாற்றில் பேய்தாவி நெய்சேற்றுப்
பன்னுங் கிழங்கரைத்துப் பால்கூட்டி - சொன்னபடி
பாகமிட்டுத் தின்றுவிடப் பஷண தேரை
யேகுமதி சார மிவை! 507

தண்ணீர் மீட்டான், பசுநெய், கிழங்கினை அரைத்த பால் ஆகியவற்றைச் சேர்த்தரைத்துக் கொள்ளவும்.

காமாலைபோங் கடுக்காய் காய்ச்சி இந்தீர்நெய்பாட்டு
குணமா மனத்தைச் சதையில்கூர திரிகடு மோதகம்
வனமாம் திரிபலை கருஞ்சிரகம் மணமாங் காயங் கடுகுஇந்துக்
கானு மெண்ணேய் மாங்கடுகக் கொள் வாயு

கிராணிபோம் வண்ணமென
கடுக்காய் போதரைத் துவே மாகில்
பக்குவம் பார்த்தேவடித்துப் பாண்டு
பித்தங் கிராணியறு மதிக்கெனவே மூலந் தின! 508

கடுக்காய் காய்ச்சிக் குடிக்க, காமாலை தீரும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கருஞ்சீரகம், எண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கவும். கிராணி நீங்கும். கடுக்காயை அரைத்து வடித்து உட்கொள்ள பாண்டு, பித்தம், கிராணி தீரும்.

வெக்கைக்குக் குடிநீர்

திசையா முலைப்பாலில் புதுன்ற பாதி
பசையாம் பஞ்சத் திரவியம் பாரிருவேல் - விசையா
குப்பைமர மஞ்சள்கடுகு ரோகணியிற் காச்சியிட
ஒப்புடனே வெக்கைவிடும் போது! 509

தாய்ப்பால், பால், தயிர், நெய், கோமியம், சாணிப்பால் எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும். குப்பைமேனி, மரமஞ்சள், கடுகுரோகணியை இடித்துச் சேர்த்துக் கலவையில் கலந்து காய்ச்சிக் கொடுக்க வெக்கை தீரும்.

வெள்ளைக்கு வெண்ணெய்

ஒதுவென குன்றிதோல் போக்கியுட் பருப்பு
மாதி புளியம் விரைத்தோ லதிப்பால் - பேதையென்று
வெண்ணைதனிற் கழஞ்சுண்ண வெள்ளைவிடும்
நீர்கழிச்சல் நின்றுவிடுந் தேன்மொழி! 510

குன்றிமணியின் தோலினைப் போக்கி உள்ளிருக்கும் பருப்பினை எடுத்துக் கொள்ளவும். அதனுடன் புளியம் விதைத்தோல், அத்திப்பால் இவற்றைச் சேர்த்தரைத்து வெண்ணெயில் குழைத்து 5 கி. அளவு உட்கொள்ள வெள்ளை, நீர்க்கழிச்சல் குணமாகும்.

பெரும்பாட்டிற்குக் குடிநீர்

வேராகும் நாவற்தோல் நின்றவொதியன் தோலும்
வேராகவே குடிநீ ரெய்துவிடுஞ் - சீராக
ஆவின்நெய் பாலுமது வேதான மக்கரைத்துச்
செவிபெரும் பாடுவிட்டுச் செல்! 511

நாவற்பட்டை, ஒதியன்பட்டை, வேர் இவற்றைக் குடிநீராகச் செய்து பசுநெய், பசும்பால் சேர்த்துக் கொடுக்க பெரும்பாடு தீரும்.

விப்புருதிக்குக் குடிநீர்

செல்லிரத விப்புருதி சீராகும் தானேனை
சொல்லு மெனவே காய்ச்சியே வடித்து - நில்லுமென
முன்சொன்ன பூவரைத்து முற்று நறு நெய்பாலில்
அன்புடனே காய்ச்சி யருந்து! 512

நாவற்பூவினை அரைத்துக் குடிநீராகக் காய்ச்சி வடிகட்டி நெய், பாலைச்சேர்த்துக் கொடுக்க விப்புருதி குணமாகும்.

விப்புருதிக்குக் குடிநீர்

அருந்தும் பொழுது விப்புருதி யாறும்
திருந்த நறுநெய் நாழி சேற்று - வருந்து கள்ளிப்
பாலுழக்குச் சேர்த்துப் பழம்புளியும் வார்த்திடலாம்
சேலொத்த கண்ணாய் நற்சேற்று! 513

கள்ளிப்பால் 325 மி.லி., பழம்புளிச்சாறு 1.3 லி., நெய் ஆகியவற்றைச் சேர்த்துக் கரய்ச்சிக் கொடுக்க விப்புருதி குணமாகும்.

வாதத்திற்கு எண்ணெய்

சேற்றிருந்த வாதம் சிற்றமருந் தரைத்து
ஏற்றுமிலைக் கள்ளி எருக்கஞ் சாற்றில் - வீற்றிருந்து
இரணமதுடன் வேரரைத்து நேருமெண்ணெய் காய்ச்சில்
அருண்டுவிடும் என்றே யறி! 514

இலைக்கள்ளி, எருக்கு இவற்றின் சாறெடுத்து வேரினைச் சேர்த்தரைத்து எண்ணெயைத் தக்க அளவு கலந்து காய்ச்சி கொடுக்க வாதம் தீரும்.

மூலத்திற்குச் சூரணம்

அறியும் பிரண்டை மருளான அமணந்தாள்
செறியும் பிளியரணை சேரக் குறுகும் - பொடியா மணக்
காரம் பொருந்துவெண்ணெய் நெத்தேன் திடமா
மூலம் பொருஞ் சேர்! 515

பிரண்டை, மருள், புளியரணை, ஆமணக்கு, காரம் ஆகியவற்றைப் பொடிசெய்து வெண்ணெய், நெய், தேன் ஆகியவை ஏதேனுமொன்றில் கலந்து கொடுக்க மூலம் தீரும்.

காதில் வரும் எழுச்சிக்கெண்ணெய்

சேரவெருக் கிலைச்சாறு சேர்ந்தயெண்ணெய் சுக்குள்ளி
கூராம் வசம்புமுத்தம் கோட்டம் - தேராக
இந்துவுடன் திப்பிலியு மேற்கவடி காதிலிடு
உந்திவிடு மெழிச்சிக் குரை! 516

எருக்கிலைச்சாறு, எண்ணெய், சுக்கு, உள்ளி, வசம்பு, கோரைக் கிழங்கு, கோட்டம், இந்துப்பு, திப்பிலி ஆகியவற்றை எடுத்து சரக்குகளைப் பொடித்து எண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஆறியபின் காதில்விட காதில் வரும் எழுச்சி தீரும்.

உரையும் வசம்புள்ளி யுற்ற கடுங்காயம்
கிரையும் பாம்புக் கண்டம்பூ நாகம்
கரையும் அரைத்திடில் வெப்பொழுதும் அதிம
துரத்தி விடப்பூச உட்கொள் தூறு! 517

வசம்பு, உள்ளி, பெருங்காயம், பாம்புக் கண்டம், பூநாகம் ஆகியவற்றை அரைத்து அதனில் கலந்து உட்கொள்ளவும்.

தூறுமா முழுதுங் கெட்டோட மருந்துரைக்கில்
ஆறும் மாதளையின் வித்த ரைத்து
கூறும் போது தானாக அகலும்!
பதினஞ்சுநாள் கெடுந்தமா மொழியாய் தேர்ந்து 518

மாதுளையின் விதைகளை அரைத்து பதினைந்து நாட்கள் உட்கொள்ளவும்.

விளையுகிரு திரமங்கி மெய்யொத்து நில்லா தாகில்
களையு நீசமாக சேர்த்திடுமே - விளைந்திடும்
தேகமதில்தான்
கிளைமொழி யங்கியேறில் கிளர்த்துபித்தந் தானே! 519

உடலொத்து நிற்கவில்லையெனில் அது பித்தமாகும்.

தேனே ஆவின்பால் தனைக்கூட்டி சேர்ந்திடில்
உடனே கடிந்து யிறுகுதலுந் தாதுவளருந் தளராது
ஊனேசெறி முத்தோஷத் தானுயரக் கினிநோய் தலைநோய்போம்
வானோரனைய தாகம்போம் தான் நீபாரே! 520

பசும்பாலைச் சேர்த்து குடிக்க தாது விருத்தியாகும். வாதம், ஐயம், பித்தம் ஆகிய மூன்றும் தம்முள் மாறுபட்டு நிற்கும் தோடங்கள், அக்கினி நோய், தலைவலி, தாகம் நீங்கும்.

உண்டாம் வெள்ளாட்டிலை பலவுமுன் பாலுடல்
தானிறுகு தலால் தண்டார் நன்னிரளவு தனிற்
றானே வருந்துந்தன்மை யினொற்பண்டார்தன் னாலும்
மிறைச்சிக்கு
முன்னே தொண்டால்வாத பித்தம்போம் கோலம்பேர்க்கும்
மேனியுமே! 521

வெள்ளாட்டுப்பாலுடன், மேற்சொன்ன பசும்பாலைச் சேர்த்து உட்கொள்ள உடலில் உள்ள நீர் குறைந்த தன்மை நீங்கும். வாத பித்தம் தீரும். உடலின் அழகு கூடும்.

பின்னிணைப்பு

பாடல் முதற்குறிப்பு அகர முதலி

எண் - பாடல் எண்

இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை நூலகங்களில் விற்பனையாகும் நூல்களின் விலை விவரப்பட்டியல்

தமிழ் மருத்துவ நூல் வெளியீட்டு வரிசை			
வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
	ஓலைச்சுவடிப் பதிப்புகள்		
1.	கைமுறை வைத்தியம்	...	...
2.	அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி	400	80.00
3.	பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 1	500	78.25
4.	சித்த மருத்துவ அகராதி - பாகம் 1	...	...
5.	பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 2	800	250.00
6.	வர்மத் தொகுப்பு	700	150.00
7.	பதார்த்த குண சிந்தாமணி	700	150.00
8.	சரக்கு - சுத்தி செய்முறைகள்	300	60.00
9.	மருந்து செய்முறைகள்		90.00
10.	புலிப்பாணி வைத்தியம்	200	30.00
11.	நோயும் மருந்தும்	250	35.00
12.	சித்த மருத்துவ சிந்தாமணி		70.00
13.	அரிய சித்த மருத்துவ முறைகள்	300	60.00
14.	மூலிகை விளக்கம்	300	60.00
15.	அகத்தியர் மருத்துவம்	...	அச்சில்
16.	அகத்தீசர் வைத்திய சிந்தாமணி	...	80.00
17.	சித்த மருத்துவ அகராதி - பாகம் 2	400	65.00
18.	சித்த மருத்துவ அகராதி - பாகம் 3	350	55.00
19.	வைத்திய மூலிகை விரிவகராதி	...	50.00
20.	அகத்தியர் இரணநூல்	...	20.00
	பாட நூல்களும் பார்வை நூல்களும்		
21.	குணபாடம் - மூலிகை	800	300.00
22.	குணபாடம் - தாது சீவ வகுப்பு	800	250.00
23.	நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 1	700	200.00
24.	நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 2	200	25.00

வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
25.	நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 1	500	200.00
26.	நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 2	800	250.00
27.	சிறப்பு மருத்துவம்	500	220.00
28.	மகளிர் மருத்துவம்	450	160.00
29.	நோயில்லா நெறி	500	67.20
30.	சட்டம் சார்ந்த மருத்துவமும் நஞ்சு நூலும்	800	250.00
31.	சித்த வைத்தியத் திரட்டு	500	150.00
32.	சூல் மருத்துவம்	450	150.00
33.	அறுவை மருத்துவம்	500	150.00
34.	குழந்தை மருத்துவம் (பால வாகடம்)	800	210.00
35.	உடற்கூறு	1000	400.00
36.	நஞ்சு முறிவு நூல்	300	100.00
37.	உடல் தத்துவம்	450	75.15
38.	சித்த மருத்துவம் - பொது	800	250.00
39.	யூகி வைத்திய சிந்தாமணி	500	150.00
40.	தேரையர் யமக வெண்பா - பாகம் 1	300	80.00
41.	கடுக்காய் வல்லாரையின் தனி மாண்பு	500	29.00
42.	நல்வாழ்விற்கு ஓர் நல் மருத்துவம்	50	3.00
43.	பிணி உடல் தேர்வக ஆய்வு முறைகள்	50	30.30
44.	தோற்றக் கிராம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும்	500	225.00
45.	சித்த மருத்துவாங்கச் சுருக்கம்	800	300.00
46.	சித்த மருத்துவத்தில் வர்ம பரிகாரமும் சிகிச்சை முறைகளும்		25.00
	SIDDHA MEDICAL BOOKS IN ENGLISH		
1.	A Compendium of Siddha Doctrine	500	200.00
2.	Introduction to Siddha Medicine	50	11.35
3.	Simple Home Remedies	50	2.70

வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
4.	Hospital Siddha Pharmacopoeia in Indian Medicine	250	39.00
5.	History of Siddha Medicine	800	159.00
6.	Siddha Science of Longevity and Kalpa Medicine	250	25.00
7.	Siddha Toxicology	500	44.00
8.	Siddha Principles of Social & Preventive Medicine	500	66.00
9.	Siddha Materia Medica (Mineral & Animal Division)	...	250.00
10.	Siddha Medicine - General - Part - I	...	அச்சில்
11.	Special Medicines in Siddha		
12.	Therayar Maha Karisal		70.00
13.	Diseases of Treatment in Siddha Part - I	...	அச்சில்
14.	Anuboga Vaidya Navaneetham Part - I		70.00
15.	Anuboga Vaidya Navaneetham Part - II		90.00
16.	Principles of Diagnosis in Siddha Part - I	...	அச்சில்
17.	Theraiyar's Formulary of Medicated Oils	...	அச்சில்
	SIDDHA MEDICAL DICTIONARY		
18.	T.V. Sambasivam Pillai - Vol. I	2500	623.00
19.	T.V. Sambasivam Pillai - Vol. II - Part I	500	300.00
20.	T.V. Sambasivam Pillai - Vol. II - Part II	450	200.00
21.	T.V. Sambasivam Pillai - Vol. III	650	81.00
22.	T.V. Sambasivam Pillai - Vol. IV - Part I	800	156.00
23.	T.V. Sambasivam Pillai - Vol. IV - Part II	800	151.50
24.	T.V. Sambasivam Pillai - Vol. V	1200	480.00
	ஆயுர்வேத நூல்கள் (தமிழில்)		
1.	சரக சம்ஹிதை பாகம் - 1	...	அச்சில்
2.	சரக சம்ஹிதை பாகம் - 2	1400	253.65
3.	சரக சம்ஹிதை பாகம் - 3	1700	15% Discount 390.00
4.	சுசுருத சம்ஹிதை - பாகம் - 1	1500	390.00
5.	சுசுருத சம்ஹிதை - பாகம் - 2	1400	272.00

மேற்குறிப்பிடப்பட்ட நூல்களை நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ பெற்றுக் கொள்ளலாம். பதிவுத் தபாலில் புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகங்களின் விலையோடு தபால் கட்டணத்தையும் சேர்த்து பண விடை (எம்.ஓ.) அல்லது டி.டி. மூலம் அனுப்ப வேண்டும். வி.பி.பி.யில் அனுப்ப இயலாது. 2 கிலோவுக்கு மேல் எடையுள்ள புத்தகங்கள் தபாலில் அனுப்ப இயலாது. தபால் கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

தபால் கட்டணம்

முதல் 500 கிராமுக்குள்	-	ரூ. 36.00
500 கிராமுக்கு மேல் ஒவ்வொரு 50 கிராமுக்கும்	-	ரூ. 16.00

பணம் அனுப்ப வேண்டிய முகவரி

1. இயக்குநர்
   இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை
   அரும்பாக்கம், சென்னை - 600 106.
   தொலைபேசி : 044 - 2614 3500 / 2621 6244 / 2628 1563

2. முதல்வர்
   அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி - 627 002.
   தொலைபேசி : 0462 - 2572736 / 2572737 / 2572738

